D
V211,31'N90
N90.26.3
143803

## உள்ளடக்கம்.

9—4—1990.


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 415—451

2. தகவல் கோரல்—

(அ) தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்குக் கடத்தப் பட்டிருப்பதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து .. .. .. 451—455

(ஆ) கோவை மாவட்டம் சின்ன வேடன்பட்டி மற்றும் வேலப்பநாயக்கன்புதூர்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்புச் செய்துள்ள வர்களை அகற்றும் நடவடிக்கை குறித்து 455—456

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக் கைகள் .. ... .. 464

3. உரிமை மீறல் பிரச்சினை—

''தினகரன்'' நாளிதழ் மீது—அவை நிகழ்ச்சிகள் தொடர்பான உறுப்பினர்களின் நடவடிக் கைகளை விமர்சித்துத் தலையங்கம் தீட்டியுள்ளது குறித்து ... .. 456—463

4. கவன ஈர்ப்பு—

(அ) ஆரணி, காந்தி நகர் அரிசன மக்களின் இடுகாடு ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ள தால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து .. 465—467

(ஆ) அம்பத்தூர் நகரியத்திற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் முடங்கிக் கிடப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து .. 467—470

5. அறிவிப்பு—

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.) .. 470

6. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)— பக்கங்கள்

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன் வடிவு, 1990 .. .. 470—472

7. மானியக் கோரிக்கைகள், 1990-91— விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம் ..
(ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் } 472—584

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா 472, 473—474, 569—589
*திரு. எஸ். டி. உகம்சந்த் .. .. .. 474—485
திரு. எஸ்.எஸ். தென்னரசு .. .. 485—495
திரு. எஸ். டேனியல் ராஜ் .. .. 495—509
திரு. அ. இரகுமான்கான் .. .. 509—521
திரு. பி.எச். பாண்டியன் .. .. 521—529
*திரு. உ.ரா. வரதராசன் .. .. .. 530—539
*திரு. எஸ்.எஸ். ராமசுப்பு .. .. 539—550
*திரு. கோ. பூவராகன் .. .. .. 550—556
திரு. எம். அப்துல் லத்தீப் .. .. 556—567
திரு. ஆ. அறிவழகன் .. .. .. 567—569

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 584

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 26, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, ஏப்ரல் 9, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்''.

நன்மையும் தீமையும் ஆகிய இரண்டையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவன் உயரிய செயலுக்கு உரியவனாக ஆளப்படுவான்.

I. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள்

நிர்வாக ஆலோசனைத் திட்டம்.

*2888 திரு. எஸ்.டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசு தொடங்கிய நிர்வாக ஆலோசனைத் திட்டத்தின்கீழ் அரசுக்கு வரப்பெற்றுள்ள ஆலோசனைகள் எத்தனை ?

(ஆ) பரிசு வழங்கப்பட்ட ஆலோசனைகள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 485

(ஆ) 4

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு 485 நிர்வாக ஆலோசனைகள் வந்திருக்கின்றன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவற்றில் 4-க்கு மட்டும்தான் பரிசு வழங்கப்

பட்டிருக்கிறது. அப்படியென்றால் மற்ற ஆலோசனைகளை அரசு நிராகரித்திருக்கிறதா? பரிசு வழங்கப்பட்ட அந்த ஆலோசனைகள் எவை என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலாளர்கள், அரசின் நிர்வாகத்திற்கு உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டுமென்றும் அத்தகைய ஆலோசனைகளை ஆய்வு செய்து, ஏற்கக் கூடிய ஆலோசனைகளை ஏற்று, சிறப்பான ஆலோசனைகளுக்குப் பரிசு வழங்கப்படும் என்று 1969 ஆம் ஆண்டில் ஒரு திட்டம் அறிவிக்கப் பட்டது. அதற்குப் பிறகு, 1979 ஆம் ஆண்டில், அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள் சற்று விரிவுபடுத்தி அரசு ஊழியர்களைப் போலவே, பொது மக்களும் அத்தகைய ஆலோசனைகளை, நிர்வாகச் சீரமைப்பு பற்றிய ஆலோசனைகளை வழங்கலாம் என்று அன்றைக்கு இருந்த அரசு அறிவித்தது. எனவே, அரசுப் பணியாளர்களிடம் இருந்தும், பொது மக்களிடமிருந்தும் ஆலோசனைகள் பெறப்பட்டன.

1969-ஆம் ஆண்டிலிருந்து இது வரை பெறப்பட்ட அந்த ஆலோசனைகள், அரசுப் பணியாளர்களிடமிருந்து 417, பொது மக்களிடமிருந்து 68 ஆலோசனைகள் பெறப்பட்டன. அவைகளில் பல ஆலோசனைகள் எடுத்துக்கொள்வதற்கு தகுதியற்றவை என்ற நிலையிலே கைவிடப்பட்டு, ஒரு 7, 8 ஆலோசனைகளை மாத்திரம் தேர்வுசெய்து, அதிலே 4 பேருக்கு பரிசு அளிக்கப்பட்டது. அந்த விவரங்களையும் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட காரணத்தால், கேட்பார் என்று கருதியே வைத்திருக்கிறேன். திரு. வி. முத்துகிருஷ்ணன், கணக்காளர், வனத் துறை, அவர் சில ஆலோசனைகளைத் தெரிவித்தார். அவர் தெரிவித்த ஆலோசனைகளில், கீழ்க்கண்ட 3 ஆலோசனைகளை சிறந்த ஆலோசனைகளாகக் கருதி அவருக்கு 200 ரூபாய் 1978 ஆம் ஆண்டிலே பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது. அவர் கூறிய ஆலோசனைகள், வனத் துறையிலே உள்ள வெட்டு மரம், ஏனைய பொருள் குறித்த குத்தகைத் தொகை, விற்பனை மதிப்பில் காலம் கடந்த அபராத வட்டி விகிதத்தை 9 சதவிகிதத்திலிருந்து 13 சதவிகிதமாக உயர்த்துதல். இரண்டாவது, ஒப்பந்தப் புள்ளி படிவத்தின் விலையை 1 ரூபாயிலிருந்து 2 ரூபாயாக உயர்த்துதல். மற்றும் அரசு ரப்பர் தோட்டங்களிலுள்ள அனைத்து ரப்பர் தோட்ட வன அலுவலகங்களிலும் ஒரு நடவடிக்கைக் குறிப்பேட்டை வைத்து வருதல், வரவு–செலவு குறித்த கணக்கை புத்தக முறையில் பின்பற்ற வேண்டுமென்று.

இரண்டாவது சேலம் அரசு வட்டார அலுவலகத்தில் இளநிலை இயந்திர கம்மியர், அதாவது மெக்கானிக் திரு. வி. மாணிக்கம் அவர்கள், பட்டைகளை இணைப்பதற்கு கொக்கிகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக பசையைப் பயன்படுத்தலாம் என்று ஆலோசனைக் குறிப்பை அளித்தார். அதன் விளைவாக ஆண்டுக்கு 575 ரூபாய் செலவு மிச்சம் ஏற்படுகிறது.



எனவே, அவருக்கு ரொக்கத் தொகை அளிக்கலாம் என்று எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநரின் பரிந்துரையின் பேரில் அவருக்கு ரூ. 200, 1982-ஆம் ஆண்டு பரிசாக வழங்கப்பட்டது.

9-05 மணி

பிறகு, கே. ஆர். ஈஸ்வரன், திருச்சி சிறைக் கட்டிடங்கள் வட்டக் கண்காணிப்பாளராகப் பணியாற்றும் அவர், ஒப்பந்தப் புள்ளி—டெண்டர் கேட்கப்படும்போது செலவிடப்படும் வைப்புத் தொகையை, டெண்டர்கள் பிரிக்கப்பட்ட அதே நாளில், அவை மீது முடிவு எடுக்கப்படும்போது, அன்றே, வைப்புத் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற விதிமுறைகள் உள்ளன. ஒப்பந்தப் புள்ளி பிரிக்கப்படும் நாளுக்கு, சில தினங் கள் கழித்து, அவற்றின் மேல் முடிவு எடுக்கப்பட்டாலும், வைப் புத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதில், மேற்கண்ட வழி முறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்ற ஒரு யோசனையைத் தெரிவித்திருந்தார். அந்த ஆலோசனைக்கு, அவருக்கு மெரிட் சர்டிபிகேட் மாத்திரம் 1983-ல் அளிக்கப்பட்டது.

நான்காவதாக, கே. எம். வேதகிரி, தேர்வு நிலைக் கண் காணிப்பாளர், பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம், வழங்கிய ஆலோசனையைச் செயல்படுத்தியதால், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத தனியார் நிதியுதவி பெறும் பள்ளி நிறுவன ஊழியர் நல நிதிக் கணக்கு, அரசின் கணக்கில் சேர்க்கப்பட்டது. அவரைப் பாராட்டி, 1988 ஆம் ஆண்டு, ரூ. 300 பரிசாக வழங்கப் பட்டது.

தற்போது எஞ்சியுள்ள 5 ஆலோசனைகள் பல்வேறு துறைகளின் பரிசீலனையில் உள்ளன.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர் களும், தனியார்களும் பல்வேறு ஆலோசனைகளை, அரசுக்கு வழங்கியதன் காரணமாக, அரசினுடைய பல்வேறு வருமானங் களும் அதிகரிப்பதுடன், சிரமங்களும் குறைகின்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. அதே போன்று, அரசும் பல்வேறு நிர்வாக சீர்திருத்தக் குழுக்களை—இன்றைக்கு வர்கீஸ் குழு, அதற்குப் பிறகு அம்பாசங்கர் குழு, பிறகு லக்ஷ்மிகாந்தன் பாரதி குழு— போன்ற குழுக்களையெல்லாம் வைத்திருக்கிறார்கள். அவர் களும் ஏதாவது ஆலோசனைகளை வழங்கி, அரசும் அவைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறதா? அவைகளில் தகுந்தவற்றின் மீது, அரசு ஏதாவது முடிவு எடுத்திருக்கின்றதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசு ஊழியர்கள் நிர்வாக சம்பந்தமாக அரசுக்குத் தருகின்ற யோசனைகளைப் பற்றிய

கேள்வியாகும். அந்தக் குழுக்களினுடைய அறிக்கைகளெல்லாம் அரசின் ஆலோசனையிலும், பரிசீலனையிலும் இருப்பது, மாண்பு மிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக ஆலோசனைத் திட்டக் குழு எப் போது ஆரம்பிக்கப்பட்டது ? அதன் உறுப்பினர்கள் யார் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன். 1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப் போது, அரசு ஊழியர்கள் மாத்திரம் அதிலே இடம் பெற்றார் கள். பிறகு, 1979 ஆம் ஆண்டில் அது விரிவுபடுத்தப்பட்டு பொது மக்களும் ஆலோசனை வழங்கலாம் என்று அறிவிக்கப் பட்டது. அதிலே, உறுப்பினர்கள், நிதித் துறைச் செயலாளர், செகரட்டரி, பி. அண்டு ஏ. ஆர்., அந்தன்னியில் வருகின்ற ஆலோசனைகளைப் பொறுத்து, அந்த ஆலோசனைகளைப் பரிசீலிக்க வேண்டிய துறையைச் சேர்ந்த தலைவர் அல்லது செயலாளர் ஆகிய இவர்கள் அந்தக் குழுவினுடைய உறுப்பினர் களாக இருக்கின்றார்கள்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டமன்றப் பேர வைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் செவ்வனே நடைபெறு வதற்கும், சிக்கனமாக நடைபெறுவதற்கும், அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாமல் இருப்பதற்கும், வேலைக்கு வந்தும் சரியாக வேலை செய்யாமல் இருப்பதைத் தவிர்ப்பதற் கும்—இது போன்ற யோசனைகளை இது வரையில் அரசாங்கத் திற்கு, யாராவது பொது மக்களோ அல்லது அரசு ஊழியர்களோ அனுப்பியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நிர்வாக ஆலோச னைத் திட்டம், அரசுப் பணியாளர்களுக்கு அமல்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு அரசுப் பணியாளர்களிடமிருந்து பெறப் படும் ஆலோசனைகள், உரிய துறைகளால் பரிசீலிக்கப்பட்டு, பரிசு வழங்கப்படுகிறது என்று குறிப்பிட்டேன். இந்த ஆலோச னைகள், அரசின் நிர்வாகச் செலவுகளைக் குறைக்கக் கூடியதாக வும், நிர்வாகத்தின் நிலைமையைப் பேணிக் காக்கக் கூடியதாக வும், அரசுக்கு வருமானம் அளிக்கக் கூடியதாகவும், நிர்வாகத்தில் புதிய—எளிய—சிக்கன முறைகளைப் புகுத்துவதாகவும் இருக்க வேண்டும். வேலை நிறுத்தங்களைப் பற்றி எல்லாம் ஆலோ சனைகள் இல்லை.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகத்திலே நல்ல யோசனைகளைக் கூறுவது என்பது, ஒரு நல்லத் திட்டம். ஆனால் பொதுமக்களும் பத்திரிக்கைகளிலே நல்ல ஆலோசனைகளை எடுத்துச் சொல்ல





லாம் என்பது பலருக்கும் தெரியாத நிலையிலே இருக்கிறது. ஆகவே, பொது மக்களும் இதை நல்ல முறையிலே ஆராய்ந்து அரசுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கலாம் என்று அறிவிக் கின்ற வகையில், அரசு அவர்களுக்கு நல்ல விளம்பரங்களைத் தந்து, அந்த ஆலோசனைகளைப் பெறுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்றைய தினம் கேட்கப்பட்டுள்ள கேள்விகளும், விரிவான விளக்கங்களும், பத்திரிகைகளின் மூலம் நல்ல விளம்பரம் தருமென்று கருதுகி றேன். பத்திரிகையாளர்களும் அரசுக்கு, பொதுமக்களிட மிருந்தும், அரசு ஊழியர்களிடமிருந்தும் பெற்றுத் தருவதற்குத் துணையாக இருப்பார்களென்று நம்புகிறேன். இந்தக் கேள்வி களின் மூலமாக, ஆலோசனைகளை, அரசு ஊழியர்கள், பொது மக்கள் அரசுக்கு வழங்கலாம் என்பது நல்ல முறையிலே இன்றைக்கு விளம்பரம் ஆகியிருக்கிறது. எனினும், மேலும் விளம்பரம் செய்யவும் அரசு தயாராக இருக்கிறது.

காவல் துறை ஆய்வாளர் அலுவலகம்.

*3571 திரு. ஆர். சிங்காரம் : கீழ்க்கண்ட வினாவுக்கு விடை மாண்புமிகு முதல் அமைச்சர் யளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் காவல் துறை ஆய் வாளர் அலுவலகம் துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் காவல் துறை ஆய் வாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

9-10 மணி

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசிலனையில் இல்லை என்று முதல்வரவர் கள் சொன்னார்கள். ஒரு தாலுக்காவுக்கு ஒரு ஆய்வாளர் அலு வலகம் தமிழகத்தில் எல்லா இடங்களிலும் இருக்கிறது. ஆனால் பேராவூரணி தாலூக்கா ஆகி பல வருடங்கள் ஆகியும்கூட, அங்கே ஆய்வாளர் அலுவலகம் ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே தயவு செய்து முதல்வரவர்கள் தமிழகத்திலே எத்தனை இடங்களில் தாலூக்கா ஆய்வாளர் அலுவலகங்கள் இருக்கின்றன அல்லது எத்தனை இடங்களில் ஆய்வாளர் அலுவலகங்கள் இல்லை என் பதைத் தெரிவிப்பார்களா ? பேராவூரணியில் இல்லாமல் இருக்க என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 9

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தமிழகத்தில் வட்ட
காவல் துறை ஆய்வாளர் அலுவலகங்கள் 324 உள்ளன. மாண்பு
மிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பேராவூரணியைப் பொறுத்த
வரையில் பட்டுக்கோட்டை வட்ட காவல் துறை ஆய்வாளரின்
கீழ் பட்டுக்கோட்டை, பேராவூரணி, அதிராமபட்டினம், மதுக்கூர்,
சேதுபாவாசத்திரம் வட்டாத்திக்கோட்டை ஆகிய காவல் நிலை
யங்கள் இருக்கின்றன. எனவே பேராவூரணிக்கு என்று தனி
காவல் துறை ஆய்வாளர் அலுவலகம் அமையவில்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பேராவூரணியைச் சுற்றி சேதுபாவாசத்திரம்,
வட்டாத்திக் கோட்டை, திருச்சிற்றம்பலம் போன்ற காவல்
நிலையங்கள் இருக்கின்றன. அது மிகப் பெரிய தொகுதி என்பது
தங்களுக்குத் தெரிந்த விஷயம். அந்தப் பேராவூரணியை மைய
மாகக் கொண்டு இந்தக் காவல் நிலையங்கள் இயங்குகின்றன.
ஆகவே தயவு செய்து பேராவூரணியில் தனி காவல் துறை ஆய்
வாளர் அலுவலகம் அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். அதோடு பேராவூரணியில் மட்டும்தான்
ஆய்வாளர் அலுவலகம் இல்லை என்று அறிகிறேன். அது குறித்து
மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,
பேராவூரணி பெரிய தொகுதி மாத்திரமல்ல, அது ரொம்ப
சிங்காரமான தொகுதி. அது பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : பேரவைத் தலைவர் அவர்
களே, வருகின்ற 1990-91-ஆம் ஆண்டில் எந்தெந்த மாவட்டங்
களில் புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வருகின்ற மானியக்
கோரிக்கையின்போது அறியலாம்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பட்டுக்கோட்டை ஆய்வாளரின் கீழ் உள்ள பட்டுக்
கோட்டை காவல் நிலையம் தற்போது பட்டுக்கோட்டை நகரம்,
பட்டுக்கோட்டை வட்டம், பேராவூரணியினுடைய ஒரு சில
பகுதிகள் அடங்கிய மிகப் பெரிய காவல் நிலையமாகும். எனவே
பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக காவல் துறையினருடைய
உதவி கிடைக்க வாய்ப்பு இல்லாத நிலையில் இந்தப் பட்டுக்
கோட்டை காவல் நிலையத்தை பட்டுக்கோட்டை நகரக் காவல்
நிலையம், பட்டுக்கோட்டை வட்டக் காவல்நிலையம் என்று
இரண்டாகப் பிரிக்கும் நிலையை அரசு பரிசீலிக்குமா என்று அறிய
விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 9]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,
உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனைக்கு என்ன செலவாகும்,
இயலுமா என்பதைப்பற்றியெல்லாம் அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நமது காவல் துறை ஆய்வாளர் அலுவல
கங்களைப் பொறுத்தவரையில் கிரைம் பிராஞ்சிலும், லா
அண்ட் ஆர்டர் பிராஞ்சிலும் காவல் துறை ஆய்வாளர்கள்
நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் மதுவிலக்கு
பிரிவுக்கு தனி காவல் துறை ஆய்வாளர்கள் நியமிக்கப்படுவார்
களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே.
தனிக் கேள்வி போட்டால் அதற்குப் பதிலளிக்கலாம்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற காவல் துறை ஆய்வாளர்
அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் எத்தனை இருக்
கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,
ஏற்கெனவே இது குறித்து கடந்த வாரம் எழுப்பப்பட்ட கேள்வி
களுக்குப் பதிலளித்திருக்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, காவல் துறை ஆய்வாளர்களுடைய அதிகார எல்லை
வரம்பு மிக அதிகமாக பல இடங்களிலே இருக்கிறது. உதாரணத்
திற்குச் சொல்ல வேண்டுமென்றால் நெல்லிக்குப்பம் ஆய்வாள
ருடைய எல்லை அங்கே ரெட்டிச்சாவடி காவல் நிலையத்தைச்
சுற்றி இருக்கக்கூடிய கிராமங்கள் உள்பட வருகிறது. இதனால்
அடிக்கடி குற்றங்கள் ஏற்படும் சமயத்தில் உடனே சென்று
விசாரிக்க காலதாமதம் ஏற்படுகிறது, சிரமமும் ஏற்படுகிறது.
எனவே அந்த அதிகார எல்லை வரம்பை கொஞ்சம் குறைக்க
அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,
இது ஒரு நல்ல கருத்து. இருந்தாலும் 5 கோடி மக்கள் இருக்கின்ற
நம்முடைய மாநிலத்தில் சுமார் 40,000 காவலர்கள்தான் அந்தப்
பணியிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். எனினும் அதிகார
எல்லைகளை மிகவும் குறைத்து அதிகப்படியான காவல் நிலை
யங்களை உருவாக்குகின்ற அந்த நல்ல கருத்து படிப்படியாக
அரசால் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

**9-15 மணி**

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் ஆய்வாளர்கள் இருக்கும்போது அங்குள்ள மோட்டார் சைக்கிளை யார் பயன்படுத்துவது– கிரைம் பிரிவில் இருப்பவர் பயன்படுத்துவதா அல்லது லா அண்ட் ஆர்டர் பிரிவில் இருப்பவர் பயன்படுத்துவதா என்று சில நேரங்களில் மிகப் பெரிய பிரச்சினை ஏற்படுகிற நிலைமை இருக்கிறது. இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு தெளிவான அறிக்கையை முன் வைப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுபற்றி குறிப்பிட்ட ஏதாவது நிகழ்ச்சிகளை மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்துக்கு கொண்டு வருவாரேயானால் கவனிக்கப்படும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் போன்ற மாவட்டத் தலைநகர்களில் மகளிர் காவல் துறை ஆய்வாளர் அலுவலகங்கள் துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*(பதில் இல்லை.)*

### புதிய வருவாய்க் கோட்டம்.

***8109** திரு. மு. சின்னக்குழந்தை :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் புதிய வருவாய்க் கோட்டம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூல வினா கேட்டிருக்கிற திரு. சின்னக்குழந்தை இடத்தில் இல்லை.



மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கேள்வியைக் கேட்டுவிட்டு கேள்விக்குப் பதிலளிக்கத் தயாராக இருக்கும்போது கேட்டவர் அவையில் இல்லாமல் போவது எவ்வளவு வேதனைக்குரியது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக என்னைப் பற்றிச் சொல்வது உண்டு; அண்ணன் அழகர்சாமி கூட சொல்வது உண்டு, உங்களிடம் கேள்வி கேட்பதற்கு அஞ்சுகிறார் என்று. இந்தக் கேள்வி கேட்பதற்கே வராமல் இருக்கிறார்களே அதற்கு யார் உத்தரவாதம் தருகிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அச்சம் அதிகமாக இருந்திருக்கலாம்.

### மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டுதல்

***9303** திரு. அ. இராசேந்திரன்,

திரு. பெ. சு. திருவேங்கடம்,

திரு. டி. பொன்முடி,

திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டப்பட வேண்டிய திட்டம் அரசின் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது எந்த இடத்தில் கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) உள்ளது.

(ஆ) தகுந்த நிலம் தேர்ந்தெடுத்து கையகப்படுத்தியபின் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காவது துணைக் கேள்வி வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்கு வரும்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் வட்டங்கள் பெரும்பாலானவை வடக்குப் பகுதியில்தான்

[1990 ஏப்ரல் 9

உள்ளன. மாவட்டத்தில் ஒட்டுமொத்தமான நலனைக் கருதி போளூர் சாலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : Will you please repeat the question ?

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தின் வட்டங்கள் பெரும்பாலானவை திருவண்ணா மலையின் வடக்குப் பகுதியில்தான் இருக்கின்றன. மாவட்டத் தின் ஒட்டுமொத்த நலன் கருதி திருவண்ணாமலை-போளூர் சாலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைக்கப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தைப் பிரித்து அமைக்க ஏற்படுத்தப்பட்ட வல்லுநர் குழு புதிய திருவண் ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கான மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், பிற மாவட்ட அலுவலகங்கள் மற்றும் அலுவலர் குடியிருப்புகள் கட்ட வேண்டி மாவட்டப் பெரும் திட்ட வளாகம் அமைக்க 260 ஏக்கர் நிலம் திருவண்ணா மலையிலிருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவில் திருவண்ணாமலை-திண்டிவனம் சாலையில் அமைந்துள்ள கீழ்நொச்சிப்பட்டு கிராமத்தில் கையகப்படுத்த பரிந்துரை செய்துள்ளது. கீழ்நொச்சிப்பட்டு கிராமத்தில், திருவண் ணாமலை-திண்டிவனம் சாலையின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள இந்த நிலத்தில் உயர்மின் அழுத்தக் கம்பி செல்லும் நிலம் மற்றும் குடியிருப்பு உள்ள நிலத்தைத் தவிர்த்து சுமார் 150.12 புஞ்சை நிலத்தையும் திருவண் ணாமலை-திண்டிவனம் சாலையின் வடக்குப் பகுதியில் 76.35 ஏக்கர் புஞ்சை நிலத்தையும் அதாவது மொத்தம் 256.47 ஏக்கர் புஞ்சை நிலம் கையகப்படுத்த திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை அனுப்பி இருக்கிறார். இவ்வறிக்கையின் மீது சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் அறிக்கை அரசுக்கு இன்னும் கிடைக்கப்பெறவில்லை. இதற்கிடையில் சில சட்டப் பேரவை உறுப்பினர்கள் திருவண்ணாமலை-போளூர் சாலையில் உள்ள வேங்கைக்கால் கிராமத்தில் போதிய இடத்தை மாவட்ட பெரும் திட்ட வளாகத்திற்காக கையகப்படுத்தித் தேவையான கட்டிடங்களை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுத்து உள்ளனர். இதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளது.



1990 ஏப்ரல் 9]

9.20 மணி

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைக்குப் புதிதாகத் தொடங்கப்பட்ட
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், பழைய தாலுக்கா
அலுவலகக் கட்டிடத்தில் இருப்பதால் இட நெருக்கடியாலும்,
அதிக அளவு பொதுமக்களுக்கு வசதியில்லாத நிலை இருப்ப
தால் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டிடம், நகராட்சிக்
குடிதண்ணீர் கிடைக்கக்கூடிய இடமாகப் பார்த்துத் தேர்வு
செய்து, புதிய கட்டிடம் கட்ட அரசு முயலுமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : ஏற்கெனவே நான் பதில் சொன்னேன். அந்தப் பரிசீலனை அரசிடம் இருக்கிறது. அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் கேட்டிருக்கிறோம்.

புளியந்தோப்பு வழியாக மயிலை, அடையாறு செல்ல பேருந்து வசதி.

*2625 திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பூங்கா நகர் தொகுதி, புளியந்தோப்பு வழியாக மயிலை, அடையாறு செல்ல பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,
புளியந்தோப்பு காவல் நிலையம் வழியாக மயிலைக்கு செல்ல
பி.62 தடமும் புளியந்தோப்பு காவல் நிலையம் வழியாக
அடையாறு செல்ல ஏ.29 தடமும் ஏற்கனவே பல்லவன்
போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படுவதால் புளியந்
தோப்பு வழியாக மயிலை, அடையாறு செல்ல புதிய பேருந்து
வசதி செய்யத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே,
பூங்கா நகர் தொகுதியில் இருக்கும் மக்கள் சென்னை நகரத்தி
னுடைய மையப் பகுதியான மயிலாப்பூர், தியாகராய நகர்
போன்ற பகுதிகளுக்குப் பஸ்களில் பயணம் செய்வதற்குப் போது
மான வசதிகள் இல்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் இப்
பொழுது, பூங்கா நகர் தொகுதி மக்கள் செல்வதற்குப் புளியந்
தோப்பு நெடுஞ்சாலைக்கு முன்னால் இருக்கக்கூடிய காவல்
நிலையத்தின் வழியாகப் பஸ்கள் விடப்பட்டிருப்பதாக [illegible]
இறார்கள். ஆனால், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவலின்

அடிப்படையில், பட்டாளம் பக்கத்திலேதான், பெரம்பூரிலிருந்து, எழும்பூர் வழியாக செல்வதற்குத் தான் அந்தப் பஸ்கள் செல்கின்றனவே தவிர, பூங்கா நகரிலிருந்து நேரடியாகச் செல்வதற்கு பஸ் வசதிகள் இல்லை. எனவே, இதைச் சரி செய்து மீண்டும் விடப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் இதுபற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து, தொகுதியில் இருக்கக்கூடிய மக்களினுடைய நலன்களைக் கருதி, பஸ்கள் விடுவதற்கு அதிகாரிகளோடு ஆலோசனை செய்தார்கள், அந்த அடிப்படையிலே, பெரம்பூர் சூளை நெடுஞ்சாலை, சென்ட்ரல், பாய்க்கடை, குறளகம் வழியாகப் பாரிஸ் கார்னர் செல்வதற்கு ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் பஸ் விடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே. சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் கூட்டம் இரண்டு முறை, பல்லவன் போக்குவரத்துக் கழக சார்பிலே நடத்தப்பட்டது, ஏராளமான ஆலோசனைகள் சட்டமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டு, அவைகளெல்லாம் முப்பது நாள் இடைவெளியில் பரிசீலனை செய்யப்பட்டு எந்தெந்த வழித்தடங்களிலே புதிய பேருந்துகள், விடுவது, ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கின்ற வழித்தடங்களை மாற்றி விடுவது போன்றவை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு திரு. இரகுமான்கான் அவர்கள் கேட்கின்ற குறிப்பிட்ட வழித்தடத்தைப் பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. அவருடைய கருத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரத்தில் சில பகுதிகள் வழியாகப் பேருந்துகள் செல்வதற்காக ஏதேனும் அரசிடம் நிபந்தனை குறிப்புகள் உள்ளனவா என்று அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மக்களுடைய தேவையை அனுசரித்துப் பேருந்து விடப்படும். அதுதான் நிபந்தனை.



## படகுப் போக்குவரத்துத் திட்டம்.

*7984 திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையிலிருந்து தமிழகத்தின் கடற்கரை ஊர்களை அடையும் வகையில் சிறு கப்பல் அல்லது படகு போக்குவரத்துத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து பாண்டிச்சேரி, கடலூர் மற்றும் கடலோர ஊர்களுக்கு படகுப் போக்குவரத்துத் திட்டம் அரசினுடைய ஆய்வில் உள்ளது.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து இராமேஸ்வரம் வரையிலும் இந்தக் கடல் வழியாகச் செல்லக்கூடிய போக்குவரத்தைச் செய்து தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9.25 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சாலைப் போக்குவரத்தினுடைய நெரிசலைக் குறைக்கின்ற அடிப்படையிலேதான், கடல் வழிப் போக்குவரத்தைத் தொடங்கலாம் என்ற கருத்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களால் தெரிவிக்கப்பட்டு, அந்தக் கருத்தினுடைய அடிப்படையில் பாண்டிச்சேரி மற்றும் கடலூர், அதேபோல மற்ற கடலோரப் பகுதியில் இருக்கக்கூடிய ஊர்களுக்குப் படகுப் போக்குவரத்து Hydro Foil Service அல்லது சிறிய கடல் போக்குவரத்து நடத்தலாம் என்று இந்த அரசு முடிவு செய்திருக்கின்றது. அதனுடைய அடிப்படையில் ஒரு ஆய்வு அறிக்கை, ஒரு 'ஃபீசிபிலிட்டி ரிப்போர்ட்' கொடுக்க வேண்டுமென்று பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனிடத்தில் அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கை அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

[1990 ஏப்ரல் 9

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே,
தூத்துக்குடி துறைமுகம் நீண்டகாலமாக பயன்பட்டு வருகிற
துறைமுகம். அது சென்னையிலிருந்து அதிக தூரத்தில் இருக்
கிறது. அமைச்சர் அவர்களின் பதிலில் தூத்துக்குடியைப்
பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. எனவே, தூத்துக்குடி
யையும் சென்னையையும் இணைக்கிற வகையில் சிறு கப்பல்
அல்லது படகுப் போக்குவரத்தை நடத்துவதற்கு அரசு ஆலோ
சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,
நான் பதிலில் சென்னையிலிருந்து கடலோரப் பகுதிகளில்
இருக்கக்கூடிய நகரங்கள் என்று ஏற்கனவே குறிப்பிட்டு இருக்
கிறேன். அதில் தூத்துக்குடியும் அடங்கும்.

திரு. செ. நூர்முகமது : தலைவர் அவர்களே, தூத்துக்
குடியை சென்னையோடு கடல்வழிப் பாதையில் இணைப்பது
பற்றி ஆய்வு செய்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்
கள். இவ்வாறு இணைக்கிறபோது கடலோரத்தில் இருக்கிற
கவின்மிகு கன்னியாகுமரியையும் இணைப்பதற்கு அரசு ஆய்வு
செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,
கன்னியாகுமரி, இராமேஸ்வரம், தூத்துக்குடி, கடலூர், பாண்டிச்
சேரி, மகாபலிபுரம் இன்னும் கடலோரத்தில் இருக்கக்கூடிய
முக்கியமான நகரங்களை இணைக்கிற வகையில்தான் இந்த
படகு போக்குவரத்தை நடத்துவதற்கு அரசு ஆலோசித்து
இருக்கிறது. முதல் கட்டமாக பாண்டிச்சேரி, கடலூர் வரையில்
விடுவதற்கு எந்த அளவிற்கு சாத்தியக்கூறுகள் இருக்கும்
என்பதை பற்றிதான் அரசு ஆராய்ந்து இருக்கிறது. மேற்
கொண்டு கடலோரப் பகுதிகளில் இருக்கிற ஊர்களுக்கும் இந்தப்
படகு போக்குவரத்தை விஸ்தரிப்பது பற்றி அரசு ஆய்வு
செய்யும்.

பாரிமுனையில் ஒருவழிப் பாதை

* 9030 திருமதி எஸ். பி. சற்குணம்

திரு. உ. ரா. வரதராசன்

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, பாரிமுனையில் பேருந்து போக்குவரத்து
ஒருவழிப் பாதையாக இருப்பது மாற்றப்படுமா?



1990 ஏப்ரல் 9]

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை. ஆயினும் பாரிமுனையில் உள்ள
ஒரு வழிப்பாதைத் திட்டத்தை 1988-ம் ஆண்டு மோட்டார்
வண்டிகள் சட்டத்தின் விதிமுறைகளின்படி அமுல்படுத்தும் செயற்
குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே,
1988-ஆம் ஆண்டு இந்த ஒருவழிப் பாதை ஏற்பாடே ஒரு
பரிசோதனை முயற்சியாகக் காவல் துறையால் மேற்கொள்ளப்
பட்டது. ஆனால் இது மக்களுக்கு மிகுந்த சிரமத்தை விளை
விக்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகமே இதை மாற்றி
யமைக்க வேண்டுமென்று காவல் துறைக்கு எடுத்துச் சொல்லியும்
அவர்கள் அதை மேற்கொள்ளவில்லை. அங்கே மக்கள் படுகிற
சிரமங்களை அமைச்சர் அவர்கள் ஒருமுறை சென்று பார்வை
யிட்டாலே தெரியும். ஆகவே, இதை மாற்றியமைப்பதற்கு, ஒரு
வழிப்பாதை இல்லாமல் பழைய முறையை அமல்படுத்துவதற்கு
அல்லது ஒரு வழிப்பாதையாக இருந்தாலும் கூட 'ரிவர்ஸ்
டைரக்ஷனில்' மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,
இந்த ஒரு வழிப்பாதையை அமைத்து போக்குவரத்து நெரிசலை
குறைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் பல்லவன் போக்கு
வரத்துக் கழகத்தினுடைய அதிகாரிகள், குறிப்பாக பொது
மேலாளர், மாநகராட்சி மற்றும் பணிப் பிரிவுகளுடைய பிரதிநிதி
கள் ஆகியோர் கலந்து ஆலோசித்த பிறகு 1—12—1988
நாளன்று இது பற்றி முடிவு எடுக்கப்பட்டது. இடையில் காவல்
துறையினுடைய இந்த நடவடிக்கை சம்பந்தமாக மணிமேகலை
கலை மன்றம் என்கிற அமைப்பின் சார்பில் உயர்நீதி மன்றத்தில்
ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவுப்படி
1988-ம் ஆண்டு மோட்டார் வாகன வண்டிகளுடைய சட்டத்தின்
அடிப்படையில் இது பற்றி பொது மக்களுடைய கருத்துக்கள்—
மறுப்புக் கருத்துக்களோ அல்லது ஆதரவான கருத்துக்களோ—
கேட்கப்பட வேண்டுமென்று விளம்பரம் செய்யப்பட்டது.
16—3—1990 வரையில் காத்திருந்தும் எந்தவிதமான மறுப்புக் கருத்
தும் வரவில்லை. இது சம்பந்தமாக கோப்புகள் சட்டத்
துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கொண்டு இது பற்றிய
முடிவை அரசாங்கம் விரைவில் எடுப்பதற்காக ஆலோசித்துக்
கொண்டிருக்கிறது.

9–30 மணி

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே சென்னையில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் கூப்பிட்டு கூட்டம் நடத்தியபோது, அதிலேயும் இந்தக் கருத்து தெரிவிக்கப் பட்டது. இப்போது ராஜாஜி சிலையிலிருந்து அனுமதிக்கும்படி யாக வாகனங்கள் செல்லக்கூடிய தற்போது உள்ள திசையை மாற்ற வேண்டும், இதனால் பஸ் ஷெல்டர்களைப் பயன்படுத்த முடியும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டபோது, அதுபற்றி காவல் துறையினரோடு கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கலாம் என்று அங்கே விளக்கம் தரப்பட்டு இருக்கிறது. அந்த விளக்கத் தினுடைய அடிப்படையிலே இதை மாற்றி அமைப்பதற்கும், மக்கள் படக்கூடிய சிரமங்களை எல்லாம் போக்கக்கூடிய முறை யிலே, இன்றைக்கு பஸ் ஷெல்டர்கள் இல்லாமல், சாலையி னுடைய மையப் பகுதியிலே அமைக்கக்கூடிய சிறு மேடையிலே ஆயிரக்கணக்கானவர்கள் வெய்யிலிலே காத்திருக்க வேண்டியதாக இருக்கிறது. போக்குவரத்துக் கழக பஸ்கள் வேகமாக செல்கிற போது, விபத்துக்கள் நேரிடக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே பல்லவன் போக்குரவத்துக் கழகமே ஆலோசனை தெரி வித்திருக்கக்கூடிய முறையிலே மாற்றியமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை சம்பந்தமாக 30—4—1990க்குள்ளாக ஒரு இறுதி ஆணையை அரசு பிறப்பிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தும் அந்த அடிப்படையிலே பரிசீலிக்கப் பட்டு, தேவைப்பட்டால், சம்பந்தப்பட்ட அலுவலர்களோடு நேரிடையாக அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்த்து, பொது மக்களுக்கு எந்த வகையிலும் இடையூறு ஏற்படாத வகையில் முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. உ. ரா. வரதராசன் அவர்கள் கேட்ட கேள்வியோடு என்னுடைய கேள்வியும் சம்பந்தப்பட்டு இருக்கிறது. இந்த சென்னை நகரத்திலே நானும் பல நேரங்களிலே சென்று பார்த்தபோது, ஏராளமான நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறேன். ஆகவே அந்த இடத்திற்கு வரக்கூடிய மக்களின் கருத்தை அறிந்தாவது அது சரியாக இருக்குமா இல்லையா என் பதற்கு மக்கள் கருத்தை அறிந்து, அந்தச் சாலையைத். திருத்தி அமைப்பதற்கான ஒரு முயற்சியை, அரசு மேற்கொள்ளுமா என்று நான் அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் ஒவ்வொரு மாவட் டத்திலேயும். இப்படிப்பட்ட நெருக்கடிகள் மிகுந்த இடங்கள்



அதிகமாக இருக்கின்றன. அந்த நெருக்கடி மிகுந்த இடங்களில் உள்ள மக்கள் கருத்தைக் கேட்டு, அரசு அதற்கான முயற்சி எடுத்து பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மக்களுடைய பிரதிநிதியாகிய நீங்களே மக்களுடைய கருத்தைப் பிரதிபலிக்கும்போது, மக்களைத் தனியாகக் கேட்கவும் வேண் டுமா ?

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, இந்த ஒரு வழிப் பாதையை அப்படியே தொடர்ந்து நடத்துவதினால், ராஜா அண்ணாமலை மன்றத்திற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய எம். யூ. சி. சாலையையும், இந்தப் பக்கம் போகிற வண்டிகளை வரிசையாக நிறுத்தக்கூடிய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்தப் பக்கம், இந்தப் பக்கம் என்று சொன்னால், எந்தப் பக்கம் என்று புரியவில்லை. (சிரிப்பு).

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, ராஜா அண்ணாமலை மன்றத்திற்குப் பக்கத்திலே இருக்கிற எம். யூ. சி. Madras Union Club அந்தச் சாலையிலே 6-ஏ, 6-பி ஆகிய வண்டிகள் நிற்கின்றன. நான் ஒரு நீண்டகால பஸ் பிர யாணி. எனவே அதை வைத்துச் சொல்கிறேன். அந்த இடத் திலிருந்து இங்கே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இருக் கிற சாலை வரை அதை ஒரு வழிப்பாதையாக மாற்றலாம். மேற்கே செல்கிற வண்டிகளை இங்கே நிறுத்தலாம். அதை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தையும் பரிசீலிக்கலாம்.

புதிதாகப் பேருந்து நிலையம் அமைத்தல்.

*1373–திரு. கே. ஆர். சுந்தரம் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு-டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், குடி யாத்தம் நகரில் புதிதாக பஸ் நிலையம் அமைக்கும் செய்தி குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

[1990 ஏப்ரல் 9

குடியாத்தம் நகரில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் நகராட்சியிடமிருந்து அரசுக்கு வரவில்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரத்தில் உள்ள பேருந்து நிலையம் மக்களுக்குப் பயன்படாத முறையில் மிகவும் பழுதடைந்துள்ளது. அதற்குப் பின்புறம் உள்ள இடத்தை ஆர்ஜிதம் செய்து பஸ் நிலையத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று 1983 ஆம் ஆண்டிலே அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டதாக அறிகிறேன். தற்சமயம் அந்த இடத்தை உபயோகப்படுத்துவதற்கு அரசு நிதி உதவி செய்தால், அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து, புதிய பஸ் நிலையத்தை மக்களுக்குச் சௌகரியமாக கட்ட முடியும். ஆகவே அதற்கான முயற்சியிலே, அரசு நிதி உதவி செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தற்போது உள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும் என்றால், விளைச்சல் நிலங்களைக் கையகப்படுத்த வேண்டியது இருக்கும். அவ்வாறு கையகப்படுத்தி விரிவுபடுத்தினாலும், பெருகிவரும் எதிர்காலப் போக்குவரத்தை மனதில் வைத்துப் பார்த்தால், நெருக்கடியை தீர்க்க முடியாத நிலை உள்ளது. அரசுப் புறம்போக்கு நிலமாக உள்ள ராபின்சன் குளத்தில் பேருந்து நிலையம் அமைத்தால், பிற்காலத்தில் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெருக்கடியை தாங்கக்கூடிய நிலையில் அது இல்லை. ஆகையினால், ஆர்.எஸ். சாலையில் உள்ள நகராட்சி மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானம் 3.13 ஏக்கர் நிலத்தில் பேருந்து நிலையம் அமைக்க குடியாத்தம் நகர மன்றம் எண்ணியது. ஆனால் அந்த இடமும் ஜனநெரிசல் உள்ள இடம். ஆதலாலே வெளியே வைத்து பராமரிக்க வேண்டியதாலும், பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஏற்றதில்லை என்று நகர ஊரமைப்புத் துறை இயக்குநரால் தெரிவிக்கப்பட்டன. எனவே பேருந்து நிலையத்தை அமைக்க தகுந்த இடம் நகர மன்றத்தால் தெரிவு செய்யப்பட்டு, செயற்குறிப்பு கிடைக்கப் பெற்றதும் பரிசீலிக்கப்படும்.

9-35 மணி

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் மாவட்ட ஆட்சித் தலைவர் குடியாத்தம் நகருக்கு நேரிலே வந்திருந்தார்கள். பேருந்து நிலையத்தை பார்வையிட்டார்கள். நகர மன்றத் தலைவரும் நானும் உடனிருந்தோம். தற்போதுள்ள நகரசபை கட்டிடத்



1990 ஏப்ரல் 9]

தையும்; அருகிலே உள்ள மக்கள் பயன்படுத்தாத ஒரு புள்
ளிக் கட்டிடத்தையும் பேருந்து நிலையமாகப் பயன்படுத்த
லாம் என்று அறிவுரை கூறினார். அதை ஏற்று குடியாத்தம்
நகர மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்குத் தெரிவித்
திருப்பதாக அறிகிறேன். அத்தகை அறிவிப்புகள் ஏதேனும்
வந்திருந்தால், அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,
நகர ஊரமைப்புத் துறைதான் இதைத் தேர்வு செய்ய
வேண்டும். அவர்கள் இது தகுந்த இடம் இல்லை, வேறு
இடம் பார்க்க வேண்டுமென்று அரசுக்குக் குறிப்பு அனுப்பி
யிருக்கிறார்கள்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில்
குடியாத்தம் மட்டுமல்லாமல், திருப்பத்தூர், வாணியம்பாடி
போன்ற பேருந்து நிலையங்கள் எல்லாம் நெரிசல் அதிக
மாகியிருக்கின்ற காரணத்தினால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.
அதுபோன்று வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தைப்
பொறுத்த அளவிலே பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த
அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர்
அவர்களே, இது குடியாத்தம் நகராட்சி சம்பந்தப்பட்ட
வினாவாகும்.

திரு. வே. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இது தனிக் கேள்வியாக இல்லாவிட்டாலும்
தொடர்புடைய கேள்வி என்பதால் இதைக் கேட்கிறேன்.
குளத்தூர் தொகுதியிலே கீரனூர் என்பது தாலுக்காவினுடைய
தலைமையிடமாகும். கரூர், திருச்சியிலிருந்து இராமேஸ்வரம்,
இராமநாதபுரம் வழியாக நிறைய பேருந்துகள் செல்லு
கின்றன. ஆகவே இது தாலுக்கா தலைமையிடமாக இருப்ப
தால், அங்கே புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டு
மென்றும் அதே நேரத்தில் விராலிமலை............
(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக் கேட்பவர்கள்
ஒன்றைக் கவனிக்க வேண்டும். தொடர்பற்ற கேள்விகளைக்
கேட்டால், தொடர்ந்து வாய்ப்புகளைக்கூட மறுக்க நேரிடும்.

## சென்னை மாநகரில் தெருப் பெயர்களில் உள்ள சாதிப் பெயரை நீக்குதல்

*5599 திரு. சா. கணேசன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை மாநகரின் தெருப் பெயர்களில் உள்ள சாதிப்பெயரை நீக்கியதன் விளைவாக சில குளறுபடிகள் ஏற்பட்டிருப்பது அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இப்பொருள்பற்றி வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி சாதிப்பெயரை நீக்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டதால், உள்ளாட்சிகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரைக் கலந்து, புதுப் பெயர் சூட்ட வேண்டும் என்றும் சென்னையைப் பொறுத்தவரை, மாநகராட்சியில் 150 கோட்டங்கள் இருப்பதாலும், மாநகராட்சி அலுவலர்கள் அதிக மக்கள் தொடர்பு கொண்டுள்ளதாலும் மாநகராட்சியே இதுபற்றி முடிவெடுக்கலாம் என்ற கருத்தை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்கள். இருப்பினும், ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட முறைப்படிக்கு உள்ள மாநகராட்சி மன்றம் அமைந்தால் அதைப்பற்றி தீர்மானம் நிறைவேற்றி முடிவு எடுக்கலாம் என்பதை அறிவிக்கிறேன்.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிப் பெயர்களை மட்டுமே தாங்கியுள்ள தெருக்களுக்கு, மொழிக்கு, நாட்டிற்கு தொண்டாற்றிய பெரு மக்களின் பெயர்களை வைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கேள்வி. ஏனென்றால், இந்த சாதிப் பெயர்களை அகற்றி தெருக்களுக்கு பெயர் சூட்ட வேண்டுமென்று கடந்த கால ஆட்சியிலே ஒரு முடிவு எடுக்கப்பட்டு, தெருக்களின் பெயர்களிலே உள்ள சாதிகளின் பெயர்கள் அகற்றப்பட்டன. அதன் காரணமாக பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டன. குழப்பங்கள் என்றால் அந்தப் பெயர்களைப் பார்க்கும் போது என்ன தெரு என்று தெரியாத குழப்பங்கள். சில





நேரங்களில் சில முக்கியமான பிரமுகர்களின் பெயர்களோடு அகற்ற முடியாதபடி சாதிப் பெயர் ஒட்டிக் கொண்டிருக்கிறது. பழுத்த நாஸ்திகரும், கம்யூனிஸ்டு இயக்கத்தின் பெரும் தலைவர்களில் ஒருவருமான ஏ.எஸ்.கே. ஐயங்கார்—அவரை ஏ.எஸ்.கே. ஐயங்கார் என்று தான் அழைப்பார்கள். ஏ.எஸ்.கே. ஐயங்கார் என்று பழகி பழகி, ஐயங்கார் என்பது ஒரு பெயராக ஆகிவிட்டதே அல்லாமல், ஒரு சாதி என்று யாராலும் குறிப்பிடப்படவில்லை. அதே போன்று ஜி. டி. நாயுடு. 'டி' என்பதற்கு தாமோதரன் என்ற பெயரா அல்லது தனபால் என்ற பெயரா என்பது யாருக்கும் தெரியாது. ஜி. டி. நாயுடு என்றால்தான் தெரியும். ஒரு தெருவினுடைய பெயர் ஜி. டி. நாயுடு என்று இருக்கும்பொழுது சாதியை அகற்றுகின்றோம் என்று நாயுடு என்ற சொல்லை அகற்றிவிட்டால், ஜி. டி. தெரு என்று ஆகிவிடும் அல்லது ஜி. டி. என். தெரு. என்று ஆகிவிடும். எதிர்காலத்திலே இந்தப் பெயருக்கு உரிய வரலாற்று நாயகர் யார், சரித்திரப் புருஷர் யார் என்று தெரியாமலேயே போய்விடும். சென்னையிலே, இதைவிட மேலும் பல குழப்பங்கள். நுங்கம்பாக்கத்தில் குட்டி மேஸ்திரி என்ற ஒரு தெரு. அதிலே மேஸ்திரியை அகற்றி விட்டார்கள். இப்போது குட்டித் தெரு என்றிருக்கிறது. குயத் தெரு. சைதாப்பேட்டையில் குயவர் தெரு. சாதிப் பெயரை அகற்றி விட்டார்கள். வெறும் தெரு என்றிருக்கிறது. அதே போன்று வட சென்னையில் நான் ஒரு கூட்டத்திற்கு பேசச் சென்றிருந்தேன். மேடைக்கு எதிரே அண்ணா பிள்ளை தெரு என்று பெயர் போடப்பட்டிருந்தது.

9—40 மணி

பிள்ளை என்கின்ற அந்த ஜாதிப் பெயர் அழிக்கப்பட்டிருந்தது. நான் அங்கேயே சொன்னேன். அண்ணாவுக்கு தமிழ்நாட்டிலே ஆயிரம் சாலைகள் இருக்கின்றன. அண்ணா பிள்ளை தெருவிலே பிள்ளையை அழித்து விட்டு அண்ணா தெரு என்று ஆக்கி விட்டார்கள். அண்ணா பிள்ளைக்கு பாவம் ஒரே ஒரு தெருதான் இருந்தது. அதையும் கெடுத்து விட்டார்களே என்று நான் சொன்னேன். எனவே இவைகளைச் சொல்லுகிற காரணத்தால் அந்த ஜாதிக்கு ஆதரவாக, ஜாதிப் பெயருக்கு ஆதரவாகப் பேசுவதாகப் பொருள் அல்ல. டி. எம். நாயர் சாலை என்பதில் நாயர் என்பதை அகற்றி விட்டால் டி. எம்.என். சாலை என்று எதிர்காலத்தில் வந்தால் ஒரு நீதிக்கட்சியினுடைய தலைவராக இருந்த, இந்த சமுதாயத்திற்காகப் பாடுபட்ட ஒரு மாமனிதருடைய பெயரே அழிந்து போய் விடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெருவை டி. டி. கிருஷ்ணம்மா [illegible] என்று மாற்றினார்கள். யாரோ ஒரு பெண்ணினுடைய பெயர் என்று எண்ணுகிற அளவுக்கு அந்தப் பெயர் மாற்றப்பட்டது. அதை டி. டி. கே. சாலை என்று கூட மாற்றலாம்.

அப்படியும் மாற்றலாம். ஆனாலும் கூட சில நேரங்களில் ஒட்டிக்
கொண்டிருக்கிற ஜாதிப் பெயரை நாம் வெட்டி விட வேண்டும்
என்கிற புரட்சிகரமான கருத்துக் கொண்டவர்கள் தான் இந்த
அவையிலே இருக்கின்ற அனைவரும் என்றாலும் கூட, அடை
யாளத்திற்காக அந்தப் பெயர் இருக்க வேண்டியிருக்கிறது.
எனவே அரசும், மாநகராட்சி மன்றமும், நகராட்சி மன்றங்களும்
இதை யோசித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்
கள் விவரமாக பெயர் சூட்டுகின்ற நிலைமைகளைப் பற்றி சொல்
லியபோது நானும் என்னுடைய ஒரு சிறிய கருத்தைத் தெரி
விக்க விரும்புகிறேன். என் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற
ஒரு தெருவுக்குப் பெயர் குட்டிச் செட்டித் தெரு. செட்டியை
அடித்தால் குட்டி மிச்சம் இருக்கும். குட்டியை அடித்தால் செட்டி
நிற்கும். தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன். இதற்கு
நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதை நான் வைத்துக்
கொள்ளவேண்டும் என்பதற்கு....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு அமைச்
சருக்கு இரண்டில் எது பிடிக்குமோ அதை வைத்துக் கொள்ள
லாம். (சிரிப்பு)

திரு. சா. கணேசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்
களே, என்னுடைய வேண்டுகோள் எல்லாம் ஜாதிப் பெயர்களை
நீக்கி விட்டு பார்த்தால் பின்னாலே அந்தத் தெருப் பெயர்கள்
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் குழப்ப
மாக இருக்கும். ஜி. டி. நாயுடு தெரு என்பதில் நாயுடுவை எடுத்
விட்டால் குழப்பமாக இருப்பதைப் போல பல சூழ்நிலைகள்
இருக்கின்றன. என்னுடைய கேள்வி எல்லாம் இந்த ஜாதிப்
பெயர்களை நீக்கிவிட்ட பின்னாலே மீண்டும் அந்தத்தெருக்களுக்கு
மொழிக்கு நாட்டுக்கு தொண்டாற்றிய தலைவருடைய பெயர்
களை வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஜாதிப் பெயரால்
மாத்திரம் அந்தத் தெரு இருக்குமானால், வெறும் ஜாதிப் பெயர்
[illegible]னாக நான் சொன்னேனே, குயவர் தெரு என்று அதைப்போல
இருக்குமானால் அவைகளை அகற்றி விட்டு தலைவர்களுடைய
பெயரை வைக்கலாம். ஆனால் தலைவர்களுடைய பெயர்களி
லேயே ஜாதி ஒட்டக் கூடிய சூழ்நிலை இருக்கிற பெயர்களாக
இருக்குமானால் அவைகளைப் பற்றியெல்லாம் யோசிக்க வேண்
டும் என்று தான் சொன்னேன்.

1990 ஏப்ரல் 9] 

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த
சாதியின் பெயர்களால் ஏற்படுகிற குளறுபடிகளையும் அதனால்
மக்களுக்கு ஏற்படுகிற அவதி பற்றியும் சொன்னார்கள். சில
தெருக்களில் பெயர் பலகைகளே இல்லாமல் இருக்கிறதே,
அதனாலும் மக்கள் அவதிக்கு உள்ளாகிறார்கள். அதையும் அரசு
கவனத்தில் எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க முன் வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : அப்படி குறிப்பிட்ட
எந்த தெருவில் பெயர் பலகைகள் இல்லை என்பதைத் தெரிவித்
தால், உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாரதியார்
பாடினார். அது பாப்பாவுக்கு மட்டும் பாடிய பாட்டு அல்ல
என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன் மூலம் நாட்டுக்கே அறிவித்
திருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல
வெட்டக் கூடிய ஜாதிப் பெயர்களை தமிழ்நாட்டில்
வெட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்க
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ''ஆயிரம் உண்டிங்கு
சாதி எனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி'' என்று
பாடியவரும் பாரதியார்தான்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு தலைவர் அவர்
களே, இந்தக் கேள்வி சென்னை நகரத்தினுடைய தெருக்கள்
ஜாதி பெயரால் உள்ளது என்பது பற்றிய கேள்வி அதே
போல கிராமங்களுக்கும் ஜாதிப் பெயரால் உள்ள பெயர்களை
மாற்றுவது பற்றி இந்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறி
விப்பின்படி அந்தந்த ஊராட்சி நகராட்சி மன்றங்களின் விதிமுறை
களுக்கு உட்பட்டு அது மாற்றி அமைக்கப்படும்.

9.45 மணி

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அண்ணா நகர், கே. கே. நகர், வ.உ.சி. நகர் என்று
ஒருசில இடங்களை 'நகர்' என்று குறிப்பிட்டு விட்டு, கக்கன்
காலனி, அம்பேத்கார் காலனி என்று ஒரு சிலவற்றை 'காலனி'
என்று பெயர் சூட்டப்பட்டிருக்கின்றதே, 'காலனி' என்ற வாக்கி
யங்களை அகற்ற இந்த அரசு முன்வருமா, என்று அறிய விரும்பு
கிறேன்.

[1990 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறைப்படி அது 'ங்கள் குடியிருப்பு' என்று இருந்தால் சரியாக இருக்கும்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய வங்கியில் களவாடப்பட்ட நகைகள்.

*6162 திரு. கே. ரமணி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய வங்கியில் அடகு வைக்கப்பட்டிருந்த நகைகள் திருடுபோய் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு திருப்பித் தருவது தொடர்பாக இவ்வாண்டு ஏப்ரல் மாதம் கள்ளக்குறிச்சி நகை மீட்போர் சங்கத்திடமிருந்து மனு அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) களவாடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டு மத்திய கூட்டுறவு வங்கியில் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளது. வழக்கு முடிந்த பிறகு நகைகள் திருப்பிக் கொடுக்கப்படும்.

திரு. கே. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட வங்கியிலிருந்து நகைகள் எல்லாம் எப்படி திருடப்பட்டன? அந்த வங்கியினுடைய பாதுகாப்பு, மற்ற ஏற்பாடுகள் அவ்வளவு பலவீனமாக இருந்ததா? அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்து, அதை மீட்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருடர்களுக்குப் பலம், பலமின்மை பற்றிக் கவலையில்லை. எப்படியோ திருட முயற்சிப்



1990 ஏப்ரல் 9]

பார்கள். அகப்பட்டதை அவர்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்
கள். கள்ளக்குறிச்சி தொடக்கக் கூட்டுறவு வங்கியில் 3-11-1984
ஆம் நாளன்று 1,052 கடன்காரர்களின் 45 இலட்சம் மதிப்புள்ள
23,394 கிராம் நகைகள் களவாடப்பட்டு, பின்னர் காவல் துறை
யினரால் மீட்கப்பட்டு, காவல் துறை அதிகாரிகளே மத்திய
கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகத்திலுள்ள இருப்புப்
பெட்டகத்தில் மேற்படி மீட்ட நகைகளைப் பாதுகாப்பாக வைத்
துள்ளனர். மேற்படி நகைகள் களவு போனது தொடர்பாக
காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட வழக்கு தற்போது
கள்ளக்குறிச்சி நடுவர் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.
மேற்படி வழக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
மேற்படி நகைகள், காவல் துறையினரின் பொறுப்பில் தென்
னாற்காடு மத்திய கூட்டுறவு வங்கியின் பாதுகாப்பில் உள்ளதால்
இது சம்பந்தமாக வழக்கு முடிந்த பின்னரே நீதிமன்றத் தீர்ப்புக்
கேற்ப காவல் துறையினரின் அனுமதி பெற்று நகைகளை சம்பந்தப்
பட்டவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க இயலும்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள்
பல விவரங்களைத் தந்தார். நான் குறிப்பாக இதைக் கேட்ட
தற்குக் காரணம் என்னவென்றால், வங்கிகளிலே மட்டுமல்ல,
இப்போது பெரிய நகரங்களிலும், கிராமங்களிலும் நகைகள்,
சொத்துக்கள் கையிலே வைத்து இருக்கக்கூடியவர்களுக்கு திருடர்
களால் ஏற்பட்டு வரும்படியான பயங்கரமான நிலைமை பற்றி
அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசாங்கத்திற்கும் தெரியும்.
வங்கியிலேயாவது கொண்டு போய் அந்த நகைகளை அடமானம்
வைத்தோ, மற்ற விதத்திலோ அதற்குப் பாதுகாப்புத் தேட
முடியுமா என்று அங்கே கொண்டு செல்கிறார்கள். அங்கேயும்
இந்த நிலைமை ஏற்படுவதை கறாராகத் தடுப்பதற்கு ஒவ்வொரு
வங்கிக்கும் திருடர்கள் புகுந்து கொள்ளையடிக்க முடியாத அள
விற்கு அதற்குத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை அந்த நகை
களை வைத்திருக்கக் கூடிய பகுதிகளுக்கு உருவாக்குவதற்கு
விசேஷமான ஏதாவது நடவடிக்கையை அரசு எடுக்க உத்தேசித்
துள்ளதா? அந்த பாதுகாப்பு மக்களுக்குக் கிடைக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, எங்கோ அங்கொன்று, இங்
கொன்று என்று சொல்லி, திருடர்கள் இத்தகைய நடவடிக்கை
களிலே ஈடுபடுகிறார்கள். இந்த நகைகள் பாதுகாப்பாகவே வைக்
கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை
யின் அடிப்படையில் இன்னும் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பயிர் காப்புறுதித் திட்டம்.

*6818 திரு. மா. மணிமாறன்:
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பயிர் காப்புறுதித் திட்டம் செயல்படுத்தும் முறையில் விவசாயிகள் பயன்பெறும் அளவிற்கு மாற்றி அமைக்க அரசுக்கு வேண்டுகோள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இதுகுறித்து மைய அரசுக்கு எழுதப்பட்டு அதன் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

### மலைவாழ் மக்கள் கூட்டுறவு சங்கம்.

*1998 திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பர்கூர் மலையிலும் அதன் அடிவாரத்திலும் வாழ்கின்ற 'சோழகர்' என்ற ஆதிவாசி மக்களுக்கு மலைவாழ் மக்கள் கூட்டுறவு சொஸைட்டி ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில் பர்கூர் மலையிலும், அதன் அடிவாரத்திலும் வாழ்கின்ற ''சோழகர்'' என்ற ஆதிவாசி மக்களுக்கு, மலைவாழ் மக்கள் கூட்டுறவு சங்கம் அமைக்க இயலாது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



### ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி.

*2185. திரு. ராம. நாராயணன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காரைக்குடி தொகுதியில் மின் வசதி இல்லாத ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு எப்போது மின் வசதி அளிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காரைக்குடி சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் உள்ள 180 ஆதிதிராவிடர் குடியிருப்புக்களில் 179 குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தட்டடி என்ற கிராமத்திலுள்ள குடியிருப்புக்கு விரைவில் மின்வசதி அளிக்கப்பட்டுவிடும்.

திரு. ராம. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுச் செய்தும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. மிக விரைவிலேயே கொடுத்தால் மிக நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குதல்.

* 3431 திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1977 ஆம் ஆண்டு முதல் நிலுவையிலுள்ள, நாகை வட்டம் தேமங்கலம் கிராமத்தில் சிராங்குடி புலியூர் கிராம ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

9–50 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், தேமங்கலம் கிராமத்தில் வசிக்கும் உபரி ஆதிதிராவிடர்

குடும்பங்களுக்கு சிராங்குடி புலியூர் கிராமத்தில் வீட்டுமனை வசதி அளிப்பதற்கு நில எடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆர்ஜிதம் செய்த பிறகு, அறிக்கைகளை அனுப்பி ஒப்புதலைப்பெற்று குடியிருப்புகளுக்கு வீட்டு மனை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாகை வட்டம் சிராங்குடி புலியூர் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனை 1977ஆம் ஆண்டு கோரப்பட்டது. அதிலிருந்து தொடர்ந்து கோரப்பட்டு வந்தது. நில கையெடுப்புச் சட்டத்தின்கீழ் 6ஆம் படிவம் வெளியிடப்பட்டுவிட்டது. இதற்குப் பிறகு மேலும் தாமதம் ஆகாமல் அந்த அந்தக் குடியிருப்பு மனைகளுக்கு அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அரசு இந்த மாதத்தில் அதற்கான அறிவிப்புகள் வெளியிடப்படுமா ? அதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் வீட்டு மனைப் பட்டா வழங்க கிட்டத்தட்ட 2.3 கோடி ரூபாயும் வருகின்ற நிதி ஆண்டில் 40 ஆயிரம் வீட்டு மனைப் பட்டா வழங்க 2.5 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்ய இருக்கிறது. கடந்த காலங்களில் வீட்டுமனைப்பட்டா சரியாக வழங்கப்படாத சூழ்நிலையின் காரணமாகத்தான் கடந்த ஆண்டிலும், வருகின்ற நிதி ஆண்டிலும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று கூடிய விரைவில் தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையினால் அந்த மனை வழங்குவதில் தாமதம் ஆகவில்லை. நிலத்தை கையகப்படுத்தக்கூடிய சட்டத்தில் இருக்கக்கூடிய ஏராளமான சிரமங்களின் விளைவாக அந்தக் குடியிருப்பு மனை வழங்குவதில் தாமதம் ஆகிறது. குறிப்பாக முன்னால் இருந்த அரசு குடியிருப்பு மனைகளுக்கு நஞ்சை நிலங்களை எடுக்கக்கூடாது என்று தடை ஆணை விதித்து இருந்தது. புஞ்சை நிலங்கள் கிடைக்காத இடத்தில் நஞ்சை நிலங்களை எடுக்கலாம் என்று அந்தத் தடை ஆணையை மாற்றுவதற்கும், நிலத்தைக் கையகப்படுத்தும் சட்டங்களில் இருக்கக்கூடிய இன்னும் சிரமங்களை எளிமைப்படுத்தி சீக்கிரமாக நிலங்களை கையகப்படுத்தும் முறையில் அந்தச் சட்டத்தில் உரிய திருத்தம் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் நிலம் கையகப்படுத்துவதில் பல்வேறு தடைகள் இருந்தன. அதை நிவர்த்தி செய்யும் பொருட்டுதான் தமிழக அரசு கடந்த 7 நாட்களுக்கு முன்பு கவர்ன்மென்டு பிளீடர் ஒருவரை நியமித்து இருக்கிறது. எந்த தடைகளையும் கூடிய விரைவில் நீக்குவதற்கு உண்டான சூழ்நிலையின் காரணமாகத்தான் அவரை நியமித்து இருக்கிறோம். ஆகவே, தடைகள் நீக்கப்பட்டு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மதுரமங்கலம் மருத்துவமனை

* 3176 திரு. ஏ. கோதண்டம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

திருப்பெரும்புதூர் வட்டத்தில் மதுரமங்கலம் ஊராட்சியில் உள்ள அரசினர் பொது மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-அண்ணா மாவட்டம் திருப்பெரும்புதூர் ஒன்றியம் மதுரமங்கலம் கிராமத்தில் அரசினர் பொது மருத்துவமனை இல்லை. அங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது.

ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரண்டு மருத்துவர்கள் என்ற அடிப்படையில் மதுரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவர்கள் பணி செய்வதால், மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இயலாது.

திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் ஒன்றியம், மதுரமங்கலம் கிராமத்தில் அரசினர் பொது மருத்துவமனை இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆரம்ப சுகாதார மருத்துவ மனையில் இன்னும் பல மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 2 மருத்துவர்கள்தான் நியமிக்கின்ற வழக்கம். ஆகவே, 2 மருத்துவர்கள் அங்கே நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

[1990 ஏப்ரல் 9

பேரணைக் குடிநீர்த் திட்டம்.

*3204 திரு. என். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

திண்டுக்கல் நகர பேரணைக் குடிநீர்த் திட்டம் ஒப்பந்தக் காரர்களின் சுணக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் ஒப்பந் தத்தை ரத்து செய்து அரசே திட்டத்தை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேவை இல்லை. குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயலாக் கப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

9-55 மணி

திரு. என். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டிற்கு முன்னால் கேட்கப்பட்ட கேள்வி இது. ** இன்றைக்கு திடீர் திடீரென்று மெயின் குழாய்கள் வெடித்துக் கொண்டிருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவில் குற்றச் சாட்டுக் கூடாது. அந்தக் குற்றச்சாட்டு உள்ள வரி மட்டும் நீக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து சென்ற வாரம் நடைபெற்ற குடிநீர் வடிகால் வாரிய கூட்டத்தில் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினைகளை எழுப்பி இருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரு கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இத்தத் திட்டம் நிறைவேறியதற்குப் பிறகுகூட ஒருநாள் விட்டு ஒருநாள் ஒரு மணி நேரம் குடிநீர் கிடைக்கின்றது. இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1990 ஏப்ரல் 9]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக் களை அதிகாரிகளோடு அவரே கலந்து பேசி, அங்கே பணியாற்று கின்ற களப்பணியாளர்களே, அவருக்கு பதிலை கொடுத்து இருக் கிறார்கள். இருந்தும், இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். இதுகுறித்து அரசு நிச்சயமாக ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம்.

*9025—டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரி மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) மற்றும் (ஆ) : கிருஷ்ணகிரி மருத்துவமனையில் ஏற்கெனவே இரத்த சேமிப்பு நிலையம் இயங்குவதால், இக் கேள்விக்கிடமில்லை.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சரியான தகவல் தரப்படவில்லையோ என்று நான் அச்சப்படுகிறேன். கிருஷ்ணகிரி மருத்துவமனையில் பிளட் பேங்க் இல்லை. பிளீடிங் ( Bl edirg ) ரூம், ரெஸ்ட் ரூம், ஸ்டோர் ரூம் என்று சொல்லக்கூடிய எதுவுமே இல்லை. ரத்தத்தை இனம் பிரித்துப் பார்க்கின்ற 'குரூப் சீரா' கிடையாது. தர்மபுரி தலைமை மருத்துவமனையிலே (Dcuble R.H. Typing) கூட கிடையாது. தலைவர் அவர்களே, சுழன்றோடிக்கொண்டிருக்கிற ரத்தத்தின் கணிசமான பகுதி சிதறி தரையிலே விழுந்து சூடற்றுப் போகுமானால் மனிதன் செத்துப்போவது என்பது நிதர்சனமான உண்மை. கிருஷ்ணகிரி, என். எச். 46, என். எச். 7 என்று இரண்டு தேசிய பெருவழித் தடங்கள் இணைகின்ற ஒரு பெரிய நகரம் அது. அன்றாடம் விபத்துக்கள் நடக்கின்றன. அன்றாடம் சாவுகள் நடக்கின்றன. பிளட் பேங்க் என்பது எங்களுடைய கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு மிக மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனே முழு

[1990 ஏப்ரல் 9

அளவிலான அனைத்து உபகரணங்களைக் கொண்ட ஒரு ரத்த சேமிப்பு நிலையத்தை அமைத்துத்தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருத்துவ பட்டதாரியாக இருப்பவர்கள். அவர்கள், அங்கே இருக்கிற ரத்த சேமிப்பு நிலையம் மேம்படுத்தப்படுமா என்று கேட்டிருந்தால் அதற்கான பதிலை சொல்லியிருக்க முடியும். இல்லவேயில்லை என்று சொன்ன காரணத்தினாலேதான், அங்கே ரத்த சேமிப்பு நிலையம் இருக்கிறது. அதிலே உதவி மருத்துவ அலுவலர் ஒருவரும், செவிலியர் ஒருவரும், மருத்துவமனை ஊழியர் ஒருவரும் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். பெரும்பாலான மருத்துவமனைகளிலே இவ்வாறு உருவாக்கப்படுகிற ரத்த சேமிப்பு நிலையங்கள், வருகிற நபர்களிடமிருந்து . ரத்தத்தைப் பெற்று உடனடியாகக் கொடுக்கிற ரத்த சேமிப்பு நிலையங்களாகத்தான் செயல்பட்டு வருகின்றன. ரத்த சேமிப்பு நிலையம் முழுமையாக இயங்க வேண்டுமென்று சொன்னால் அங்கே குளிர் சாதனம் செய்யப்பட்ட ஒரு அறையும் குளிர்சாதனம் செய்யப்பட்ட மருத்துவ வசதிகளும் உடைய அறை முழுமையாகத் தேவைப்படுகிறது. அப்படி ஒன்று அமைக்க வேண்டுமென்று சொன்னால் 8.5 இலட்சம் ரூபாய் ஒரு முழுமையான ரத்த சேமிப்பு நிலையத்தை உருவாக்குவதற்கு செலவாகிறது. ஆகவே, இப்போது இருக்கிற பெரும்பாலான இடங்களில், வருகிற நபர்களிடமிருந்து ரத்தத்தை எடுத்து உடனடியாகத் தேவைப்பட்டால் கொடுக்கிற வசதிகள் மட்டுமே செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாக இவைகளை, முழுமையாக ரத்தசேமிப்பு நிலையங்களாக மாற்றுவதற்கான பொறுப்புகளை அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய வினாவையும் விடையையும் கேட்டு எங்களுடைய ரத்தமே உறைந்துவிடும் போலிருக்கிறது. (சிரிப்பு).

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழவியை, குமரி என்று எப்படி ஏற்றுக்கொள்வது என்பது என்னுடைய மற்றொரு வினாவாக இருந்தாலும்கூட..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒப்பனை கூடினால் ஏற்றுக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. (சிரிப்பு).

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Bloo . Donation : Rise in Aids inj.cted Donors"



1990 ஏப்ரல் 9]

என்று தலைப்பிட்டு, இன்றைக்குக்கூட, 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் 5 பத்தி செய்தி ஒன்று வந்திருக்கிறது. மெட்ராஸ், பாம்பே, கல்கத்தா, டெல்லி போன்ற பெரிய நகரங்களில் இந்த ரத்தத்தில் எயிட்ஸ் போன்ற 'கில்லர் டிசீஸ்' என்று அழைக்கக் கூடிய வியாதிக்காக பரிசோதனை செய்கின்ற வசதி உடனடியாக ஏற்படுத்தப்படும் என்ற அந்த செய்தியில் அறிக்கை வந்திருக்கிறது. அப்படியானால், கிருஷ்ணகிரி போன்ற சிறிய நகரங்களில், கிராமப் புறங்களிலே வாழ்கின்ற மக்களை எயிட்ஸ் போன்ற நோயிலிருந்து யார் காப்பாற்றுவது? ஆண்டவன் காப்பாற்றுவான் என்று சொன் னார்கள், நானும் ஆண்டவனை நம்பித்தான் கேட்கிறேன், ஆண்டவன் ஆளுகின்றவன், ஆளப்போகின்றவன் என்று முக்காலமும் காட்டி தொகை தொகையாய் காரியமாற்றி வினை முடிக்கும் டாக்டர் கலைஞருடைய ஆட்சியில், கிருஷ்ணகிரியில் ஒரு முழு அளவிலான, முழு உபகரணங்களைக்கொண்ட ஒரு ரத்த சேமிப்பு நிலையம் உடனடியாக அமைத்துத் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளிலே எயிட்ஸ் நோய் பரவாமல் இருக்க வேண்டுமென்பது தான் அரசினுடைய நோக்கம். ஆகவே, பரவுகின்ற இடங்களிலே, முக்கியமான நகரங்களிலேயெல்லாம் எயிட்ஸ் நோயைப் பரிசோதிப்பதற்கான வாய்ப்புகளை அரசு செய்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 6629 மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பெறுகிறது.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்பட்டுள்ளது.

கைத்தறிக்குத் தேவையான மூலப் பொருள்களின் விலை.

*1537—திரு. எஸ். எஸ். கருப்பசாமி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறிக்குத் தேவையான நூல், பட்டு, சாய மருந்துகள் போன்ற மூலப் பொருள்களின் விலை உயர்ந்திருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைக் குறைக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் கைத்தறிக்குத் தேவையான சிட்டா நூலின் விலை வெளிச் சந்தையில், பட்டு நூல் மற்றும் சாய மருந்துப் பொருட்களின் விலை சமீப காலத்தில் குறிப்பிடத்தக்க உயர்வு எதுவும் இல்லை.

(ஆ) தமிழகத்தில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளின் மூலம் தரமான பஞ்சு கொள்முதல் செய்து தரமான நூலை வெளிச்சந்தையை விட 5 சதவீதம் குறைவான விலையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. அது தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் நூல் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகும். ஆனால் வெளிச்சந்தையில் தனியார் நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல் விலையை கட்டுப்படுத்துவதற்கு மாநில அரசிடம் இதற்கான அதிகாரம் இல்லை. ஆகவே இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் மத்திய அரசை கீழ்க்கண்ட முறைகளில் கேட்டு வருகிறது.

"(1) தனியார் நூற்பாலைகளில் மொத்த உற்பத்தியில் 50 சதவீதம் கைத்தறிக்குத் தேவையான சிட்டா நூலைத்தான் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற இலக்கு இருக்கிறது. அதை அமல்படுத்த வேண்டும்.

(2) அத்தியாவசியமான பொருட்கள் சட்டத்தின் கீழ் நூலை கொண்டுவந்தால் நிச்சயமாக நூல் விலையைக் குறைக்கலாம்." என்று தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். கருப்பசாமி : தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில் நூல் மற்றும் சாய மருந்துகள் சுமார் 100 சதவீதம் விலை உயர்ந்திருப்பதால், முந்தைய விலைக்குக் குறைக்க அவைகளை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாமல் தடுக்கவும், நார்ப்பட்டு இறக்குமதியை முற்றிலும் ரத்து செய்யவும் மத்திய அரசை தமிழக அரசு தீவிரமாக வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலனை செய்யப்படும்.





திரு. எஸ். எஸ். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கைத்தறிகளின் நூல் தேவைகளுக்காக இயங்கிவரும் கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தி விலை அடக்க விலையில் கைத்தறிகளுக்கு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தவரையில் வெளிச் சந்தையை விட 5 சதவீதம் குறைவாக கோ-ஆப்டெக்ஸ் மூலம் நாங்கள் வழங்குகிறோம். அடக்க விலையில் வழங்குவது என்றால் இந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் மொத்த நஷ்டம் ரூ. 35 கோடி ஏற்படும். அதைக் குறைக்கிற வகையில் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்தாள வேண்டியிருக்கிறது. ரூ. 35 கோடியில் இருந்து 28 கோடி ரூபாயாக அது இன்றைக்கு குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்த ஆலைகளின் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு நியாய விலையில் நூல் வழங்கிக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். எஸ். கருப்புசாமி : வெளிச்சந்தையை விட கூட்டுறவுத் துறையில் 5 சதவீதம் குறைவான விலைக்கு விற்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் நூல் 100 சதவீதம் விலை உயர்ந்திருக்கிறது. எனவே, அந்த விலையைக் குறைக்க நான் ஏற்கெனவே கேட்டுக் கொண்டதைப் போல, ஏற்றுமதியை தடை செய்ய அரசு முன்வருமா? மேலும் சாய மருந்துப் பொருட்கள் சமீப காலத்தில் விலை ஏறவில்லை என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த ஆண்டு மார்ச் 22-ம் தேதி முதல் அத்தோல், அத்திக் போன்ற சாய மருந்துப் பொருட்கள் 8 சதவீதமும், ஹைட்ரோ சல்பேட் சோடா என்ற கெமிக்கல் 22 சதவீதமும் உயர்ந்திருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இது கைத்தறி தொடர்பான வினா என்பதால் ஒரு "Bonus" வினா அனுமதிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தை மையமாக வைத்து பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

[1990 ஏப்ரல் 9

திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு பேருந்து நிலையம்.

*1597—திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு I.U.D.P. திட்டத்தின்கீழ் பஸ் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த திட்டம் எப்போது ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

10-05 மணி

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் பேரூராட்சி சுற்றுலா பயணிகள் அதிகமாக வந்து போகின்ற நகரம். அந்த நகரத்தில் இது வரையிலும் ஒரு பேருந்து நிலையம் அமையாமல் இருக்கிறது. அரசினுடைய ஐ.யூ.டி.பி. திட்டத்தின் கீழ் கடனாகப் பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று திருக்குழுக் குன்றம் பேரூராட்சி தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கிறது. அந்தத் தீர்மானம் அரசின் பரிசிலனையில் இருக்கிறதா? அவர்களுக்குக் கடன் வழங்கி அங்கே புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றத்தில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான திட்டம் நகர ஊரமைப்பு இயக்குநருக்கு இது வரையிலும் வந்து சேரவில்லை. அந்தத் திட்டம் பேரூராட்சியினுடைய நிர்வாக இயக்குநர் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையோடு நகர ஊரமைப்பு இயக்குநருக்கு வருமானால் விரைவில் பரிசீலனை செய்து பரிவோடு ஆவன செய்யப் படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 9]

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியில் தீர்மானம் போட்டு அந்த அதிகாரியிடத்திலிருந்து பொதுப் பணித் துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. சுமார் 22 இலட்சம் ரூபாயில் ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்கான வரைபடம் கூட அளிக்கப்பட்டு கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பாக அங்கே பொதுப் பணித் துறை அதிகாரிகள்கூட வந்து பார்வையிட்டுச் சென்று இருக்கிறார்கள். எனவே தவறு தலான தகவல்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு யாரோ தந்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அந்த வரைபடத்தை ஏற்கெனவே நானும் பார்த்திருக்கிறேன். எனவே அந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்காக அரசு கடன் வழங்க முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நகர ஊரமைப்புக் குழு வாரியத்தின்மூலம் இந்த திட்டத்தைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும். ஆனால் இந்தத் திட்டம் நகர ஊரமைப்பு இயக்குநருக்கு இதுவரையில் வரவில்லை என்ற குறிப்பை இங்கே வழங்கி இருக்கிறார்கள். அந்தத் திட்டம் விரைவிலே நகர ஊரமைப்பு இயக்குநருக்கு வரும். உடனடியாக அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு மதிப்பீடு என்பதைத் தலைமைப் பொறியாளர் மூலமாகவும் தயாரித்து மற்றும் அந்தத் திட்டத்திற்கான வரைபடத்தையும் தயாரித்து அதற்கான தொழில் நுட்ப அனுமதியை விரைவில் வழங்குவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்.

(அ) தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்குக் கடத்தப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைக் கடல் எல்லைக்குள் தமிழக மீனவர்கள் 700 பேர்களைக் கொண்ட 78 மீன்பிடி படகுகளை ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகள் பலவந்தமாகப் பிடித்துச் செல்ல முயற்சி செய்தனர் என்றும் இலங்கைக் கடற்படையினர்

தலையிட்டு இந்த முயற்சியைத் தடுத்தனர் என்றும் செய்தி
வந்து இருக்கிறது. நமது மீனவர்களை எச்சரித்து விடுவதற்காக
யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்றுதான் விடுதலை செய்
வோம் என்று விடுதலைப் புலிகள் பிடிவாதம் பிடித்ததாகவும்
செய்தி வந்திருக்கிறது. இலங்கைக் கடற்கரையில் மீன்பிடித்
தொழிலாளர்களையும் நமது மீனவர்களையும் விடுதலைப்புலிகள்
பிடித்துச் செல்வது என்பது முதல் தடவையல்ல. ஏற்கெனவே
ஒருமுறை இவ்வாறு பிடித்துச் சென்றதாக இங்கே பதிலும்
கூறப்பட்டு இருக்கிறது. உண்மையிலேயே விடுதலைப்புலிகள்
கடற்கரைக்கு மீன்பிடிக்கச் செல்லக்கூடிய நமது மீனவர்களைப்
பிடிக்கவேண்டும் என்று ஏதாவது ஒப்பந்தம் இருக்கிறதா?
அவர்கள் ஏன் நம்முடைய தமிழக மீனவர்களை அழைத்துச்
செல்லவேண்டும் என்ற வினாவுக்கான பதிலை நான் எதிர்
பார்க்கிறேன். மீனவர்கள் மத்தியில் ஒரு பதட்டநிலை ஏற்
பட்டிருக்கிறது. இனியும் இப்படி நடக்காமல் தடுக்க நம்
முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்
களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய எல்லையில் மீன்பிடித்துக் கொண்டி
ருந்த மீனவர்களை இலங்கையிலே இருக்கிற விடுதலைப்புலிகள்
கடத்திச் சென்றதாகவும் அவர்களிடத்திலேயிருந்து இலங்கை
இராணுவம் அந்த மீனவர்களைக் காப்பாற்றி அனுப்பியதாகவும்
பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இது இப்போது இரண்
டாவது முறையாக வந்திருக்கிற செய்தி என்றாலும் இது
தொடர்ந்து நடைபெறுமா என்ற சந்தேகம் இன்றைக்கு மீனவர்
களிடத்திலே ஏற்பட்டு இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து நீடிக்குமானால்
தமிழக மீனவர்கள எந்த அளவுக்குத் தொல்லைக்கு ஆளாவார்
கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். கடல் பகுதி
களில் மீன்பிடிக்கிற மீனவர்களைப் பொறுத்தவரையிலும்
அவர்கள் எல்லைகளைக் கண்டுபிடிக்க முடிகிற சூழ்நிலை
இன்றைக்குக் கிடையாது.

*10-10 மணி*

பொதுவாக, நம்முடைய கடல் எல்லையை தெரிந்துகொள்கின்ற
அளவுக்கு அங்கே எந்த அறிகுறியும் கிடையாது. எனவே மீன்
பிடிக்கப்போகின்ற மீனவர்கள் எல்லையைத் தெரிந்துகொண்டு
திரும்பமுடியுமா என்றாலும் முடியாது. எனவே தொழிலிலே
அக்கறையாக இருப்பவர்கள் என்ற முறையில் அவர்கள் நம்
முடைய எல்லையைக்கூடக் கடந்து போகலாம். அதேபோல
இப்போது கடத்திக்கொண்டிருக்கின்ற நம்முடைய விடுதலை





எல்லையிலேகூட வந்து அவர்கள்
புலிகள் கூட நம்முடைய
கடத்துகின்ற வாய்ப்புகள் இருக்கின்றன. ஏனென்றால் எல்லை
கள் இதுதான் என்று குறிப்பிடுகின்ற அளவுக்கு கடலில் இன்
றைக்கு குறிப்பிடப்படவில்லை. எனவே இந்த சூழ்நிலை
அடிக்கடி ஏற்பட்டு இலங்கை ராணுவம் தலையிட்டு அதனாலே
விடுவிக்கப்பட்டார்கள் என்று சொல்வது தமிழகத்தின் மீனவர்
களுக்கும் நமக்கும் அது ஏற்றதல்ல எனவே நாம் மத்திய அரசை
இந்த நேரத்திலே வற்புறுத்தி நம்முடைய ரோந்து சுற்றுகிற
ராணுவத்தை அங்கே வரவழைத்து. நம்முடைய மீனவர்களுக்கு
பாதுகாப்பு தருகின்ற வகையில் மத்திய அரசை வற்புறுத்தி
நம்முடைய மீனவர்கள் தொழில் செய்கின்ற ஒரு நல்ல சூழ்நிலை
களை உருவாக்குவது நம்முடைய கடமை என்ற வகையில் இந்த
மாநில அரசு அந்த நடவடிக்கையிலே ஈடுபடவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற ஒரு நல்ல சூழ்நிலையில் கச்சத்
தீவானது நம் கையை விட்டு போய்விட்டது என்ற பயங்கரமான
சூழ்நிலையை மாற்றி மீண்டும் கச்சத் தீவினை பெறுவதற்கான
சூழ்நிலையை உருவாக்கப்படுமானால் நம்முடைய தமிழகத்திலே
இருக்கின்ற மீனவர்களுக்கு மிகப் பெரிய பாதுகாப்பாகவும், மிகப்
பெரிய வரப்பிரசாதமாகவும் அமையும். எனவே தமிழக மீன
வர்களை காப்பாற்றுகின்ற அந்த உடனடி நடவடிக்கையை
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு மத்திய
அரசுடன் மத்திய அரசின் மூலமாக இலங்கை அரசோடு பேசி
இதற்கு ஒரு நல்ல தீர்வு காணுவதற்கு வழிவகை செய்யவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்
மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்களும்
சுட்டிக் காட்டியதுபோல, தமிழக மீனவர்கள் 700 பேர்கள் 78
விசைப்படகுகளில் மீன் பிடிக்கச் சென்றபோது விடுதலைப் புலி
கள் மீனவர்களை பலவந்தமாக துப்பாக்கிகளை காட்டி மிரட்டி
கடத்திச் சென்றிருக்கின்றார்கள். இலங்கை ராணுவத்
தினர் தக்க நேரத்தில் வந்து அவர்களைக் காப்பாற்றி இருக்
கின்றார்கள். அதே நேரத்தில் 700 பேர் சென்றவர்களில்
213 பேர்கள் திரும்ப வந்துவிட்டதாகவும் மீதி பேர்கள்
இன்னும் வரவில்லை என்றும் அதற்காக மாவட்ட ஆட்சித்
தலைவர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்
கின்றார் என்றும் தெரியவருகிறது.

என்னைப் பொறுத்தவரையில் நான் கடந்த சமயத்தில்
நாகப்பட்டனத்தில் சென்றிருந்தபோது நான் அவர்களைக் கேட்டு
தெரிந்துகொண்ட விஷயம். அவர்கள் அவர்களுடைய எல்லை
யிலே மீன் பிடித்ததாகச் சொல்கின்றார்கள். இங்கேயிருந்து

[திரு. ஆர். சிங்காரம்] [1990 ஏப்ரல் 9

7 அல்லது 10 கிலோ மீட்டர் நம்முடைய பார்டராகவும், அங்கேயிருந்து 7 அல்லது 10 கிலோமீட்டர் அவர்களுடைய பார்டராகவும், அதற்கு இடையிலே இருப்பது இன்ட்டர் நேஷனல் பார்டராகவும், அங்கே யார் வேண்டுமானாலும் மீன் பிடிக்கலாம் என்ற சூழ்நிலை இருப்பதாகவும் நான் கேள்விப்பட்டேன். ஆக இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே இலங்கை ராணுவம் அவர்களைக் காப்பாற்றுகிறது. நம்முடைய தமிழ் மீனவர்களை காப்பாற்ற வேண்டிய விடுதலைப் புலிகள் இவர்களைக் கடத்தி சென்றபோது அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படவேண்டிய அவசியம் என்ன என்பதை நான் முதலமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். அதே நேரத்திலே நாகப்பட்டினம் அருகிலே நான் சென்றபோது அந்த மீனவர்கள் மீண்டும் அந்த இடத்திற்கு செல்லமுடியாமல் இருக்கின்றார்கள். அவர்கள் பயந்துகொண்டு வீட்டிலேயே பட்டினியாக இருந்துகொண்டு இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில்லாமல் தமிழக கடற்கரை பூராவாகவும் தக்க ஏற்பாடு செய்யவேண்டும். இந்திய பாதுகாப்பு படை போன பிறகுதான் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டது என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து இதுபற்றி உடனடியாக அவர்கள் ஆழ்ந்து சிந்தித்து தகுந்த நடவடிக்கை எடுத்து தீவிரமாக முதலமைச்சர் அவர்கள் அவர்களைக் காப்பாற்ற முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் எடுத்துக் கூறியதுபோல, மீனவர்கள் மீண்டும் ஒரு முறை இலங்கையிலே விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். பத்திரிகையிலே வெளிவந்துள்ள செய்திகளின்படி தமிழக மீனவர்களின் மீன் பிடிப் படகுகள் சனிக்கிழமை இரவு இலங்கை கடல் பகுதிக்குள் நுழைந்தன என்று செய்தி வந்திருக்கின்றது. இது பத்திரிகையிலே வந்துள்ள செய்தி. இந்தச் செய்தி எந்த அளவுக்கு உண்மை என்பது எனக்குத் தெரியாது. ஆனாலும் கடத்தப்பட்டவர்கள் உடனடியாக பத்திரமாக விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். மாலை நாகைப் பகுதியிலே இருந்து கடத்தப்பட்டவர்களும் பத்திரமாக விடுவிக்கப்பட்டார்கள் என்பதும், இனிமேல் எல்லை தாண்டி எங்கள் பகுதியிலே வந்து மீன்பிடிக்கக்கூடாது என்று அவர்களை அவர்கள் கேட்டுக்கொண்டார்கள் என்பதும் வெளியான செய்திகள் ஆகும்.

10-15 மணி

இப்போது ஏற்பட்டுள்ள இந்த நிலைமை குறித்து அறிந்துவர நேற்றையதினம் அந்தத் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு டாக்டர் சந்திரசேகரன் அவர்களை அந்தப் பகுதிக்கு



1990 ஏப்ரல் 9] [டாக்டர் மு. கருணாநிதி]

அனுப்பி வைத்திருக்கிறேன். அதாவது மீனவர்களுடைய பகுதிக்கு. அவர்கள் சென்று விவரம் அறிந்து வந்த பிறகுதான் என்ன நடைபெற்றது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். இதற்குமேல் நான் இதைப்பற்றிக் கூறுவதற்கு எந்த விவரமும் என்னிடத்தில் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) கோவை மாவட்டம் சின்னவேடன்பட்டி மற்றும் வேலப்ப நாயக்கன்புதூர்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களை அகற்றும் நடவடிக்கை குறித்து.**

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், சின்னவேடன்பட்டி பேரூராட்சியில், சர்வே நம்பர் 511, 513பி-ல் 60 வீடுகளும், 129-2-ஏ/ல் 35 வீடுகளும், 221-ல் 400 வீடுகளும், வேலப்ப நாயக்கன்புதூர் அண்ணா நகரில் 80 வீடுகளும், சுமார் 10 ஆண்டுகளாக அங்குள்ளவர்கள் கட்டி வசித்து வருகிறார்கள். அவர்களுக்குக் குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி, ரேசன் கார்டுகள் எல்லாம் வழங்கி, இன்றைக்குத் திடீரென்று என்ன காரணத்தினாலோ புல்டோசர் வைத்து ஏறக்குறைய 40 லட்சம் பெறுமானமுள்ள 700 வீடுகள் தகர்த்து எறியப்பட்டிருக்கின்றன. என்ன காரணத்தினால் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பதோடு, சுமார், 40 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால், 3,000 பேர் வீடு இல்லாமல் தவித்துக்கொண்டிருப்பதால் அதை வழங்குவதோடு இந்த நேரத்தில் அவர்களுக்கு உரிய பாதுகாப்பை, தமிழ்க் குடிமகனாக நீங்கள் இங்கே இருக்கும்போது அங்கே தமிழ்க் குடிமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண வேண்டுமென்ற பேரறிஞர் அண்ணாவின் பெயராலே அங்கே நகரம் உருவாக்கப்பட்டிருக்கிற நிலையில் அண்ணாவின் பெயரைக்காக்கின்ற இந்த அரசு இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. கே.ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு.செங்கோட்டையன் அவர்கள் இப்படி ஒரு விஷயத்தை மென்சன் பண்ணியது பற்றியும், தாங்கள் அனுமதித்தது பற்றியும் எந்தக் கேள்வியும் நான் கேட்கவில்லை. ஆனால், ஏற்கெனவே கோவை மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முந்தாநாள், சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களையும் ஒன்றாகக் கூட்டி வைத்து பேசி, இரண்டாம் முறையாக அவர்கள் அத்தனை பேரும் கையெழுத்திட்டஓர் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை மீறி இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. இதனுடைய அடிப்படையே தவறான இடத்திற்குப் போகாமல் தாங்கள் பாதுகாக்க வேண்டுமென்று உங்களிடம் நான் சப்மிஷன் செய்கிறேன்.

[திரு. கே. ரமணி] [1990 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப்பிரமணியம், திரு. சின்னசாமி, திரு.பெரியசாமி போன்றவர்கள், இப்போது திரு. செங்கோட்டையன் அவர்கள் எழுப்பிய பிரச்சினையின் அடிப்படையில் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையொட்டி பேசிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ரமணி அவர்கள் மேற்கொண்டு இதுதொடர்பாக என்ன நடைபெற்றிருக்கிறது என்பதைப் பற்றி இங்கே தெரிவித்திருக்கிறார்கள். சுருக்கமாக நான் அதை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இதுசம்பந்தமாக 5-4-1990 அன்று மாலை 5.30 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு நடைபெற்ற சர்வ கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

''புறம்போக்கு நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டவர்களை தகுதியின் அடிப்படையில் சின்னவேடன்பட்டி கிராமம் மஜரா உடையான்பாளையம் எண் 220/பி1ஏ மற்றும் 221/1 ஆகிய மந்தைவெளிப் புறம்போக்கு நிலங்களில் நில ஒதுக்கீடுசெய்து அவர்களுக்கு மனைப்பட்டா உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்; சின்னவேடன்பட்டி கிராமம் மஜரா வேலப்பநாயக்கன்புத்தூர் 364-ல் குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள், ஊராட்சி ஒன்றியத்தினால் ஏற்கெனவே செய்து கொடுக்கப்பட்டுள்ளதால், இங்குள்ள நபர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் அங்கே குடியிருக்க அனுமதித்தல்; மேற்படி சின்னவேடன்பட்டி கிராம எல்லையிலுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் புதிய ஆக்கிரமிப்பு எதையும் அனுமதிக்கக் கூடாது.''

எனவே, சின்னவேடன்பட்டியில் இருந்த ஆக்கிரமிப்புகள் பொது அமைதி கருதியே அப்புறப்படுத்தப்பட்டன. இதனால் கிராமத்தில் மக்களிடையே பதட்ட நிலை எதுவும் இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் மாற்று இடங்களைக் கொடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சர்வ கட்சிக் கூட்டத்தில் எல்லோருக்கும் திருப்திகரமான முடிவுகளாக மேற்கொள்ளப்பட்டன என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. உரிமை மீறல் பிரச்சினை.

**'தினகரன்' நாளிதழ்மீது—அவை நிகழ்ச்சிகள் தொடர்பான உறுப்பினர்களின் நடவடிக்கைகளை விமர்சித்துத் தலையங்கம் தீட்டியுள்ளது குறித்து.**

10-20 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் 1-4-1990 நாளிட்ட ''தினகரன்'' நாளிதழில் எழுதப்பட்டுள்ள தலையங்



1990 ஏப்ரல் 9] [பேரவைத் தலைவர்]

கத்தைக் குறிப்பிட்டு, அது அவை உரிமை மீறிய செயலாகும் என்று ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இது எவ்வாறு அவை உரிமை மீறிய பிரச்சினையில் அடங்கும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி வேண்டுகிறேன்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, 31-3-1990 ம் நாளன்று நானும், எதிர்கட்சித் தலைவர் அவர்களும், எங்களுடைய கட்சியினுடைய துணைத்தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்களும் முதலமைச்சருக்கு எதிராக அவை மீறல் குறித்த பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி கோரியிருந்தோம். அதற்கு ஒரு நாள் முன்னதாக எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் ''இந்திய அமைதி காக்கும் படைக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியை முதலமைச்சர் புறக்கணித்தது குறித்து'' ஒரு விவாதத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். இந்த அறிவிப்புகளை ஒட்டி நாங்கள் சில கருத்துக்களை வெளியிட்டிருந்தோம். அந்தக் கருத்துக்களுக்கு உள்நோக்கம் கற்பித்தும், களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், எங்களைப் பழிக்கும் வகையிலும், திரித்தும் 1—4—1990ம் நாளன்று ''தினகரன்'' நாளேடு ஒரு தலையங்கம் தீட்டி இருக்கிறது. அந்தத் தலையங்கத்தில் எங்களை கூச்சல்காரர்கள், ஓலக்காரர்கள், வேதாந்திகள் என்று வர்ணித்திருக்கிறது. அதுமட்டுமல்ல, ''கலைஞரோ, இந்தக் கூச்சலாளிகளுக்கும், ஓலக்காரர்களுக்கும், வேதாந்திகளுக்கும் அவர் தம் வாயடைக்கும் வண்ணம் சட்டமன்றப் பேரவையின் அவைக்களத்திலேயே ஒரு நாள் அன்று, இரு நாள்கள் விளக்கம் நல்கியிருக்கிறார். மறுமொழி பகர்ந்திருக்கிறார். பதிலடி கொடுத்திருக்கிறார். ஆனால் இவர்களுக்கு சராசரி மனிதப் பிறவிகளுக்கு இருப்பதுபோல முகத்தில் முன் பகுதியில் மட்டும்தான் வாய் இருக்கிறது என்பது இல்லை. வேறு பல இடங்களிலும் வாய்கள் திறக்கும். இந்த வம்புப் பிரச்சாரம் தொடரும். இது நமக்குத் தெரியும்'' என்று ஓரிடத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதைப்போல, ''இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு எதற்காகப் போனது, யார் கூப்பிட்டு அது போனது என்னும் கேள்விகளுக்கே இந்தக் கூச்சல்காரர்களுக்கு விடை தெரியாது. கலைஞர் மீது இப்படி புழுதி வாரித் தூற்றும் அரசியல் கோமாளித்தனக்காரர்களுள் ஒருவருக்காவது இலங்கை—இந்திய உடன்படிக்கை பற்றிய அடிப்படை அறிவாவது இருக்கிறதா?'' என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

அதோடு அல்லாமல், ''வரலாற்று ஞானசூனியங்கள்'' என்று ஒரு பகுதியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, ''இதைத் தமிழ் மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். சாயம்போன போலி தேசிய சொக்காய்களும் தங்கள் திராவிடத் தோல்களை உரித்துப்போட இயலாமல் அதன்மீது போலி தேசிய சாயம் பூசித் திரிபவர்களும் இதற்கு பலியானதில் வியப்பு இல்லை'' என்று காங்கிரஸ, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதோடு நில்லாமல், ''பழைய போலி தேசியம் கழிக்கப்பட்டுவிட்டது டெல்லியில்'' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ''இங்கே கலைஞரை தேசத் துரோகி என்று ஓலமிடும் தேசிய ஓய்யாரிகளின் கொண்டைக்குள் இருக்கும் ஈறும் பேனும்'' என்று இங்கே திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பயன்படுத்திய வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இது போன்று அவை உரிமை மீறல் சம்பவங்களைப் பொறுத்தவரையில் ''எர்ஸ்கின் மே'' அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவை உறுப்பினர்கள் சுதந்திரமாகவும், அச்சமின்றியும் செயல்பட வேண்டும். அவர்களுடைய நடவடிக்கைகளைத் தடுக்கும் போக்கில் யார் எழுதினாலும், பேசினாலும் அது அவை உரிமை மீறலாகும் என்று மிகத் தெளிவாக ''மே'' அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

In 1701 the House of Commons resolved that to print or publish any books or labels reflecting on the proceedings of the House is a high violation of the rights and privileges of the House. Indignities offered to their House by words spoken or writings published reflecting on character or proceedings have been constantly punished by both the Lords and the Commons upon the principle that such acts to obstruct the Houses in the performance of their functions by diminishing the respect due to them.

Reflections upon Members, the particular individuals not being named or otherwise indicated are equivalent to reflections on the House.

10-25 மணி

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் மக்களவையில் இதுபோன்ற ஒரு பிரச்சினை 'பிளிட்ஸ்' வாரப் பத்திரிகைக்கு எதிராக முன்பு எழுப்பப்பட்டது. 'பிளிட்ஸ்' வாரப் பத்திரிகை கிருபளானியைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியது. கிருபளானி மக்கள் அவையில் பேசிய பேச்சு பற்றி பிளிட்ஸினுடைய அன்றைய நிருபர் ஒரு கட்டுரை எழுதி இருந்தார். அதிலே அவர் குறிப்பிட்டது எல்லாம் மிகவும் சுருக்கமான விஷயம் தான். அந்த ஏப்ரல் 20ஆம் தேதி குஷ்வகத் ராய் என்பவர் அந்தப் பிரச்சினையை எழுப்பி இருக்கிறார். அதிலே அவர் ஆட்சேபனையான





பகுதி என்று சொன்னது "Kripaloony" என்று அவர்கள் குறிப்பிட்டு இருந்தார்கள். "Kripalani" என்பதற்குப் பதிலாக "Kripaloony" என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. 'loony' என்கிற சொல்லுக்கு "lunatic" என்ற பொருள் கொள்கிற தன்மையில் அன்றைய தினம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதிலே ஆட்சேபகரமான சொற்கள் என்பது 'Lousiest and cheapest speech' என்று ஒரு இடத்திலே வருகிறது. 'senile' என்று கிருபளானியை வர்ணித்து இருக்கிறார்கள். 'senile' என்று சொன்னால் மூப்பின் காரணமாக ஏற்படுகின்ற நினைவாற்றல் குறைவு. அவ்வளவு தான். அதைச் சொல்லி இருக்கிறார்கள். இது அவை உரிமை மீறல் என்று குறிப்பிட்டு அவர்கள் அன்றையதினம் மீறலாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே இருக்கிற பகுதியை நான் படித்துக் காட்டுகிறேன்.

The gravemen of the charge against the Blitz is not that it published a report of the debate or proceedings in the House but that it caused libellous reflections on a member of the House on account of his speech and conduct in Parliament. This type of contempt is quite distinct from the instances of misconduct in connection with the publication of the debates in the House and is dealt with separately by May.

Analagous to molestation of Members on account of their behaviour in Parliament are speeches and writings reflecting upon their conduct as Members, On 26th February 1701 the House of Commons resolved that to print or publish any libels reflecting upon any Members of the House for or relating to his service therein was a high violation rights and privileges of the House. Written imputations as affecting a Member of Parliament, may amount to breach of privilege, without perhaps, being libels at common law, but to constitute to breach of privilege a libel upon a Member must concern the character or conduct of the Member in that capacity.

Both Houses will punish not only contempts arising out of facts of which the ordinary courts will take cognizance, but those of which they cannot, such as contemptuous insults, gross calumny or foul epithets by word of mouth not within the category of actionable slander or threat of bodily injury. The conduct in parliament or the comments is in vulgar language or abusive, they cannot be deemed to come within the bounds of fair comment or justifiable criticism. Even the Press Commission has held that the comments couched in abusive language is unfair and that even fair comment cannot be stretched to include irresponsible sensationalism. The scope of freedom of the Press has been described by the Supreme Court in the Searchlight Case.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1990 ஏப்ரல் 9

இது நான் அன்றைய தினம் அவை உரிமையை மீறியதாகக்
கருதப்பட்டு அந்த ஆசிரியருக்கும், நிருபருக்கும் தண்டனை
வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே நான் உங்களிடத்தில் இந்த
அவையின் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புவது, நாங்கள்
சுதந்திரமாகவும், அச்சமின்றியும் செயல்படாத வகையில் தடுக்
கும் நோக்கத்தோடு இந்தத் தலையங்கம் தீட்டி இருக்கிற
''தினகரன்'' நாளேடு இந்த அவையினுடைய உரிமையை மீறி
இருக்கிறது. இங்கே நான் எழுப்பி இருக்கிற அவை உரிமை மீறல்
பிரச்சினையை குறித்து நீங்கள் ''தினகரன்'' நாளேட்டின் மீது
உரியநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

10-30 மணி

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
பாலசுப்பிரமணியம் அவர்கள் கொண்டுவந்துள்ள உரிமைப்
பிரச்சினையில் உள்ள உணர்வுகளை நான் மதிக்கிறேன். ஒரு
பத்திரிகையினுடைய தலையங்கத்திலே மாண்புமிகு உறுப்
பினர்களை விமர்சிப்பதற்கு ஓர் அளவுகோல் இருக்க
வேண்டும் என்பதிலே உள்ள நியாயத்தை நான் ஏற்றுக்
கொள்கிறேன். ஆனால் உரிமைப் பிரச்சினை
உண்டா, இல்லையா என்று தீர்மானிக்கக்கூடிய பொறுப்பில்
தாங்கள் இருக்கின்றீர்கள் ; அந்த உரிமை தங்களுக்கு உண்டு.
அதற்கிடையிலே பத்திரிகைகளிலே மாண்புமிகு உறுப்பினர்
களைப் பற்றித் தனிப்பட்ட முறையிலே சொல்லப்படுகின்ற
விமர்சனங்கள் உரிமைப் பிரச்சினைக்கு உரியதா அல்லது
ஒரு உறுப்பினர் அவையிலே சொல்லாததை, செய்யாததை
முறையே சொன்னதாகவோ, செய்ததாகவோ ஒரு பத்திரிகை
யிலே வருவது உரிமைப் பிரச்சினைக்கு உரியதா என்பவை
களை எல்லாம் எண்ணிப் பார்க்க நாம் அனைவரும் கடமைப்
பட்டு இருக்கின்றோம். மாண்புமிகு பாலசுப்பிரமணியம் அவர்
கள் குறிப்பிட்ட அந்தத் தலையங்கத்தைப் பொறுத்த
வரையில் மிகக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள்
அதிலே இருக்கின்றன என்பதையும், உள்ளத்தைப் புண்
படுத்தக்கூடிய சொற்கள் அதிலே நடமாட விடப்பட்டு இருக்
கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வை
நானும் பகிர்ந்துகொண்டு என்னுடைய வேதனையைத் தெரிவித்
துக்கொள்கிறேன். இந்த அவையிலே உள்ள உறுப்பினர்
களுடைய மாண்பினை, அவர்களுடைய மதிப்பினை, மரியாதை
யினைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஆளுங்கட்சிக்கும்
இருக்கின்றது என்கின்ற காரணத்தினால் நான் அந்தக்
கடமையோடு, பொறுப்பினைப் பகிர்ந்து கொண்டு என்னுடைய
வருத்தத்தை, அந்தப் பத்திரிகையிலே வந்துள்ள வாசகங்
களுக்காகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



1990 ஏப்ரல் 9] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆனால் ஒரு உரிமைப் பிரச்சினைக்கு உரியதாக இவைக
ளெல்லாம் வர இயலுமா என்ற கேள்வி எழுகிற நேரத்தில்,
பத்திரிகைகளிலே ஒரு உறுப்பினரைப் பற்றி வருகின்ற
செய்திகள் தவறானவைகளாக இருந்தால், நான் ஒன்று பேச
அதை மாற்றி ஒரு பத்திரிகை பிரசுரித்து, அதன் காரணமாக
வேறு விளைவுகள் ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகுமே
யானால், உரிமைப் பிரச்சினை வருவதும் அல்லது ஒரு அமைச்
சரோ அல்லது ஒரு சட்டமன்ற உறுப்பினரோ ஒரு தவறான
தகவலை அவைக்குச் சொல்லி, அப்படிச் சொல்லப்பட்டது
தவறான தகவல் என்று மெய்ப்பிக்கப்படுகின்ற நேரத்தில்,
அந்தத் தவறான தகவலைச் சொன்னவர்மீது உரிமைப்
பிரச்சினை வருவதும் வாடிக்கை.

பல நேரங்களில் அப்படி உரிமைப் பிரச்சினைகள்
வந்திருக்கின்றன. சில நேரங்களிலே அமைச்சர்களேகூட
இந்த அவையில் தவறான தகவல்களை ஒரு காலத்திலே
சொல்லி, அது உரிமைப் பிரச்சினைக்குப் போகாமல், எச்சரித்து,
அன்றைய சபாநாயகர் மாண்புமிகு இராஜாராம் அவர்களால்
எச்சரித்து விடப்பட்ட செய்தியும் அன்றைக்குத் துணை
சபாநாயகராக இருந்த நம்முடைய திரு. பி. எச். பாண்டியன்
போன்றவர்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். இவைக
ளெல்லாம் உரிமைப் பிரச்சினையிலே ஒரு வகை.

பத்திரிகைகளில் தலையங்கங்கள் அல்லது கருத்துக்கள்
அல்லது சட்ட மன்ற நடவடிக்கையைப் பற்றிய குறிப்புக்கள்
வருகின்ற நேரத்தில் அவைகளெல்லாம் உரிமைப் பிரச்சினைக்கு
என்று எடுத்துக் கொள்வோமேயானால் அது எங்கு போய்
நிற்கும், எந்த அளவிற்குப் பத்திரிகை சுதந்திரத்தைப் பாதிக்
கும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அ.இ.அ.தி.மு.க. நாளிதழ் ஒன்றிலேகூட வந்துள்ள அந்த
வரிகளை நான் படித்துக் காட்டுகிறேன். உரிமைப் பிரச்சினை
எழுப்புவதற்காக அல்ல. நான் அவைகளெல்லாம் உரிமைப்
பிரச்சினைக்கு உரியவை என்றும் சொல்ல விரும்பவில்லை.
இப்படிப் பத்திரிகைகளிலே எழுதுவது இன்றைய தினம்
ஒரு மரபாக ஆகி விட்டிருக்கின்ற காரணத்தால் சொல்ல
விரும்புகின்றேன்.

22—3—1990 இல் வந்த ஒரு தலைப்பில், ஒரு முன்னாள்
அமைச்சர் எழுதிய கட்டுரைக்குத் தலைப்பே, '' இது தாண்டா
சட்டசபை ; இவர் தாண்டா முதலமைச்சர் ''—

இன்னொன்று, 4—4—1990 இல் வந்த ஒரு கட்டுரைக்கு
'' கோட்டையிலே இருக்கிற கொடியவர்கள் '' என்ற ஒரு
தலைப்பு. கோட்டையிலே எல்லோரும் தான் இருக்கிறோம்;

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, எல்லோரும்தான் இருக்கிறோம். அதற்காக எங்களையெல்லாம் கொடியவர்கள் என்று சொல்லி விட்டார்கள் என்று உரிமைப் பிரச்சினை கொண்டு வர முடியுமா என்றால் முடியாது.

இன்னொன்று, நண்பர் திரு. பாண்டியன் மன்னித்துக் கொள்ள வேண்டும்; உடனே அவர் சீறி எழக் கூடாது. அதே பத்திரிகையில், 20—3—1990 இல் ''பி. எச். பாண்டிய னின் ரௌடித்தனம்'' என்று ஒரு சொற்றொடரே வெளி யிடப்பட்டிருக்கின்றது. இதற்கெல்லாம் உரிமைப் பிரச்சினை யிலே வரும் என்று சொல்லவில்லை. அவர்களுடைய கருத்துக் களைத் தங்கள் பேப்பரில் எழுதுகிறார்கள். அது வேறு.

இன்னொன்று, நம்முடைய அருமை நண்பர் பீட்டர் ஆல் போன்ஸ் அவர்கள்கூட ஒரு வாரப் பத்திரிகையில் இன்றைக்கு எழுதி யுள்ளார். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றியே அவர் குறை கூறுகிறாரா அல்லது பாராட்டுகிறாரா என்று தெரிய முடியாத அளவிற்கு எழுதியுள்ளார். இங்கே உள்ள கட்சிகளைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார். '' இடது கம்யூனிஸ்ட் '', ஜனதா தளம், முஸ்லீம் லீக் ஆகியோ ருக்குக் கடந்த கூட்டத் தொடரில் தி.மு.க.வின் மீது இருந்த எஜமான விசுவாசம் பளிச்சென்று பிரதிபலித்தது.'' எஜமான விசுவாசம் உள்ள கட்சிகள் என்று அவற்றைச் சொன்னாலே அவை அடிமைகள் என்ற பொருளிலேதான் அது கையாளப் படுகின்ற சொல்லாகும்.

அதைப் போலவே, ''கலைஞர் அடிக்கடி எரிச்சல்படுகிறார்'' என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் எரிச்சல்படுகி றேனா, இல்லையா என்பது இலக்கியச் செல்வருக்கே தெரியும். எவ்வளவோ எரிச்சலையெல்லாம் தாங்கிக் கொண்டு, எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்கின்ற அளவில், இந்த அவை யிலே நான் இருக்கிறேன். எரிச்சல் படுவதாகச் சொல்லி யிருக்கிறார். '' இடது கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்பட்டுள்ள தலையாட்டி பொம்மை என்ற தோற்றம் '' என்று அந்தக் கட்சியைப் பற்றி இந்த அவையிலே உள்ள ஒரு உறுப்பினரே, திரு. பீட்டர் ஆல்போன்ஸே இன்றைக்கு வெளிவந்துள்ள ஜூனியர் விகடன் பத்திரிகையிலே இப்படியொரு கட்டுரை எழுதுகிறார்.

அதுமாத்திரம் அல்ல. எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றிச் சொல்லும்பொழுது, '' எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். இராதாதான் சட்டமன்றத்திலேயே "the most unpredictable man" அதாவது, ''நிர்ணயம் செய்ய இயலாத மனுஷன்'' என்று இராதாவை—நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி இந்த சபையினுடைய உறுப்பினர் ஒருவரே ''unpredictablo man'





''எப்போது, எந்தப் பாணத்தை, யார் மேல் எறிவார் என்று சொல்ல முடியவில்லை. கலைஞரிடம் சிரித்துப் பேசிக் கொண்டே இருப்பார். எழுந்து நின்றால் திடீரென்று கார சாரமான வார்த்தைகளைக் கொட்டித் தீர்ப்பார். இந்தப் பிரச்சினையைப் பற்றிக் கடுமையாய் வாதிக்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தால், திராவிட இயக்கம் என்று சொல்லி கலைஞரோடு உறவு பாராட்டுவார்'' (அதுகூடப் பிடிக்கவில்லை அவர்களுக்கு). '' அடடா, ஒட்டிக் கொண்டாரே என்று நாங்கள் வருத்தப்படும்பொழுது, திடீரெனப் பாய்ந்து வார்த்தைகளால் முதலமைச்சரைப் பிடுங்கி விடுவார்.'' இப்படிப்பட்ட வார்த்தைகள். முதலமைச் சரை வார்த்தைகளால் எதிர்க்கட்சித் தலைவர் பிடுங்கி விடுவார் என்றெல்லாம் சொல்லப்பட்ட அந்த வார்த்தைகளெல் லாம் கூட நாளைக்கு உரிமைப் பிரச்சினைக்கு வரக் கூடும். எனவேதான், ஒரு பத்திரிகையிலே தலையங்கம் என்கின்ற அளவிலே எழுதும் பொழுது, நாம் அனைவரும் சேர்ந்து, அவையின் சார்பாக எல்லாப் பத்திரிகைகளுக்கும் விடுக்கின்ற

10-35 மணி

வேண்டுகோள், இந்த அவைக்கு மொத்தக் குத்தகை எடுத்துக் கொண்டு நான் எல்லோரின் சார்பாக இப்படிப்பட்ட வேண்டு கோளை விடுக்கத் தகுதி படைத்தவனோ, இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் தலைவராகிய தாங்கள் தகுதி படைத்து இருக்கிறீர்கள். எனவே, எந்தப் பத்திரிகை யானாலும் விமர்சனம் எழுதலாம், தவறுகளைச் சுட்டிக் காட்டலாம். ஆனால், அந்தத் தலையங்கத்திலே, திரு. பால சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய தலையங்கத் திலே இருந்த காரசாரமான வார்த்தைகள், கடும் சொற்கள் இருப்பதை நான் ஏற்றுக்கொள்ள இயலாது; அதைப்போலவே பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் எழுதியுள்ள அந்தக் கட்டுரை யில், வாரப் பத்திரிகையில் வந்துள்ள அந்த வாசகங்களைக்கூட ஏற்றுக்கொள்ள இயலாது; அதைப்போலவே தான் அ.தி.மு.க. நாளேட்டில் வந்துள்ள அந்த வாசகங்களையும் ஏற்றுக் கொள்ள இயலாது. அது முரசொலி பத்திரிகையாக இருந்தாலும் கூட, எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் சரி, அவைகளை நடத்துகிறவர்கள், அவற்றின் ஆசிரியர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள், இப்படிப்பட்ட சொற்களைத் தவிர்ப்பது நல்லது என்ற அறிவுரையை, இந்த உரிமைப் பிரச்சினை இங்கே வந்ததன் காரணமாக அனைவரும் தாங்களாகவே ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிவுரையாக இருக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லி, இந்த உரிமைப் பிரச்சினை பற்றி தங்களுடைய தீர்ப்பு எதுவோ அதற்கு நான் வழிவிட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது குறித்து நாளிதழின் ஆசிரியருக்கு எழுதி, விளக்கம் கேட்டு, பின்னர் என் தீர்ப்பை அளிக்கிறேன். தீர்ப்பை அளிக்கும்போது என்னுடைய கருத் தையும் சேர்த்தே அளிக்கிறேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்.

**திரு .உ. ரா. வரதராசன் :** தலைவர் அவர்களே, 5—4—1990 அன்று இங்கே வருவாயத் துறை அமைச்சர் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளித்துப் பேசுகிறபோது அவைக்குத் தந்த சில தவறான தகவல்கள் பற்றி விதி எண் 78-ன்கீழ் ஒரு மணி நேரம் விவாதம் வேண்டுமென்று தங்களைக் கோரி கடிதம் கொடுத்திருந்தேன். இதேபோன்று விதி எண் 74, 78-ன்கீழ் வேறு ஒரு பிரச்சினையை காங்கிரஸ், அ.இ.அ.தி.மு.க. நண்பர்கள் கொடுத்திருக்கிறார்கள்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள், இது போன்று கொடுத்துவிட்டு நான் அதில் முடிவெடுத்து அறிவிக்கிற வரையில் நீங்கள் அருள்கூர்ந்து பொறுமை காட்ட வேண்டும். இப்படி ஒவ்வொன்றையும் நான் கொடுத்திருக்கிறேன், அது என்னவாயிற்று என்று கேட்டால் எந்த விவரத்தையும் சொல்ல முடியாது. எந்த வேலையும் செய்ய முடியாது. இது நான் முடிவெடுத்த பிறகு சொல்ல வேண்டியது. அது ஆய்விலே உள்ளது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கோ. வீரையன் :** தலைவர் அவர்களே, 5 ஆம் தேதி கொடுத்த...........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** 78-வது விதியின் கீழ் கொடுத்ததை எல்லாம் நான் பார்த்து, முடிவு செய்துதான் சொல்ல முடியும். அதிலே தேதிக் கணக்கு கிடையாது.

**திரு. கோ. வீரையன் ;** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒரு பிரச்சினையாகி இருக்கிறது. அமைச்சர் அவர்கள் தவறாக ஒரு தகவலைக் கொடுத்திருக்கிறார்கள்.............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வீரையன் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, இதுபோன்று 78 மற்றும் சில விதிகளின்கீழ் கொடுக்கப்படுகிறவை என்னுடைய ஆய்வில் இருந்து வருபவை. நான் எடுத்துக்கொள்கிறபோது தான் எடுத்துக் கொள்ள முடியுமே தவிர, உடனடியாக, தேதிக் கணக்கை வைத்து, மூன்று நாட்களுக்குள் எடுக்கவேண்டும், இரண்டு நாட்களுக்குள் எடுக்கவேண்டும் என்று எடுக்க முடியாது, அதற்கு விதியிலே இடமில்லை என்பதை உணர்த்த விரும்புகிறேன்.



## 4. கவன ஈர்ப்பு

### (அ) ஆரணி, காந்தி நகர் அரிசன மக்களின் இடுகாடு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால், ஏற்பட்டுள்ள நிலைகுறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** திரு. மு. சின்னக்குழந்தை ஒரு பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லாததால் திரு. எஸ். டி. உகம்சந்த், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. எஸ் .டி. உகம்சந்த் ;** தலைவர் அவர்களே, ''ஆரணி நகராட்சிக்கு உட்பட்ட காந்தி நகர் அரிசன மக்களின் சுடுகாட்டை பலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், ஆரணி நகரத்தில் புல எண். 7/1-இல் உள்ள 8.05 ஏக்கர் பரப்புள்ள '' கோட்டை காலி மைதானம் '' என வகைபாடு செய்யப்பட்ட மொத்த இடத்தில், 1957ஆம் ஆண்டு கோட்டாட்சியாளரால் 0.91 ஏக்கர் நிலத்தை ஆதி திராவிட காலனி மக்களுக்கு இடுகாடாக பயன்படுத்துவதற்காக ஆரணி நகராட்சிக்கு அலியனேஷன் செய்யப்பட்டு, அவ்விடம் 1954 முதல் சுடுகாடாகப்பயன்படுத்தப் பட்டு வருகிறது. இந்த ஆதி திராவிடர் காலனி '' காந்தி நகர் '' என அழைக்கப்படுகிறது.

2. ஆரணி நகர நில அளவை 1965-இல் தொடங்கப்பட்டு 1969-இல் முடிக்கப்பட்டு சுத்த ஆவணங்கள் அவ்வாண்டிலேயே ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாவணங்களில் புல எண். 7/1 பரப்பு (8 ஏக்கர் 22835 ச.அ.) காலி மைதானம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 0.91 ஏக்கர் நிலம் ஆதி திராவிடர் இடுகாட்டிற்கு நிலப் பராதீனம் செய்யப்பட்ட விவரம் தற்செயலாய் குறிக்கப்படாமல் விடப் பட்டுள்ளது. இக்குறை இன்றைய தேதி வரை சரி செய்யப்பட வில்லை. 1982 ஆம் ஆண்டு மேற்கூறிய காந்தி நகரைச் சேர்ந்த ஆதிதிராவிட மக்கள் இடுகாடாகப் பயன்படுத்தி வந்த இடத்தில், 4 ஆதி திராவிடர் உட்பட 11 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி, அந்த இடத்திற்கு '' பெரியார் நகர் '' என

அழைத்து வசித்து வருகிறார்கள். இந்த 11 நபர்கள் கட்டியிருக்கும் வீடுகளுக்குப் போகவர பாதையும் அமைக்கப்பட்டுள்ளது. புல எண். 7/1-இல் ஆதி திராவிட இடுகாட்டிற்குப் பராதீனம் செய்யப்பட்ட நிலம் தற்போது கீழ்க்கண்டவாறு உபயோகத்தில் உள்ளது:-

| | | (ஏக்கர்.) |
|---|---|---|
| 1. | ஆதி திராவிடர் இடுகாடு .. .. | 0.58 |
| 2. | பாதை .. .. .. .. | 0.16 |
| 3. | வீடுகள் கட்டி பிற நபர்கள் ஆக்கிரமிப்பு | 0.17 |
| 4. | கோட்டைச் சுவரும் காலியிடமும் | 0.19 |
| | மொத்தம் .. | 1.10 |

பாதை மற்றும் வீடுகள் கட்டியுள்ள 0.33 ஏக்கர் பரப்பில் (0.16 பிளஸ் 0.17) இதுவரை இடுகாடாகப் பயன்படுத்தவில்லை என விசாரணையில் தெரிய வருகிறது. இதுவரை இடுகாட்டிற்குப் பராதீனம் செய்யப்பட்ட 0.91 ஏக்கர் பரப்பையோ அல்லது இடுகாடாகத் தற்சமயம் பயன்படும் 0.58 ஏக்கர் பரப்பையோ ஆரணி நகராட்சியால் வேலியிட்டு பாதுகாப்புச் செய்யப்படவில்லை. இந்நிலையில் காந்தி நகர் அரிஜன காலனி மக்கள் 17—11—1989 ஆம் தேதியன்று இடுகாட்டிற்கான நிலத்தைச் சுற்றிலும் வேலி அமைக்க முற்பட்டு கற்களை நட்டனர். இதனால் வீடுகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்திருக்கும் நபர்களின் வீட்டிற்குப் போக உபயோகித்த பாதையையும் தடை செய்து விட்டார்கள். ஆக்கிரமிப்புதாரர்கள் (பெரியார் நகரவாசிகள்) வட்டாட்சியரிடம் முறையிட்டு பாதையைத் தடை செய்த கற்கள் அப்புறப்படுத்தப்பட்டன. இடுகாட்டில் ஆக்கிரமிப்பு செய்த நபர்களை அப்புறப்படுத்திடவும், இப்பகுதியை இடுகாட்டின் விஸ்தரிப்புக்குப் பயன்படுத்தவும் தீர்ப்பு வழங்கவேண்டுமெனக் கேட்டு காந்தி நகர் ஆதி திராவிடர் மக்கள் ஆரணி முன்சீப் கோர்ட்டில் ஓ. எஸ். 17/84 வழக்கு தொடர்ந்து இவ்வழக்கு இன்னும் முடிவடையாமல் நிலுவையில் உள்ளது. அப்புறப்படுத்தப்பட்ட கற்களை மீண்டும் காந்தி நகர் ஆதி திராவிட மக்கள் பாதையில் நட்டு பாதையைத் தடை செய்துள்ளனர்.

ஆரணி நகர் காந்தி நகர் ஆதி திராவிட மக்கள் இடுகாட்டில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வசித்து வரும் பகுதியைத் தாக்கி வீடுகளுக்குச் சேதம் விளைவித்ததாக வந்த புகார் மீது வட்டாட்சியர் இரு தரப்பினரையும் அழைத்து 15—3—1990 ஆம் தேதி



யன்று செய்யார் காவல் துறை துணை கண்காணிப்பாளர் முன்னிலையில் சமாதானக் கூட்டம் நடத்தினார். இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட முடிவுகளை இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டனர்:-

1. இடுகாடு சம்பந்தமாக ஆரணி மாவட்ட முன்சீப் கோர்ட்டில் தொடரப்பட்டுள்ள வழக்கு முடியும் வரை இரு தரப்பினரும் அமைதிக்கு ஊறு விளைவிக்கக்கூடிய எந்தவிதமான மாற்றங்களையும் செய்யக்கூடாதெனவும், மற்றும்

2. இரு தரப்பினரும் நடந்த நிகழ்ச்சிகளை மறந்து சட்டமும், ஒழுங்கும் பாதிக்கப்படாத வகையில் மிகவும் அமைதியாகவும், சச்சரவின்றி நடக்கவும், இப்பகுதியில் பூரண அமைதி நிலவ இரு தரப்பினரும் ஒத்துழைப்பு தர வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலே கண்ட தீர்மானங்களை இரு தரப்பினரும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர். ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி வசித்து வரும் பெரியார் நகரவாசிகளுக்கு அவர்களுடைய குடியிருப்புக்களுக்குச் செல்லப் பாதையைத் திறந்துவிட வேண்டுமென்ற கோரிக்கைக்கு அமைதிக் கூட்டத்திற்கு வந்திருந்த காந்தி நகரவாசிகள், , மற்ற காந்தி நகர்வாசிகளின் கருத்தை அறிந்து கலந்து பேசி முடிவு கூறுவதாகச் சென்றனர். ஆனால், இதுவரை அவர்கள் தங்களின் இசைவைத் தெரிவிக்கவில்லை.

தற்போது ஆரணி நகரப் புலன் எண் 7/1 இடுகாடு நிலம் சம்பந்தமாக ஆரணி முன்சீப் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு ஓ. எஸ். 17/84-இன் தீர்ப்பு வரப் பெற்ற பின்பு, இத்தீர்ப்பின் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து இப்பிரச்சினையை முடிவு செய்யப்படும்.

## (ஆ) அம்பத்தூர் நகரியத்திற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் முடங்கிக் கிடப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

**திரு. உ. ரா. வரதராசன் :** தலைவர் அவர்களே,' ' 1983-ம் ஆண்டில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட அம்பத்தூர் நகரியத்திற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் முடங்கி இடப்பது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

அம்பத்தூர் குடிநீர்த் திட்டமானது 1981 ஆம் ஆண்டு ரூபாய் 40 இலட்சத்திற்குத் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரிய ஆணை எண். 594, தேதி 18—12—1981-இல் ஆட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி புழல் ஏரியிலிருந்து குடிநீர் எடுக்கும் சூரப்பேடு நீரேற்று நிலையத்தை அபிவிருத்தி செய்து, பின்பு நாளொன்றுக்கு சுமார் 5 இலட்சம் காலன் குடிநீர் அம்பத்தூர் நகரியத்திற்கு வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி நகரியம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பகுதி 1, பகுதி 2-க்கும் ரூபாய் 14 இலட்சத்திற்கும், பகுதி 3, பகுதி 4-க்கும் ரூபாய் 24 இலட்சத்திற்கும் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன.

இத்திட்டத்தின்படி நான்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் முறையே 3 இலட்சம் லிட்டர் ஒன்றும், 1.50 இலட்சம் லிட்டர் இரண்டும், 4 இலட்சம் லிட்டர் ஒன்றும் கட்டப்பட்டுள்ளன. ஏற்கெனவே போடப்பட்டுள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டை சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் நீரேற்று குழாயிலிருந்து மேற்கண்ட நான்கு பகுதிகளுக்கும் தனித்தனியாக நீரேற்று குழாய்கள் போடப்பட்டுள்ளன. விநியோக குழாய்கள் சுமார் 37.81 கி.மீ. நீளத்திற்குப் போடப்பட்டு, நான்கு பகுதிகளுக்கும் மொத்தமாக 239 பொதுக் குழாய்கள் கட்டப்பட்டுள்ளன. இதில் தற்போது 124 பொதுக் குழாய்களில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் சுமார் 1,00,000 இலட்சம் காலன் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கோடைக்காலங்களில் புழல் ஏரியில் தண்ணீர் வற்றி விடுவதால் அம்பத்தூர் நகரின் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. தற்போது சூரப்பேடு தலைமை நீரேற்று நிலையத்தின் அபிவிருத்திப் பணிகள் நிறைவடையும் தறுவாயில் உள்ளன. அது முடிவடைந்த பின் நாள் ஒன்றுக்கு திட்டமிட்டபடி சுமார் 5 இலட்சம் காலன் குடிநீர் அம்பத்தூர் நகரியத்திற்கு வழங்கப்படும்.

மேலும் இத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக வறட்சி நிவாரணப் பணியின் கீழ் ஒரு நீரேற்று கிணறு அத்திப்பட்டில் அமைக்கப்பட்டு அத்திப்பட்டு பகுதிக்கு சுமார் 15,000 காலன் தண்ணீர் வழங்கப்படுகிறது.

*திரு. உ.ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, கிட்டத்தட்ட நான்கு மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு, குடிதண்ணீர் வழங்க குழாய்கள் எல்லாம் போடப்பட்டும் கூட, அவை முழுமையாகப் பயன்படுத்த முடியாத (not put to beneficial use) நிலைமை இருக்கிறது. குடிநீர் வழங்கும் இந்தத் திட்டத்திற்கு வருடம் முழுவதும், ஐந்து இலட்சம் லிட்டர் தண்ணீர் கிடைக்கக்கூடிய நீர் ஆதாரம் எதுவென்று நிர்ணயம் செய்யப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. புழலிலிருந்து





வருகிற தண்ணீர் கோடை காலத்தில் கிடைப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது. இப்போது 8 இலட்சம் ரூபாய்க்கு மேல் கட்ட வேண்டுமென்ற அளவிற்குத் தான் நிலைமை இருக்கிறது. பொது விநியோகத்திற்குப் போடப்பட்ட குழாய்கள், பயன்படுத்தப்பட முடியாத நிலைமை இருக்கிறது. இந்தத் திட்டத்தை விரைவாக முடிப்பதற்கும், வருடம் முழுவதும் நீர் கிடைக்கக்கூடிய நீர் ஆதாரத்தை நிர்ணயம் செய்து தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

10-40 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது புழல் ஏரியில் தண்ணீர் வற்றி வருகிற சூழ்நிலை ஏற்படுகிறபோது அங்கே குடிநீர்ப் பிரச்சினை ஏற்படுகிறது. இதை ஈடு செய்கின்ற நோக்கத்தோடு சூரப்பேடு தலைமை நீரேற்று நிலையத்தில் அபிவிருத்திப் பணிகள் செயல்பட்டு வருகின்றன. விரைவில் அவை முடிவு அடைந்தவுடன், அந்தப் பகுதிக்கான குடிநீர்ப் பிரச்சனை முற்றிலும் தீர்த்து வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரப்பேடில் நடைபெறுகிற மேம்பாட்டுப் பணிகளைப் பற்றி எல்லாம் அமைச்சர் அவர்கள் அறிக்கையிலேயும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்போதும் சொல்லியிருக்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியம் நீர் ஆதாரத்தைக் கண்டுபிடித்து நிர்ணயித்து முழுமையாக நிறைவேற்றாத காரணத்தால், அதனுடைய திட்டச் செலவு என்பது உயர்ந்து, அம்பத்தூர் நகரியம் அப்போது நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேலாக 8 இலட்சம் ரூபாய் கட்டவேண்டிய நிலைமை வந்திருக்கிறது. இந்தத் திட்டச் செலவு அதிகமானதற்கு குடிநீர்வடிகால் வாரியம் தான் பொறுப்பு. ஆகவே, அவர்களே, மேலே ஆகக்கூடிய அந்த அதிகச் செலவை ஏற்றுக்கொண்டு, அம்பத்தூர் நகரப் பகுதிகளுக்கு முழுமையாக குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இது அம்பத்தூர் மட்டுமல்ல. நீர் நிலைகளை ஆராயாமல் எடுக்கப்பட்ட முடிவுகளின் காரணமாகப் பல்வேறு இடங்களிலே தொட்டிகள் கட்டப்பட்டு, நீர் நிலைய ஆதாரங்கள் சரியாக இல்லாத சூழ்நிலைகள், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அப்படிப்பட்ட இடங்களுக்கு

முன்னுரிமை கொடுத்து, மீண்டும் அந்த இடங்களுக்கு நீர் நிலையை உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் செயல் பட்டு வருகிறது. அந்த அடிப்படையிலேதான் அம்பத்தூரிலே கூட புதிய நீர் நிலைகளைக் கண்டுபிடித்து, அதற்கான ஏற்பாடு களைச் செய்து வருகிறது. ஆகவே, பழைய காலத்திலே ஏற்பட்ட இதுபோன்ற நீர் நிலைய ஆதாரங்கள்—அப்போது இருக்கிற நீர் நிலையங்களை வைத்து அவர்கள் எடுத்துவிட்டதாகக் குறிப்பிடு கிறார்கள். பல்வேறு காரணங்களால், வறட்சி ஏற்பட்டுவிட்ட சூழ்நிலையில் அந்த நீர் நிலையங்கள் வற்றிப் போய்விட்டன என்ற காரணத்தையும் குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்த வர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் இப்போது எல்லாம் நீண்ட எதிர்காலத்தை நோக்கி, திட்டங்கள் தீட்டப்பட்டு, முழு மையாக நீர் நிலைய ஆதாரம் கிடைத்த பிறகுதான் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று ஆணையிடப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலே முழுமையாகப் பணிகளை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்பு

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக் குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்).

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன் வடிவு, 1990.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதி களுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரி போடப்படுகிற இந்த அரசினுடைய சட்ட முன் வடிவை அறிமுக நிலையிலேயே நான் எங்களுடைய கட்சியின் சார்பில் எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன்.





திரு. எஸ். ஆர். ராதா : தலைவர் அவர்களே, சட்ட முன் வடிவை அறிமுக நிலையிலேயே எங்கள் கட்சியின் சார்பில் எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன். ஆனால் கருத்தைச் சொல்ல நீங் கள் அனுமதிக்க மாட்டீர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்ப்பே வலிமையா னது. எனவே கருத்துக்கு இடம் இல்லை.

பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990 ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர் களே, பிற மாநிலங்களில் குறைந்த வரி விதிக்கப்படுகின்ற கார ணத்தால், நாம் பெரிய இழப்புக்கு ஆளாக நேரிடுகிறது. எனவே அப்படிக் குறைந்த வரிக்காக சிலர் இங்கேயிருந்து வாகனங்களை ரிஜிஸ்தர் செய்ய வேறு மாநிலங்களுக்குச் சென்று விடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கும் மாநிலத்திற்கு வருவாய் வருவதற்கும் தான் இந்த முயற்சியாகும். நுழைவு வரி என்கிற பெயரை மாத்திரம் வைத்துக் கொண்டு, இதை எதிர்க்கத் தேவையில்லை என்று கூறி இந்தச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேசன். தமிழகத்தினுடைய எல்லைக்குள் என்று இருந்தால், அது பற்றி நாம் சிந்திப்பதற்கு இருக்கிறது. உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் என்று சொல்லுகிறபோது, ஒவ்வொரு யூனியனையும் அல்லது நகரசபைகளையும் குறிக்குமோ என்ற காரணத்தாலே அந்தச் சொல்லாட்சியைப் பற்றி எனக்கு இங்கே சற்று கருத்து அல்லது விளக்கம் வேண்டுவதாக இருக்கிறது. உள்ளாட்சி என்று இருக் கிற காரணத்தாலே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது நல்லாட்சி. எனவே சொல்லாட்சியைத் தவறாகப் பயன் படுத்தாது. இதிலே கொடுக்கப்பட்டுள்ள சட்டத்தைப் பற்றிய விளக்கங்கள் தங்களுக்குத் தரப்பட்டு இருக்கிறது. அதிலேயே உள்ளாட்சிப் பகுதி ஒன்றுக்குள் இயக்கூர்திகள் நுழைவு என் றால், அச்சொல்லமைப்பு இலக்கண வகையில் வேறுபட்டால்,

அவ்வேறுபாடுகளும் அச்சொல்லமைப்பின் மூலமாகக் கொண்ட
பிற சொல்லமைப்புகளும் சேர்ந்து, இம்மாநிலத்திற்கு வெளி
யிலே உள்ள இடம் எதிலிருந்தேனும் உள்ளாட்சிப பகுதி
ஒன்றில் பயன்படுத்துவதற்காகவோ விற்பனை செய்
வதற்காகவோ அப்பகுதிக்கு கொண்டு வரப்படும் இயக்கூர்திகள்
நுழைவு என்று பொருள்படும் என்று விளக்கம் இருக்கிறது.

10.45 மணி

7. மானியக் கோரிக்கைகள் 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும்
—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம் என்ற
தலைப்பின் கீழ் ரூ. 27,68,13,000-க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. யூ.கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவாக முடிக்க
வும், மேலும் கூடுதல் நீதிபதிகளை நியமிப்பது சம்பந்தமாக
விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி
கிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம் என்ற
தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,68,13,000-ல் ரூ. 100
குறைக்க வேண்டும்''.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட நீதிமன்றத்தின் வளாகத்
தில் வழக்கறிஞர் சங்கத்துக்கு கட்டிடம் கட்டுவது குறித்து
விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி
கிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிருவாகம் என்ற
தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,68,13,000-ல் ரூ. 100
குறைக்க வேண்டும்''.

(ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன் :



''மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற
தலைப்பின் கீழ் ரூ. 16,28,17,000-க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, ஆயுள் சிறைக் கைதிகளின் குழந்தைகளுக்கான
நலன்களை கவனிக்க ஏற்பாடு செய்வது பற்றியும், ஆயுள் கைதி
களை 10 ஆண்டுகள் முடிந்ததும் விடுதலை செய்வது பற்றி
நடவடிக்கை எடுப்பது குறித்தும் விவாதிக்க, நான் கீழ்க்கண்ட
வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற
தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 16,28,17,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. எம். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சென்னை சிறைச்சாலை, வேலூர் சிறைச்
சாலை, திருச்சி சிறைச்சாலை, மதுரை சிறைச்சாலைகளில்
11 மார்ச் 90 முதல் 15 மார்ச் 90 வரை காங்கிரஸ் தொண்டர்கள்
மீது நடத்தப்பட்ட முறை குறித்து விவாதிக்க, நான் கீழ்க்
கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற
தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 16,28,17,000-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை
களும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்
திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சரவர்கள்
முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 13-ம்
மானியக் கோரிக்கை எண் 14-ம் அவையின் முன் வைக்கப்
பட்டிருக்கின்றன. அவற்றிற்கான குறிப்புகளும் கொடுக்கப்
பெற்றிருக்கின்றன. அவற்றை அவை நடவடிக்கைக் குறிப்பில்
ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.*
அந்தக் குறிப்புகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்
களுடைய கருத்துக்களைச் சொல்வார்கள் என நம்பு
கிறேன். முன்னுரையாக ஒரு சில கருத்துக்களைச் சொல்வது
விவாதத்திற்குப் பயன்படும் என்று கருதுகிறேன்.

---

* 171—265-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்
பெற்றுள்ளன.

காவல் துறை வழக்கைத் தொடருகிறது. வழக்கு மன்றங்கள் அவற்றை விசாரிக்கின்றன. நியாயம் வழங்கப்படுகின்றது. சிறைகள் வழக்குமன்ற ஆணைகளை நிறைவேற்றுகின்றது. சமுதாயம் குற்றம் செய்கின்ற சூழ்நிலையை உருவாக்குகின்றது. குற்றம் புரிபவர்கள் எந்தச் சூழ்நிலையால் குற்றம் புரிகிறார்கள் என்பதை இன்றைக்குப் பலர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அப்படித் தண்டனை பெறுபவர்களைத் திருத்தக் கூடிய அளவிற்குச் சமுதாயம் பங்கு கொள்ள வேண்டுமென்று நாம் உணர வேண்டும். அந்த வகையில் நீதி விரைவாகக் கிடைக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தப் படுகிறது. இந்தச் சிறைச்சாலைகளைப் பொறுத்த வரையில் பல்வேறு மாற்றங்களை நம்முடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு செய்திருக்கிறது.

மணிமேகலையில் ஒரு குறிப்பு. அந்தக் குறிப்பைச் சொல்வது பொருத்தமாக இருக்குமென நான் நினைக்கிறேன். மணிமேகலையில் சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆகிய காதையில் சொல்லியதுபோல

''கறுவோரில்லா சிறையோர் கோட்டம்
அறவோர்க்கு ஆக்கினன் அரசாள் வேந்தன்''.

என்ற வகையில் அருள் உள்ளம் கொண்டு அறவோர் சாலைகளை உண்டாக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டதனால் தான் சிறைக் கோட்டங்கள் அறக் கோட்டங்களாக மாற வேண்டுமென்ற நோக்கத்தோடு பணியாற்றி வருகிறது. எனவே இந்த மானியக் கோரிக்கைகளின் மீது கருத்துக்களைச் சொல்லிய பிறகு நான் என்னுடைய பதிலுரையைத் தருவதாகச் சொல்லி அமைகின்றேன்.

10-50 மணி.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 13 நீதி நிர்வாகம் மற்றும் மானியக் கோரிக்கை எண் 14 சிறைச்சாலைகள் என்ற இந்த மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாகச் சொல்லுகிற நேரத்திலே மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். குற்றவாளிகள் பிறப்பது கிடையாது. சமுதாயம் தான் உருவாக்குகிறது என்ற கருத்தின் அடிப்படை





யிலே சூழ்நிலைகள்தான் குற்றவாளிகளை உருவாக்குகின்றன. அப்படிப்பட்ட அந்தக் குற்றவாளிகளை திருத்துவதற்கு வேண்டிய வழி வகைகளை காண்பதற்காகத்தான் சிறைச்சாலைகளும் சட்டங்களும் கோர்ட்டுகளும் அதே நேரத்தில் காவல் துறையினரும் இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் இன்றைக்குச் சொல்ல விரும்புவதெல்லாம் சட்டங்களை மக்கள் மதிக்க வேண்டும். அரசியல் சட்டத்திலே போடப்பட்டிருக்கிற பல்வேறு ஷரத்துக்களையும் அதோடு மட்டும் அல்லாமல் அவ்வப்போது இயற்றப்படுகின்ற பல்வேறு சட்டங்களையும் மக்கள் மதிக்க வேண்டும், கடைபிடிக்க வேண்டுமென்று அரசே எதிர்பார்க்கிறது. ஆனால் அதே நேரத்தில் இன்றைக்கு உயர் நீதிமன்றங்கள் உச்ச நீதிமன்றம் மற்றும் உள்ள நீதிமன்றங்கள் பல்வேறு உத்தரவுகளையும் தீர்ப்புகளையும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்புகளை மக்கள் மதிக்க வேண்டும் என்று எண்ணுகிற நாம் அரசு அதை எந்த அளவுக்கு மதிக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சமீபத்திலே கூட நான் கேள்விபட்டிருக்கிறேன். சென்னை உயர் நீதிமன்றத்தில் சுமார் 460-க்கும் மேற்பட்ட contempt of Court என்று சொல்லப்படுகிற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த 460 கேஸ்களில் மிக அதிகமாக 400-க்கும் மேற்பட்ட அந்த வழக்குகள் அரசினுடைய நிர்வாகத்திற்கு எதிராக அரசாங்கத்தினுடைய நிர்வாகம் சரியான முறையிலே அந்த உத்தரவுகளை செயல்படுத்தவில்லை என்ற காரணத்திற்காக போடப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்த அளவுக்கு இன்றைக்கு உயர் நீதிமன்றங்களுடைய தீர்ப்புகளை மதிக்காத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது என்பதை நான் மிக வேதனையோடு சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மக்களிடம் நாம் எதிர் பார்க்கிறோம், அவர்கள் கோர்ட்டுகளுடைய தீர்ப்புகளை மதித்து நடக்க வேண்டும் என்று. ஆனால் அரசே அந்த தவறை செய்தால் யாரை நாம் கேட்பது என்ற முறையில் தான் இருந்துக் கொண்டு வருகிறது. அதோடு மட்டும் அல்லாமல் இன்றைக்கு பல்வேறு அரசு அதிகாரிகள் செய்கின்ற முறைகேடுகளை எல்லாம் கூட கோர்ட் அதனுடைய தீர்ப்பிலே சுட்டிக் காட்டியிருக்கிறது. ஆனால் அதன் மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்கிறதா என்று சொன்னால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அதை பரிசீலனை செய்வதற்குக் கூட சரியான

முறையிலே அரசாங்கத்தில் அமைப்புகள் இல்லை என்ற நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. அதை எல்லாம் அரசாங்கம் நல்ல முறையிலே பார்த்துச் செய்ய வேண்டும். கோர்ட்டை அரசு மதித்தால்தான் நாட்டு மக்களும் மதிப்பார்கள் என்ற முறையிலே அதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் சென்ற ஆண்டு நான் அறிந்த வகையிலே சென்னை உயர்நீதிமன்றத்திலே ரிட் மனுக்கள் என்ற வகையில் சுமார் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. நான் ஏன் இதை சொல்லுகிறேன் என்று சொன்னால் அந்த அளவுக்கு இதற்கு முன்பு ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதையும் அரசாங்கம் போடுகிற உத்தரவுகளை மற்றவர்கள் எல்லாம் எதிர்க்கிறார்கள் என்று சொன்னால் அந்த அளவுக்கு தவறான உத்தரவுகள் போடப்படுகின்றன என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த 12 ஆயிரம் ரிட் மனுக்களும் சரியானவை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்த அளவுக்கு அதிகமாக இருக்கின்றன என்று சொன்னால் அந்த உத்தரவுகளிலே பல்வேறு தவறுகள் இருக்கின்றன என்பது தெரிகிறது. இது போன்று பல்வேறு ரிட் மனுக்கள் வருவதை தவிர்க்கின்ற அளவிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்று சொன்னால் இந்த நிலைமையானது அதிகமாகிக் கொண்டே வந்தால் ஹைகோர்ட்டானது அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற அளவுக்கு தனியாக செயல்பட வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இன்றைக்குள்ள சூழ்நிலையில் ஏற்கனவே நாம் சொல்லியிருக்கிறோம். நீதிமன்றங்கள் மக்களை நோக்கிச் செல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். நீதியானது மக்களுக்கு மிக எளிதான முறையிலே கிடைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவானது மதுரையிலே துவங்க வேண்டும் என்று ஜஸ்டிஸ் ஜஸ்வந்த்சிங் அவர்கள் தலைமையில் ஏற்செனவே ஒரு குழுவை அமைத்து அவர்கள் பரிந்துரை செய்து இருக்கிறார்கள். அந்தப் பரிந்துரையை ஏற்கனவே அரசாங்கமும் மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறது. அதை வலியுறுத்துகின்ற அளவுக்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வலியுறுத்துவது மட்டும் அல்லாமல்—இன்றைக்கு அதற்கான பதிலை உயர்நீதிமன்றத்திலிருந்து அனுப்பவில்லை என்று குறை சொல்லுகிறார்கள். அந்தக் குறையைப் போக்குகின்ற அளவிலே உடனடியாக அந்த பதிலை பெற்று அனுப்பி, மதுரையில் உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு பெஞ்சை அமைத்தால் நீதியானது விரைவான முறையிலே மக்களுக்கு சென்று அடைகின்ற ஒரு நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இன்றைக்கு உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளின் பதவிகளில் 25-இல் 23 நிரப்பப்பட்டிருக்கின்றன. மேலும் 2 நிரப்பப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது. நான் அறிந்த வகையிலே மேலும் 7 புதிய உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி அந்த பதவிகளை 32 ஆக உயர்த்தினாலும் அங்கு தேங்கியிருக்கிற வழக்குகள் மிக மிக அதிகமாக இருப்பதன் காரணமாக இந்த 32 நீதிபதிகளால் மட்டும் முடியாது என்ற நிலைமை இருப்பதன் காரணமாக, தேங்கியிருக்கிற வழக்குகளை தீர்ப்பதற்காக மேலும் அதிகமான நீதிபதிகளை நியமிக்க வேண்டும் என்று மாநில அரசே வற்புறுத்த வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னாலும், ஏற்கனவே ரிடையர்டு ஆகி இருக்கின்ற ஹைகோர்ட் நீதிபதிகள் அல்லது மற்ற நீதிபதிகளைக் கொண்டு ஒரு குழுவை அமைத்து, பல ஆண்டுகளாக தீர்க்க முடியாமல் இருக்கின்ற வழக்குகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய முழு முயற்சியை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் அறிந்திருக்கின்ற வகையிலே, இன்றைக்கு ஜனவரி மாதம் முடிய ஹைகோர்ட்டில் மட்டும், சூட்களாக 1,15,000 வழக்குகள் தேங்கியிருக்கின்றன. மற்றும் பல்வேறு வகையான வழக்குகள் சுமார் 95,000 தேங்கி இருக்கின்றன. இந்த அளவிற்கு, வழக்குகள் பல ஆண்டுகள் தேங்கி இருக்கின்றன என்று சொன்னால், மக்களுக்கு நீதியானது மறுக்கப்படுகிறது என்று தான் சொல்ல வேண்டும். "Justice delayed is Justice denied" என்று சொல்வார்கள். மக்களுக்கு நாம் இந்த அளவிற்கு காலம் தாழ்த்தி நீதியைத் தந்தால், அது ........

10-55 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதோடு ஒன்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். "Justice delayed is Justice denied" என்பதுடன் "Justice hurried is Justice burried" என்று கூட சொல்வார்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால், நான் வேகமாக முடிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. காலம் காலமாக 1975 ஆம் ஆண்டு 1980 ஆம் ஆண்டு, பல்வேறு கால கட்டங்களில் இது போன்ற வழக்குகள் இருக்கின்றன. அவைகளையாவது முடிப்பதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும். வேகமாக முடிந்த ஒரு வழக்கை நான் இப்போது சுட்டிக் காட்ட வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு ஒரு பெரிய பிரச்சினையாக நாட்டிலே அதைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மிக வேகமாக அந்த வழக்கை—மற்ற வழக்குகளைப் பற்றிக் கூட வேகத்தைக் காட்டவில்லை—ஆனால் இந்த வழக்கிலே [illegible]

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1990 ஏப்ரல் 9

கருத்துக்கள் இருக்கின்ற சூழ்நிலையில், ஒரே கருத்தாக இருந்தாலும் பரவாயில்லை—மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்ற சூழ்நிலையில் மற்றவர்களுடைய கருத்துக்களுக்கு இடம் கொடுக்காமல், அதைப் பற்றி சிந்திக்காமல், உடனடியாக புரட்சித் தலைவி அவர்கள் தாக்கப்பட்ட அந்த காரினுடைய வழக்கானது மிக வேகமாக முடிந்திருக்கிறது. அதைத் தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேகமாக முடித்தால் தவறு என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த குறிப்புதான் அதிலே வருகிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல ; இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை, நம்முடைய தமிழக அரசும் உருவாக்க வேண்டுமென்று ஏற்கெனவே இந்த மன்றத்திலே தீர்மானம் இயற்றப்பட்டு இருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே, இன்றைக்கு மத்தியிலே ஆளுகின்ற அரசை, நம்முடைய தமிழக அரசு வற்புறுத்தி உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை உருவாக்குவதற்கு வழி வகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மோட்டார் வெஹிகிள்ஸ் ஆக்ட்-டிலே இன்றைக்கு புதிதாக ஒன்றைப் போட்டிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தின்படி, 140-வது செக்ஷனிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவனுக்கு விபத்து நடந்து இருக்கிற சூழ்நிலையில், அவன் இறந்து விட்டாலோ, அல்லது அவனுக்கு காயம் ஏற்பட்டு விட்டாலோ, அவனுக்கு உதவிப் பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உதவிப் பணத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 15 தினங்களுக்குள்ளாகவே, ஒரளவிற்கு இறந்தவருக்கு ரூ. 25,000 கொடுக்கப்பட வேண்டும். கை, கால் முறிந்தவர்களுக்கு ரூ. 12,500 உடனடியாகக் கொடுத்து, மீதியை தீர்ப்புகள் வந்தப் பிறகு வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் நோக்கமே என்னவென்று சொன்னால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்க வேண்டுமென்ற முறையில்தான், அந்தச் சட்டமானது இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால், பாதிக்கப்பட்டவர்கள் மேலும் பாதிக்கின்ற சூழ்நிலையில்தான், இன்றைக்கு ஒரு உத்தரவின் மூலமாக அரசாங்கம் ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதில் சொல்லப்பட்டிருக்கிறது என்னவென்றால், தீர்ப்புகள் வந்த பிறகு,—ஆக்ஸிடென்ட் கேஸ்களில் தீர்ப்புகள் வந்த பிறகு, அதற்காக கொடுக்கப்படுகிற நஷ்ட ஈட்டுத் தொகையை, அரசாங்கத்தினுடைய போக்குவரத்துக் கழகங்களிலே, 3 ஆண்டுகளுக்கு டெபாசிட் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம்—அவர்களால் வாங்கப்படக்கூடிய அந்தப் பணத்தை டெபாசிட் செய்வதற்கு அரசியல் சட்டத்திற்கு முரணான முறையில் நாம் அந்தச் சட்டத்தை இயற்றி இருக்கிறோம். அதற்கான உத்தரவு போட்டிருக்கிறோம் என்றுதான்



1990 ஏப்ரல் 9] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

சொல்ல வேண்டும். அரசியல் சட்டத்திலும் சரி, மோட்டார்
வெஹிகிள்ஸ் ஆக்ட்-டிலும் சரி அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.
உடனடியாக நிவாரணம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். யார் தவறு செய்தது என்று பார்க்க கூடாது: பாதிக்
கப்பட்டவர்களுக்கு அவர் இறந்துவிட்டால், அவருடைய குடும்
பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், கை, கால் முறிந்தவர்களுக்கும்,
அவர்களுக்கும், உடனடியாக உதவிப் பணத்தை வழங்க வேண்டு
மென்று சொல்லிக் கொள்கிறேன். அந்த நிலைமை தற்போது
மாறி, வழக்குகள் முடிந்து வழக்குகள் முடிவதற்கு ஆண்டுகள்
ஆகலாம் : 5 ஆண்டுகள் முடிந்த பிறகு, அந்தப் பணத்தை 3
ஆண்டுகளுக்கு டெபாசிட் செய்ய வேண்டுமென்று சொன்னால்,
The very purpose of the Act has been defeated என்று தான்
சொல்ல வேண்டும். அந்த அளவிற்கு அந்தச் சட்டத்தையே
நாம் மீறமுடியாத அளவிற்கு அது கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஒரு விளக்கத்
தைச் சொன்னால் உதவியாக இருக்கும் என்பதற்காக சொல்ல
விரும்புகிறேன். (Motor Accident claims Tribunal) அதிலே
பெறக் கூடிய தொகையை அரசாங்கத்தினுடைய போக்குவரத்
துக் கழகங்களில் அல்ல ; அந்தந்த நீதிபதி விரும்பினால்,
அந்தந்தப் பகுதியிலேயுள்ள பாங்குகளிலே, அவர்கள் உசிதம்
போல் டெபாசிட் செய்யலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டு
இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல்,
அந்தத் தொகையை 3 ஆண்டு காலத்திற்கு டெபாசிட் செய்ய
வேண்டுமென்ற ஒரு உத்தரவு இப்போது இருக்கிறது. அந்த
உத்தரவை மாற்றுவதற்கு போக்குவரத்துத் துறை அமைச்சருடன்
கலந்தாலோசித்து, சட்டத் துறையின் மூலமாக ஒரு ஆணை
பிறப்பித்தோம். அப்படி டெபாசிட் செய்வதைப் பொறுத்த
வரையில், அடல்ட் மெம்பராக இருந்தால், பணத்தைக்
கொடுத்து விடலாம். மைனராக இருந்தால் மைனருக்கு பாது
காப்பு கொடுப்பவருக்கு அதைச் சேர்ப்பிக்க வேண்டுமென்று
ஆணை பிறப்பித்தோம். ஆனால், துரதிருஷ்டவசமாக அந்த
ஆணை, சுப்ரீம் கோர்ட்டிலே போய் தடை இருந்து கொண்டிருக்
கிறது. யாரோ ஒருவர் சுப்ரீம் கோர்ட்டுக்கு கொண்டு போய்,
அது அங்கே தடையாக இருக்கிற காரணத்தால்தான் மாண்புமிகு
உறுப்பினர் சொல்கிற நல்ல கருத்தினை எங்களால் நிறை
வேற்றமுடியவில்லை என்பதைத்தான் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

11-00 மணி

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு அமைச்சருக்கு
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்று
சொன்னால் ஜீவாதார அடிப்படையிலே, நம்முடைய அரசியல்

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1990 ஏப்ரல் 9

அடிப்படைச் சட்டத்திலே வழங்கப்பட்டிருக்கின்ற அந்த
உரிமையை பறிக்கின்ற அளவுக்கு உத்தரவு போடப்பட்டிருக்
கின்றது. இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே நிலுவையாக
இருந்தாலும், அதை விரைவாக முடித்து, அந்தக் குடும்பங்
களுக்கு நிவாரணம் அளிக்கின்ற அளவிற்கு அரசாங்கம்
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வழக்கறிஞர்களுடைய நிலைமைகளை நான்
மிகத் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு
வழக்கறிஞர் பிரிவைச் சேர்ந்தவர்கள், ஜூனியர் வழக்கறிஞர்
களும் சரி, பல சீனியர் வழக்கறிஞர்களும் சரி, இன்றைக்கு
வருமானம் இல்லாத நிலையில் இருந்து கொண்டு வருகிறார்கள்.
அவர்களுக்கு வேண்டிய அளவிற்கு பண உதவிகள் கிடைக்காத
நிலைமை இருந்து கொண்டு வருகின்றது. ஆகவே, வழக்கு
மன்றத்திலே அவர்கள் பதிவு செய்துவிட்ட பிறகு உடனடியாக
அவர்களுக்கு நாம் ஒரு நிவாரணத் தொகையாக—மாதம் ரூபாய்
500 அளவில் இன்றைக்கு டாக்டர்கள் பயிற்சி முடித்து வெளியே
வருகின்றவர்களுக்கு எப்படிநிவாரணம் கொடுக்கின்றோமோ,
அதுபோல வழக்கறிஞர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு, அவர்கள்
பதிவு செய்து 3 ஆண்டுகளுக்கு நிவாரணப் பணமாக நாம் 500
ரூபாயினைக் கொடுக்க முன் வந்தால்தான் அந்த வழக்கறிஞர்கள்
தங்களுடைய சொந்தக் காலிலே நிற்க வழிவகை இருக்கும்.

இல்லையெனில், பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்,
நல்ல வசதி படைத்தவர்கள்தான், அந்த வழக்குத் தொழிலிலே
முன்னேற முடியும். அவர்களால் மேலும் 5 ஆண்டுக்காலம் அல்ல
10 ஆண்டுக்காலம் கூட எந்தவிதமான வருமானமும் இல்லாமல்
தங்களுடைய திறமையை வளர்த்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது.
ஆனால் ஏழை வழக்கறிஞர்கள் தங்களுடைய திறமையை வளர்த்
துக்கொள்ள வேண்டுமென்றால், அவர்களுக்கு இதுபோன்ற
நிவாரணத் தொகையை அரசாங்கம் வழங்க நடவடிக்கை எடுக்க
வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு வழக்கறிஞர்கள் வெல்பேர்
பண்டு என்ற ஒன்றை 1987-ஆம் ஆண்டு துவக்கியிருக்கின்றோம்.
அதற்கான உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அது செயல்
படுகின்றதா என்றால், இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.
அந்த வழக்கறிஞர்களுடைய அந்த நிவாரண—வெல்பேர் பண்
டுக்கு நாம் செலுத்தவேண்டிய பணம், அரசாங்கம் எதுவும்
செலுத்தவில்லையென்றாலும், வழக்கு நடத்துகிறவர்களே அதற்
கான ஸ்டாம்புகளை ஒட்டினால் அதன்மூலம் சேர்கின்ற தொகை
யைக் கொண்டு அந்த வழக்கறிஞர்களுக்கு உதவிகளைச் செய்
வதற்காக அந்தப் பண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால்,
இதுவரையில் அந்த ஸ்டாம்புகளுடைய டிசைன்கள் தயாரிக்கப்
படவில்லை. அந்தச் சட்டம் 1987-ஆம் ஆண்டு போடப்பட்டும்



1990 ஏப்ரல் 9] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

ஸ்டாம்பு ஒட்டுவதற்கு வேண்டிய டிசைன் தயாரிக்கப்ப[illegible]
என்ற காரணத்தால், அந்த உதவியானது, அந்த நிவாரணம[illegible]
அந்த வழக்கறிஞர்களுக்குக் கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல
வேண்டும். அதையும் அரசாங்கம் விரைவிலே நிறைவேற்றி,
வழக்கறிஞர்களுடைய நிலைமைகளை உயர்த்துவதற்கு நட
வடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு 'ஃப்ரீ லீகல் எய்டு' -ஐ பொறுத்தவரையில்
அதற்காக வழக்காடுகின்ற வழக்கறிஞர்களுக்கு நாம் 50 ரூபாய்
ஊதியமாக நாளொன்றுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.
அது மிகவும் குறைவான அளவிலே இருக்கிறது. (குறுக்கீடு)
டிஸ்டிரிக்ட் லெவலிலே, 'ஃப்ரீ லீகல் எய்டு' வழக்கறிஞர்
களுக்கு அந்த உதவிப் பணத்தை அதிகமான அளவுக்குக் கிடைக்
கச் செய்யவேண்டும். நான் பார்த்தவரையில், இலவசச் சட்ட
ஆலோசனை என்பது செங்கல்பட்டு மாவட்டத்திலே ஓரளவிற்குச்
செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதைத் தாண்டி மற்ற
மாவட்டங்களில் சரியான முறையில் செயல்படவில்லை என்று
தான் எனக்குக் கிடைத்திருக்கின்ற குறிப்புகள் சொல்கின்றன.
அதைப்பரவலாக்குகின்ற அளவிற்கு அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு குடும்ப
வழக்குகள்......

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவையின்
துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பி
னர் உகம்சந்த் அவர்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கக்கூடிய அறிக்
கையை சரியாகப் படிக்காமல் பேசுகிறாரோ என்ற ஒரு ஐயப்பாடு
எழுகிறது. சட்ட உதவி மையம் விழுப்புரத்திலேயும், அதைப்
போலவே திருப்பூரிலேயும் இன்னும் சில இடங்களிலேயும் பல
இலட்சம் ரூபாய் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது
என்ற குறிப்பு இருக்கிறது. ஆனால் தாங்களோ '' என் மாவட்
டத்தைத் தாண்டி எதுவுமே நடக்கவில்லை'' என்ற ஒரு தவறான
தகவலைத் தருகிறார்கள். தவறான தகவலைத் தருவதே
'அ.தி.மு.க.'-வே உன் வேலையா? என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான்
பேசியதைச் சரியாகக் கவனிக்கவில்லை என்றுதான் சொல்ல
வேண்டும். நான் சொன்னது, செங்கல்பட்டு மாவட்டத்திலே
நல்ல முறையிலே செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. மற்றப்
பகுதிகளில் சரியான முறையில் செயல்படவில்லை என்றுதான்
சொன்னேனே தவிர, இல்லையென்று சொல்லவில்லை. அவர்கள்
உணரவில்லை. அவர்கள் கேட்கவில்லை. இதுதான் திராவிட
முன்னேற்றக் கழகத்தினுடைய வேலையா என்று கூட நான்
கேட்க விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு
குடும்ப நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவைகள்

நல்ல முறையில் செயல்பட்டால்தான் இருக்கின்ற பல்வேறு வழக்குகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய வழிவகைகள் ஏற்படும். இல்லையெனில் வழக்குமன்றத்திலே பல்வேறு வழக்குகள் தேங்குகின்ற நிலைமைகள்தான் ஏற்படும். அதற்கு முக்கியத்துவம் தருகின்ற வகையில் அதற்கு மேலும் பல அதிகாரங்களை அரசாங்கம் வழங்கவேண்டும். அந்தக் குடும்ப வழக்கு மன்றத்திலே அவர்களே முடித்து அவர்களே டிகிரி பாஸ் செய்கின்ற அளவுக்கு அவர்களுக்கு உத்தரவுகளை அரசு வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

11-05 மணி

மக்கள் நீதி மன்றங்களை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதற்கு மேலும் பல அதிகாரங்களை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லை என்று சொன்னால் நீதிமன்றங்களில் பல்வேறு வழக்குகள் ஆண்டு ஆண்டு காலமாக தேங்குகின்ற நிலைமை ஏற்படும். கிராமத்திலே முன்பெல்லாம் சொல்வார்கள் கிராம பஞ்சாயத்தின் மூலமாகத்தான் பல்வேறு வழக்குகள் தீர்க்கப்பட்டு இருக்கின்றன. அதேபோன்ற ஒரு அமைப்பு தான் இந்த மக்கள்நீதிமன்றம். அதற்கு பழைய ரிட்டையர் ஆகியிருக்கின்ற நீதிபதிகளையும் மற்றும் கிராமத்தைச் சேர்ந்து இருக்கின்ற மற்றவர்களையும் அழைத்து அந்த நீதி மக்களுக்கு விரைவான முறையில் கிடைக்கின்ற வகையிலும், அவர்களே டிகிரி அளிக்கின்ற வகையிலும்ஏன் என்று சொன்னால் இங்கே முடிந்து விட்டாலும் மீண்டும் நீதிமன்றத்திற்குச் சென்று தான் உத்தரவு போட வேண்டிய நிலைமை இருக்கிறது. இவர்களே அந்த உத்தரவுகளைப் போடுகின்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், காமராஜர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் நீதி மன்றங்களை உருவாக்க நீங்கள் குறிப்பில் சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக நான் பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன். திருவண்ணாமலையில் தனியாக ஒரு நீதிமன்றம் உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வட ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அது மிகப் பெரிய மாவட்டம், அப்படிப்பட்ட மாவட்டத்திலே அதை நீங்கள் உருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பப்ளிக் பிராசிக்யூட்டர், அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டர்களை நாம் நியமித்து இருக்கிறோம். எங்கள் செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான் எடுத்துச் சொல்ல விரும்புவது நீங்கள் அப்படி நியமனம் செய்து இருக்கின்றவர்களுடைய தகுதிகளைச் சரி பார்க்கவேண்டும். ஏன் என்று





சொன்னால் இதற்கு முன்பு இவர்கள் நீதிமன்றத்தில் எந்த அளவுக்கு தனியாக வாதாடி இருக்கிறார்கள் என்றால் எந்த ஒரு ... லும் அவாகள் வாதாடியது இல்லை. 10 வழக்கறிஞர்களோடு சேர்ந்து இவர்களும் கையெழுத்து போட்டு இருப்பவர்களைத் தான் இன்றைக்கு இந்தப் பதவியில் போடப்பட்டு இருக்கிறார். ஆனால் அந்த பப்ளிக் பிராசிகுட்டர் கடந்த 2½ ஆண்டுகளுக்கு முன்பு வரையில் நீதிமன்றத்திற்கு வரவே இல்லை. ஆனால் திடீரென்று பப்ளிக் பிராசிகுட்டர் என்று போட்ட பிறகு அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. அரசினுடைய பல்வேறு வழக்குகள் காவல் துறையால் போடப்பட்டிருக்கின்ற பல்வேறு வழக்குகள் இன்றைக்கு தோற்கின்ற நிலைமை தான் இருந்து கொண்டு இருக்கின்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொதுவாக ஒன்றைச் சொல்கிறேன். பப்ளிக் பிராசிகுட்டர், அடிஷனல் பப்ளிக் பிரசிகுட்டர்களை நியமிக்கும்போது அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற நீதிபதிகளை கலந்து ஆலோசித்து அதே நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரையும் கலந்து ஆலோசித்து அவர்களுடைய ரெக்கமன்டேஷன் பேரில்தான், அது மட்டும் அல்லாமல் அவரைப் பற்றி சி. ஐ. டி. ரிப்போர்ட் வாங்கி அவர் நல்லவரா, எப்படிப்பட்டவர் என்ற விவரங்களை எல்லாம் வாங்கித்தான் நியமனம் செய்கிறோம். பொதுவாக எல்லா மாவட்டங்களிலும் பப்ளிக் பிராசிகுட்டர், அடிஷனல் பப்ளிக் பிராசிகுட்டர்களை நியமனம் செய்கின்றபோது இதுபோன்ற குறிப்புகளைப் பெற்று. பிறகு நீதிபதிகள் சிபாரிசு செய்கிறார். நீதிபதி ஒரு பெயரை அனுப்புவார். அந்தப் பெயரைத்தான் அரசு தேர்ந்தெடுத்து நியமிக்கிறதே தவிர குறைபாடுகள் உள்ளவரை நியமனம் செய்வதில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பப்ளிக் பிராசிகுட்டர்களை நியமிப்பதற்கு வேண்டிய அந்த நியதிகளைச் சொல்லியிருக்கிறார்கள். போடப்பட்ட ஒருவரைப் பற்றி— நான் பெயரை சொல்ல விரும்பவில்லை—குறைகளைச் சொல்கிறேன், வேண்டுமானால் நீங்கள் சரிபார்த்துக் கொள்ளலாம், சரியில்லை என்றால் நான் ஏற்றுக் கொள்கிறேன், ஆனாலும் அப்படி நான் அறிந்து இருக்கின்ற வகையில் மாவட்ட நீதிபதி பரிந்துரை செய்யவில்லை என்று தான் எனக்குச் சொல்லப்பட்டு இருக்கிறது. அதையும் மீறி தான் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எது சரியாக இருந்தாலும் சரி அரசாங்கம் வழக்கறிஞர்களை நல்லமுறையில் போட்டால்தான், திறமையானவர்களைப் போட்டால் தான் அரசு போடுகின்ற பல்வேறு வழக்குகளுடைய தீர்ப்புகள் நல்ல முறையில் கிடைக்கும். இல்லை என்று சொன்னால் அரசு போடுகின்ற எல்லா வழக்குகளும் தோற்கின்ற

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1990 ஏப்ரல் 9

நிலைமை தான் ஏற்படும். அரசாங்கத்திற்கு கெட்டப் பெயர்
தான் வரும் என்ற காரணத்தால் நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

அதோடு மட்டும் அல்லாமல் இன்றைக்கு மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறார் காவல் நிலையங்
களில் இருக்கின்ற கோர்ட் வழக்குகளை கவனிப்பதற்கு தனியாக
பிரிவுகளை ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்
கள். அது நல்லது தான். ஏன் என்று சொன்னால், இன்றைக்கு
காவல் நிலையங்களில் உள்ள அந்த அதிகாரிகளுக்கு சட்டம்
என்ன என்று தெரியாது. நாம் சொல்கிறோம், மக்கள் எல்
லோரும் சட்டத்தை அறிந்து இருக்கவேண்டும். பிறந்த குழந்
தைக்கு கூட இந்தியாவில் உள்ள சட்டத்தை அறிந்து இருக்க
வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் டோறுப்பில்
காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு அந்தச் சட்டம்
தெரியுமா என்று சொன்னால் இல்லை என்ற நிலைமை தான்
இருக்கிறது. ஆகவே, பல்வேறு தவறுகள் ஏற்படுகின்றன. அந்த
நிலைமையை மாற்றுவதற்கு காவல் துறையில் கூட நீங்கள்
ஆலோசனை வழங்குவதற்கு வழக்கை எப்படி எல்லாம் தாக்கல்
செய்ய வேண்டும், எந்த முறையில் அவைகள் இருக்க வேண்டும்,
இது வழக்கு மன்றத்திற்கு செல்லக்கூடிய வழக்கு தானா ?
இல்லையா, இதை இதோடு விட்டுவிடலாமா, என்ற குறிப்பு
களைச் சொல்வதற்கு, ஆலோசனை சொல்வதற்கு (மணியடிக்கப்
பெற்றது) நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

இன்றைக்கு மதுரையில் பல்வேறு ரெண்ட் கண்ட்ரோல்
வழக்குகள் தேங்கியிருக்கின்றன. அவைகளை விரைவான முறை
யில் முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

11-10 மணி

அதோடு சட்டக் கல்வியில் இன்றைக்கு 5 ஆண்டுக் கல்வியை
நாம் புகுத்தியிருக்கிறோம். ஆனால் 5 ஆண்டுகாலம் வரையில்
அவர்கள் எந்தவிதமான பட்டத்தையும் பெற முடியாத சூழ்நிலை
இருந்து வருகிறது. ஆகவே மூன்று ஆண்டு முடித்துவிட்ட அந்த
மாணவர்களுக்கு டிப்ளமோ போன்ற ஒரு பட்டத்தை வழங்கு
வதற்கு அரசாங்கம நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு சிறைத் துறையைப் பொறுத்த வரையில் நான்
ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு சிறையிலே
இருக்கிற காவலர்களுக்கு, காவல் துறையில் இருப்பவர்களுக்கு
உண்டான சம்பளங்களை வழங்கவேண்டும். மேலும் அவர்கள்,



1990 ஏப்ரல் 9] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

பல்வேறு குற்றங்களைச் செய்த கைதிகளோடு வாழ்கிறார்கள். அவர்களுக்கு 'ரிஸ்க் அலவன்ஸ்' வழங்கவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் அங்கே சுகாதார வசதி இல்லை என்ற குறைகள் இருக்கின்றன. மேலும் சிறைச்சாலைக்குச் செல்கிற அரசியல் கைதிகளைத் தாக்குகிற நிலைமைகள் இருந்து வருகின்றன. காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் சென்ற மாதம் போராட்டம் நடத்திய நேரத்தில் அவர்கள் மீது நடைபெற்ற அந்தத் தாக்குதல்களை பற்றி எல்லாம் ஒரு உயர்மட்ட அதிகாரியைக் கொண்டு நீங்கள் விசாரணைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு திறந்தவெளி சிறைச்சாலையில் வசதிகளையும் அளவையும் அதிகமாக உருவாக்க வேண்டும். குற்றவாளிகள் பிறப்பது இல்லை, சமுதாயம்தான் அவர்களை உருவாக்குகிறது என்று சொல்லியிருக்கிறோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நாம் நல்வாழ்வு தருகின்ற வகையில் வழிவகை செய்ய வேண்டும். திறந்தவெளி சிறைச்சாலையும் அந்த வகையில் அமைய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முதல்நிலைக் குற்றவியல் நீதிமன்றங்களின் பல பதவிகள் காலியாக இருக்கின்றன. ஏற்கெனவே நாங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். ஆனால் அன்றைக்குப் பேச முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. உடனடியாக அவர்களை நியமனம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மதுராந்தகம் தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கின்ற நீதிமன்றங்களுக்குக் கட்டிட வசதி இல்லை. புதிதாக அங்கே முன்சீப் கோர்ட் உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு கட்டட வசதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை வைக்க வாய்ப்பினை அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய 14-வது மானியக் கோரிக்கையின் மீது குறிப்பாகச் சில வார்த்தைகளைச் சொல்ல நான் விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் மணிமேகலையிலிருந்த கருத்தை உரைநடையாகத் தொடக்கத்தில் சொல்லி சிறைக்கூடம் அறக்கூடமாக வேண்டும் என்ற எண்ணத்தை அரசாங்கத்தின் சார்பில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இந்த மன்றத்தில் ஆண்டுக்கணக்கில் சிறை போனவர்கள் இருக்கிறார்கள். நாட்கணக்கில் சிறை போனவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சிறை வாழ்க்கை பற்றி

ஓரளவுக்குத் தெரிந்திருக்க முடியும். குறிப்பாக ஆண்டுக் கணக்கில் சிறை போனவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயும், கம்யூனிஸ்ட் கட்சியிலேயும் இருப்பவர்கள். அவர்கள் இந்த மன்றத்திலேயே இருக்கிறார்கள். அவர்களுக்கு மற்றவர்களை விட சிறை விதிகளைப் பற்றியும், கடந்த காலத்தில் சிறைச் சாலைகளின் நிர்வாக முறைகளைப் பற்றியும் நன்றாகத் தெரிந் திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் சுமார் 30 ஆண்டுக் காலத்தில் ஏறத்தாழ 5 ஆண்டுக் காலம் சிறையிலேயே நான் இருந்திருக் கிறேன். ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலும் சிறை நிர்வாகம் பற்றி நான் நன்கு உணர்ந்தவன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் சிறை நிர்வாகம் எப்படி இருந்தது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற ஆட்சிக் காலத்தில் சிறை நிர்வாகம் எப்படி இருந்தது. திராவிட முன்னேற்ற ஆட்சிக் காலத்தில் சிறை நிர்வாகம் எப்படி இருந்தது என்று இவைகளைப் பற்றி எல்லாம் நான் நன்கு தெரிந்தவன் என்ற முறையில் சில வரவேற்புகளை யும், சில கோரிக்கைகளையும் அமைச்சர் முன்பாக நான் வைக்க விரும்புகிறேன். சிறையிலே பெரிய மாற்றம் கலைஞர் ஆட்சிக் காலத்தில் சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறது. முன்பு ஐ.ஜி. என்ற பெரிய அதிகாரிக்குக் கீழே ஒரே ஒரு டி.ஐ.ஜி. தான் இருந்தார். இன்றைக்குக் கலைஞர் ஆட்சி வந்ததற்குப் பிறகு மதுரை, திருச்சி, கோவை, சென்னை என்கிற 4 மையங்களையும் தனித் தனியாகப் பிரித்து, 4 டி.ஐ.ஜி.க்களை நியமித்து இருப்பது வரவேற்கத்தக்கது. இப்படிப் போட்டிருப்பதால் என்ன இலாபம் என்று சிலபேர் கேட்கலாம். முன்பெல்லாம் பரோல் விடுமுறை கேட்க வேண்டும் என்றால் ஐ.ஜி.-க்கு விண்ணப்பம் தரவேண்டும். அல்லது அமைச்சருக்குத்தான் விண்ணப்பம் தரவேண்டும். ஐ.ஜி.யும் அமைச்சரைக் கலந்துதான் ஒருவருக்கு பரோல் கொடுக்க முடியும். இன்றைக்கு ஆங்காங்கே இருக்கக்கூடிய டி.ஐ.ஜி.-க்களே பரோல் கொடுக்கலாம் என்ற, அந்த கடுமை யான விதியைத் தளர்த்தியிருப்பது, சிறைவாழ் நண்பர்களுக்கு பெரிதும் மன அமைதியையும், மனத் திருப்தியும் அளிக்கின்றது. இதற்காக நாம் கலைஞர் ஆட்சியைப் பாராட்ட வேண்டும். அதோடு பரோல் கொடுப்பதிலே கூட இன்னும் ஒரு தளர்ச்சி சாதகமாக அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

11-15 மணி

கொலைக்குற்றம் புரிந்து நீண்டகாலம் சிறைவாசம் இருப் பவர்கள் தொடர்ந்து 5 ஆண்டுக் காலம் இருந்தால்தான் பரோல் கொடுக்கலாம் என்கின்ற விதி வெள்ளைக்காரன் காலத்திலே யிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அதை கலைஞர் ஆட்சி இப்போது மாற்றி 3 ஆண்டுக் காலம் இருந்தால் போதும்,





3 ஆண்டுக் காலத்திற்குப் பின் அவர்களுக்குப் பரோல் கொடுக்க லாம் என்ற விதியையும் உருவாக்கி இருப்பது சிறைச்சாலையிலே இருக்கக்கூடிய நண்பர்களுக்கு பெரிதும் உதவியாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. தகுதியுடைய சிறைவாழ் நண்பர்களுக்கு ஆண்டுதோறும் 15 நாட்கள் பரோல் கொடுக்கின்ற ஒரு உரிமை யையும், அதிகாரத்தையும் பிராந்தியத்திலே உள்ள டி.ஐ.ஜி.க் களுக்கு அரசாங்கம் வழங்கி இருப்பதும் மேற்கொண்டு கிடைத் திருக்கக்கூடிய நன்மை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காண்பித்து இந்த சிறை மானியக் கோரிக்கையில் தமிழக அரசின் கொள்கையை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கோரிக்கை என்ற முறையில் சிறைச்சாலையிலே இருக்கக்கூடிய நண்பர்களுக்கு சம்பளத்தைப் பொறுத்தவரையில் கான்ஸ்டேபிள் சம்பளம் தான் வார்டர்களுக்குத் தரப்படுகிறது என்பது உண்மைதான். ஆனால் அந்த ஹெட் வார்டர்களுக்கு எந்த அளவுக்கு வெளியிலே இருக்கக்கூடிய போலீஸ் கான்ஸ்டேபிளுக்கு, போலீஸ் ஹெட் கான்ஸ்டேபிளுக்குள்ள சம்பளம் தரப்படவில்லை என்ற மன வருத்தம் இருக்கிறது. அதை நம்முடைய அமைச்சர் அவர்கள் விரைவிலே நிறைவு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ரிஸ்க் அலவன்ஸ், இந்த ரிஸ்க் அலவன்ஸ் என்றால் யாராவது ஒரு போலீஸ்காரர் திருடனைப் பிடிக்கின்றபோது போலீஸ்காரருக்கு காயம் ஏற்பட்டு, உயிர்சேதம் ஏற்படு மானால் வெளியிலே உள்ள போலீஸ் இலாகாவைச் சேர்ந் தவர்களுக்கு அந்த ரிஸ்க் அலவன்ஸ் தரப்படுகின்றது, அந்த ரிஸ்க் சிறைச்சாலையில் பணியில் இருக்கக்கூடிய வார்டர்களுக் கும் இருப்பதால் அதைத் தரவேண்டும் என்ற எண்ணமும் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் சிறைச்சாலையில் அனைவரும் நிரபராதிகள் அல்ல. கொடிய குற்றங்கள் செய் தவர்கள்கூட உள்ளே வந்திருக்கின்றார்கள். அவர்களோடு அவர்கள் ஆண்டு முழுவதும் இரவும் பகலும் பழகக்கூடிய சிறை வார்டர்கள் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படலாம், கை, கால் முறியலாம், அப்படிப்பட்டவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கான்ஸ்டேபிளுக்கு, போலீஸ் துறையிலே இருப்பவர்களுக்கு தரப்படுவது போல சிறையிலே இருக்கக்கூடிய அங்கு பணியாற்றக் கூடிய வார்டர்களுக்கும், அதே பெரிய அதிகாரிகளுக்கும் நம்மு டைய அரசாங்கம் வழங்க வேண்டும் என்று நான் அவர்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு உணவு மற்றும் தானியங்கள் சலுகை விலையிலே தரப்படுகிறது. அதேபோன்று சலுகை விலையில் 24 மணி நேரமும் பணியிலே இருக்கக்கூடிய சிறை வார்டர்களுக்கும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் அமைச்சர் அவர்களிடத்தில் வைக்க விரும்புகிறேன்.

[திரு. எஸ். எஸ். தென்னரசு] [1990 ஏப்ரல் 9

அடுத்து சிறைப் பற்றி சிறையிலே இருக்கக்கூடிய கட்டடங்களைப் பற்றி நீங்கள் சிந்திக்கவேண்டும். சிறைச்சாலைகள் நீண்டகாலமாக பழுதுபார்க்கப்படாமல் இருக்கின்றன. சில இடங்களில் வசதிகளே இல்லாமல் சிறைச்சாலை இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட சிறைச்சாலைகளை நவீனப்படுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

நான் கேள்வி பட்டவரையில் மத்திய சர்க்கார் ஏதோ மானியம் கொடுப்பதாகவும் அதை நாம் எந்த வகையிலே பயன்படுத்துகிறோம் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வட இந்தியாவிலே இருக்கக்கூடிய மிகப் பெரிய தலைவர்கள் தென் இந்தியாவிற்கு அனுப்பப்படுகிறார்கள். வட இந்தியாவிலே வேறு விதமாக கொடிய குற்றங்கள் செய்யக்கூடிய தலைவர்களைக்கூட தென் இந்தியாவிற்குத் தான் அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பப்பட்டு உள்ளவர்களுக்கு சலுகைகள் தரவேண்டும்.....

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட இந்தியாவிலே இருக்கக்கூடிய கொடிய குற்றங்கள் செய்யக்கூடிய தலைவர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் கொடிய குற்றங்களை சாட்டி அனுப்புகிறார்களே தவிர அவர்கள் கொடிய குற்றங்கள் செய்தவர்கள் என்று நிரூபிக்கப்பட்டு அனுப்பப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட இந்தியாவிலே இருந்தாலும் சரி, மற்ற இந்தியாவிலே இருந்தாலும் சரி, பாதுகாப்பு கருதி இங்கே அனுப்புகிறார்கள். எனவே தமிழ்நாடு ஒரு பாதுகாப்பான இடம் என்று கருதி அனுப்பப்படுகிறார்கள். பாதுகாப்பு கைதி என்று வைத்துக்கொள்ளலாம்.

*11–20 மணி*

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதுகாப்பு கைதி என்று திருத்திக் கொள்ளலாம். அப்படிப்பட்டவர்களுக்கு போதிய வசதி தென்னிந்திய சிறையில் இப்போது இல்லை என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட வசதிகளை உருவாக்கக் கூடிய வகையில் சென்னை, கோவை அதைப்போலவே மதுரை போன்ற இடங்களில் இருக்கின்ற சிறைச்சாலைகளில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 9] [திரு. எஸ். எஸ். தென்னரசு]

அடுத்து ஆயுள் தண்டனைக் கைதிகள் பற்றி உச்ச நீதி மன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது. கொலைக் குற்றவாளிகள் 14 ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டும். வித்தவுட் லீவ் ஆர் வித்தவுட் பரோல். 14 ஆண்டுகள் முழுமையாக சிறையில் இருந்தால் தான் விடுதலை செய்ய வேண்டுமென்று இருக்கிற ஒரு தீர்ப்பை வைத்து மாநில அரசுகள் அனைத்தும், இப்படி அனைவரும் 14 ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டுமென்று வைத்திருக்கின்ற நிபந்தனையை தயவுசெய்து தளர்த்த வேண்டும். ஒன்றை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 302 செக்சன்கீழ் வருகிற கொலை மட்டுமல்ல கொலை. கொலைகளில் பல உண்டு. சடன் புரவோக்கேசன் என்கிற அடிப்படையில் மனைவியை அவமானப்படுத்துவது, தங்கையை அவமானப்படுத்துவது, தாயை அவமானப்படுத்துவது போன்ற நிலைமைகள் ஏற்படுகின்ற போது செய்யப்படுகின்ற கொலைகள் எல்லாம் வெறும் 302 செக்சன். ஆனால் 302-ஓடு நகைக்காக கொலை செய்தல், கற்பழித்துக் கொலை செய்தல், கிணற்றிலே தள்ளி கொலை செய்தல், இப்படிப்பட்ட கொலைகள் எல்லாம் பயங்கரமான கொலைகளுக்கு எல்லாம் 14 ஆண்டுகள் இருக்கலாம். ஆனால் மானத்திற்காக கொலை செய்வது, வித்தவுட் மோட்டீவ், முன் விரோதம் இல்லாமல் கொலை செய்வது போன்றவற்றுக்கு எல்லாம் அருள்கூர்ந்து 10 ஆண்டுகளுக்குள் விடுதலை செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்காக இருக்கின்ற ஆலோசனைக் குழுவை உடனே கூட்டி இதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அடுத்து, சிறையில் தண்ணீர் வசதி இல்லை. காவிரி தண்ணீர் திருச்சி சிறைச்சாலைக்கு போகிறது. பாலாற்று தண்ணீர் வேலூருக்கு செல்கிறது. அதுபோல மதுரையிலே வைகை நதி ஓரத்திலே இருக்கின்ற சிறைச்சாலைக்கு தண்ணீர் வசதி இல்லை. எந்த பிளாக்கிலும் தண்ணீர்வசதி இல்லை. இந்த சூழ்நிலையை மாற்றி எப்படி திருச்சிக்கு காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதோ, எப்படி பாலாற்றிலிருந்து வேலூர் சிறைச்சாலைக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே மதுரையில் வைகை நதி ஓரம் இருக்கின்ற சிறைச்சாலைக்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சம்பளத்தைப் பொறுத்தவரையில், டி.ஐ.ஜி-க்களுக்கு சரியாக சம்பளம் தரப்படவில்லை என்று கேள்விப்பட்டேன். 4 டி.ஐ.ஜி.க்கள் இருக்கிறார்கள். வெளியே போலீஸ் டி.ஐ.ஜி.க்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் இவர்களுக்கு சம்பளம் தரப்படவில்லை என்று போலீஸ் துன்ற

மூலம் கேள்விப்பட்டேன். மொத்தத்தில் இந்த 4 பேருக்கும் சமமாக இந்த உயர்வைக் கொடுப்பதன் வாயிலாக 20 ஆயிரம் ரூபாய்க்குள் தான் மாதம் ஒன்றுக்கு செலவாகும். ஆகவே, இந்த 4 டி.ஐ.ஜி. க்களுக்கும், காவல் துறை டி.ஐ.ஜி. க்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை வழங்கி இவர்களுடைய மனக் குறையைப் போக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அடுத்து, ஒன்றை நான் மாண்புமிகு முதலமைச்சர் கவனத்திற்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் மூலமாக கொண்டுவரக் கடமைப்பட்டிருகிறேன். அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் சென்ற முறை பேசும் போது ஒரு கேள்வி கேட்டார்கள். 1975-76-ல் மிசாவில் இருந்தபோது பல சிறைச்சாலைகளில் பலருக்கு சிறைச்சாலை கொடுமைகள் செய்யப்பட்டன. குறிப்பாக சென்னை சிறைச்சாலையில் கொடுமைகள் ஏற்பட்டன. தி. மு. க. வின் கொள்கைப் பரப்புச் செயலாளர் திரு. சிட்டிபாபு அவர்கள் சிறைச்சாலையில் அடிபட்டு இறந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் கடுமையாகத் தாக்கப்பட்டு, மரணவாயில் வரை சென்று திரும்பி வந்தார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களுடைய காது செவிடு ஆனது. அதைப் போலவே எத்தனையோ பேர்கள் அடிபட்டு, தாக்கப்பட்டு, ரத்தக்காயம் அடைந்தார்கள். அது குறித்து விசாரிக்க வேண்டுமென்று பின்னர் வந்த அரசு இஸ்மாயில் கமிஷனைப் போட்டது. நீதிபதி என்பதுடன்கூட இஸ்மாயில் அவர்கள் சிறந்த இலக்கியவாதி. எல்லாவற்றையும் சிந்தித்து முடிவெடுக்கக்கூடியவர் அவர். அவருடைய தீர்ப்பு என்ன ஆயிற்று? அந்தத் தீர்ப்பை அமுல்படுத்தாமல் இருப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரி ஸ்டே வாங்கியிருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அந்த ஸ்டேயை விரைவில் நீக்கி, அதனை அமுல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு சட்ட அமைச்சர் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அமைச்சரவையிலே கூட நான் பார்க்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன், மாண்புமிகு அமைச்சர் திரு. கோ. சி. மணி, மாண்புமிகு அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம், மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம், மாண்புமிகு முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலாளர் மாண்புமிகு திரு. கணேசன், அருமைத் தோழர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் இவர்கள் எல்லாம் அந்த ஓராண்டுக் காலத்தில் மிகவும் நசிந்து போனவர்கள். அவர்களின் சார்பிலே, நானும் மிசா கைதி என்ற முறையிலே





11-25 மணி

மிக விரைவிலே அந்தத் தீர்ப்பை நான் இங்கே எதிர்பார்க்கிறேன். அந்தத் தீர்ப்பை அமல்படுத்தினால்தான் பிற்காலத்தில் இப்படி ஒரு கொடுமை நடக்காது என்று சிறைக்குச் செல்பவர்கள் உணர முடியும். சிறைச்சாலைகளைப் பற்றி பொதுவாக நான் தெரிந்து கொண்ட விஷயம் ஒன்று உண்டு. நான் நிறைய புத்தகங்கள் படிப்பவன். பலருக்குத் தெரியும். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் காலத்திலிருந்து கலைஞர் அவர்களின் காலம் வரை சிறையில் அரசியல்வாதிகள் அடங்கி நடந்தால் தான் தியாகிகளாக வர முடியுமே தவிர அடங்கி நடக்காமல் அடம் பிடித்தவர்கள் தியாகிகளாக வந்ததாகச் சரித்திரம் இல்லை. சிறை மேன்யுவல் என்பது சிறந்த புத்தகம். அதை யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். சிறை மேன்யுவலில் உள்ளதைத் தான் சிறை அதிகாரிகள் கொடுக்க முடியும். சிறை மேன்யுவலில் இல்லாத இட்டிலியையோ, சிறை மேன்யுவலில் இல்லாத போர்ன்விட்டாவையோ சிறை அதிகாரி தர முடியாது. சிறை மேன்யுவல்படி கொடுக்காத சிறை அதிகாரியை எதிர்த்துப் பேசுவதற்கோ, தர்ணா இருப்பதற்கோ, உண்ணாவிரதம் இருப்பதற்கோ கைதிகளுக்கு உரிமை உண்டு. எந்த நேரத்திலும் சிறை மேன்யுவலை சிறை அதிகாரிகள் காண்பிக்கத் தயாராக இருப்பார்கள். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் தொப்பி வைத்து, 3 மாத காலம் வரிசையில் நின்றதை நான் பார்த்திருக்கிறேன். பேராசிரியர் தொப்பி வைத்து வரிசையில் நின்றதை நான் பார்த்திருக்கிறேன். அதைப் போல எல்லோரும் சிறை விதிகளுக்கு உட்பட்டு தொப்பியை வைத்து, அரைக்கால் சட்டை போட்டு, செவ்வாய்க்கிழமை வரிசையில் நின்று, குறை இருந்தால் சூப்பரின்டெண்டன்ட் அவர்களிடம் சொல்லித் தான் குறைகளை நிவர்த்தித்துக் கொள்ளலாமே தவிர, எனக்கு இட்டிலி கொடு என்றோ, காப்பி கொடு என்றோ, சரியான காப்பித் தூள் கொடு என்றோ கேட்கக் கூடிய விவகாரம் திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றிலே நடந்தது கிடையாது. ஆகவே, சிறைச்சாலைக்குச் செல்லும் நண்பர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நேரு அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள், நேதாஜி அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இராஜகோபாலாச்சாரி அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். கூட்ட நெரிசலில் தான் அவைகள் நடந்திருக்கின்றன. கலைஞர் அவர்களைக் கூட விமான நிலையத்திற்குள்ளே போகக் கூடாது என்று ஒரு டி.ஐ.ஜி. கையைப் பிடித்து வெளியே தள்ளினார். அவரை வேலையை விட்டு இப்போது போகச் சொல்லிவிடவில்லை. அவருக்கு அருமையான இடம், இப்போது டி.ஐ.ஜி. யாக இருக்கிறார்கள். ஆகவே, சிறைக்குப் போகக் கூடியவர்கள் தியாகம் செய்ய வேண்டும்.

[1990 ஏப்ரல் 9

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அருமைத் தலைவர், கர்ம வீரர் காமராஜ் அவர்களைக் கூட ஒரு கமிஷனர் ஆஃப் போலீஸ் விமான நிலையத்திற்குள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அவரையும் வேலையை விட்டு காங்கிரஸ் கட்சி வெளியே அனுப்பிவிடவில்லை.

திரு. எஸ். எஸ். தென்னரசு : அவரைப் போக விடாமல் தடுத்தது பார்த்தசாரதி ஐயங்கார் என்று எங்களுக்குத் தெரியும். அவரை வேலையை விட்டு காமராஜர் அவர்கள் நீக்கவில்லை என்பதால் காமராஜர் அவர்கள் பெருந்தன்மை உள்ளவர் என்பது அவருக்கு முன்னால் எங்களுக்குத் தெரியும். எங்களுக்கு இதைக் கவனப்படுத்த அவசியமில்லை. நான் குறிப்பிட்டது, யாரையும் முதலமைச்சர் அவர்கள் பழி வாங்கவில்லை. அப்படி முதலமைச்சர் காமராஜ் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, காமராஜர் அவர்கள் சிறைச் சாலையில் அடங்கி நடந்தார்கள் என்பதையாவது ஒப்புக் கொண்டாக வேண்டும். வேலூர் சிறைச்சாலையில் முத்து ராமலிங்கத் தேவர் இருந்த அறை, வேலூர் சிறைச்சாலையில் இராஜகோபாலாச்சாரி இருந்த அறை, வேலூர் சிறைச்சாலை யில் பிரகாசம் இருந்த அறை, வேலூர் சிறைச்சாலையில் அறிஞர் அண்ணா இருந்த அறை என்று தனித்தனியாக போர்டுகள் மாட்டப்பட்டிருக்கின்றன. ஆகையால் நம்முடைய நண்பர்கள் சிறையில் எத்தனை ஆயிரம் பேர் இருந்தாலும் சரி, அதை சகித்துக்கொள்ள வேண்டும். 1961-லே நான் பேராசிரியர் தலைமையிலே சிறைக்குப் போனபோது 5,000 பேர் ஒரே நேரத்திலே போனோம். அங்கே சட்டி கிடையாது. உடனே மண்பாண்டக் கடைக்குச் சென்று, மண் சட்டி வாங்கிக் கொடுத்தார்கள். மண் சட்டிகளை 15 நாட்கள் வைத்திருந்தோம். அதற்குப் பிறகு பேராசிரியர் அவர்களை யும், என்னையும், மதுரை முத்து அவர்களையும் திருச்சி சிறைச்சாலைக்கு மாற்றினார்கள். அங்கே கலைஞர் அவர்கள் இருந்தார்கள். அவர் தொப்பி வைத்துக் கொண்டு, அரைக் கால் சட்டை போட்டுக் கொண்டு, பேட்மின்டன் விளை யாடிய காட்சி இன்னும் என்னுடைய மனதிலே இருக்கிறது. அரசியல்வாதி என்கின்ற முறையிலே சொல்கிறேன். சிறை யிலே அடம் பிடித்து, தகராறு செய்து, எழுதிக் கொடுத்து விட்டு வெளியே கூட வந்து விடலாம். ஆனால் சிறைச் சாலைக் கதவுகள் திறந்திருந்தாலும், நாங்கள் வெளியே வர மாட்டோம். தட்டைத் தூக்கி எறிவது, தட்டிலே கடிதம் எழுதி அனுப்புவது—இதெல்லாம் நம்முடைய ஷேக்ஸ்பியர் கதையிலே வரலாமே தவிர, தியாகிகளுடைய கதையிலே வராது என்று கவனப்படுத்த விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 9]

திரு. குமரி அனந்தன் : துணைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். ஜெயில் மான்யு வலில் என்ன இருக்கிறதோ அது தரப்பட வேண்டும், அது இல்லை என்றால் கேட்கலாமென்று சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? முதல் நாள் கொடுக்கின்ற உணவிலே, நல்ல உணவாக இல்லாமல், புழு நெளியும் உணவாக இருக்கும் போது, அதை உண்ண மாட்டோம் என்று அவர்கள் திருப்பிக் கொடுத்தாலும், அதையே மறுநாள் காலையிலே வேறு ஒரு வகையிலே திருப்பி அவர்களுக்கே பரிமாறுகிற நிலை வருகிறபோது, பல இடங்களிலே இது நியாயம்தானா என்று கேட்டிருக்கிறார்கள். ஒரு நாள் முழுக்க ஒன்றுமே கொடுக்கா மல் இருந்த நேரத்திலே அவர்கள் கேட்டு இருக்கிறார்களே தவிர, உண்பதற்கு என்று அவர்கள் அங்கே போகவில்லை. ஆனால் உரிமைகள் சில நேரங்களிலே நிலை நாட்டப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள் நியாயம் கேட்டு இருக் கிறார்கள்.

11-30 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பார்த்தசாரதி அய்யங்காரைப் பற்றி சொன்னதினாலே ஒரு திருத்தம் சொல்ல விரும்பு கிறேன். தவறு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். பார்த்தசாரதி அய்யங்கார் டில்லிக்கு மாற்றப் பட்டார். ஐ.ஜி. (ஆர்.பி.எஃப்.) ஆக மாற்றப்பட்டார்கள். அவருடைய ஜூனியருக்குத் தான் ஐ.ஜி. ஆகப் புரமோஷன் கொடுத்தார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ; நிச்சயமாக அவர் இருக்கும்போது அப்படி நடைபெறவில்லை. அவராகவே வாலன்டரியாக (he sought transfer and went there).

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பார்த்தசாரதி அய்யங்கார் தானே விரும்பிச் சென்றதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அப்படி யானால் அவர் கோப்புகளிலே தானே விரும்பிக் கடிதம் எழுதி இருக்கிறாரா? முதலமைச்சரிடத்தில் தான் இருக்க வில்லை : நான் டெல்லிக்குப் போக வேண்டும் : என்னை மாறுதல் செய்யுங்கள் என்று எழுதி இருக்கிறாரா?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ; It is a known fact. எல்லோரும் அறிந்த ஒன்று.

[1990 ஏப்ரல் 9

திரு. குமரி அனந்தன் : காமராசரைப் பொறுத்தவரையில் இரண்டு பேருமே பெருந்தன்மையை ஏற்றுக் கொள்கின்றோம். அவர் பழி வாங்குகிற உணர்ச்சியற்றவர் என்பதற்காக, அவரை எதிர்த்து முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிட்டவரைக் கூட தன்னுடைய அமைச்சரவையிலே சேர்த்துக் கொண்ட பெருந்தன்மை காமராசருக்கு உண்டு என்பது நமக்குத் தெரியும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : இப்போது நடைபெறுவது காமராசருடைய பெருந்தன்மை பற்றி அல்ல. சிறை வாழ்க்கையைப் பற்றி நாம் பேசுகிறோம். சிறை வாழ்க்கையைப் பற்றி நாம் பேசுகிறபோது காமராசர் எவ்வளவு அடக்கமாக, ஒடுக்கமாக அடங்கி நடந்தார் என்பது தான் பிரச்சினையே தவிர அவருடைய கடந்த கால வாழ்க்கையைப் பற்றி அல்ல. பார்த்தசாரதி அய்யங்கார் மறுத்தது, அவரைப் போக விடாமல் உள்ளே தடுத்தது, தமிழ்நாடு காங்கிரசு கமிட்டித் தலைவர் என்று இவர் தான் சொன்னது, இங்கே அமைச்சருக்கு மட்டும் தான் இடம் உண்டு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு இடம் இல்லை என்று சொன்னது எல்லாம் பத்திரிகையிலே, வாழ்க்கை வரலாற்றிலே வந்து இருக்கிறது. நான் அவைகளைப் பற்றி இங்கே குறிப்பிடவில்லை. சிறைச்சாலையிலே நாம் தகுதிக்கு மேலே உள்ளே போய்விட்ட பிறகு, அதிகமாகப் போய்விட்ட பிறகு—நம்முடைய கல்யாண வீடுகளில் ஆயிரம் பேருக்குச் சமைத்தால், 2 ஆயிரம் பேர் வந்து விட்டால் எவ்வளவு சிரமம் என்பது உங்களுக்குத் தெரியும்—நாலு ஆயிரம் பேர் வருவார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்து இருக்கமாட்டார்கள். கல்யாண வீடுகளில் நடைபெறக்கூடிய சிறு குறைகளைப் போல இவைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, உடனே மறியல் செய்வது, கதவை உடைப்பது, சன்னலை உடைப்பது என்பது எல்லாம்......

திரு. குமரி அனந்தன் : காங்கிரசு கட்சி என்று சொல்கின்ற இயக்கத்தின் மீது, சில குறைகளை, பழிகளைச் சொல்கிற காரணத்தினாலே சொல்கிறேன். நானும் பாளையங்கோட்டைச் சிறையிலே இருந்தேன். காபியிலே பல்லி மிதந்தால் அதைக் குடிக்க வேண்டுமென்று சொல்கிறீர்களா ? அதைச் கட்டிக்காட்ட வேண்டாம் என்று சொல்கிறீர்களா ?

திரு. எஸ். எஸ். தென்னரசு : நான் காங்கிரசு கட்சி என்று எதுவும் சொல்லவில்லை. நீங்களாக உங்களை எடுத்துக் கொள்கிறீர்கள். காங்கிரசு கட்சி என்று நான் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை.



1990 ஏப்ரல் 9]

*மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரசு ஆட்சி தமிழகத்திலே நடந்து கொண்டிருந்தபோது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் நாங்கள் கலந்து கொண்டோம். அப்போது சோளக் கஞ்சி தருவார்கள். கோதுமை, சோளம் போட்டு கஞ்சி தருவார்கள். அதிலே, புழு எல்லாம் நெளியும். இன்னும் சொல்லப்போனால் அந்தக் கைதிகள், கைதி உடையிலே தான் இருக்க வேண்டும் என்று அப்போது எல்லாம் இருந்தது. அப்படிப்பட்ட சிரமமான நிலையிலே கூட நாங்கள் எல்லாம் சிறைச்சாலையிலே ஆயிரக்கணக்கானவர்கள் சென்றபோது அண்ணாவினுடைய கருத்தை ஏற்று நாங்கள் எல்லாம் அமைதியாகத் தான் இருந்தோமே தவிர, ஆர்ப்பாட்டம் எதுவும் செய்யவில்லை.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வாதம் வெவ்வேறு கருத்துகளை எடுத்து வைக்கிற காரணத்தால் இன்றைய அரசு சோளக் கஞ்சியிலே புழு நெளியும் கொள்கையை ஏற்று இருப்பதாக யாரும் கருதிவிடக்கூடாது. சிறைச்சாலையிலே வழங்குகிற உணவும் கூட உண்ணத்தக்க உணவாக இருக்க வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. கூடுமானவரையில் தகுந்த முறையில் செய்வதற்குத் தான் இந்த அரசு ஆசைப்படுகிறது.

திரு. எஸ். எஸ். தென்னரசு: துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒன்று, சிறை வார்டர்களுக்கு, எல்லாச் சிறைகளிலும் ஒரே நேரம்தான் வழங்கப்பட வேண்டும். ஏதோ சேலம் சிறைச்சாலையிலே மட்டும் 8 மணி நேரம் வேலை செய்வதாகவும், மற்ற சிறைச்சாலைகளிலே அதைவிட அதிக வேலை நேரம் வேலை செய்வதாகவும் கேள்விப்பட்டேன். அப்படி சேலம் சிறைச்சாலையில் 8 மணி நேரம் வேலைதான் என்றால், எல்லாச் சிறைச்சாலைகளுக்கும் அதை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டு நான் இந்த அளவுக்கு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

11-35 மணி

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச் சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன்.

நீதி நிருவாகம் என்பது ஒரு அரசினுடைய தலையாய கடமை ஆகும். நீதியும், நெறிமுறையும் தவறிய அரசு நிலைத்ததாக வரலாறு இடையாது. " எதிலும் தமிழ், எங்கும் தமிழ்,"

என்று மக்கள் மத்தியிலே வாக்குகள் வாங்கி, வெற்றி பெற்று, ஆட்சிக்கு வந்த நீங்கள் தமிழகத்திலே—நீதிமன்றங்களிலே, தமிழிலே வழக்குகள் நடைபெறுவது பற்றியோ அல்லது வழக்கறிஞர்கள் தமிழிலே வாதாடுவதற்குரிய வகைகள் பற்றியோ என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள் என்பது குறித்து இந்தக் குறிப்பிலே எங்கே புரட்டிப் பார்த்தாலும் இல்லை என்றுதான் என்னால் சொல்லிக் கொள்ள முடியும்.

ஆனால், தமிழகத்திலே இருக்கின்ற நீதிமன்றங்களிலே நடைமுறைகள் தமிழிலேதான் இருக்க வேண்டுமென்று உங்களுடைய அரசு ஆணை பிறப்பித்ததாகக்கூட நீங்கள் கூறலாம் ஆனாலும்கூட, குற்றவியல் சம்பந்தப்பட்ட நடைமுறைகள், அதேபோன்று உரிமையியல் சம்பந்தப்பட்ட நடைமுறைகள் தமிழாக்கம் செய்யப்படாத காரணத்தினால், பொது மக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும், நீதிபதிகளுக்கும் இது சிரமமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்வதோடு, சட்டங்கள் தமிழாக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குற்றவியல் சம்பந்தப்பட்ட வழக்குகள் குறைந்தது ஆறு மாத காலத்திற்குள்ளும், அதேபோன்று உரிமையியல் சம்பந்தப்பட்ட வழக்குகள் குறைந்தது இரண்டு வருட காலத்திற்குள்ளும் தீர்க்கப்பட வேண்டுமென்று தமிழகத்திலுள்ள எல்லா நீதிமன்றங்களுக்கும் ஆணை பிறப்பிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வழக்குகளெல்லாம் முடிவடையாமல் இருப்பதற்குக் காரணம் நீதிமன்றங்களிலே நீதிபதிகள் இல்லை என்ற குறை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆகவே நீதிபதிகள் இல்லாத நீதி மன்றங்களில் உடனடியாக நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, வழக்கறிஞர்களைப் பொறுத்தமட்டில், இப்பொழுது பெரும்பான்மையான வழக்கறிஞர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், ஆகவே, குறைந்தபட்ச வருமானம் கிடைக்கின்ற வகையிலே வழக்கறிஞர்களுக்கு அரசு சலுகைகளை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்டங்கள் பிரிக்கப்பட்ட நேரத்தில், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், காமராஜர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்கெல்லாம் கோடை விடுமுறை காலத்திற்குப் பின்பு மாவட்ட செஷன்ஸ் கோர்ட்டுகள் அமைக்கப்படும் என்று ஆணை பிறப்பித்துள்ளீர்கள். ஆனால் சிதம்பரனார் மாவட்டம் மட்டும் புறக்





கணிக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரனார் மாவட்டத்திலே, தூத்துக்குடியிலே மாவட்ட செஷன்ஸ் கோர்ட் ஆரம்பிப்பதற்குக் கட்டிடங்களெல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த நேரத்தில் கடந்த ஒரு மாத காலமாக........

மாண்புமிகு திரு. எம். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்ல விரும்புகிறேன். தூத்துக்குடி புறக்கணிக்கப்படவில்லை. அங்கேயும் மாவட்ட நீதிமன்றம் [illegible]க்குப் பிறகு தொடங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : நான் அமைச்சரவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தூத்துக்குடியிலே சட்டக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க அரசு முன் வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இரயில் மறியல் போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டு, சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டவர்களை உங்களுடைய ஆட்சி விடுதலை செய்திருக்கிறது. ஆனால், பிப்ரவரி 12 ஆம் தேதி உண்ணாவிரதப் போராட்டத்திலே ஈடுபட்டு சிறைச்சாலைகளுக்குச் சென்றவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை இது வரையிலே நீங்கள் வாபஸ் பெறவில்லை. ஆகவே, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் மீதும், தொண்டர்கள் மீதும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதும் போடப்பட்ட வழக்குகளை உடனடியாக வாபஸ் வாங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று, இரயில் மறியல் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் விடுதலை செய்வதற்கு ஆணை பிறப்பித்தீர்கள். சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும்தான்-நாங்கள்தான் முதல் குற்றவாளிகள். முதல் குற்றவாளியை நீங்கள் விடுதலை செய்துவிட்டு, இரயில் மறியல் போராட்டத்திலே கலந்து கொண்டு சிறைச்சாலைக்குச் சென்ற காங்கிரஸ் கட்சியினுடைய தொண்டர்களை மட்டும் நீங்கள் விடுதலை செய்யாமல் இருப்பது என்ன நியாயம் என்பதை நான் கேட்கின்ற நேரத்திலே, நாங்களெல்லாம் கருதுகிறோம் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களையும், தொண்டர்களையும் [illegible] குழுத்தான் காரணமோ என்று கூட நாங்கள் [illegible]ப்படுகிறோம்.

திரு. எஸ். டேனியல்ராஜ்] [1990 ஏப்ரல் 9

சட்டமன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் நீங்கள் விடுதலை செய்கின்ற நேரத்திலே, நாங்கள் வெளியே வர மாட்டோம் என்று மறுத்த நேரத்தில் பலவந்தமாக எங்களைச் சிறைச்சாலையிலே இருக்கின்ற ஆயுள் தண்டனைக் கைதிகளை வைத்து வெளியேற்றினீர்கள். சென்னையிலே இருக்கின்ற மத்திய சிறைச்சாலையிலே வெளியே வர மாட்டோம் என்று சொன்ன பாராளுமன்ற உறுப்பினர் அன்னை மரகதம் சந்திரசேகர் அவர்களையும், பாராளுமன்ற உறுப்பினர் திரு. அன்பரசு அவர்களையும் வெளியேற்ற வேண்டுமென்ற நோக்கத்திற்காக, விளக்குகளையெல்லாம் அணைத்து இருட்டடிப்பு செய்து ஆயுள் தண்டனைக் கைதிகளை வைத்து, மிருகத்தனமாகப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அன்பரசு அவர்களையும் காங்கிரஸ் கட்சியினுடைய தொண்டர்களையும் தாக்கியதை நீங்களெல்லாம் இந்த நேரத்திலே......

11-40 மணி

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். கோர்ட் உத்தரவின்படி தானே உள்ளே போகிறீர்கள்? அப்போது மட்டும் கோர்ட்டிற்குப் பணிந்து உள்ளே போகிறீர்கள். கோர்ட் உத்தரவு தான் உங்களை விடுதலை செய்கிறது. உள்ளே போகிறபோது கோர்ட்டிற்குப் பணிந்து போகிற நீங்கள், வெளியே போகலாம் என்று கோர்ட் சொல்கிறபோது ஏன் போக முடியாது என்று சொல்கிறீர்கள்? அதற்கு விளக்கம் தேவை.

* திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, கோர்ட் உத்தரவால் வெளியே போகச் சொல்லவில்லை. It is an executive order. நிர்வாக உத்தரவு என்பதை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. மக்களவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டது நிர்வாக உத்தரவின் காரணமாகத் தான் என்ற வாதத்தை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே தான் நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, எக்சிகியூட்டிவ் ஆர்டர் போட்டாலும் கூட, அந்த ஆர்டரைக் கூட, கோர்ட்டில் காண்பித்து, கோர்ட் ஆர்டருக்குப் பிறகு தான் போக முடியும். By executive order you cannot be released you will be released on the orders of court. அதைத்தான் நான் சொல்கிறேன். அதை விளக்கவேண்டுமே தவிர, இதிலே டெக்னிக்கலாக ஆர்கியூமென்ட் பண்ணக் கூடாது. நீங்கள் போகவே மாட்டேன் என்றால் நாங்கள் என்ன பண்ண முடியும்



1990 ஏப்ரல் 9]

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, எக்சிகியூட்டிவ் ஆர்டராக இருந்தாலும் நீதிமன்ற ஆர்டர் வேண்டும் என்று சொல்கிறார்கள். சட்டமன்றத்திலே கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்றத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களையும், விடுதலை செய்கிறோம் என்று சொன்னால், கைதாகி வந்திருப்பவர்களில் எத்தனையோபேர் யூனியன் சேர்மனாக இருப்பார்கள். பஞ்சாயத்து தலைவர்களாக இருப்பார்கள். சாதாரண குடிமகனாக இருப்பார்கள். இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சில கடமைகள் இருப்பதைப் போல, குடிமகனுக்கும் சில கடமைகள் இருக்கின்றன. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற வகையில் அரசே முதலில் எல்லோருக்கும் விடுதலை என்று சொல்லியிருக்க வேண்டும். இல்லையென்றால் எல்லோருக்கும் தண்டனை என்று சொல்லியிருக்க வேண்டும். நீதிமன்றத்தில் போய் நிறுத்துகிற போது கூட அப்படித்தான் செய்திருக்க வேண்டும். பேதம் பார்த்து இருக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் நன்றாக அறிவார்கள். அவர்களுக்கு நான் விளக்கம் சொல்ல விரும்பவில்லை. எக்சிகியூட்டிவ் ஆர்டர் மூலமாக ஒருவரை சிறையில் அடைக்க முடியாது. ஜுடிஷியல், எக்சிகியூட்டிவ் என்ற இரண்டும் செப்பரேஷனாகி ரொம்ப நாளாயிற்று. எக்சிகியூட்டிவ் ஆர்டரைப் போட்டாலும் அந்த ஆர்டர் கோர்ட்டிற்குப் போய் அதற்கு வேண்டிய உத்தரவைப் போட்டால் தான் ஜெயிலுக்கு அனுப்ப முடியும். அப்படித்தான் விடுதலை செய்வதும். அரசாங்கம் சில காரணங்களைச் சொல்லி உத்தரவைப் போட்டாலும் கூட, அந்த எக்சிகியூட்டிவ் ஆர்டரைக் கொண்டு போய்— If produced before the Magistrate— அந்த மாஜிஸ்ட்ரேட் முன்னால் ரிமாண்ட் செய்தாலும், அந்த மாஜிஸ்ட்ரேட் ஒரு உத்தரவைப் போடுவார்கள். அந்த உத்தரவைக் கொண்டு வந்த பிறகு தான் உங்களை விடுவார்களே தவிர, வேறு காரணத்தால் விட முடியாது. எக்சிகியூட்டிவிற்கு அந்த அதிகாரம் இப்போது கிடையாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்வி தான். அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே விளக்கி இருக்கிறார்கள். எல்லோரையும் விடுதலை செய்யலாம் என்று நாங்கள் இருந்த நேரத்தில் தான் மாண்புமிகு சிதம்பரம் அவர்கள் ரிட் பெட்டிஷன் ஒன்றைப் போட்டு விட்டார்கள். அந்த ரிட் பெட்டிஷனில் முடிவு வருகிற வரைக்கும் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்ற விளக்கத்தைத் தான் நான் சொன்னேன். அந்தக் காரணத்தைத் தவிர, வேறு காரணம் கிடையாது. அதைத் தான் நாங்கள் செய்திருக்கிறோம்.

[1990 ஏப்ரல் 9

திரு. அ. இரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே சிறைச்சாலையில் இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை தனித்து விடுதலை செய்து மற்றவர்களை விடுதலை செய்யாதது தந்திரமா என்று கூட சொன்னார்கள். நம்முடைய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் தேர்தலுக்கு முன் பாக, தீவிரவாதிகள் பஞ்சாபிலே அத்தனைபேரும் சிறையி லிருந்து, குற்றவாளிகள் என்று வழக்கு இருந்த நேரத்தில் கூட, மான் அவர்களை மட்டும் தனித்து விடுதலை செய்தார்கள். மற்றவர்கள் எல்லோரையும் விடுதலை செய்திருக்கலாம். அது வும் பிரித்தாளுகிற தந்திரமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, அது பிரித் தாளுகிற தந்திரம் என்று சொல்ல மாட்டேன். இருக்கிற நியதி யின்படி எந்தக் குற்றமானாலும், ஒரே குற்றத்தைச் செய்த தற்கு மானும் மற்றவர்களும்—ஒரே குற்றத்தைச் செய்தார்கள் என்பதற்கு பல குற்றங்களைச் செய்ததற்கான எத்தனை யோ செக்ஷன்களில் வழக்கு போடப்பட்டது என்பது வாதத் திற்கு உரியது. இங்கே ஒரே குற்றத்தைச் செய்தவர்கள் நாங்கள். அதுதான் பிரச்சினை.

திரு. அ. இரகுமான்கான் : தலைவர் அவர்களே, மான் அவர்களை மட்டும்—எல்லோர் மீதும் அதே செக்ஷன் தான், அதே அதே குற்றச்சாட்டு தான், அதே சிறைதான், மான் அவர்களை மட்டும் விடுதலை செய்ததற்குக் காரணம் என்ன?

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, மான் அவர் களுக்கும் மற்றவர்களுக்கும் இருக்கிற வேறுபாடுகள் போல வே, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தொண்டர்களுக்கும் இல்லை. அதுவும், இதுவும் ஒப்பிட முடியாத காரியம்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இங்கே எக்சிகியூடிவ் ஆர்டர், நிர்வாக உத்தரவாக இருந் தாலும், மீண்டும் ரிமாண்டிங் மாஜிஸ்ட்ரேட்டிடத்தில் போய் அவர் நீதி உத்தரவாகப் போட்டால் தான் வெளியே வர முடி யும் என்று சொன்னார்கள்.

11-45 மணி

எக்ஸிகியூட்டிவ் ஆர்டரிலே என்ன போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், மக்களவை உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், அந்த [illegible] கூட்டப்பட்டு இருக்கிற காரணத்தால், அவர்கள் [illegible] கலந்துகொள்வதற்கு ஏதுவாக இருக்கிற வகையிலே அவர்கள்



1990 ஏப்ரல் 9] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

விடுதலை செய்யப்படவேண்டும் என்பது எக்சிகியூட்டிவ் ஆர்டர். ஆனால், இவர்கள், போலீசார் கோர்ட்டிலே போய் என்ன சொல்கிறார்கள் என்றால், They are no longer required for investigation என்று.

அவர்கள் விசாரணைக்குத் தேவையில்லை, இந்த எம்.பிக் கள், எம்.எல்.ஏக்கள் மீண்டும் விசாரணைக்குத் தேவையில்லாத காரணத்தால் உடனடியாக இவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று அவர்கள் சொல்லி, Remanding Magistrate அதை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லி, உத்தரவு போட்டிருக்கிறார்கள். That has been commented upon by the High Court of Judicature.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்கின்ற விளக்கத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல நான் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் மிசாக் கொடுமை நடந்தபோது, எங்களுடைய தலைவர் கலைஞர், பேராசிரியர் இவர்களை எல்லாம் விட்டுவிட்டு, தொண்டர்களை மட்டும் உள்ளே சிறையிலே அடைத்தீர் களே, அந்த அணுகுமுறைக்கு என்ன பெயர்?

திரு. குமரி அனந்தன் : இப்போது உங்கள் ஆட்சியிலேயும் மிசா இருக்கிறது என்று சொல்லுங்கள், ஒத்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் 'ஹேபியஸ் கார்பஸ்'' பற்றிச் சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டிலே அப்பீலில் இருப்ப தாலே, அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. பூரா ஜட்ஜ் மென்டையும் நான் வைத்திருக்கிறேன். ரிட் பெட்டிசன் நெ. 2895/1990. அது வந்து சண்டே கோர்ட் மாதிரி, ஞாயிற்றுக் கிழமை எடுத்து, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை விசாரித்து உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதிலே சொல்லப்படுவது, இந்த ஜுடிசியல் மேஜிஸ்ட்ரேட் செய்த ரிமான்ட் ஆர்டர் சரியில்லை; ஜுடிசியல் ஆக்ட்.

It is not an Executive Order that is in question. The question is the Judicial Act done by the Magistrate. ஜுடிசியல் மாஜிஸ்ட்ரேட் சட்டத்தைச் சரியாகப் பின்பற்ற வில்லை என்ற காரணத்தைச் சொல்லித்தான் நீதி வழங்கியிருக் கிறார்களே தவிர, வேறு அல்ல. எனவேதான் அதிலே ஒன்றும் முக்கியமான பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை. டெக்னிக்க லாகத்தான் இருக்கிறது.



D
1H3803
V211,31'N70
N90.2k.3

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த டி. ஆர். பாலு, எம். பி. அவர்களையும், மு. க. ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும், ரயில் மறியல் செய்த அவர்களைக் கைது செய்து, அன்றே விடுதலை செய்தார்கள், 143, 188 செக்சன் போட்டு, விடுதலை செய்தார்கள். அதே நிலையில் ஏன் காங்கிரஸ் கட்சிக்காரர்களை மட்டும் விடுதலை செய்யாமல் அவர்கள் அத்தனை பேர்களுக்கும் 143, 188 போட்டு, 7(1)ஏ செக்சனும் போட்டு, கைது செய்து உள்ளே அடைத்தீர்கள். இது என்ன நியாயம் ?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : அது என்ன நியாயம் என்று கேட்டால், நாங்கள் சொன்னால் நீங்கள் போகமாட்டீர்கள். எக்சிகியூடிவ் ஆர்டர், கோர்ட் ஆர்டரைக் காண்பித்தாலும் போக மாட்டீர்கள். அதற்கு நாங்கள் என்ன செய்வது? (குறுக்கீடு).

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சிங்காரம் அவர்கள் கேட்டார்கள். டி. ஆர். பாலு அவர்களையும், மு. க. ஸ்டாலின் அவர்களையும் உடனே விட்டு விட்டீர்களே என்று. நம்முடைய இலக்கியச் செல்வர் காலையிலே உண்ணாவிரதம் இருந்து கைது செய்யப்பட்டு, மாலையிலே அந்த ஆட்சியிலே விடுவிக்கப்பட்டபோது கூட மகிழ்ச்சி அடைந்தாரே தவிர, தவறான நடைமுறை என்று சொல்லவில்லை. இப்போது மாறி விட்டாரா அந்தக் கொள்கையிலிருந்து. நிறம் மாறிய பூவா குமரி அனந்தன் அவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : நான் நிறம் மாறிய பூவாகவும் மாற மாட்டேன், தரம் மாறிய மனிதனாகவும் நான் மாறமாட்டேன். அதிலே உங்களுக்கு ஐயமே வேண்டியதில்லை. (குறுக்கீடு). காலையிலே என்னைக் கைது செய்து, மாலையிலே விட்டது ஒரு அரசாட்சியிலே அல்ல. பல அரசாட்சியிலே நடந்திருக்கிறது. உங்கள் அரசாட்சியிலும் நடந்திருக்கிறது.

திரு. அ.லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் ஸ்டாலின் அவர்களையும் டி. ஆர். பாலு அவர்களையும் காலையிலே கைது செய்து மாலையிலே விட்டது உண்மை. ரயில் மறியல் போராட்டம். ஆனால் ஒன்று, அவர்கள் ஆட்சியிலே (குறுக்கீடு) மறுநாள் விட்டார்கள். அவர்கள் ஆளும் கட்சியினுடைய அங்கமாக இருந்தவர்கள். எந்தத் தகராறும் நடக்கவில்லை. ஆனால் காங்கிரஸ் போராட்டப் 2-ஆம் தேதி என்று சொல்லிவிட்டு, 11 ஆம் தேதி திருச்செந்



தூரில் ரயில் கொளுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, அதற்காக பாதுகாப்புத் தேடி அவர்களை அடைப்பதில் என்ன தவறு என்று கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு).

திரு. அ. இரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் ஏ. எல். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதிலே ஒரு தவறு, திருத்தப்பட வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி நடத்திய போராட்டத்தில் தொண்டர்களை உள்ளே வைக்காமல் வெளியே விட்டது தவறு என்று ஏதோ ஒரு உத்தரவு, எக்சிகியூட்டிவ் உத்தரவோ, அல்லது ஜூடிசியல் உத்தரவோ மதிப்பிற்குரிய பாலசுப்பிரமணியம் அவர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடு). சொல்லவில்லை என்றால் சரி. இப்போதுதான் சொன்னீர்கள். ஆனால் சிங்காரம் அவர்கள் எங்களை ஏன் உள்ளே அனுப்பினார்கள். ஸ்டாலினை வெளியே விடவில்லையா, எங்களை மட்டும் ஏன் உள்ளுக்குள்ளே அனுப்பினார்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள். இதிலே காங்கிரஸ் கட்சியினுடைய கருத்து என்ன? போராட்டத்திலே உள்ளே இருப்பது என்பது உங்களுடைய கருத்தா? அல்லது வெளியே உடனே விடவேண்டும் என்பது உங்களுடைய கருத்தா?

11-50 மணி

திரு. குமரி அனந்தன் : போராட்டத்தில் உள்ளே இருக்க வேண்டுமென்பதுதான் கருத்து. ஆனால் தலைவர்களையும், தொண்டர்களையும் வேறுபடுத்துகின்ற, பிரித்து ஆளுகின்ற சூழ்ச்சியை அனுமதிக்க முடியாது என்பதும் கருத்து.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : உறுப்பினர் சிங்காரம் அவர்கள் தி.மு.க. போராட்டம் நடத்தியபோது ஸ்டாலின் அவர்களையும், மற்ற தலைவர்களையும், எல்லோரையும் விட்டு விட்டார்களே, எங்களை ஏன் விடவில்லை என்று கேட்கிறார்களே, அது எந்தக் கருத்து?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ; துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்திலே வழக்கு நடந்தபோது இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்ட நேரத்தில், அட்வகேட் ஜெனரல் அரசாங்கத்தினுடைய தரப்பிலே ஆஜரான அட்வகேட் ஜெனரல் என்ன சொன்னார் என்றால் அவர்கள் டி. ஆர். பாலுவும், மற்றவர்களும் ஜாமீனிலேதான் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இதில் கருத்து வேறுபாட்டிற்கு எந்த இடமும் கிடையாது.

[1990 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நீங்களே ஜாமீனில் வருவது பற்றி எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் உறுப்பினர் சிங்காரம் கேட்பது அவர்களை விடுதலை பண்ணினீர்கள். எங்களை ஏன் பண்ணவில்லை என்று கேட்கிறீர் கள். உங்களை நாங்கள் விடுதலை பண்ணவேண்டுமென்று கேட்கிறீர்களா, அல்லது உள்ளேயே வைத்திருக்கவேண்டுமென்று கேட்கிறீர்களா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏதோ Documentary evidence இருப்பதாகச் சொன்னீர்களே, அதைக் கொடுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : I got the order, Can I read what I said in the beginning.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினை ரொம்ப நேரமாக விவாதிக்கப் பெற்றுக் கொண்டிருக்கிறது. தயவு செய்து வேறு பிரச்சினைக்குச் சென்றால், நேரமும், அவகாசமும் கிடைக்கும் என நினைக்கிறேன். (குறுக்கீடுகள்).

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்டாலின் அவர்களோடும், டி. ஆர். பாலு அவர்களோடும் அன்றைக்கு அந்த மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் நானும் ஒருவன். எனவே அந்தத் தகவலை என்னால் சரியாகச் சொல்ல முடியும். அந்த அடிப்படையில் சொல்கிறேன். நாங்கள் ஜாமீனில் வரவில்லை. நாங்கள் இரவு முழுவதும், லாக்-அப்பில், ஜுடிசியல் ரிமாண்டில் தான் இருந்தோம். அடுத்து இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய பாலசுப்பிரமணியம் அவர்கள் சொல்லியதைப்போல் அட்வகேட் ஜெனரல் சொல்லவில்லை. கோர்ட்டில் அந்த வழக்கின்போது இருந்த கணபதி அவர்கள் சாட்சாத் இங்கே இருக்கிறார். நம்முடைய பாலசுப்பிரமணியம் அவர்கள் தவறானத் தகவலைக் சொல்வார்களேயானால், உரிமைப் பிரச்சினை கொண்டு வருவேன் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : கோர்ட்டில் நேரடியாக அட்வகேட் ஜெனரல் எழுந்து அவர்கள் வெளியே வந்தது தாங்கள் ஜாமீன் கொடுத்ததின் பேரில்தான் வெளியே விடப்பட்டார்கள் என்று அட்வகேட் ஜெனரலே சொல்லியிருக்கிறார்கள். இது கோர்ட்டிலே இருந்த அத்தனை பேருக்கும் தெரியும். நானும் முழுக்க முழுக்க அந்த விசாரணை நடந்து கொண்டிருந்த நேரத்திலே கோர்ட்டிலேதான் இருந்தேன்.



1990 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Copy application போட்டு யாராவது ஒருவர் கொண்டு வாருங்கள்.

திரு. எஸ். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசாரணை நடந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் மூப்பனார் அவர்களும் திண்டிவனம் ராமமூர்த்தி, பழைய அமைச்சர் அருணாசலம் அவர்களும் தான் நீதிமன்றத்திலே இருந்தார்கள். இந்த பிரச்சினையிலே உயர்நீதிமன்ற அட்வகேட் ஜெனரல் அவர்கள் இந்த மாதிரி கருத்துப் படி அங்கே எந்தவிதமான செய்தியும் சொல்லவில்லை. இங்கே வேண்டுமென்றே திசை திருப்பவேண்டுமென்ற எண்ணத்தில் ஏதோ தி.மு.க. தலைவர் மீதும், தொண்டர்கள் மீதும் களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற விதத்தில் ஜாமீனில் விடப்பட்டதாக இங்கே சொல்லப்படுகிறது. என்றைக்குமே நாங்கள் ஜாமீனில் வருவதில்லை.

திரு. எம். அப்துல் லத்தீப்: துணைத் தலைவர் அவர்களே, நீண்ட நேரமாக இந்த ஒரு பிரச்சினை மீது ஒழுங்குப் பிரச்சினை என்ற பெயரிலே நீண்ட விவாதம் நடைபெறுகிறது. ஏனென்றால் அவர்கள் மிகத் தெளிவாக தங்களுடைய நிலையை உயர்த்தியிருக்கிறார்கள். சகோதரர் மு.க. ஸ்டாலின் அவர்களை மையமாக வைத்து காலையில் பிடித்து மாலையில் விட்டு விட்டார்களே என்று சொன்னதன் வாயிலாக மு.க. ஸ்டாலினைப் போல் காலையில் பிடித்து மாலையில் விட்டு விடுவார்கள் என்று நம்பிக் கொண்டுதான் இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருப்பார்கள் என்று நன்றாகத் தெரிகிறது. எனவே இந்த பிரச்சினையை நீட்டிக்க வேண்டிய அவசியம் தேவையில்லை, (குறுக்கீடுகள்).

11–55 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். உங்கள் துணைத் தலைவர் பேச இருக்கிறார். அவர் பேச இருக்கும் போது ஏன் குறுக்கிடுகிறீர்கள் ? அந்த ஒரு கட்டுப்பாடு கூட உங்களுக்கு இல்லை என்றால் அப்புறம் என்ன சொல்வது ?

திரு. குமரி அனந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது நண்பர் ஸ்டாலின் அவர்கள் வெளியே இருப்பதிலே எங்களுக்கும் மகிழ்ச்சி தான். அவர் உள்ளே இருக்க வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படவில்லை. அவர் இளைஞர். நான் என்ன கேட்கிறேன், அதே நாள் மக்களுக்கு என்று மக்களுக்கு உதவுவதற்கு என்று கடை திறந்து வைத்திருக்கிற ஒரு பகுதியிலே நின்ற நான் கைது செய்யப்படுகிறேன். மக்கள் ஏறிப் போகிற ரெயிலையே தடுக்கிறவர்களும் கைது செய்யப்படுகிறார்கள். ஆனால் அப்படி மக்களுக்கு வேண்டிய சேவை

[திரு. குமரி அனந்தன்] [1990 ஏப்ரல் 9

செய்து கொண்டிருக்கிற மத்திய அரசாங்கத்தினுடைய ரயிலை
குறுக்கே நின்று தடுப்பவர்கள் எந்த வகையிலே இந்த அரசாங்கத்
தால் நடத்தப்பட்டார்கள்? அதே நேரத்திலே தேவக்கோட்டை
யிலே நமது தோழர்கள் அந்த ரயிலை தடுத்து நிறுத்தியபோது
எப்படி காயப்படுத்துகிற வகையிலே ரயில் ஓட்டப்பட்டது என்
பதை நினைவிலே வைத்தால் போதும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 20 மணித்
துளிகள் ஆகிவிட்டன, இந்த Point of order லேயே.
உங்களுடைய ஒத்துழைப்பு இல்லை என்றால் என்னால் அவையை
நடத்த முடியாது. தயவு செய்து உட்காருங்கள். திரு. வீரையன்
அவர்கள்.

**திரு. கோ. வீரையன் :** நான் கேட்க விரும்புவது, அரசாங்கத்
திடமிருந்து ஒரு விளக்கம் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.
இங்கே கிட்டத்தட்ட நீண்ட நேரமாக ஒரு அரசியல் ரீதியாக
அறிவிக்கப்பட்டிருக்கிற போராட்டத்தில் ஒரு மறியலில் கைது
செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்வது
சம்பந்தமாக நீண்ட நேரமாக சர்ச்சை நடைபெறுகிறது.
அதிலே நிர்வாக ரீதியானது அதாவது நீதித்துறை ரீதியானது
என்று சட்ட நுணுக்கத்திற்குள்ளே புகுந்து இரண்டு தரப்பினர்
களும் இங்கே திறமைகளை காட்டுகிறார்கள். நான் தெரிந்துக்
கொள்ள விரும்புவது, ஒரு போராட்டத்தில் அப்படி நடவடிக்கை
களில் ஈடுபடும்போது அவர்களை விடுதலை செய்ய வேண்டும்
என்று நீதித்துறையின் அல்லது நிர்வாகத்துறையின் சட்ட நுணுக்க
நடவடிக்கை மூலமாக விடுதலை செய்யப்படுகிறார்களா அல்லது
அரசியல் ரீதியாக முடிவு எடுக்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்
யப்பட வேண்டுமா. அரசு எந்த முறையை கையாள இருக்கிறது.
ஏனென்றால் கடந்த கால நடைமுறைகளைப் பற்றி குறிப்பிட்
டார்கள். கடந்த கால நடைமுறைகளை அப்படியே இந்த அரசு
கடை பிடிக்க விரும்புகிறதா அல்லது மாறுதல் செய்ய விரும்பு
கிறதா இந்த அரசியல் ரீதியாக கைது செய்யப்படுபவர்களை
அரசியல் ரீதியாக முடிவு எடுத்து விடுதலை செய்யப்படுகிறார்
களா அல்லது சட்ட நுணுக்கங்கள் மூலமாக விடுதலை செய்யப்
படுகிறதா என்று அரசிடமிருந்து நான் தெரிந்து கொள்ள
விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. வீரையன் அவர்
கள் இந்தப் பிரச்சினை இங்கே எழுந்ததை ஒட்டி ஒரு கொள்கை
விளக்கமே தர வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.
இதிலே ஒன்றும் பெரிய கொள்கை இருப்பதாக நான்
கருதவில்லை. எந்த ஒரு போராட்டமாக இருந்தாலும்
காவல் துறை அந்தப் போராட்டத்தை ஒரு கட்டுப்
பாட்டிற்குள் கொண்டு வருவதற்குத்தான் அணுகுகிறது.



1990 ஏப்ரல் 9] [டாக்டர் க. அன்பழகன்]

அந்தப் போராட்டம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடக் கூடிய
சூழ்நிலை இயல்பாக இருக்கிறது என்று சொன்னால் உடனே
விடுதலை செய்யப்படுகிறார்கள். போராட்டம் தொடரும்
என்ற எண்ணம் இருந்தால் உடனே விடுதலை செய்யப்படுவ
தில்லை. இது காவல் துறை அவர்களுடைய கடமையை நிறை
வேற்றுவதற்காக மேற்கொள்ளுகிற ஒரு முறை (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர்
அவர்கள் விளக்கம் கேட்டதற்கு உங்கள் துணைத் தலைவர் பதில்
சொல்லிவிட்டார். திரு. டேனியல் ராஜ் தொடர்ந்து பேசட்டும்.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, காங்கிரஸ் கட்சியின் செயல் முறைப் போராட்டத்தை
அறிவிக்கும்போது காங்கிரஸ் கட்சியினுடைய தொண்டர்களும்
காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களும் ஜாமீனில் கூட
வெளியே வர மாட்டோம் என்ற உறுதியை கொடுத்ததன் அடிப்
படையிலே தான் நாங்கள் எல்லாம் உள்ளே சென்றோம். ஆகவே
ஏதோ சிறைச்சாலைக்கு பயந்து காங்கிரஸ்காரர்கள் வெளியே
வருவதற்கு துடித்தார்கள் என்றெல்லாம் பேசுவதை நாங்கள்
ஒத்துக்கொள்ள முடியாது. ஆகவே இப்படி ஒரு நிலையிலே
(குறுக்கீடு) எங்களுடைய கருத்துக்கள் அவை. காங்கிரஸ் கட்சி
யைச் பொறுத்த மட்டில் சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள்
நாங்கள். வெள்ளைக்காரனை எதிர்த்துப் போராடி பல ஆண்டுக்
காலமாகச் சிறைச்சாலையை அனுபவித்தவர்கள், ஆகவே
எங்களைப் பார்த்து.... (குறுக்கீடு)

12–00 மணி

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** காங்கிரஸ்காரர்கள்
பயந்து வெளியே வர விரும்பினார்கள் என்று சொல்வது இந்த
அரசாங்கத்தினுடைய நோக்கம் அல்ல. கட்சியினுடைய நோக்க
மும் அல்ல. உள்ளே இருப்பதை விரும்பாமல், சிலபேர்
வெளியே வர விரும்பினார்கள், அது பயத்தின் காரணமாக
அல்ல, அவர்களுக்கு இயல்பாக உள்ள உணர்வு காரணமாக.
இன்னும் சொல்லப்போனால், காங்கிரஸ் கட்சி வெள்ளைக்
காரனை எதிர்த்து, நீண்டக்காலம் போராடியது, சிறைச்சாலை
களிலே இருந்தது என்ற வரலாற்றுப் பெருமையையும் நான்
உணர்வேன் ; அதிலே என்னுடைய பாட்டன்மார்களுக்கும்
பங்குண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. என். கணபதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, காங்கிரஸ் கட்சி போராட்டத்தை அறிவித்தது, உண்மை,
நல்ல பாரம்பரியம் அதற்குண்டு, உண்மை. இல்லையென்று
சொல்லவில்லை. ஆனால், போராட்டத்தை அறிவித்த உட
னேயே, கையோடு இன்னொரு அறிக்கையும் வெளியிட்டு

இருந்தது. எங்களை உள்ளே அடைக்கக்கூடாது. எங்களை வெளியே விட்டு விடவேண்டும் என்ற ஒரு அறிக்கையும் வந் தது. அந்த அறிக்கைக்கு பதில் அறிக்கையை நானும் தந்தேன். கொடுத்த பிறகு, நீதிபதியை சனிக்கிழமை அன்று பார்த்து, எங்களை எப்படியாவது வெளியே விட்டுவிட வேண்டுமென்று அவர் வீட்டிலேயே போய் பார்த்து, வழக்கைத் துவக்கி, ஞாயிற் றுக் கிழமையும் நடத்தி, திங்கட்கிழமையும் நடத்தி, இரண்டு மூன்று நாட்கள் கழித்து, எப்படியாவது வெளியே விட்டு விட வேண்டுமென்று வாதாடி, போராடி, வெளியே வந்தீர்கள். அது ஒரு மறுக்கமுடியாத உண்மை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : சட்டப்படி நீங்கள் செய்தது தவறு என்றோ, அல்லது நீதிக்குப் புறம்பானது என்றோ நான் சொல்ல வில்லை. வாதாடுவது, எங்களை விட்டுவிடவேண்டுமென்று கெஞ்சுவதாக ஆகாது. நீங்கள் சட்டம் படித்தவர்கள் ; ஆகை யினாலேதான், நான் உங்களுக்குப் பணிவோடு—படிக்காதவன் நான்—ஆனாலும் சொல்லிக்கொள்கிறேன். நீதிமன்றத்திலே ஒன்றை வாதிடுவது என்பதும், நியாயத்தை நிலைநாட்டுவதற்கு போராடுவது என்பதும் வேறு ; கெஞ்சுவது என்பதும் வேறு ; கெஞ்சுவது கொஞ்சமும் இங்கே இல்லை என்பதையும், அஞ்சு வதும் எங்களுக்குக் கிடையாது என்பதையும் உங்களுக்குத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயக நெறிமுறையை பாதிக்கின்ற வகையிலே, சென்னை, வேலூர், மத்தியச் சிறையிலே நடைபெற்ற வன்முறை சம்பவங்களுக்கு விரிவான முறையிலே நீங்கள் நீதி விசாரணை நடத்த வேண்டுமென்றும், அதற்காக ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியின் தலைமையிலே ஒரு நீதி விசாரணை மேற் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடந்த 6 மாத காலத்திற்கு முன்பாக எங்களுடைய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள் மீது, கிரிமினல் வழக்கு தொடர்வோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத் திரிக்கையிலே அறிவிப்பு சொன்னதை, நாங்கள் பத்திரிக்கையின் வாயிலாகப் பார்த்தோம். ஆனால் 6 மாத காலமாக அமைதி யாக இருந்துவிட்டு, ரயில்வே மறியல் போராட்டம் மார்ச் மாதம் 10-ஆம் தேதி என்று அறிவித்தவுடன், மார்ச் மாதம் 8-ஆம் தேதி இரவே, மதுரையிலே அவர் இருந்த இடத்திற்குச் சென்று, அவரைக் கைது செய்தது, போராட்டத்தைப் பிசுபிசுக்க வேண் டும் என்பதற்காகவும், தொண்டர்களை மிரட்டுவதற்காகவும் தான் இந்த நடவடிக்கை என்று மக்கள் மத்தியிலே பேசப்பட்டது.





ஓடமும் ஒரு நாள் வண்டியிலேறும் ; அதேபோன்று, வண்டியும் ஒரு நாள் ஓடத்திலே ஏறும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : '' வண்டியும் ஒரு நாள் ஓடத்திலே ஏறும் ; ஓடமும் ஒரு நாள் வண்டியிலே ஏறும் '' என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஒரு நாள் அல்ல ; எந்த நாளும் அப்படித்தான் மாறிமாறி ஏறும்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : அதேபோன்று நியாயங்கள் தோற்றது கிடையாது ; சரித்திரங்கள் வென்றது கிடையாது என்பதையும் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன். சிறைச்சாலையிலே, ஆயுள் தண்டனைக் கைதிகளாக, தண்டனை காலம் அனுபவித்துக் கொண்டிருக்கிற ஆயுள் தண்டனைக் கைதி களுக்கு, 14 ஆண்டுக் காலம் என்று இருந்து வருகிறது. அதை 10 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வ தோடு, காவலர்கள்—பணி செய்கின்ற காவலர்கள், அவர்களுக்கு பணி செய்கின்ற நேரத்தை , 8 மணி நேரமாகக் குறைக்க வேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே, நீதிநிர்வாக மானியக் கோரிக்கையின்போது, எங்களுடைய சட்டமன்ற உறுப் பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் இந்த மன்றத்திலே ஒரு பிரச்சினையை எழுப்பினார். கோவை மத்திய சிறையிலே ரூ. 8 லட்சத்திற்கு மேற்பட்ட எக்ஸைஸ் வரி ஊழல் நடை பெற்றது என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதிலே ஊழல் செய்த காண்டிராக்டர் திரு. கனகராஜ் ரெட்டியாரின் மீது ஏதேனும் கிரிமினல் நடவடிக்கையை அரசு எடுத்துள்ளதா ? அவர் செய்த ஊழலை, சென்னை உயர் நீதிமன்றத்திலே, சிறைச் சாலைத் துறையினரால் சுட்டிக்காட்டப்பட்டது, அப்படியும்கூட அவர்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், அவருக்கு வழங் கப்பட்டிருக்கின்ற காண்டிராக்டை நிறுத்தாமல், இதுவரையில், கோவை சிறைச்சாலையில் இருந்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிவிட்டு, உடனடியாக அவர் மீது நட வடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத் திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டேனியல்ராஜ் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுக்கு ஏற் கனவே பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது போன்ற தவறு நடைபெறவில்லை என்று விளக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம்; சிறைகள் நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை இந்த மாமன்றத்தில் விவாதத் திற்கு வந்திருக்கிறது.

[திரு. அ. இரகுமான்கான்] [1990 ஏப்ரல் 9

12-05 மணி

குறிப்பாக, இங்கே நீண்ட நேரம் சர்ச்சைக்குரிய பிரச்சினை யாகப் பேசப்பட்ட ஒன்றை நாம் எல்லோரும் அறிவோம். தியா கச் சுடர்களான நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் சிறைச் சாலைக்குச் சென்றது குறித்து ஒரு விவாதமே நடைபெற்றது அவர்கள் ரிமாண்ட் செய்யப்பட்டது சரிதானா என்ற விவாதம் நடைபெற்றது. 15–3–1980 அன்று 'பாரத பந்த்' என்று எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அன்றைக்கு அகில இந்திய அளவிலே தமிழகம் உட்பட மிகப் பெரிய 'பந்த்'-ஐ நடத்தி பல பேர் கைதுசெய்யப்பட்டோம். அப்படிக் கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்ட நேரத்திலே இப்படி எங்களை ரிமாண்ட் செய்தது சரிதானா என்று வழக்கறிஞர் ராதா கிருஷ்ணன் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்திலே ஒரு ரிட் மனு போட்டார். அந்த ரிட் மனுவிலே நீதிபதி சிவசுப்பிர மணியம் அவர்கள், இன்றைக்கு இந்த வழக்கிலே தீர்ப்புச் சொன்னாரே, அவர்களே—அது கவர்னர் ஆட்சி நடந்த காலம் —அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 'முன்னெச்சரிக்கையின் காரணமாக' போலீஸ் கைது செய்து, அவர்கள் ஜாமீனில் போக மறுத்தால் அவர்களை ரிமாண்டில் வைப்பதில் தவறில்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இதை நான் எதற்கு சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன் னால், கவர்னர் ஆட்சிக்குப் பிறகு தீர்ப்புகளிலே கூட மாற்றங் கள் இருக்கலாம். நான் இல்லையென்று சொல்லவில்லை. இதை மட்டும் சொல்லவில்லை. இன்னொன்றையும் இங்கே தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

நம்முடைய உச்சநீதிமன்ற நீதிபதி அவர்கள் லீவிலே போய் விட்டார்கள். எனவே நீதிபதி நயினார் சுந்தரம் அவர்கள் உத்தரவிட்டார்கள். அவர்கள் நம்முடைய மரியாதைக்குரிய சிதம்பரம் மற்றுமுள்ள உறுப்பினர்கள் சிறையிலேயிருந்து அனுப்பியதையே ரிட் மனுவாகப் பரிசீலனை செய்து இந்த ரிமாண்ட் சட்டவிரோதமானது, கூடாத ஒன்று என்று ரிட் மனு கொடுக்கப்பட்ட நேரத்திலே ஒரு ரிட் பெஞ்ச்—'பெஞ்ச்' துவக்கப்பட்டு நீதிபதிகள் இதை விசாரிக்கலாம் என்று நயினார் சுந்தரம் அவர்கள் உத்தரவு போட்டது, தேதியைச் சொல்ல விரும்புகிறேன், 12–3–1990 12ஆம் தேதி. விசாரணை நடத்த நீதிபதி உத்தரவு போட்ட தேதி 12ஆம்தேதி. ஆனால் விசாரணை நடைபெற்றது. 11ஆம் தேதி, இவர்களை மறியலிலே கைது செய்தது 10ஆம் தேதி. இவர்கள் ரிமாண்ட் செய்யப்பட்டது 10½ மணி. நான் கேட்க விரும்புகின்ற சந்தேகங்கள், மற்ற உறுப்பினர்களுக்குத் தெரியவேண்டிய விஷயங்கள், சிறையிலே இருக்கக்கூடிய இவர்கள் ரிட் மனுவாகப் பரிசீலிக்கவேண்டும் என்று தந்தி கொடுத்திருந்தால், அதில் முத்திரை இல்லை நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 9] [திரு. அ. இரகுமான்கான்]

இரண்டாவது, 10½ மணிக்கு மேலே எப்படிப் போய்ச் சேர்ந் தது, எந்தவிதமாகப் போய்ச் சேர்ந்தது? விளக்கம் தேவை. மூன்றாவது. 12-ஆம் தேதி நீதிபதி உத்தரவு போட, 11-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நீதிபதியின் வீட்டிலே அந்த விசாரணை எப்படி நடந்தது? கவர்னர் ஆட்சியிலே ரிமாண்ட் செய்யப் பட்டது சரிதான், சட்டவிரோதம் இல்லை என்று தீர்ப்பு எப்படி மாற்றப்பட்டது? நான் இதற்கு மேல் போக விரும்ப வில்லை. நீதி தேவன் மயக்கம் காங்கிரஸ் ஆட்சியிலே இருந் திருக்கலாம். நீதி தேவன் மயக்கம் மற்ற ஆட்சிகளிலே இருந்து இருக்கலாம். ஆனால் எங்கள் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் நடத்துகின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி யிலே என்றைக்கும் நீதி தேவன் மயக்கம் கிடையாது. கிடையாது என்பதை வலியுறுத்துவதற்காகத் தான் இதை இங்கே நான் சுட்டிக்காட்டுகிறேன். (குறுக்கீடு) திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசட்டும். ஆனால் நேரம் தயவுசெய்து தாருங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் வழக்குப் போட்ட தைப் பற்றிச் சொன்னார். வழக்கு 10ஆம் தேதி நாங்கள் கைது செய்யப்பட்டவுடனே அன்று மாலையில் கைப்பட சிதம்பரம் அவர்கள் எழுதி அவர் தன்னைச் சந்திக்க வந்தவர் களிடத்திலே கொடுத்து தந்தியாகக் கொடுக்கச் சொல்லி யிருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை விசாரிப்பதிலே எந்தவித மான தவறும் கிடையாது. பல முன்னுதாரணங்கள் இருக் கின்றன. அதுமட்டுமல்ல. அவர் சொல்வதைப் போல, ஏதோ தவறு நடைபெற்றதாகச் சொன்னது, முன் எச்சரிக்கை நட வடிக்கையிலே கைது செய்யப்பட்டவர்களை உள்ளே வைப்பதில் தவறில்லை என்று நீதிபதி சிவசுப்பிரமணியம் அவர்கள் தன்னு டைய தீர்ப்பிலே சொன்னதாகச் சொன்னார்கள். முன் எச்சரிக் கை—முன் எச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்யப்பட்ட வர்களை இன்ன காலம் வரை அவர்கள் குற்றம் இழைக்க வழியிருக்கிறது, வகையிருக்கிறது என்று சொல்லப்படுகிற நேரத்தில் அவர்களை ரிமாண்டிலே வைக்கலாம். அதை நாங்கள் கேள்வி கேட்கவில்லை.

சாதாரணமாக ஒரு குற்றம் இழைப்பவர் அல்லது தவறு செய்வதாக அரசாங்கம் கருதிய நபரை மாஜிஸ்திரேட் முன்னாலே நிறுத்தும்போது, arrest; production, remand, then comes bail. We were arrested on the 10th. When we were arrested on the 10th, we have to be necessarily produced before a remanding Magistrate. ரிமாண்டிங் மாஜிஸ்திரேட் தன்னுடைய இயந்திர கதியிலே அதற்குத் தீர்ப்பு வழங்காமல் போலீசார் 15 நாட்கள் வேண்டு மென்று கேட்டுக்கொண்டவுடனே, அதே 15 நாட்களை

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1990 ஏப்ரல் 9

அவர் கொடுக்காமல், எதற்காக 15 நாட்கள், அவர்கள் மீது விசாரணை நடத்த வேண்டிய அவசியம் இருக்கிறதா, விசாரணை நடத்த வேண்டுமென்றாலும் கூட இவர்கள் உள்ளே இருக்கவேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதை ஆய்ந்து பிறகே தீர்ப்பளிக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய வாதத்தினுடைய முக்கியமான பகுதி. அதைத் தான் இந்த உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதை ஜஸ்டிஸ் சிவசுப்பிரமணியம் அவர்களும் சரி, ராமலிங்கம் அவர்களும் சரி மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்கள் அத்தனை பேரையும் உடனடியாக 15 நாட்கள் உள்ளே வைக்கவேண்டும் என்று இயந்திரகதியில் நீதிபதிகள், மேஜிஸ்டிரேட்டுகள் தங்களுடைய ஜுடிசியல் மைண்டை தங்களுடைய எண்ணத்தை கொஞ்சம் கூட ஆய்வை அதிலே செலுத்தாமல் அவர்கள் ரிமாண்டு செய்வது தவறு, ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமை இங்கே தான் இருக்கிறது என்று நினைக்காதீர்கள் டெல்லியிலே பல ஆண்டு காலமாக காலையில் கைது செய்யப்பட்டால் போராட்டங்களில், மாலையில் விடுதலைச் செய்யப்படுவார்கள். அதே நிலைமை கேரளாவில் இருக்கிறது: அதே நிலைமை....(மணியடிக்கப்பெற்றது).

12—10 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள் போதும்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது பிரிவெண்டிவ் ஆக அரஸ்ட் செய்யப்பட்டவர்களுக்குத் தான் அந்த தீர்ப்பு பொருந்தும் என்று சொன்னார்கள். சார்ஜ் சீட் போடாத நிலையில், எப்.ஐ.ஆர். மட்டும் போட்ட நிலையில் ஜாமீனில் போகலாம் என்ற நிலை இருந்தும் கூட ஜாமீனில் போக மறுக்கிற போது சட்டத்தின் முன்னால் உள்ள அமைப்பில் அவர்களை ஒன்று போலீஸ் கஸ்டடியில் அல்லது ஜுடிசியல் கஸ்டடியில் இரண்டில் ஒன்றை தீர்மானிக்க வேண்டிய நிலையில் தான் நீதிபதிகள் இருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சியிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இந்த முறை பின்பற்றப்பட்டது. அதைக் காட்டி லும் நான் கேட்கக்கூடிய முக்கியமான கேள்வி நீதிபதி போட்ட உத்தரவு வேறு தேதி, அந்த வழக்கு விசாரணை ஞாயிற்றுக் கிழமை கிரிமினல் வழக்கு நடைபெற்றது வேறு தேதி. நான் இதற்கு மேல் இந்தப் பிரச்சினையில் போக விரும்பவில்லை: இந்த மன்றத்தின் மூலம் மக்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 9] [திரு. அ. இரகுமான்கான்]

அதைப் போலவே Criminal Rules-ஐ மாண்புமிகு
உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் புரிந்து கொள்ள
வேண்டும் என்பதற்காக வாசித்துக் காட்டுகிறேன்.
Criminal Rules of Practice என்பதில் தெளிவாக இருக்கிறது.
Rule 3. Judicial wo k on sunday. Sunday shall be deemed a
diasenon ena no cases shall be heard and Judicial, act formally
announced or done on a sunday save in cases of absolute urgency.
இதற்கு absolute urgency-க்கு ஒன்றும் இடம்
இல்லை. ஏன் என்றால் செக்கிழுத்த சிதம்பரங்கள் நிரம்பிய
காங்கிரஸில் இன்றைக்குச் சிறையை விட்டு வெளியேற வேண்டும்
என்ற urgency இப்போது இருக்கிற சிதம்பரங்களுக்கு
அவசியம் இல்லை. ஆகவே 'சன்டே' என்ற வார்த்தைக்கு
என்ன பொருள். அன்றைக்கு holiday வில் Judicial activities
நடக்கக்கூடாது என்று தெளிவாக இருக்கிறது. அதற்கு மேல்
விவாதத்தை......

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருவர் சனிக்
கிழமை இரவு 10 மணிக்கு, 12 மணிக்கு கைது செய்யப்பட்டால்..

Thiru A. Rahmankhan : I am not yielding.

Thiru S. R. Balasubramaniyam : It is a public interest litigation.

Thiru A. Rahmankhan : Everything is done according to law.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கு
சுப்ரீம் கோர்ட்டுக்கு போகிறது. உங்கள் வாதத்
திறமையை அங்கே போய் காட்டினால் மிகவும் உதவியாக
இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இங்கே சென்னை உயர்நீதி மன்றம் என்று
தான் நம்முடைய Madras High Court அழைக்கப்படுகிறது. ஆனால்
ஆந்திராவில் Andhra Pradesh High Court, கேரளாவில் Kerala
High Court என்றும், கர்நாடகாவில் Karnataka High Court என்றும்
அழைக்கப்படுகிறது. சென்னைக்கு தமிழ்நாடு என்று
பெயர் வைத்தவர் அண்ணா, திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியில். ஆக நம்முடைய நீதி மன்றம் தமிழ்நாடு உயர்
நீதி மன்றம் என்று அழைக்கப்படவேண்டும். ஆனால் துர
திருஷ்டவசமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் இருப்பவர்கள்
அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கேள்விப்படுகிறேன்
அருள்கூர்ந்து அதை அவர்கள் மறு பரிசீலனைச் செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை உயர்
நீதிமன்றத்திற்கு இங்கே தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்

பெயர் மாற்றம் செய்கின்ற அதிகாரம் கூட மாநில அரசுக்கு கிடையாது. அது மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆனாலும் நீதிமன்றங்களைச் சேர்ந்தவர்கள் இந்தக் கருத்தை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே இன்னும் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன்.

*பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு இது தொடர்பான ஒரு கேள்வி கேட்கப்பட்டபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை என்பதும் தமிழ் பெயர் தான் என்று அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது அந்தக் கேள்வியை மீண்டும் எழுப்புகிறார்கள். இது கழகத்தின் கருத்தா, அல்லது ஆட்சியின் ஒட்டுமொத்தமான கருத்தா என்பதை அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் இருக்கக்கூடியவர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டால் இந்த அரசு அதை ஏற்றுக்கொள்வதில் ஒன்றும் கருத்து வேறுபாடு இல்லை. இன்றைக்கு இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினையை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புவது, உயர் நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகள் தமிழ் அறிந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். பிரான்ஸ் நாட்டில் உள்ள நீதிமன்றம் பிரான்ஸ் மொழியில் நடக்கிறது. ஜெர்மன் நாட்டினுடைய நீதிமன்றம் ஜெர்மன் மொழியில் நடக்கிறது. ஜப்பான் நாட்டு நீதிமன்றம் ஜப்பான் மொழியில் நடக்கின்றது; ஆங்காங்கே உள்ளவர்கள் அந்தந்த தாய் மொழியைத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். அதேபோன்று நீதிபதிகளை மாற்றம் செய்கிற வழக்கில் கூட நீதிபதி குப்தா அவர்கள் தன்னுடைய தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள். 'லோக்கல் லாங்வேஜ் தெரிந்தவர்கள் நீதிபதியாக இருந்தால்தான், மாநில மக்களின் மொழி தெரிந்தவர்களாக இருந்தால்தான் மாநில மக்களின் பண்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும் புரிந்துகொண்டவர்களாக சரியான தீர்ப்பு வழங்க முடியும்' என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். ஆகவே அந்த மாற்றம் ஏற்பட வேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**12-15 மணி**

அதைப்போலவே சுப்ரீம் கோர்ட் என்கிற உச்ச நீதி மன்றத்தினுடைய பெஞ்ச் இங்கே சென்னைக்கு வர வேண்டும். Delhi is far away from Tamil Nadu. தமிழ்நாட்டிலிருந்து டெல்லி தூரத்தில் இருக்கிற காரணத்தால் வழக்குகளுக்காக பயணம்





செல்வது சிரமம், பணச் செலவு. ஆகவே அதனுடைய ஆயம் சென்னையில் இருக்கவேண்டும் என்று சொல்லி, எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று. இங்கே இருக்கக்கூடிய சென்னை சட்டக் கல்லூரி இடத்தையும் அதற்காகத் தரலாம் என்று சொல்லி, நீதிபதிகளுக்கும், அதில் வேலை செய்பவர்களுக்கும் அதிலே இட ஒதுக்கீடு செய்யலாம் என்று சொல்லி இப்படி எல்லா ஏற்பாடுகளும் நடந்தும் கூட இன்னும் அது வெற்றி பெறாமல் இருக்கிறது. அது விரைவில் நடைபெற நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு சட்ட அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆயமும்
மதுரைக்கு வரவேண்டும். ஜஸ்வந்த்சிங் கமிட்டி ரிப்போர்ட்
டெல்லியில் கொடுக்கப்பட்டு ஆகிவிட்டது மத்திய சர்க்
காருக்கு. அவர்களுக்கும் மாறுபாடு இல்லை. ஆனால்
உயர்நீதிமன்றத்தைச் சேர்ந்தவர்கள் அதில் என்ன கருத்து
வைத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. பரிசீ
றோட்டிலே பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது என்று
கூறப்பட்டு இருக்கிறது. சட்ட அமைச்சர் அவர்களைப்
பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நீதிபதிகளோடு பேசிவிரைவில்
மெட்ராஸ் ஹைகோர்ட்டினுடைய ஒரு ஆயத்தை மதுரையில்
அமைக்க முயற்சிகளை மேற் கொள்ள வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன். வடநாட்டில் ஏராள
மாக வந்துவிட்டன. பீகாரில் ஹைகோர்ட் ஒரு இடத்தில்
இருக்கிறது என்று சொன்னால் பக்கத்தில் இருக்கக்கூடிய
ராஞ்சியிலேயும் அவர்களுக்கு ஒரு ஆயம் இருக்கிறது. உத்திர
பிரதேசத்திலே அலகாபாத்திலே ஹைகோர்ட் இருக்கிறது என்று
சொன்னால் லக்னோவிலும் அவர்களுக்கு ஒரு ஆயம் இருக்
கிறது. ராஜஸ்தானில் ஜோத்பூரிலே பெஞ்ச் இருக்கிறது
என்று சொன்னால் ஜெய்ப்பூரிலேயும் அவர்களுக்கு ஆயம்
இருக்கிறது. அதேபோல் மகாராஷ்டிராவிலே பம்பாய்
ஹைகோர்ட் இருக்கிறது என்று சொன்னால் நாக்பூரிலே
ஒரு ஆயம் இருக்கிறது. எனவே இவ்வாறு வட நாட்டிலே
இது முக்கியமாகிவிட்டது. இங்கேயும் அது தொடர வேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். நம்முடைய உறுப்பினர் திரு. டேனியல்ராஜ்
அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள். தமிழ்
மொழிக்கு என்ன இந்த அரசு செய்துவிட்டது என்று கேட்
டார்கள். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
தமிழாய் வாழ்பவர்கள் என்று எதிர்கட்சிகளாலேயே சொல்லப்
பெற்றவர்கள். அதில் மாறுபட்ட கருத்து கிடையாது.

திராவிட முன்னேற்றக் கழகம்தான் நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழில் இருக்கவேண்டும் என்று உத்தரவிட்டது. சிவில்-ஆக இருந்தாலும், கிரிமினல்-ஆக இருந்தாலும் தமிழில்தான் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல. Indian Evidence Act, Indian Penal Code, Criminal Procedure Code, Civil Procedure Code. இவைகள் எல்லாம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு இருக்கின்றன. அரசியல் சட்டமும் மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் தமிழில்தான் நீதித் துறையின் நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்பதில் அக்கறை உடையவர்கள் நாங்கள். Ignorance of law is no excuse. என்று சொல்வார்கள். சட்டம் தெரியவில்லை என்று சொல்வது குற்றம். ஆனால் சட்டம் எல்லாம் ஆங்கிலத்தில் இருந்தால் சாதாரண மக்களுக்கு எப்படித் தெரியும்? தாய்மொழியாகிய தமிழில் இருந்தால் தான் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. இரகுமான்கான் அவர்கள் தமிழிலே முழங்குகிறார்களே, அவருடைய தாய்மொழி என்ன என்று கேட்கிறேன்.

திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இஸ்லாமானவன். இந்த மண்ணுக்குச் சொந்தக்காரன். இந்த மண்ணிலே பிறந்து, வளர்ந்து, இந்த மண்ணிலேயே சாக இருப்பவன். நாங்கள் இனத்தால் தமிழர்கள். மொழியால் தமிழர்கள், பண்பாட்டால் தமிழர்கள். ஆனால் மதத்தால் மற்றவர்கள் எப்படி கிறிஸ்தவர்களோ, இந்துக்களோ, இஸ்லாமியர்களோ அது போல் நான் மதத்தால் இஸ்லாமியன். ஆனால் தாய்மொழி தமிழ்தான்.

ஆக இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். கண்ணகி கூட தமிழ் தெரிந்த காரணத்தால்தான் நெடுஞ்செழியனோடு போராடி தப்பு செய்த நெடுஞ்செழியன்களை எல்லாம் திருத்த முடிந்தது. ஆகவே தமிழ் எதிலும் இருக்கவேண்டும் என்ற கொள்கையை உடைய எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் லெக்சிகன், இன்னும் சொல்லப்போனால் சட்டச் சொற்களை எல்லாம் தமிழாக்குகிற காரியங்கள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. இதிலே ஒரு வேடிக்கை என்னவென்று கேட்டால் இங்கே குறைகளைச் சுட்டிக்காட்ட முடியும். இது சட்டச் சொல் அகராதி. லா லெக்சிகன் என்ற இது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்





கழக ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது. 'பேக்ட்ஸ்' என்ற வார்த்தைக்கு 'சங்கதி' என்று மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது. இப்படி பல சொற்கள் தவறாக இருக்கின்றன. இவைகளை எல்லாம் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் களைவார்கள் என்று நான் நம்புகிறேன். நான் யாரையும் குறை சொல்லவில்லை.

12.20 மணி

பாரதியாருடைய சுய சரிதத்தைப் படிக்கின்றபோது கூட உறுப்பினர், மெம்பர் என்ற வார்த்தைக்கு பாரதியாராலே கடைசி வரைக்கும் முடிவெடுக்க முடியவில்லை. மிகப் பெரிய கவிதான். மிகப் பெரிய கவிஞர்தான். நாம் சொல்கின்ற அந்த உறுப்பினர், மெம்பர் என்ற வார்த்தைக்கு 'உறுப்பினர்' என்று சாதாரணமாகச் சொல்கிறேன். அது பாரதியாருக்கு கடைசி வரைக்கும் தெரியவில்லை. அவர் சுய புராணத்திலே எழுதுகிறார். தமிழ் தெரிந்தவர் இதை மொழி பெயர்த்தால் உங்களுக்கு கோடி புண்ணியம். மொழி பெயருங்கள். எனக்குத் தெரியவில்லை. என் முயற்சி தோல்வி அடைந்து விட்டது என்று சொல்கிறார். இதனாலே அவர் தமிழ் அறிவு குறைந்து விட்டது என்று பொருள் அல்ல. புரட்சி என்ற வார்த்தையை முதன் முதலாக பயன் படுத்தியவரே அவர்தான். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த சட்டச் சொற்கள் தவறாக அகராதியிலே பயன்படுத்தப்பட்டு இருப்பதை தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்குச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் மாத இதழ், நீதி திரட்டு என்று ஒரு பத்திரிகை மெட்ராஸ் ஹைக்கோர்ட்டிலே இருந்து வருகிறது. அதிலே நீதிபதிகள் பதிப்பாசிரியர்களாக இருக்கின்றார்கள். கடந்த காலத்திலே தமிழே தெரியாத பெல்லியப்பா அதனுடைய பதிப்பு ஆசிரியராக இருந்த சாதனை எல்லாம் நடைபெற்றிருக்கிறது. நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை.

அடுத்து, இன்னொன்றையும் தெரிவிக்க நான் விரும்புகிறேன். நீதி மன்றங்களிலே வழக்குகள் தேக்கம் என்று சொன்னார்கள். காஞ்சிபுரத்து யானைக்கு வடகலை நாமம் போடுவதா, தென் கலை நாமம் போடுவதா? வழக்கு சுப்ரீம் கோர்ட்டு வரைக்கும் நடந்து பல ஆண்டுகள் நடந்து கடைசியிலே அந்த யானையே செத்துப் போய்விட்டதாக மரபு மரபாக சொல்கிறார்கள்.

அதேபோல பல வழக்குகள் தேக்கம் அடைகின்றன. பல பொய் வழக்குகள் போடப்பட்ட காரணத்தினாலேயே தேக்கம் அடைகிறது. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், இங்கே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள், பேராசிரியர் அவர்கள் இருக்கிறார்கள். அதே போலவே

தொண்டர்களாகிய நாங்கள் இருக்கிறோம். எங்கள் மீதெல்லாம் இந்திரா அம்மாவை கொலை செய்ய முயற்சித்ததாக பொய் வழக்கு. இப்போது நாங்கள் எல்லாம் கூட பெயிலில் தான் இருக்கிறோம். ஜாமீனில்தான் இருக்கிறோம். 2 வருட கடுங்காவல். வழக்கு தேவைதானா ? இந்திரா அம்மாவை கொலை செய்ய முயற்சித்த வழக்கு. அந்த அம்மாவும்.......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை தரு கிறார். என்னை பேராசிரியரை எல்லாம் அந்த வழக்கிலே விடு தலை செய்து விட்டார்கள். இவர் விடுதலை செய்ய மறுக் கிறார்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே அந்த வழக்கிலே தலைவர் அவர்களையும் பேராசிரியர் அவர்களையும் போட்டு அவர்கள் தான் சதித் திட்டம் தீட்டினார்கள் என்று சொல்லி, பின்னர் நிரபராதி என்று அறிவித்து விட்டார்கள். ஆனால் மதுரைக்குப் போன என்னை.........

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கு அப்பீ லில் இருக்கிறது. இரகுமான் அப்பீல் செய்திருக்கிறார். எனவே அந்த வழக்குக்குள் போக வேண்டாம். ஏனென்றால் இப்போது அவர் ஆர்கியூ பண்ணி அது விவகாரமாகப் போகாமல் இருக்க வேண்டும். அதற்காக அவர்கள் இந்த வழக்கைவிட்டு விட்டு வேறு பிரச்சினைக்குப் போகவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இப்போதே பல்வேறு வழக்குகள் பரிசீலனை செய்து, அவைகள் அப்பீலுக்கு போகாத நிலையிலே உங்கள் எல்லையிலே இருக்கின்றன. உதாரணமாக சொல்கிறேன். கென்னடி என்ற மாணவர் அணியினைச் சார்ந்த சகோதரர், தமிழ்தாசன் என்ற சகோதரர், வீரமோகன் என்ற சகோதரர், இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதன் அடையாளமாக டி.வி. நிலை யத்தின் முன்னாலே அவர்களுடைய கருத்தை தெரிவிக்க அதி காரத்திற்குட்பட்டு, சட்டத்திற்குட்பட்டு வெளிப்படுத்துகின்ற நேரத்திலே அங்கே பொருள்களை எல்லாம் உடைத்தார்கள். சேதம் விளைவித்தார்கள் என்று வழக்குப் போட்டு நீதிமன்றத் திலே வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த வழக்கு மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட வழக்கு. அரசியல் சட்டத்தின் 161-வது பிரிவுக்கு உட்பட்டு நாமே திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும். ஆதலால் அப்பீல் இல்லாத வழக்கு. இதை



அருள் கூர்ந்து நம்முடைய அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). ஜெயிலுக்கு வரவில்லையே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சிறைக்குப் போக வேண்டாம்.

திரு. அ. இரகுமான்கான் : ஆக இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக சைதாப் பேட்டை கோர்ட், ஜார்ஜ் டவுன் கோர்ட், எக்மோர் கோர்ட் இவைகளையெல்லாம் நீங்கள் சென்று பார்ப்பீர்கள் என்று சொன்னால் ஐதர் அலி காலத்து நிலவரங்கள் இன்னும் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன.

நாங்கள் இப்போதுதான் வந்திருக்கிறோம் ஆட்சிப் பொறுப் புக்கு. Rome was not built in a day. ரோமாபுரி ஒரு நாளில் கட்டப்படவில்லை. அதை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் மானியத்தைக் குறைத்து இருக்கிறார்கள். இன்னும் அதிகப்படுத்திக் கொடுப் பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே இந்தக் காரி யங்கள் நடைபெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே இன்னொன்றையும் இங்கே நான் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சிறைச்சாலையைப் பொறுத்தமட்டில், நீதிபதி இஸ்மாயில் அவர்கள் மிக வருத்தத்தோடு ஒரு கருத்தைத் தெரிவித்திருக் கின்றார்கள். அவர் சொல்கிறார். 1836-வது வருடத்தில் மெக்காலே ஒரு ஜெயில் கமிட்டி ரிப்போர்ட் கொடுத்திருக் கின்றார்கள். 1919-20ஆம் ஆண்டிலே இந்தியன் ஜெயில் கமிட்டி ரிப்போர்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணசாமி அய்யர் தமிழ்நாடு ஜெயில் ரிபார்ம் கமிட்டி ரிப்போர்ட் கொடுத் திருக்கிறார்கள். 1956ல் அல் இந்தியா ஜெயில் மேனுவல் தரப்பட்டிருக்கிறது. அதற்கிடையிலே இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட் தரப்பட்டிருக்கிறது. கடைசியாக நரசிம்மன் கமிஷன் ரிப்போர்ட் தரப்பட்டிருக்கிறது. ஆனால் நீதிபதி இஸ்மாயில் எழுதுகிறார்கள். தன்னுடைய இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டிலே எழுதுகிறார்.

Looking at the recommendations of all these Committees more than 50 years, we are struck by the fact that although the correct perspective was provided so long ago not much has been done to transform it into a reality.

[திரு அ. இரகுமான்கான்] [1990 ஏப்ரல் 9

12-25 மணி

50 ஆண்டுகளாக ரிப்போர்ட் தரப்பட்டிருக்கிறது. இதில்
சொல்லப்பட்ட சிபாரிசுகள் நடைமுறைப் படுத்தப்படவில்லை
என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நடைமுறைப்படுத்து
கின்ற நல்ல தொடக்கம் இப்போது இந்த அரசால் ஆரம்
பிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் மாநில
சுயாட்சி எப்படி எல்லாம் அந்தக் காலத்தில் பறிக்கப்பட்டது
என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். கிரிமினல் புரசீஜர்
கோடைத் திருத்தி, 14 வருஷம் ஆயுள் கைதியாக இருந்தால்
தான் அவர்களை விடுதலை செய்ய வேண்டும், அதற்கு முன்பு
விடுதலை செய்யக் கூடாது என்ற நம்முடைய அதிகாரத்தை
மத்திய அரசு எடுத்துக் கொண்டது. 433 ஏ. அதற்கு நான்
சொல்ல விரும்புவது, 10 ஆண்டுக் காலம் இருந்தால் போதும்.
அவர்களை அட்வைசரி போர்டில் வைத்து விடுதலை செய்யலாம்
என்ற கருத்தை, தி.மு.க. சர்க்கார், எங்கள் தலைவர் கலைஞர்
சர்க்கார் ஏற்றுக் கொண்டு, 106 பேர் 14 வருஷத்திற்கு மேல்
இருக்கிறார்கள், அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சி
யில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய
நன்றியை, ஜனநாயகவாதிகளின் சார்பாக, சிறையில் ஈடு
பட்டிருக்கிற அவர்களுடைய குடும்பத்தினரின் சார்பாக, இதில்
ஈடுபட்ட கலைஞர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்பு
மிகு சட்ட அமைச்சருக்கும், தி. மு. க. அரசுக்கும் நான் தெரி
வித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்னொன்றையும் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்
இங்கே சிறைச்சாலைகளில் உள்ள குறைபாடுகள் பற்றி
எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். கழிப்பிட வசதி, குளியல்
வசதி, அறை வசதி இவைகளை எல்லாம் கவனிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு, குறிப்பாக ஏதோ சிறைச்சாலை
களில் காங்கிரஸ்காரர்களை அடித்ததாகவும், உதைத்ததாகவும்,
வன்முறைச் சம்பவங்கள் நடை பெற்றதாகவும் சொல்லியிருக்
கிறார்கள். நீதி விசாரணை வேண்டுமென்று கேட்கிறார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் குறிப்பட்டது
போல, எமர்ஜென்சி நேரத்தில், அதை கேட்பவர் மாண்புமிகு
உறுப்பினர் திரு. உக்கம்சந்த் அவர்கள், ஏ.ஐ.டி.எம்.கே.யைச்
சேர்ந்தவர். அந்தக் காலத்தில், எமர்ஜென்சியிலே மாண்புமிகு
உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், திரு. சிட்டிபாபு, திரு. ஆற்
காடு வீராசாமி போன்றவர்களும் மற்றவர்களும் எவ்வளவு
கொடுமைப் படுத்தப்பட்டார்கள். அவர்களைப்போல பலர்
கொடுமைப் படுத்தப் பட்டிருக்கிறார்கள். கமிட்டியில் ரிப்போர்ட்
கொடுத்து, காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க
வேண்டும். எமர்ஜென்சி எக்செஸ் உண்மைதான் என்று
இந்திரா காந்தி, சென்னை கடற்கரையில் ஒப்புக்கொண்டார்
கள். இவ்வளவு நடந்த பிறகும் சம்பந்தப்பட்டவர்கள் பாது



1990 ஏப்ரல் 9] [திரு. அ. இரகுமான்கான்]

காக்கப்பட்டார்கள். நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நீதிக்குத்
தலை வணங்குபவர்கள் தலை வணங்கவில்லை. இப்போது
அது போன்று தவறு நடந்திருக்குமானால், எந்தக் குற்றமாக
இருந்தாலும், அதைக் கண்டித்து, நடவடிக்கை எடுக்க
எங்கள் மாண்புமிகு முதல்வர் தயாராக இருக்கிறார். ஆனால்
பொய் மனைவியை அழைத்துக் கொண்டு, பொய் போராட்டம்
செய்கின்றவர்கள் செய்கிற புகார் உண்மையாக இருக்கமுடியாது,
என்று சொல்லி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. பி.எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் மற்றும் சிறைச்சாலை குறித்த
மானியக் கோரிக்கைகள் குறித்து என்னுடைய கருத்துக்களை
முன் வைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, On a point of clarification. மாண்புமிகு
உறுப்பினர் பேசுகிற நேரத்தில் '' பொய் புகார் '' என்று
சொன்னார்கள். இது சட்டசபையினுடைய மரபுக்கு உட
பட்டதுதானா ? உண்மைக்கு மாறாக என்று சொல்ல வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, நிகழ்ச்சியில் ஓர் உறுப்பி
னர் சொல்வது பொய் என்று சொன்னால்தான் அது அன்பார்லி
மென்டரி. '' பொய் '' என்ற வார்த்தையே சொல்லக்கூடாது
என்பது அல்ல. அப்படியானால் திருக்குறளையே சொல்ல
முடியாது.

'' பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் '' என்கிறது குறள்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஓர் அரசாங்கம் வலுவாக இருக்க வேண்டு
மானால் சட்ட இலாகா, போலீஸ் இலாகா இரண்டு இலாக்காக்
களும் வலிமையாக இருந்தாக வேண்டும். அது கட்டாயம்.
காரணம் எல்லா துறைகளிலுமுள்ள கோப்புகளும் சட்ட ரீதியாக
ஏதாவது ஒரு விவகாரத்தை அறிய வேண்டுமானால் சட்ட அமைச்
சருக்கு அனுப்புவதுதான் எப்போதும் இருக்கும் பழக்கம். ஆகவே
தான், சில நேரத்தில் சட்ட அமைச்சரின் பணி ஓர் அரசாங்கத்
திலே முக்கியமான பணியாகும். ஆனால் இங்கே சட்டங்களை
நிறைவேற்றும்போது சாதாரண சாமானிய மக்களுக்கு இயற்றப்
பட்ட சட்டங்கள் தெளிவாகப் போய் சேருவது கிடையாது. நம்
முடைய நாட்டில் கல்வி அறிவு 50 சதவீதத்திற்கும் கீழ் இருக்
கின்ற காரணத்தால் புதிதாக இயற்றப்படுகின்ற எந்த சட்டங்

[திரு பி. எச். பாண்டியன்] [1990 ஏப்ரல் 9

களும் நாட்டு மக்களுக்கு முழுமையாகப் போய் சேர்வது இடையாது. ஆகவே, சாதாரண மனிதனால் சட்டத்தோடு விளையாடவும் முடியவில்லை. ஒரு சாதாரண மனிதனால் சட்டத்தை எதிர்த்துப் போராட முடியவில்லை. சட்டத்தைச் சாதாரண மனிதன் எதிர்த்துப் போராடினால் அந்தச் சாதாரண சாமானிய மனிதனை சட்டம் உதைத்துவிடுவது வழக்கம்.

12-30 மணி

சட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இருக்கக்கூடிய பொருளாதாரச் சூழ்நிலையில் சட்டத்தை எதிர்ப்பவர்களுக்கு 1,000 ரூபாய்க்கு சட்டம் அவர்களை எட்டிப் பார்க்கிறது. 10 ஆயிரம் ரூபாய்க்கு நகர்கிறது. 1 இலட்சம் ரூபாய் செலவழித்தால் அந்தச் சட்டத்தை நினைத்த இடத்திற்கு, போகும் இடங்களுக்கு அழைத்துச் செல்லலாம். கழுதைபோல வந்து கொண்டிருக்கும் அந்தச் சட்டத்தினால் இன்றைக்கு சாதாரண சாமானிய மக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக இந்த மானியம் இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே சட்டத்தை இயற்றும் போது அது மக்களுக்குத் தெளிவாகப் போய்ச் சேருவதற்கு வகை செய்ய வேண்டும். Ignorance of law is no excuse என்று ஒரு பழமொழி இருக்கிறது. எனவே, அவர்கள் பாதுகாப்பு பெறுவதற்கு சட்டத்தை சாதாரண மக்களுக்கு விளக்கியாக வேண்டும். நம்முடைய அரசியல் சட்டத்தில் நீதித் துறை சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமென்ற அளவுக்கு முழுமையான வரையறையைக் கொடுத்திருக்கிறார்கள். Independence of the Judiciary—ஆனால் அவர்களுக்கு நிதி சுதந்திரமாகக் கிடைப்பது கிடையாது. நீதி வழங்குகிறவர்களுக்கு நிதி வழங்கும் இடம் சட்டமன்றம்தான். The Judiciary has no power of its own or of the purse. அவர்கள் கையிலே பணப் பையும் இடையாது, அவர்கள் வெளியிடுகின்ற தீர்ப்புகளை அமுல்படுத்துவதும் அவர்கள் கையிலே கிடையாது. அவர்கள் நிதியை எதிர்நோக்கி, மானியத்தை இங்கே வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய தீர்ப்புகள் அமல்படுத்தப்படுவதற்கும் அவர்கள் நம்முடைய நிர்வாகத்தையே எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சில நேரங்களில் நீதித் துறைக்குத்தான் அதிகமான நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நீதிமன்றக் கட்டிட குறைபாடுகளை எடுத்துச் சொல்லும்போது, எனக்கு எழுந்த எண்ணமெல்லாம் இன்றைக்கு நீதித்துறையில் திரட்டப்படுகிற நிதியை, நீதித் துறைக்கே வழங்குவதற்கு முன்வருவார்களேயானால் உண்மையிலேயே எல்லாக் குறைபாடுகளும் வழக்குரைஞர்களுக்கும், நீதிபதிகளுக்கும் குறைந்துவிடும். அங்கே நீதிமன்றக் கட்டணங்களை வசூலிக்கும்போது, அதை நாம் மீண்டும் நீதித் துறைக்கே வழங்கினால், வரக்கூடிய தொகையை வழங்கினால் ஓரளவுக்குக் குறைபாடுகள் குறையலாம் ஒரு முறை ஒரு நீதிபதி அப்படிச் செய்ததாகச் சொன்னார்கள். அரசாங்கத்திடம் பல்வேறு முறையீடுகள் அந்தக் காலத்தில் அவர்



[1990 ஏப்ரல் 9] [திரு. பி. எச். பாண்டியன்]

சொல்லிச் சொல்லி, அந்த முறையீடுகள் ஏற்கப்படாத காரணத்தால், பணத்தை நீதி மன்றத்திலேயே கட்டி வழக்கைத் தொடருங்கள், நீதி மன்ற ஸ்டாம்ப் பேப்பர் வாங்க வேண்டாமென்று அன்றைக்குச் சொன்னதாக என்னுடைய வழக்கறிஞர் நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் தெரிவிப்பது பாமர மக்கள் நம்பியிருக்கக்கூடிய நீதி மன்றத்திற்கு, நிதியை வழங்கும் இந்த மானியக் கோரிக்கையில் இது போன்ற கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்து வைத்தாக வேண்டும்.

இன்றைக்கு இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு சர்ச்சையில், ஒரு விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, நான் இடையிலே குறுக்கிட வேண்டாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். உடனே அதற்கு நம்முடைய அரசியல் சட்டத்திலே எழுதப்பட்டிருக்கக்கூடிய பிரிவைத் தெரிந்துகொண்ட காரணத்தால், நான் அதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். அதாவது நீதிமன்ற நடவடிக்கை திறந்த நீதிமன்றங்களில்தான் வழங்கப்படவேண்டுமென்பதை நம்முடைய இந்திய அரசியல் சட்டம் 145-வது பிரிவு, உட்பிரிவு 4 தெளிவாகச் சொல்கிறது.

12-35 மணி

உச்ச நீதிமன்றத்துக்கே No Judgment shall be delivered by the Supreme Court save in open Court. உச்ச நீதிமன்றமே நீதிமன்றத்தில் தான் தீர்ப்பை வழங்க வேண்டும்; நீதிமன்றக் கட்டடத்தைத் தவிர வேறு எங்கும் தீர்ப்பை வழங்கக் கூடாது என்று நம்முடைய இந்திய அரசியல் சட்டம் 145 பிரிவு 4 உச்ச நீதிமன்றத்துக்கே தடை செய்கிறது. ஆனால் நாம் இன்றைக்குப் பார்ப்பது அங்கேயும் வீட்டிலே அவர்கள் மனுக்களை ஏற்றுக் கொள்கிறார்கள். அது எந்தச் சட்டத்திலே இருக்கிறதோ எனக்கு இன்றைக்கும் தெரியாது. ஆகவே இந்தக் கருத்தைச் சொல்ல வேண்டும் என்று எண்ணி இருந்தேன். ஆகவே அதைப் பார்த்தேன்; அதை இப்போது நான் சொல்வதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

அடுத்து, பாமர மக்கள் இன்றைக்குப் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கிறார்கள். சில நேரங்களில் குற்றவாளிகள் பாமர மக்களைப் பாதித்து விடுகிறார்கள்; பாதிக்க முற்படுகிறார்கள். சாதாரண ஏழை எளிய மக்கள் தாங்கள் சம்பாதித்த பணத்தை மாதா மாதம் சீட்டுக் கம்பெனியில் கட்டுகிறார்கள். நேற்றுக்கூட பத்திரிகையில் பார்த்தேன். கணவன்மார்களுக்குத் தெரியாமல் வீட்டிலுள்ள பெண்கள் பணத்தைக் கட்டினார்கள்; ஏமாந்தார்கள் என்று பார்த்தேன். இப்படி மாதந்தோறும் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இவற்றையெல்லாம் வரைமுறைப்படுத்துவதற்கு ஒரு முழுமையான சட்டம் தேவை. காரணம் ஏமாற்றுகின்றவர்கள் போலீசாரின் கண்ணில் படாத காரணத்தினாலோ அல்லது சட்டம் இல்லாத குறையினாலோ அவர்கள் இன்றைக்குத்

தப்பித்துவிடுகிறார்கள்; பணத்தைச் சேர்த்துக்கொண்டு தப்பித்து விடுகின்றார்கள். 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு முன்பு சென் னையில் உம்மிடியார் இப்படித்தான் சீட்டுக் கம்பெனியை நடத்தி சட்டமன்றத்தில் கூட அதுபற்றி விவாதத்திற்கு வந்து, சட்ட மன்றம் தலையிடக் கூடாது ; நிர்வாகம் தலையிடக் கூடாது என்று அன்றைக்குச் சொல்லப்பட்ட காரணத்தினாலே அந்தக் காலதாமதத்தைத் தனக்குச் சாதகமாக வைத்துக்கொண்டு உயர் நீதிமன்றத்திற்குப் போய் இன்சால்வன்சி கொடுத்துவிட்டு எல்லோ ரையும் ஏமாற்றி விட்டார்கள். அதனால் பாமர மக்கள் ஏமாந்து இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்ட மக்கள். அதாவது விக்ட்டிம்ஸ். மேலை நாடுகளில் பாதிக்கப்பட்ட மக்க ளைப் பாதுகாப்பதற்கு சட்டம் இயற்றி இருக்கிறார்கள். நம் முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கு அதுபற்றித் தெரியும் என்று எண்ணுகிறேன். இன்றைக்கு உலக நாடுகளில் கனடா, மேற்கு ஜெர்மனி, டென்மார்க், ஸ்வீடன் போன்ற நாடுகளில் இதுபோல் பாதிக்கப்படக் கூடிய மக்களுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு தர வேண்டும் என்ற அளவுக்கு 'விக்டிம் கோர்ட்' உருவாக்கி இருக்கின்றார்கள். அப்படி இங்கு இன்றைக்கு நாம் உருவாக்குவோமானால், அரசாங்கம் தன்னுடைய கையிலிருந்து பணத்தை விநியோகிக்க வேண்டும் என்ற ஒரு அச்சத்தினால், காவல் துறை மூலமாகவோ இல்லாவிட்டால் அரசுத்துறை மூல மாகவோ இப்படி ஏமாற்றுகின்றவர்களை தண்டனைக்கு உள்ளாக்கி அவர்களிடமிருந்து உடமைகளைப் பறித்து ஏமாந்துபோகிற மக்களைக் காப்பாற்ற முடியும் என்பதற்காக இதை நான் இங்கே உங்களுக்கு முன்னால் வைக்கிறேன். இன்றைக்கு அது போன்ற சட்டத் திருத்தம் தேவை.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு நீதிமன்றங்களில் Contempt of Co..rt அரசாங்கம்தான் அதிகமான அளவுக்கு அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளாகக்கூடிய நிலை இருந்துகொண்டு இருக்கிறது. தனி மனிதன் மீது இந்த வழக்கை அவர்கள் போடுவது கிடையாது. ஆகவே, இப்படிப்பட்ட நிலை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று நான் இங்கே தெரி வித்துக் கொள்கிறேன். சுமார் 460 வழக்குகள் அப்படி போடப் பட்டதாகச் சொன்னார்கள். ஆகவே இனிமேல் இதுபோன்ற நிலை உருவாகாமல், அரசாங்கம் தனது துறையினரைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று நான் இங்கே தெரிவித்துக் கொள் கிறேன். Vexatious li iga ion vexatious and frivolous li igat ion. சிலபேர் ஒருசில சமூக அமைப்புகளை உருவாக்கி முக்கியஸ்தர் கள் மீது, அமைச்சர்கள் மீது, பல பெரிய பணக்காரர்கள் மீது இப்படி தாங்களே வழக்குகளைப் போட்டு முறையிடக் கூடிய நிலை இருந்துகொண்டு இருக்கிறது. நான் இன்றைக்குச் சட்ட அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன். Vexatious Litigation Act-ஐ நீங்கள் இனிமேல் அமல்படுத்த வேண்டும். அதுபோன்ற வழக்குகளைப் போடக்கூடிய வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தால் கண்டிக்கப்படலாம் என்று எழுதப்பட்டு





இருக்கிறது. ஆகவே, அந்த நிலையை நீங்கள் இனிமேல் சாதாரண மக்களைப் பாதுகாப்பதற்கு, அரசாங்க நிறுவனங் களைப் பாதுகாப்பதற்கு, அரசாங்க அதிகாரிகளைப் பாது காப்பதற்கு அந்தச் சட்டத்தின் கீழ் தலைமை நீதிபதியோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இங்கே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அரசாங்க அதிகாரி களைப் பாதுகாப்பதற்கு இந்த சட்டத்தின் கீழ் தலைமை நீதிபதியோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று நான் உங்களை இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

12-40 மணி

அடுத்து, ஜீவாதார உரிமைகள். நம்முடைய இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஜீவாதார உரிமைகள் முழுமையாக—— இன்றைக்கு இருக்கக்கூடிய உரிமைகள் வ்ழங்கப்பட்டிருக்கின் றனவா என்றால் கிடையாது. Univ:rsal Declar. tion of Human Rights எழுதப்பட்ட ஜீவாதார உரிமை கள் நம்முடைய அரசியல் சட்டத்தில் கிடையாது. ஆகவே, இன்றைக்கு இருக்கக்கூடிய மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, ஐக்கிய நாட்டுச் சபையில், எப்படி நிறைவேற்றினார் களோ, ஹ்யூமன் ரைட்ஸ் முழுமையாக இல்லாவிட்டாலும், சேர்க்கப்படாத பல்வேறு உரிமைகளை, வழங்கப்படாத பல்வேறு உரிமைகளை வழங்க வேண்டும் என்று நான் இங்கே உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசியல் சட்டத்தின்படி மத்திய, மாநில அரசு கள் தங்களுடைய உத்தரவுகளை ஜனாதிபதி மூலமாக, கவர்னர் மூலமாக இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. அரசியல் சட்டப் பிரிவு 77, 166 இதற்கு வழி செய்கிறது. ஜனநாயகம் அங்கே தென்படவில்லை. ஜனநாயகத்தை நிலை நிறுத்த வேண்டுமேயானால், அதுபோன்ற உத்தரவுகள், அது போன்ற நீதிமன்றத் தீர்ப்புகள் அத்தனையும், அரசியல் வர லாற்றுக்கு இடங்கொடுத்த, அரசியலே பிறந்த கிரேக்க நாட்டில் பின்பற்றக் கூடிய அந்த முறையே இனிமேலாவது நம்முடைய இந்தியத் திருநாட்டில் பின்பற்ற வேண்டுமென்பதற்காகச் சொல் கிறேன்.

All o:de.s sho..ld be is..ed in t.e name o: the pe:ple of I.d a; All orders by the Judic al Authority sho.l! be ssued in the name of the people of In.ia என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். அங்கே உள்ள அரசியல் சட்டம், அதை அங்கே, அவர்கள் அரசியல் வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் என்ற காரணத்தினால் பின்பற்றுகிறார்கள். அதைப் பின்பற்றியாக வேண்டுமென்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. பி. எச். பாண்டியன்] [1990 ஏப்ரல் 9

அடுத்து, யாராவது குற்றம் செய்தால், ஐ.பி.சி.-யை மீறியதாகக் கருதுகிறோம். காரணம், ஐ.பி.சி.-யில் இ.பி.கோ.-வில் இந்தந்தக் குற்றங்கள், இதை இதைச் செய்தால் குற்றங்கள் என்பதை விவரித்து இருக்கின்றோம். அதற்குத் தண்டனையை வழங்குகின்றோம். ஆனால் இந்தந்த விவகாரங்கள், இந்தந்தக் காயங்கள், இதற்கு நஷ்டயீடு வழங்க வேண்டுமென்ற நிலை நம்முடைய நாட்டில் சட்டம் கிடையாது. இங்கே கன்கரண்ட் லிஸ்டில் நம்முடைய கிரிமினல் சப்ஜெக்ட் இருக்கின்ற காரணத்தால் There should a Codification of injury, all injuries. ஒரு சட்டம் மாதிரி. காரணம், சில சிவில் உரிமைகளை நிறைவேற்ற வேண்டுமானால், அவற்றையெல்லாம் உருவாக்கவேண்டுமென்பதை இங்கே நான் மாண்புமிகு அமைச்சரிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். அப்படி உருவாக்குவோமேயானால்தான், நாம் நஷ்டயீட்டைக் கோர முடியும். நஷ்டயீடு பெற்றால்தான் யாராவது எதிராளி. . . .

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் சட்டம் தெரிந்தவர்கள். இந்த, Civil wrongs, Torts, என்ற சட்டம் இருக்கிறதே, அது இருக்கும்பொழுது Codification of injuries என்றால் எனக்குப் புரியவில்லை. கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. பி. எச். பாண்டியன் : அதாவது, Workmen's Compensation Act தனியாக வைத்திருக்கிறோம். Motor Vehicles Act தனியாக வைத்திருக்கிறோம். இரண்டுக்கும்தான் நஷ்டயீடு வழங்குவதற்கு நம்முடைய சட்ட வழி இருக்கிறது. மற்ற இன்ஜுரீசுக்கு British Law of Torts-ஐத் தான் கையிலே வைத்திருக்கிறோம். சட்டக் கல்லூரிப் படிப்பு அது. அடுத்து Fatal Accidents Act இந்த மூன்றும்தான் வைத்திருக்கிறோம். ஒரு வீட்டுக்குப் பக்கத்திலே ஒருவர் Loud Speaker-ஐ வைத்து, சப்தம் போட்டுக்கொண்டிருந்தால் அதற்கு நஷ்டயீடு வாங்க வழி கிடையாது. ஒரு டாக்டர் ஸ்ட்ரைக்கிலே ஈடுபட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள். பேஷன்ட்ஸ் எல்லாம் செத்துப் போய் விட்டார்கள். நஷ்டயீடு வாங்குவதற்கு இன்றைக்குத் தனிப்பட்ட சட்டம் இல்லை.

304 (a) எல்லாம் அதற்காகத்தான் கொண்டு வந்தார்கள். அது இன்றைக்குப் பல டாக்டர்களுக்குத் தெரியாது. Motor Vehicles-க்காகக் கொண்டு வரவில்லை அது.

Motor Vehicles கொண்டு வந்தது 304, 304(a)-வே நம்முடைய சட்டம் வந்த பிறகு, பத்து வருஷங்கள் கழித்த பிறகுதான் வந்து இருக்கிறது. அதை எழுத மறந்துவிட்டோம் என்று எழுதியிருக்கிறார்கள். ஆகவே, 304(a)-இலே அதுமாதிரி



1990 ஏப்ரல் 9] [திரு. பி. எச்.பாண்டியன்]

நஷ்டயீடு பெறுவதற்கு அது கொஞ்சம் வழிவகையாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். There should a development of Indian Law of Torts in our State.

அடுத்து, நம்முடைய இ.பி.கோ.-வில் யாராக இருந்தாலும், தண்டனை வழங்க வேண்டுமென்று இருக்கிறது. யார் தப்பு செய்தாலும் நான் அண்ணா தி.மு.க., நான் காங்கிரஸ் என்றாலும் விட வேண்டுமென்றால் அதிலேயெல்லாம் விட முடியாது. தப்பு, யார் குற்றம் செய்கிறார்கள். இ.பி.கோ.-விலே 'whoever ' என்று இருக்கிறது செக்ஷனிலே அதுதான். அதிலே போய், நாங்கள் இதற்காகத்தான் போய் பஸ்ஸை அடித்தோம் என்றால் முடியாது. பஸ்ஸை யார் அடித்தாலும் - சாதாரண மனிதன் பஸ்ஸிலே ஏன் திருடுகின்றான். Poverty, unemployment. சமுதாயச் சீர்கேட்டால் சிறைக்குச் செல்லக்கூடியவர்களுக்கு இந்தப் பாதுகாப்பு கிடையாது. அவர்களுக்கு அமைப்பு கிடையாது. சிறையிலே அமைப்பு இருக்கிறதா? சிறையிலே அவர்களுக்கு போராட உரிமை இருக்கிறதா? சிறையிலே கட்சி இருக்கிறதா? சிறையில் இருப்பவர்களுக்கு வாக்கு உரிமையே உண்டு. வி. ஆர். கிருஷ்ண அய்யர் அவர்கள் ஒரு தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள்.

12-45 மணி

Fundamental rights are available to the prisoners. இதுவரையில் எத்தனை தேர்தலில்வாக்கு அளித்து இருக்கிறார்கள் எந்த சிறைச்சாலையில் வாக்குப் பெட்டி வைத்திருக்கிறோம்? நான் 2, 3 ஆண்டுக்காலமாக சொல்லிக்கொண்டே இருக்கிறேன். ஆனால் முடியவில்லை. ஆகவேதான் சிறையிலே இருப்பவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிற மன்றம் இந்த மன்றம். 14 ஆண்டுக்காலம் கட்டாயம் அவர்கள் சிறையில் இருக்க வேண்டுமென்று நம்முடைய இந்திய நடைமுறைச் சட்டம் 433-ஏ சொல்கிறது. சென்ற ஆண்டு 14 ஆண்டுக்காலம் இருந்தவர்களை வெளியே விடலாம் என்று 107 பேர்களை விடுதலை செய்தோம். இன்றைக்கு இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். இப்போது அம்பேத்கார் நூற்றாண்டு விழா வருகிறது. பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா வருகிறது. இதைப் பயன்படுத்தி, அரசியல் சட்டம் 161-ஐயும் பயன்படுத்தி, 10 ஆண்டுகள் இருந்தவர்கள், 7 ஆண்டுகள், 8 ஆண்டுகள் இருந்தவர்களை நீங்கள் சிறையிலிருந்து ஏப்ரல் 14-ம் தேதி வெளியே விட வேண்டுமென்று வேண்டுகோளை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் அந்தத் தீர்ப்பில் 433-ஏ செல்லும் என்று சொல்லி இருக்கிறார்கள். மஹுராம் கேஸ் — அவர் போட்ட வழக்கிலே ; ஆகவே 161-ஐப் பயன்படுத்தி, சிறையில் இருக்கக்கூடியவர்களை வெளியே அனுப்பவேண்டும்.

குறிப்பாக ஆயுள் கைதிகளை வெளியே அனுப்பவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் போலீஸ்காரர்களால் கைது செய்யப்பட்டு, சமுதாயத்தால் சீரழிக்கப்பட்டவர்கள் தான் இன்றைக்கு சிறையில் இருக்கிறார்கள். சமுதாயச் சீர்கேட்டால்தான் அவர்கள் அந்தக் குற்றத்தைச் செய் திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு இந்த சமுதாயம் வழிகாட்ட வேண்டும், இந்தச் சட்டமன்றம் வழி காட்டவேண்டும். திட்டம் போட்டு அவர்கள் எல்லோரும் திருடவில்லை. நாம் எல்லோரும் அவர்களுக்கு வசதி செய்து கொடுத்திருப்போமேயானால், வசிக்க வீடு கொடுத்திருப் போமேயானால், வேலை கொடுத்திருப்போமேயானால், சாப்பிட வழி வைத்திருப்போமேயானால், அவர்கள் இந்தத் தவறைச் செய்திருக்கமாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஏழை மக்களைப் பற்றித்தான் பேசுகிறீர்கள். முடித்து விடலாம்.

திரு. பி. எச். பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் இதைச் சொல்வதை வேறுவிதமாக எண்ண வேண்டாம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறபோது நான் சொல்லியிருக்கிறேன். இங்கேயிருந்து அலிகேஷன் சொன்னால் தான் நீங்கள் மணியை ஓங்கி அடிக்கவேண்டும். சபாநாயகருடைய வேலை அதுதான். நான் ஆதரித்துச் சொல் கிறபோது, கருத்தைப் பேசுகிறபோது நீங்கள் அப்படிச் செய்யக் கூடாது. முதலமைச்சர் மீது அலிகேஷன் சொல்லும்போது தான் சபாநாயகர் பாதுகாக்க வேண்டும். அதற்குத்தான் கொஞ்சம் அதிகமாக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். இங்கே முதலமைச்சரும் சபாநாயகரும் சேராமல் இருக்க முடியாது. ஆகவே, இந்த முடிவை நீங்கள் அறிவிக்க வேண்டு மென்று என்னுடைய வேண்டுகோளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் பற்றியது. இன்னும் ஏழு இடங்கள் காலியாக இருப்பதாக நேற்றைய தினம் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சொல்லியிருக்கிறார். இரண்டு பேர் ஓய்வு பெற்றிருக்கிறார்கள். ஒன்பது பேர் பெயரை நீங்கள் அனுப்பிய பிறகு, அவர்கள் அதை மறுபரிசீலனை செய்வது நம்முடைய மக்களாட்சித் தத்துவத் திற்கே குறைபாடாகும். ஆகவே, உயர்நீதிமன்றத்தில் நிய மிக்கப்பட வேண்டிய நீதிபதிகளுடைய பெயர்களை மத்திய அரசாங்கம் நியமனம் செய்து அனுப்ப வேண்டுமென்ற வேண்டு கோளை நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இன்றைக்குப் பல்வேறு விவகாரங்களில் பல்வேறு தாக்குதலில் சிலபேர் இன்றைக்கு நம்முடைய பிற்படுத்தப்பட்ட சமு தாயத்தைச் சார்ந்த நீதிபதி மீதே இன்றைக்கு இறங்கி இருக் கிறார்கள். பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு



ஒதுக்கீடு வேண்டுமென்று தீர்ப்பு வழங்கிய நீதிபதியை — அன்றைக்கு அவர்கள் எண்ணிய தாக்குதலை இன்றைக்கு இங்கே தாக்குவதற்கு முற்பட்டிருக்கிறார்கள். யாரும் விட்டுவிடாதீர்கள். நம்முடைய சமுதாயத்தில் வருங்கால மக்கள் யாடு மேய்க்கப் போய் விடக்கூடாது என்று தீர்ப்பு வழங்கிய நீதிபதியைத் தாக்குவதற்கு இன்றைக்கு ஒரு கும்பல் தயாராகிக் கொண்டி ருக்கிறது. அதற்கும் சிலபேர் துணை போய்க் கொண்டி ருக்கிறார்கள். அந்தப் பதவிக்குப் போய் சேர முடியாத காரணத்தால். ஆகவே, முதலமைச்சர் அவர்களுக்கு அவரைப் பற்றி நன்றாகத் தெரியும். தமிழ் நாட்டைச் சேர்ந்தவரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. அந்த Willification campaign இங்கேதான் ஆரம்பித்து இருக்கிறது. டெல்லியில் அல்ல. வேறு மாநிலத்தில் அல்ல. ஆகவே இங்கேதான் அப்படிப்பட்டவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவரைப் பாதுகாக்கவேண்டும். அவரால் பாதுகாத்துக் கொள்ள முடியாது. நம்மால் அங்கே சென்று இருக்கிறார். நாம் தான் பாதுகாக்க வேண்டும். இதிலே பிற்பட்ட சமுதாயம் அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்கிறேன். காரணம் மானியத்தை முழுமையாக வரவேற்க வேண்டும். இதற்கு எதிர்ப்பு யாரும் சொல்ல முடியாது. இது சட்டம் அல்ல. ஆகவே, இதை வரவேற்று அமர்கிறேன்.

12—50 மணி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, on a point of clarification. இங்கே முன்னாலே பேசி அமர்ந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதல் அமைச்சரும் சபாநாயகரும் சேர வேண்டுமென்று சொல்வது முதல் அமைச்சருக்குத் துணையாக, அவருடைய கருத்துப்படி நடக்க வேண்டுமென்று சொல்கின்ற ஒரு பொருள் தொனித்து விடக் கூடாது. ஏனென்றால் சபாநாயகர் எல்லோருக்கும் அப்பாற்பட்டவராக இருக்க வேண்டுமென்ற கருத்து, இங்கே நிலவ வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஜனநாயக ரீதியில் சட்ட மன்றம் முழுமையாக நடவடிக்கையில் ஈடுபடும்போது ஆளுங் கட்சித் தலைவர், சட்டமன்றத் தலைவர், இரண்டுபேரும் ஒருங்கிணைந்து செயல்படுவதுதான் ஜனநாயகமரபு. பல்ராம் ஜாக்கர் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் வந்தபோது ராஜீவ் காந்திதான் வந்து பாதுகாத்தார். அவரால் நியமிக்கப்பட்டவர் அவர், அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அவர் ; அவரால் முன் மொழியப்பட்டார். என்னை, முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். பாதுகாத்தார். இன்றைக்கு அந்தப் பாதுகாப்பு இல்லை.

திரு. நே. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றைக்கு நம்முடைய மதிப்புமிக்க, சட்டம் தெரிந்த, முன்பு சபாநாயகராக இருந்த பாண்டியன் அவர்கள் ஒரு கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார். இதை ஒரு கன்வென்ஷனாக அவர் சொல்லியிருக்கிறாரா? சட்டப் படி அவர் சொல்ல முடியாது. உங்களுடைய சுதந்திரத்தில் அப்படித் தலையிட முடியாது. இப்பொழுது அவர் சொன்ன தற்கு நீங்கள் என்ன விளக்கம் தரப் போகிறீர்கள்? நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. உங்களுடைய விளக்கம் என்ன என்று நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, திரு. பி. எச். பாண்டியன் சொன்னதிலே எதை ஏற்றாலும் ஒன்றை ஏற்க முடியாது. அமைச்சர்கள் மீதோ அல்லது முதல் அமைச்சர் மீதோ குற்றம் சாட்டப்படுகின்ற நேரத்தில், மணியடித்து உட்கார வையுங்கள் என்று சொன்னார். அப்படிப்பட்ட கருத்துக்களை ஏற்க முடியாது. ஆனால், பொதுவாக, ஆளும்கட்சியும் சபாநாயகரும் அதைப் போல், எதிர்க்கட்சியிலே உள்ளவர்களும் சபாநாயகரும் எல்லோரும் ஒத்துழைத்துத்தான் சபையை நடத்தவேண்டுமென்பதுதான் நாம் ஏற்றுக்கொண்ட கருத்தாகும்.

* திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பிரதான எதிர்க் கட்சி, அதற்குப் பிறகு அடுத்த எதிர்க்கட்சி, அதற்குப் பிறகு 3 வது கட்சி என்ற மரபுப்படி அழைக்கவேண்டும். என்ன காரணத்தாலோ எங்களையும் கலந்தாலோசிக்காமல், நீங்கள் அடுத்ததாக இருக்கக்கூடிய ஒருவருக்கு முன்னதாக வாய்ப்பை அளித்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை யெல்லாம் நீங்கள் ஒரு பெரிய பிரச்சினையாக எழுப்புவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. மாண்புமிகு பாண்டியன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரை முன்னே அழைத்தேனே தவிர, வேறல்ல. இதையெல்லாம் பெரிதுபடுத் துவது எந்த நாகரீகமும் அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர் களே, வரதராசனைப் போன்ற நல்ல பேச்சாளர்கள் இங்கு பேசப்படுகின்ற பல கருத்துக்களுக்குப் பதில் அளிக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர் என்ற காரணத்தால்தான் அவர்கள் எல்லாம் பேசிய பிறகு வரதராசன் அவர்களை அழைக்கலாம் என்று இருந்திருக்கலாம்.

திரு. உ. ரா. வரதராசன் : தனிப்பட்ட முறையிலே அதைப் பொருட்டாக எடுத்துக் கொள்ள மாட்டேன். கட்சி என்கிற முறையிலே, எங்களுடைய கட்சிக்கு இருக்கக்கூடிய ஸ்தானம்,





பாத்திரம், மரியாதை, மதிக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் ஒரு வேண்டுகோளாகத்தான் சொல்கிறேன். மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகத் துறை சம்பந்தமாக இங்கே விவாதம் நடத்துகிறபொழுது நம்முடைய நீதிமன்றங்களுடைய சமூகக் கண்ணோட்டத்திலே, அணுகு முறை யிலே, அடிப்படையான மாற்றம் தேவை என்கிற கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். படித்தவர்கள் சட்டத் தினுடைய சந்து பொந்துகளில், இண்டு இடுக்குகளில் எப்படி யெல்லாமோ நுழைந்து தப்பித்து விட முடிகிறது. ஆனால், வறியவர்கள், அப்பாவிகள் அதிலே சிக்கி உழல்வதை நாம் பார்க்க முடிகிறது. ஆண்டுக்கணக்கிலே அன்டர் டிரையலாகவே நீடிக்கிறார்கள். அந்த நீதி நிர்வாகத்தின் கண் பார்வைக்குத் தெரிந்தோ, தெரியாமலோ, நம்முடைய நீதிமன்றங்கள் அன்றாடம் தீர்ப்புகள்எழுதப்படுகின்றன. ஆனால்,எப்பொழுதோ ஒருமுறைதான் நீதிகிடைக்கிறது. J..dgments a e delive ed cvcry-day but j.stice is rarely done.

இங்கே காங்கிரஸ்காரர்கள் போராட்டம் நடத்தியபொழுது நீதிபதி நைனார்சுந்தரம் அவர்கள் தந்தி வாசகத்தை வைத்து, ஞாயிற்றுக்கிழமை அன்று வீட்டிலே விசாரணை நடத்தி, அதிலே கலந்து கொள்ள அவர்களை எல்லாம் அனுப்ப வேண்டுமென்று உத்தரவு அனுப்பி, பிறகு தீர்ப்பு வழங்கியதைப் பற்றியெல்லாம் பிரச்சினை வந்தது. அந்தப் பிரச்சினைகளுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால், காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட என்னுடைய கணவனைக் காணவில்லை, போலீஸ் வேனில் ஏற்றிச் செல்லப்பட்ட என்னுடைய மகன் எங்கே போனான் என்று தெரியவில்லை என்று ஒரு அப்பாவி கிராமத்துப் பெண் கடிதம் எழுதினால், தந்தி அனுப்பினால், அதே அணுகு முறை, அதே நியாயம் அந்தப் பெண்ணுக்குக் கிடைக்குமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்கிறேன். சென்னை யிலே கைது செய்யப்படுகிற கான்ட்ராக்ட் தொழிலாளி, ரூ. 8 சம்பளம் வாங்குகிறவன்—ஜாமீன் மனு போட்டால், மதுரை யிலே போய்த் தங்கு என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். மதுரை யிலே என்ன அரசு விருந்தினர் மாளிகையையா திறந்து வைத்து அவனுக்கு உபசாரம் செய்கிறார்கள்!

12—55 மணி

ஜெயிலிலே வைத்திருப்பதைவிடக் கொடுமையானது ஜாமீன் நிபந்தனை. இப்படிப்பட்ட இந்த நீதிமன்றங்களுடைய அணுகு முறையிலே ஒரு மாற்றம் தேவை. இந்த மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால் முற்போக்கு எண்ணம் படைத்த, ஜனநாயக எண்ணம் படைத்த நீதிபதிகளாக நியமிக்கப்படவேண்டும். அந்தத் திசையிலே இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 ஏப்ரல் 9

நீதித் துறையினுடைய சுதந்திரம், சுயேச்சையான தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு ஊறு ஏற்படும் பாணியில் அமைந்திருக்கக் கூடிய உயர்நீதி மன்றத்தினுடைய நீதிபதிகளை மாநிலம் விட்டு மாநிலம் இடம் மாற்றம் செய்வது கடந்த கால மைய அரசு கையாண்டிருக்கிற நடைமுறை. அந்த நடைமுறை இப்போதும் தொடர்கிறது. இதை மாற்ற வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

இன்றைக்கு தேசிய முன்னணி அரசு மத்தியிலே இருக்கும் போது அதிலே அங்கம் வகிக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த நடைமுறைகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

உச்சநீதி மன்றத்தினுடைய ஒரு ஆயம் ( Bench of Supreme Courl ) தமிழ்நாட்டிலே சென்னையில் நிறுவப்பட வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. இது ஜனநாயக சக்தி களுடைய நீண்டநாள் கோரிக்கை; நியாயமான கோரிக்கை. தமிழ்நாட்டு மக்களுடைய—இன்னும் சொல்லப் போனால் தென் மாநில மக்களுடைய—நீண்ட நாள் கனவு. 1983 முதலாக இது இந்தியத் தலைமை நீதிபதியினுடைய கருத்திற்காகக் காத்துக் கிடக்கிறது. 1989-ஐம் இதே பதில்தான்; இப்போதும் இதே பதில்தான். உச்சநீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதி யின் நீண்ட மவுனத்திற்குப் பொருள்தான் என்ன? உச்ச நீதி மன்றத்தினுடைய 'பெஞ்ச்' தமிழ்நாட்டிலே, சென்னையிலே அமையக்கூடாது என்று கருதக் கூடிய சில சுயநல சக்திகள் இதைத் தடுத்து நிறுத்துகின்றன. 'Vested interests are blocking this' என்ற எண்ணம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த சுயநல சக்திகளுக்கு உச்சநீதி மன்றம் கூடத் துணை போகிறதோ என்கிற சந்தேகம் இருக்கிறது. அந்தச் சந்தேகம் களையப்பட வேண்டும். உச்ச நீதிமன்றத்தினுடைய ஆயம் சென்னையிலே அமைக்கப்பட வேண்டும். அதைத் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய ஆயம் ஒன்று மதுரையிலே அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை 1973-லே இருந்து பரிசீலனையில் இருக்கிறது. ஜஸ்வந்த் சிங் குழு 1984-லேயே பரிந்துரை செய்தது. உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசனை இதுபற்றி நடக்கிறது என்று கடந்த ஆண்டு கொள்கைக் குறிப்பிலும் இருக்கிறது. இந்த ஆண்டிலும் தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்ன நடக்கிறது என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டும். உச்ச நீதிமன்றம் என்ன நினைக் கிறது? கடிதப் போக்குவரத்தில் என்ன இருக்கிறது? ஆயம்



1990 ஏப்ரல் 9] [திரு. உ. ரா. வரதராசன்]

மதுரையிலே அமைக்கப்பட வேண்டுமென்று ஒப்புக்கொள் கிறார்களா இல்லையா? அல்லது இங்கேயும் சில சுயநல சக்திகள் உயர்நீதிமன்றத்தினுடைய ஆயம் மதுரையிலே அமைக்கப்படு வதற்கு முட்டுக்கட்டை போடுகிறார்களா? அதற்கு உயர்நீதி மன்றம் துணை போகிறதா? இப்படிப்பட்ட சந்தேகங்கள் வருகின்றன. இந்த சுயநல சக்திகள் போடக்கூடிய முட்டுக்கட்டை களைத் தகர்த்தெறிந்து அந்த ஆயம் அங்கே அமைக்கப்படு வதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீதிபதிகள் நியமனம் பற்றி. உயர்நீதிமன்றத்திலே 1975-லேயிருந்து இரண்டு இடங்கள் நிரப்பப்படவில்லை. நீதிபதி களின் எண்ணிக்கையை 32 ஆக உயர்த்த வேண்டுமென்று கோரிக் கொண்டிருக்கிறோம். இசைவு இன்னும் கிடைக்கவில்லை. கொள்கை அளவில் மைய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இது செயல்படப்போவது எப்போது? நியமனம் செய்யப்படுவது எப்போது? இதுபற்றி வலியுறுத்திப் பாருங்கள். தாமதமின்றி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி சொல்லும்போது இதற்கு இப்போது இடவசதி இல்லை என்று கருதுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இடவசதி இல்லாததால் நியமிக்கப்படவில்லை என்ற பொருள்படச் சொல்லியிருக்கிறார் கள்.

தேங்கிக் கிடக்கிற வழக்குகள் ஏராளம். அரசுத் துறை நிர்வாகத்திற்குத் தெரியும். "Justice delayed is justice denied" கொஞ்சநஞ்சத் தேக்கம் அல்ல. வழக்குகள் தேக்க நிலையில் இந்தி யாவிலேயே சென்னை உயர்நீதிமன்றம் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. இதை நான் சொல்லவில்லை. கடந்த ஆண்டு ஜூலை மாதம் நம்முடைய மரியாதைக்குரிய ஆளுநர் பி. சி. அலக்சாண்டர் குறிப்பிட்டிருக்கிறார். அதைப்போல ஜனவரி 1990-ல் தேங்கிக் கிடக்கிற வழக்குகள் பற்றி ஜஸ்டிஸ் ஆனந்த் அவர்கள் நேற்றையதினம் பத்திரிகையில் சொல்லியிருக்கிறார்கள் 1,15,000 வழக்குகள்— writ petitions. அவற்றோடு பதிவு செய்யப்பட்ட இதர மனுக்கள் miscellaneous petitions 95,000 தமிழ்நாட்டில் தேங்கிக் கிடக்கின்றன. அந்த வழக்கு களை வேகமாகப் பைசல் செய்வதற்கு 32 பேர் கூடப் போதுமா என்ற கேள்வி எழுகிறது. ஆகவே, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி நியமனம் செய்ய தேவையான உத்தரவுகளை உடனடியாகப் பிறப்பிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல மாவட்டங்களில் 70 நீதிபதிகள் பதவி நிரப் பப்படவில்லை. 11 சார் நீதிமன்றங்களில் நீதிபதிகள் நிரப்பப் படவில்லை என்று வருகிறபோது இந்த வழக்குகளை முடிப்பதற்கு கால் கெடுவே இல்லாமல் போயிருக்கிறது என்ற நிலைமை

நீடித்துக் கொண்டிருக்கிறது. ஏழாவது நிதிக் குழு இது
சம்பந்தமாக ஒரு பரிந்துரை செய்திருக்கிறது. நீதிபதிகளுடைய
எண்ணிக்கை எப்படி இருக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது,
ஆண்டுதோறும் தீர்க்கப்படுகிற வழக்குகள், புதிதாகப்
பதிவாகிற வழக்குகள் இவற்றிடையே உள்ள விகிதாச்சாரம்;
மொத்தம் நிலுவையில் இருக்கிற வழக்குகள், ஆண்டுதோறும்
தீர்க்கப்படுகிற வழக்குகள் இவற்றினுடைய விகிதாச்சாரம்
ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நீதிமன்றங்களு
டைய நீதிபதிகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட வேண்டு
மென்று ஏழாவது நிதிக் குழு பரிந்துரை செய்திருக்கிறது.

அரசுடைய நோக்கம், நீதி நிர்வாகத்தின் நோக்கம், லட்சியம்
எப்படியிருக்க வேண்டுமென்று சொல்கிறபோது, கிரிமினல் வழக்கு
கள் 6 மாதத்தில் பைசல் செய்யப்பட வேண்டும். சிவில் வழக்கு
கள் 12 மாதத்தில் முடிவு அளிக்கப்பட வேண்டுமென்று சொல்லி
யிருக்கிறது. ஏழாவது நிதிக் கமிஷன் அப்போதே அதை எழுதி
வைத்தது. ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? 6 மாதமல்ல,
12 மாதமல்ல, 6 வருஷம், 12 வருஷங்கள் ஆகிற நிலைமை கூட
இருக்கிறது. அதே போன்று, நீதிமன்றக் கட்டிடங்கள், நீதிபதி
களுக்கான குடியிருப்புகள் எல்லாம் நீண்டகாலத்தேவையாக இருக்
கின்றன. இவற்றையெல்லாம் நிறைவு செய்ய முடியாத நிலைமை
இருக்கிறது.

13—00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; பேரவையின்
ஒப்புதலுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. உ. ரா. வரதராசன்; இது சம்பந்தமாகவும், ஏழாவது
நிதிக் கமிஷன் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. நீதித்துறை
யின் சுதந்திரம், நேர்மையான தோற்றம் பாதுகாக்கப்பட
வேண்டுமென்று சொன்னால், நீதிபதிகள் தனியாரிடத்தில்
வசிப்பதற்கு வாடகைக்கு இடம் கேட்கிற அவல நிலைமை இருக்
கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம்
கவனத்தில் வைத்து நீதிமன்றக் கட்டிடங்கள், நீதிபதிகளுக்கான
குடியிருப்புகள ஆகியவற்றை உரிய எண்ணிக்கையில் கட்டிக்
கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்ள விழைகிறேன்.

அதேபோல, மாவட்டங்களைப் பிரிக்கிறபோது, மாவட்ட
நீதிமன்றங்களுக்கான இடங்கள் குறித்து கோரிக்கைகள் வைக்
கப்படுகின்றன. முகவை மாவட்டத்தில் கூட இப்படிப்பட்ட
பிரச்சினை இருக்கிறது. இப்படிப்பட்ட பிரச்சினை வருகிறபோது
வழக்கறிஞர்கள் அமைப்புகளோடு கலந்து பேசி முடிவு செய்வது





சரியாக இருக்குமென்பது என்னுடைய கருத்து. புதிய தலை
நகரங்களுக்கான கட்டிடங்கள் கட்டுகிறபோது, மாவட்ட நீதி
மன்றங்களுக்கான கட்டிடங்களை அவ்வப்போது கட்டித் தருவது
வசதியாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

அதேபோல, தொழிலாளர் நீதிமன்றங்கள். சென்னையைப்
பொறுத்தவரையில் நான்கும், மதுரையில் இரண்டும், கோவையில்
ஒன்றும் என்று தொழிலாளர் நீதிமன்றங்கள் இருக்கின்றன.
அது அல்லாமல் மாநிலம் முழுவதற்கும் சேர்த்து ஒரு தொழில்
நடுவர் நீதிமன்றம் இருக்கிறது. உயர்நீதி மன்றத்தில் தொழி
லாளர்களுடைய வழக்குகளை விசாரிப்பதற்காக ஒரு தனி பெஞ்ச்
—ஆயம்—சென்னையில் செயல்பட்டுக் கொண்டு வந்தது. என்ன
காரணத்தாலோ கடந்த காலத்திலே அது கைவிடப்பட்டுவிட்டது.
அதை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அதேபோல, சென்னை நகரத்தில் இருக்கக் கூடிய தொழில்
நடுவர் நீதிமன்றத்தோடு, இன்னும் இருக்கக்கூடிய லேபர்
கோர்ட்டுகளை Industrial Tribunal-cum-Labour Court
என்றிணைத்து ஏற்படுத்த வேண்டும். அதை ஏற்படுத்தினால்
பல வழக்குகள் உடனடியாகத் தீர்வதற்கு உதவியாக இருக்கும்.
கடந்த நான்காண்டுகளாக இதன் மீது கருத்துரு இருந்தும்,
அதற்கான முடிவு எடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு
ஒரு முடிவு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இருக்கக்கூடிய தொழில் நீதிமன்றங்களுடைய
எண்ணிக்கை போதாது. எண்ணிக்கை கூடுதலாக்கப்பட வேண்
டும். வேலையிலிருந்து வெளியேற்றப்படுகிற தொழிலாளர்
களுக்குத் தொழில் தகராறு சட்டம் 2 (ஏ) பிரிவு திருத்தப்பட்ட
தன் காரணமாக இன்னும் ஏராளமான தொழிலாளர் வழக்குகள்
லேபர் கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலை இருக்கிறது. இவற்றை
யெல்லாம் பைசல் செய்வதற்குக் கூடுதலான நீதிமன்றங்கள்
தேவை. இன்றைக்குத் தொழிலாளர்கள் வழக்குகள் 8 ஆண்டு
களுக்கு மேலாக தேங்கிக் கிடக்கின்ற நிலைமையெல்லாம் இருக்
கிறது. அந்த நீதிமன்றங்களில் தீர்ப்பு தந்தால் அந்தத் தீர்ப்பை
அமல்படுத்துவதற்கான அதிகாரம் இல்லை. தீர்ப்பை அமல்
படுத்துவதற்கு காவல் நிலையத்திற்கு உள்ள அதிகாரங்களை
அந்த லேபர் கோர்ட்டுக்கும் தந்தால்தான் அவற்றை அமல்
படுத்த முடியும்.

ரெவின்யூ ரொக்கவரியாக வருவாய்த்துறை மூலம் செய்து தர
வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்குக் காலம் கடக்கிறது.
அந்த நிலையை மாற்ற வேண்டும். இந்தத் தொழில் கோர்ட்டு
களில் கடந்த ஐந்தாண்டுகளில் பார்த்தால் 5 நீதிபதிகள் மாறி
மாறி உட்கார்ந்திருக்கிறார்கள். அப்படி அந்தப் பதவிக்கு வருப
வர்கள், தங்களது பணிக் காலத்தின் கடைசிக் கட்டத்தில்தான்

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 ஏப்ரல் 9

அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் இருக்கிற லீவையெல்லாம்
கழித்துவிட்டுப் போகிறபோது, வழக்குகள் அப்படியே நின்று
போகின்றன. ஆகவே அந்தப் பதவிக்கு அனுப்புகிறபோது
3—4 ஆண்டுகள் பதவிக் காலமாவது இருப்பவர்களை அங்கே
நடுவர்களாக அனுப்புங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வழக்கறிஞர்கள் நலன். இதற்கான சட்டம் 1987-ல்
இயற்றப்பட்டது. விதிகள் 6 மாதங்களுக்கு முன்னாலே இயற்றப்
பட்டன. இன்னமும் அவை அமல்படுத்தப்படவில்லை. அதில்
சில திருத்தங்களை தமிழ்நாடு வழக்கறிஞர்கள் கவுன்சில் கோரி
யிருக்கிறது. அவற்றைப் பரிசீலித்து அவற்றை அமல்படுத்த
முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இளம்
வழக்கறிஞர்கள் (Junior Advocates) ஆகப் போகக்கூடிய
வர்கள் ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்றிருக்கக்கூடிய மூத்த
வக்கீல்களிடம்தான் பணியாற்றுகிறார்கள். அவர்களைப் பல்
லாண்டுக்காலம் கொத்தடிமைகளாக வைத்திருக்கக் கூடிய
நிலைமை இருக்கிறது. ஆகவே இளம் வழக்கறிஞர்களுக்குக்
குறைந்த பட்சம் ஸ்டைபண்டு என்கிற உதவித் தொகையை
அளிக்கும் சட்டத்தை நிர்ணயித்து அமல் படுத்த வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். அதை ஒரு சமூகப் பாதுகாப்பு ஏற்
பாடாக உருவாக்கி செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அதேபோல, வக்கீல் குமாஸ்தாக்கள் பரிதாபத்
துக்கு உரியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் பணிமுறை
கள் வரைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கும் பாது
காப்பளித்து இதை ஒரு சமூகப் பாதுகாப்பான நடவடிக்கையாக
மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

13—05 மணி

நீதிநிர்வாக அமைப்பு நிர்வாகத்தில் அமைச்சகப் பணியாளர்
கள் வேலைப்பளு அதிகமாக இருக்கிறது. ஊழியர் எண்ணிக்கை
கூடுதலாக்கப்பட வேண்டுமென்று தலைமை நீதிபதியே சொல்லி
யிருக்கிறார்கள். போதுமான பணியாளர்கள் நியமிக்கப்பட
வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். அதேபோல்
தீர்ப்புகளின் நகல் கிடைப்பதற்கு கால தாமதமாகிறது. எல்லா
நீதிமன்றங்களிலும் நகல் எடுப்பதற்கு ஜெராக்ஸ் இயந்திரங்கள்
பொருத்தப்பட வேண்டும் என்ற ஒரு கருத்து இருக்கிறது. அதற்கு
ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

அதேபோல் அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள்
ஒரு தனி இயக்ககத்தின் கீழ் (Directorate of Prosecution)
என்ற முறையிலே கொண்டுவரப்பட வேண்டும். அப்போதுதான்
அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியும். சென்னையிலே
காவல்துறை ஆணையர் அவர்களுடைய கட்டுப்பாட்டிலே,
மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கட்டுப்



1990 ஏப்ரல் 9] [திரு. உ. ரா. வரதராசன்]

பாட்டின் கீழ் அவர்கள் இருக்கக்கூடிய நிலைமை என்பது மாற்
றப்பட வேண்டும். தனி இயக்ககம் அமைக்கும் ஒரு முடிவு
4 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்டதாக நான் அறிகிறேன்.
அந்த முடிவு அமல்படுத்தப்பட வேண்டும்.

அதேபோல் இன்றைக்குக் குடும்ப நீதிமன்றங்களில் கிட்டத்
தட்ட 4 ஆயிரம் வழக்குகளுக்கு மேல் நிலுவையில் பைசலாகா
மல் இருக்கின்றன என்று தலைமை நீதிபதி அவர்களே கூறி
யிருக்கிறார்கள். ஒரு நீதிபதி மட்டுமே சென்னையில் இருக்கி
றார்கள். ஒரு நீதிபதி காணாது, கூடுதலாக ஒரு நீதிபதி நிய
மிக்கப்பட வேண்டும். அதேபோல் மற்ற மாவட்டங்களிலேயும்
இதுபோன்ற குடும்ப நீதிமன்றங்கள் நியமிக்கப்பட வேண்டும்.
இதனுடைய தொடக்கமாக கோவை, திருச்சிராப்பள்ளி, மதுரை,
வேலூர் போன்ற இடங்களிலே உடனடியாக ஏற்படுத்தப்பட
வேண்டும் என்று சொல்லி, இப்போது நான் சிறைக்கு வருகிறேன்.
ஒன்றிரண்டு கருத்துக்கள் மட்டும்தான்.

சிறை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் கூட ஏழாவது
நிதிக்குழு "Jails have been neglected for too long and there
has been practically no improvement in the environment or in
the method of handling inmates" என்று குறிப்பிட்டு இருக்கிறது.

அதுமட்டுமல்ல, அதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்
என்று வரையறுத்து, Priority should be given firstly
to ensure that adequate direct expenditure was incurred on the
prisoners and secondly to improvements in amenities in the
existing jails in respect of water supply, sanitary facilities
என்று சொல்லி, மூன்றாவது "Additional Jail Capacity"
என்பதாகவும் அங்கே வரையறுத்திருக்கிறார்கள். தமிழ்
நாட்டிலே சிறை நிர்வாகம் மற்ற பல மாநிலங்களை
விடப் பின்தங்கிய நிலையில் உள்ளது என்று இதே நிதிக்
குழு எடுத்துக் கூறி அதற்காக தனி நிதி ஒதுக்கீடுகளைச் செய்து
இருக்கிறது. மருந்துகள், படுக்கைகளிலே குறைபாடுகள், உணவு
வகையிலே உள்ள தொகையைச் செலவு செய்வதிலே குறைபாடு
கள் எல்லாம் சேர்த்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. சிறை நிர்
வாகத்தை மேம்படுத்துவதற்காக, சீர்திருத்தங்களைச் செய்வ
தற்காக நீதிபதி திரு. ஏ. என். முல்லா அவர்கள் தலைமையிலே
ஒரு குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. சிறை நிர்வாகம் தொடர்
பாக, குறிப்பாக ஒழுங்கு, பாதுகாப்பு பற்றி ஆராய்ந்து, அதை
மேம்படுத்துவதற்கு திரு. ஆர். கே. கபூர் அவர்களுடைய
தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்தக்
குழுக்களுடைய பரிந்துரைகள் பரிசீலனையில் இருக்கின்றன, சில
பரிந்துரைகள் இன்னும் பரிசீலனையில் இருக்கின்றன, என்று
குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பரிந்துரைகள் எவை, எவை,
தீர்க்கப்பட்டவை எவை, எவை, தீர்க்கப்பட வேண்டியவை
எவை, எவை என்பதைப்பற்றி ஒரு வெள்ளை அறிக்கையை
இந்த அவையிலே வைக்க வேண்டும்.

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 ஏப்ரல் 9

சிறைப் பணியாளர்கள், அவர்களுக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய ஊதியம் என்பது மிகக் குறைவாக இருந்து கொண்டு இருக்கிறது. சிறைப் பார்வையாளர்களைப் பொறுத்தவரையில் பலரையும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். சமூகப் பணியாளர்கள், மருத்துவர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டு இருக்கிறார்கள். எம்.எல்.ஏ.க்களையும் சிறைப்பார்வையாளர்களாக நியமிக்க வேண்டும். அங்கேயிருக்கக்கூடிய புகார்களை விசாரிப்பதற்கு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். கடந்த ஆட்சியில் இதை ஏற்க மறுத்தார்கள். இப்போது அதை ஏற்று, சிறைகளுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டு இருக்கக்கூடிய எம்.எல்.ஏ.-க்களை பார்வையாளர்களாக நியமிப்பதிலே நீங்கள் தயக்கம் காட்டக்கூடாது.

இறுதியாக ஒரு விஷயம். கைதிகளை வகைப்படுத்துவது, ஏ பிரிவு, பி பிரிவு என்று. ஜனநாயக இயக்கங்களின் சார்பிலே, அது தொழிற்சங்கப் போராட்டமாக இருந்தாலும், அல்லது அரசியல் போராட்டமாக இருந்தாலும், அதிலே கலந்து கொள்பவர்களை எல்லாம், ஏ பிரிவுக்காரர்களை நடத்துவதைப் போல நடத்த வேண்டும் என்ற கட்டாய விதியைச் செய்யுங்கள். ஏ-க்கும், பி-க்கும் இடையிலே பாகுபாடு. எதிலே எல்லாம் பாகுபாடு என்று சொன்னால், சொந்த உடை, சொந்த படுக்கை, ஏ பிரிவுக்காரன் வைத்துக்கொள்ளலாம். பி பிரிவுக்காரன் வைத்துக்கொள்ளக்கூடாது. ஏன் இந்த பாரபட்சம்? அதே போன்று சோப்பு, எண்ணெய், பற்பொடி, நண்பர்கள் கொண்டு வந்து கொடுத்தால், ஏ பிரிவு கைதிகள் பெற்றுக்கொள்ளலாம். அப்பாவி, பி பிரிவுக் கைதிகள் அதைப் பெற்றுக்கொள்ளக்கூடாது என்றெல்லாம் இருந்து கொண்டு இருக்கிறது. கடிதம் எழுதுவதிலே கூட, ஏ பிரிவிற்கு வாரம் ஒரு முறை எழுதலாம். ஆனால், பி பிரிவுக்கு மாதம் இரண்டு முறைதான் என்று இருக்கக்கூடிய நிலைமைகள் எல்லாம் நீடித்துக்கொண்டு இருக்கின்றன. அதிலே ஆயுட் கைதிகளைப் பொறுத்த வரையில் அந்தப் பிரிவு 433-ஏ ரத்து செய்யப்பட வேண்டும். 10½ ஆண்டுக்காலம் நம்முடைய நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததின் பேரில் அவர்களை எல்லாம் விடுவிப்பதற்கான சூழ்நிலைகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சிறைக்கூடத் தொழிற்சாலைகளிலே 50 பைசாவிலிருந்து 2 ரூபாய் வரை தரப்படுகிறது. அங்கே உற்பத்தியாகிற பொருட்களை சந்தை விலைக்குத்தான் விற்கப்படுகிறது. அதற்குக் குறைத்து விற்பதில்லை. அங்கே உழைக்கின்றவர்களுக்கு மட்டும், occupational wages, அந்த தொழில் சார்ந்த ஊதியம் வழங்காதது என்பது சரியல்ல. சிறைக் கைதிகளுக்கு உணவு வழங்குவதிலே பெரும் முறைகேடுகள் நடப்பது எல்லாம் நாம் நன்றாக அறிந்து இருக்கக்கூடியது. சிறையிலே இருக்கக்கூடிய வார்டர்களுக்கு எல்லாம் செல்லப் பெயர்கள் உண்டு. சில பேர்



1990 ஏப்ரல் 9] [திரு. உ. ரா. வரதராசன்]

களுக்கு பருப்பு, சில பேர்களுக்கு அரிசி என்றெல்லாம் வழங்குவதை நாம் பார்த்திருக்கிறோம். அதே சிறையிலே 2 கட்டு பீடிகளைக் கொடுத்துவிட்டால் இட்டிலி, தோசை எல்லாம் சிறைக்கூட கிச்சனிலேயிருந்து வரும். ஆகவே, இந்த முறைகேடுகளை எல்லாம் தவிர்ப்பதற்கு கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும். சிறைக் கைதிகளிலேயிருந்து அந்த கண்காணிப்புக் குழுக்களை உருவாக்க வேண்டும் என்பதைத் தெரிவித்து, வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்

13—10 மணி

*திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் நமது மாண்புமிகு பேரவைத் தலைவருடைய குடும்ப திருமண விழாவிலே கலந்துகொள்கிறபோது ஒன்றைச் சொன்னார்கள். அதாவது, நீதியை நீதிமன்றங்களின் பொறுப்புகளிலும், அரசின் செயற் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவினரும் தனித்து தனித்து இயங்கும். ஆனால், அந்தத் திருமண விழாவிலே மூன்றும் ஒன்றாக இணைந்தது பெரும் மகிழ்ச்சிக்குரிய செயல் என்று சொன்னார்கள். ஆனால், அப்போது அவர்கள் சொல்லும்போது ஒரு ஐயப்பாடுதான் எழுந்தது. அரசினுடைய செயற் பிரிவு, ''எக்சிகியூடிவ் பவர்'' ஆனது அந்த நீதிமன்றங்களிலே தலையிடக் கூடிய சூழ்நிலை உருவாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதை நினைவுபடுத்துகின்றேன். என்றைக்குமே நீதிமன்றங்கள், நீதி பரிபாலனங்கள், நீதிப் பிரிவானது ஒரு சுதந்திரமாக, தன்னிச்சையாக செயல்பட்டால்தான் ஒரு நாட்டிற்கு, நீதி வழங்குவதற்கு சரியாக இருக்கும். அதிலே அரசியலுடைய தலையீடுகள் எந்த விதத்திலும் இருக்கக்கூடாது என்பதற்குத்தான் நான் சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது பப்ளிக் பிராசிக்கியூட்டர் நியமனம் செய்துகொண்டிருக்கிறார்கள். பப்ளிக் பிராசிக்கியூட்டர்ஸ் நியமனம் செய்யும்போது நல்ல தகுதியினுடைய அடிப்படையிலே அவர்களை நியமனம் செய்தால்தான் அவர்கள் நல்ல வழக்குரைஞர்களாக அரசாங்கத்தினுடைய வழக்குகளை சிறந்த முறையில் அவர்கள் செயல்படுத்தி நல்ல முறையில் அவர்கள் வாதாட முடியும். அது மட்டுமல்ல, ஏழை எளியவர்கள் சில நேரங்களில் அங்கே பப்ளிக் பிராசிக்கியூட்டரை நம்பி இருந்து, வாதாட வரும்போது அந்த பப்ளிக் பிராசிக்கியூட்டர் நல்ல திறமையும், நல்ல சட்ட நிபுணருமாக இல்லாமல் இருந்தால் அவர்கள் குடும்பங்கள் நிச்சயமாக பாதிக்கப்படும். அப்போது பாதிக்கப்படுபவர்கள் அரசாங்கம் மட்டுமல்ல, ஏழை மக்களேதான் என்பதை நினைத்து அப்படி

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1990 ஏப்ரல் 9

அவர்கள் நியமிக்கப்படும்போது, சிறந்த அறிவுள்ளவர்களை நிய
மனம் செய்யவேண்டுமென்று இங்கே எடுத்துச்சொல்ல விரும்பு
கிறேன். இதுபோன்ற குறைபாடுகள் இருப்பதாகச் சட்டப் பிரி
விலே சொல்லப்படுகிறது. அந்த குறைபாடுகள் நிச்சயமாகக்
களையப்பட வேண்டும் என்பதை நான் இங்கே எடுத்து வைக்
கின்றேன்.

அதுபோன்று வழக்கு நிலுவைகள். ஏராளமான நிலுவைகள்,
ஏராளமான வழக்குகள் இப்போது இருப்பதாக இந்தக் கொள்கைக்
குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. வழக்குகள் இவ்வாறு
இருந்து கொண்டே இருந்தால், அதாவது சிவில் வழக்கிலே
6,235 வழக்குகள் இங்கே இருப்பதாக இந்தக் கொள்கைக் குறிப்
பில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதுபோல இலட்சக்கணக்கான
வழக்குகள் இப்போது பெண்டிங்கில் இருந்துகொண்டிருக்கிறது.
இந்த வழக்குகள் எல்லாம் இவ்வாறு பெண்டிங்கில் இருந்து, அது
மேலும் மேலும் கூடிக் கொண்டே இருந்தால் எப்படி மக்களுக்கு
நல்ல தீர்ப்பு வழங்கப்படும், காலத்திற்குள் எப்படி வழங்கப்பட
முடியும் என்பதை நீங்கள் மனதிலே கொள்ள வேண்டும். இன்
னும் கூடுதலாக இங்கே 9 பேர்களை நியமிக்க இருக்கிறார்கள்
என்று சொன்னார்கள். இன்னும் அதிகப்படியான ஜட்ஜுகள்
நமக்குத் தேவை என்பதை நினைவில் கொண்டு, நீதிமன்றங்
களில் நீதிபதிகளை கூடுதலாக இந்த அரசாங்கம் நியமிக்க
வேண்டுமென்பதை இங்கே வைக்கின்றேன்.

மேலும், தொழிலாளர்களுக்கான நீதிமன்றங்கள். தொழி
லாளர்களுக்கான நீதிமன்றங்கள் மிகவும் குறைவாக இருக்கின்
றன. எங்களுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் அப்படி ஒரு
தொழிலாளர் நீதிமன்றம் இல்லாமல் இருக்கிறது. அப்படித்
தொழிலாளர் நீதிமன்றம் இல்லாமல் இருப்பதனால் தொழிலாளர்
கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா :** துணைத் தலை
வர் அவர்களே, திருநெல்வேலிக்கு இப்போது ஒரு ''லேபர்
கோர்ட்டு'' அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். ரமசுப்பு :** மாண்புமிகு அமைச்சருக்கு
நன்றி. இந்தத் தொழில் நீதிமன்றங்களில் சில நேரங்களில்,
கேஸ்கள் பெண்டிங்கில் கிடப்பதனால் தொழிலாளர்கள் மிகவும்
பாதிக்கப்படுகிறார்கள். தொழிலாளர்கள் பிரச்சினை சம்பந்
தப்பட்ட வரை அந்த நிர்வாகமானது அவர்கள் கேஸ் நடத்தும்
போது பல காரணங்களினால் அதை ஒத்திவைத்து, அவர்கள்
அந்தக் கோர்ட்டிற்கு சரியாக வராமல் அந்த கேஸ்கள் எல்லாம்
தள்ளிக்கொண்டே போவதால் தொழிலாளர்கள் பாதிக்கப்படு
கிறார்கள். ஆதலால் தொழிலாளர் நீதிமன்றங்களை சிறப்பாகச்



1990 ஏப்ரல் 9] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

செயல்பட வைத்து, துரிதமாக செயல்பட்டு அந்த கேஸ்களை முடித்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் தக்க பரிசீலனை எடுக்க வேண்டும். அதற்குக் கூடுதலாக எங்கெங்கே எல்லாம் தொழிலாளர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமோ, அவற்றை ஏற்படுத்தி, வழக்கறிஞர்களையும் அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

13–15 மணி

மேலும் சட்டம் ஒரு கழுதை, அது முன்னால் சென்றால் கடிக்கும், பின்னால் சென்றால் உதைக்கும் என்று நமது திருவாளர் சத்தியமூர்த்தி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதற்காக அவர்கள் இதைச் சொல்லுகிறார்கள் என்றால்.....

**திரு. என். கணபதி :** Point of clarification. சட்டம் ஒரு கழுதை என்று வக்கீல் தொழிலைச் சரியாக செய்யாத சத்தியமூர்த்தி சொல்லியிருக்கலாம். ஆனால், வக்கீல் தொழிலை சரியாகச் செய்கிறவர்கள் அதைக் கழுதை என்று சொல்வதில்லை.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** இல்லை. அவர் சொன்னதிலே ஒரு அர்த்தம் இருக்கிறது.

**திரு. குமரி அனந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும் குறுக்கிடுவதற்காக. சத்தியமூர்த்தி என்று சொல்லப்படுகிற ஒரு பெரிய மனிதரை நாம் அப்படிச் சொல்லியிருக்க வேண்டாம். ஏனென்றால் நீதிமன்றத்திலே வெள்ளைக்காரன் அங்கே அமர்ந்திருந்த போது ஒரு தடவை அவர் சரியாக வாதிடுகிறபோது நம்மவரை, தமிழனை, இந்தியனை கேலி செய்ய வேண்டும் என்பதற்காக வெள்ளைக்கார நீதிபதி 'நீங்கள் அழகாக வாதிடுகிறீர்கள், ஆனால், நான் இந்தப் பக்கம் வாங்கி அந்தப் பக்கம் அதை விட்டு விடுகிறேன்' என்று சொன்ன உடனேயே 'ஆமாம் நீதிபதி அவர்களே, இந்தக் காதுக்கும் அந்தக் காதுக்கும் இடையிலே உங்களுக்கு எதுவும் தலையில் இல்லை' என்று சொன்ன பெரிய மனிதர் அவர்.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** நான் அதை எதற்காக சொல்கிறேன் என்றால் வாதி, பிரதிவாதிகளுக்கு இரண்டு வக்கீல்கள் வாதிடுகிறார்கள், அவர்கள் வாதாடும்போது அவர்களுடைய சட்டத் திறமைகளை அங்கே எடுத்து வைக்கிறார்கள், அப்படி சட்டத் திறமைகளை அங்கே எடுத்து வைக்கும்போது சில நேரங்களில் அந்தச் சட்டத்திலே திறமையானவர் வெற்றி பெறுகிறார். திறமை இல்லாதவர் தோல்வி அடைகிறார். இப்படி தோல்வி அடையும்போது நீதிபரிபாலனம் கூட, நீதி கூட சில சமயங்களில் தோற்பதற்கு அங்கே காரணமாக அமைந்து வருகிறது. அதற்காகத்தான் அந்த உதாரணத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது போன்ற சட்ட நிபுணர்கள் மூலமாக பல ஏழைகள்

டி 2 53—89—17

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1990 ஏப்ரல் 9

பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், பல பேர் நல்ல நேர்மையாளர் களாக இருந்திருப்பார்கள், ஆனால் கூட அவர்கள் ஜெயிலுக்கு வர வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அப்படி ஏதாவது ஒரு நிலைமை ஏற்பட்டது என்றால் அவைகளை நல்ல முறையிலே தீர்ப்பதற்கு அதற்கு ஒரு தனிக் குழு அமைக்க வேண்டும். அந்த நீதிமன்றத்திலே அவர்கள் சட்ட வாதத்தினால் வென்று விட்டார்கள் என்பதற்காக அவர்கள் பின்னால் பாதிக்கப் படக்கூடாது. அவர்களுடைய குடும்பம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக நீதி பரிபாலனத்திடையே ஒரு இடத்தை வைப்பதற்கு இந்த அரசு ஏதாவது ஒரு முயற்சியை எடுக்க வேண்டும் என்பதை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

அடுத்து உயர்நீதிமன்ற ஆயம், அதாவது கோர்ட்டுகளிலே அதிகமாக கேஸ்கள் பெண்டிங் இருப்பதனால் ஆயம் என்ற ஒன்றை அமைத்து பல மாநிலங்களில் செயல் பட்டுக் கொண்டிருப் பதாகச் சொன்னார்கள், அது இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட ஆயம் நம்முடைய தமிழகத்திலே இல்லை என்றும் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஆயம் என்பதை இங்கே ஏற்படுத்துவதற்கு பல முறை கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன, தகவல்கள் அனுப்பப்பட்டிருக்கிறது என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது, அதற்காக துரிதமாக நடவடிக்கை எடுத்து இது போன்ற ஆயங்களை எல்லாம் நம்மு டைய தமிழகத்திலே வைத்து நீதிபரிபாலனத்தை செம்மைப் படுத்த வேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிறை. சிறையைப் பற்றி இந்த அவையிலே பெருவாரியாக பேசினார்கள். நாங்களெல்லாம் சிறைக் கைதி களாக அங்கே சென்றபோது—இங்கே சொன்னார்கள் சாப்பாட் டிற்காக அங்கே சண்டை போட்டார்கள் என்று—அதைப்போல இன்னொன்று சொன்னார்கள், நீங்களெல்லாம் அச்சப்படுகிறீர் கள் ஜெயிலுக்குப் போக என்று சொன்னார்கள். நிச்சயமாக காங்கிரஸ்காரர்களுக்கு அச்சமோ பயமோ எதற்கும் கிடையாது. சுதந்திரப் போராட்ட காலத்திலே செக்கிழுத்த சிதம்பரனாரை நீங்கள் எல்லாம் நினைவில் கொள்ள வேண்டும், வெள்ளைக் காரன் காலத்தில் நாங்கள் எப்படி எல்லாம் கஷ்டப்பட்டு சுதந் திரத்தை வாங்கித்தந்தோம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண் டும். இன்றைக்கு ஒரு சுதந்திர நாட்டிலே சிறைச்சாலையானது கொடுமைக்குள்ளாக்கப்படக்கூடாது, சிறைச்சாலையிலே மீண்டும் இது போன்ற கொடுமைகள் வரக்கூடாது என்பதற்காகத்தான். சுதந்திரத்தையே வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தும் உங்கள் ஆட்சியிலே நீங்கள் எங்களை கைது செய்து நாங்கள் வேலூர் சிறையிலே இருக்கும்போது எங்களுடைய தொண்டர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள். பாத்திரத்திலே, தட்டிலே எழுதி வெளியிலே எறிகிறார்கள் காங்கிரஸ்காரர்கள் என்ற மாண்புமிகு உறுப்பினர் தென்னரசு அவர்கள் சொன் னார்கள். அங்கே நடந்த கொடுமை அப்படி, அவர்கள் அங்கே



1990 ஏப்ரல் 9] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

அடிக்கப்பட்டிருக்கிறார்கள், அதுவும் அங்கேயிருந்த சிறைக் கைதிகளால். ஜாலியன்வாலாபாக் கொடுமையில் கூட துப் பாக்கி எடுத்து சுட்டுக் கொன்றார்கள். அது கூட பரவாயில்லை என்று தோன்றுகிறது, இப்போது சிறைக்கைதிகளை வைத்து உள்ளேயே அடித்து நொறுக்குவது என்பது என்ன முறை என் பதைத்தான் நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

இரண்டாவது காங்கிரஸ்காரர்கள் பயந்தவர்கள் அல்ல, எதற் கும் சளைக்காதவர்கள் தான் என்பதை சுட்டிக் காட்டுகிறேன். இங்கே பல பேர் வாதாடினார்கள். சாப்பாட்டிற்காக அடித்துக் கொண்டார்கள், இட்டிலி கேட்டார்கள் என்றெல்லாம் சொன் னார்கள். அப்படி யாரும் கேட்கவில்லை. நான் பாளையங் கோட்டை சிறையிலே இருந்தபோது, பாளையங்கோட்டை சிறைச் சாலையிலே பல்லி கூட coffee-யில் கிடந்தது. அப்போது அவர்கள் சொன்னார்கள், பல்லியைப் போட்டு விட்டீர்களே என்று அந்தக் கேள்வியைக் கூட கேட்கக் கூடாதா, இது போன்ற மோசமான நிலைமைகளை எல்லாம் சுட்டிக் காட்டக் கூடாதா என்பதுதான் கேள்வி. அதுமட்டுமல்ல. என்ன சிந்த னையிலே நீங்கள் தொண்டர்களை உள்ளே வைத்து விட்டு, சட்ட மன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் விடுதலை செய்திருக்கிறீர்கள்? அது எந்த வகையில் நியாயம்? சட்டமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தான் முதல் அக்யூஸ்ட். முதலாவது அக்யூஸ்ட்டாக அவர்களை கைது செய்திருக்கிறீர்கள். அவர்களை விடுதலை செய்து விட்டு, தொண்டர்களை உள்ளே வைப்பது என்ன நியாயம் என்பதுதான் என்னுடைய வாதம். அவர் சொன்னார். செக்கிழுத்த சிதம்பரனாரை இப்போது....

13-20 மணி

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** சிறையிலே இருக்கிற கைதிகளை, கொடுமைப்படுத்துவதில் காங்கிரஸ்காரர்களுக்கு தான் டாக்டர் பட்டமே தரலாம். காரணம், விலைவாசிப் போராட்டத்திலே, இதே சென்னைச் சிறையிலே அடித்தே கொன்று விட்டார்கள் எங்கள் மாவீரன் கோ.சு. மணியை. மதுரை யிலே பொற்செழியன் செத்துப் போனார். இந்த மாநிலத்திலே மட்டுமல்ல. பகல்பூரிலே, குற்றவாளிகளை கண்ணைத் தோண்டி எடுத்தார்கள் சிறைச்சாலையிலே காங்கிரஸ் காரர்கள். எனவே, சிறைச் சாலையிலே கொடுமைப்படுத்துவதில் மகா வல்லுநர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் அன்பரசு அவர்கள் சரியாக அடிக்கப்பட்டு (சிரிப்பு). அதுவும் ஜெயிலில் வார்டர்களால் அங்குள்ள வேலை செய்கின்ற.........

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அவர் அடிக்கப்பட்டார் என்பதைவிட, அவர் அழகாக சட்டையைக் கிழித்திருக்கிறார், அவரே என்று சொல்வதுதான் என் வாதம்.

[1990 ஏப்ரல் 9

திரு. குமரி அனந்தன் : மன்னிக்க வேண்டும். பாராளு மன்றத்திலே அவர் தாக்கப்பட்டார் என்பதை அவர் அங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார். அன்று நான் அதைச் சொல்கிற போதே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அது உரிமைக் குழுவிற்குப் போயிருக்கிறது என்று சொன்னார்கள். நீங்கள் திரு. அன்பரசு அவர்களுடைய நோக்கத்திற்கும், அவர்களுடைய செய லுக்கும் உள்நோக்கம் கற்பிப்பது என்பது தவறானது.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பாராளுமன்றத்திலே, சட்டையைக் காட்டியது இதுதான் முதல் முறையல்ல. பலமுறை பலர் காட்டியிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் மக்களவைத் துணை சபாநாயகர் அவர்கள், அவருடைய மண்டையிலே அடிபட்டு, அதற்காக ஏழு தையல்கள் போடப்பட வேண்டிய நிலைமையும் இந்த முறை தான் சிறையிலே ஏற்பட்டது என்பதை சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு அரசியல் கட்சியும், ஒவ்வொரு விதமான போராட்டத்தை நடத்தியிருக்கி றார்கள். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களும் அறிவித்து, நாங்கள் எல்லாம் பலமுறை சிறை சென்றிருக்கிறோம். ஆனால், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மாறுவேடம் போட்டுக் கொண்டு, ஒரு குட்டி நடிகையுடன் போனதைப் போல, எந்த ஒரு அரசியல்வாதியும் போகவில்லை.

திரு. குமரி அனந்தன் : மன்னிக்க வேண்டும். குட்டி நடிகையா (சிரிப்பு) என்ன என்பதையெல்லாம் நீங்கள் எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்கிறீர்கள் என்று தெரியவில்லை. நல்ல நோக்கத்தோடு சென்று அந்தப் பணியிலே ஈடுபட்டார் என்றால், கூட சென்றவர்கள்—உடன் சென்றவர்கள்—அவர் களைப் பற்றியெல்லாம் நீங்கள் சொல்வது நியாயம்தானா என்பதை நான் உங்களிடம் கேட்க ஆசைப்படுகிறேன். கட்சிப் பணியிலே ஈடுபடுகின்றவர்கள், எந்தத் தொழிலில் இருந்தாலும், அந்தப் பணியிலே அவர்கள் ஈடுபடுகின்றபோது, இதய சுத்தி யோடு வருகிற காரணத்தினாலே, அதற்கு நோக்கமோ, களங்கமோ கற்பிக்கக் கூடாது என்று நான் உங்களைப் பணி வோடு கேட்டுக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, களங்கம் கற்பிக்கவில்லை. ஆனால், ஒரு நாடாளு மன்ற உறுப்பினர், அவர் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில், பொதுமக்களுக்கு தெரியக்கூடிய வகையிலே நேரடி யாக போரட்டத்திலே கலந்து கொள்ளலாம். அப்படி கலந்து கொண்டிருந்தால், உரிய மரியாதை கிடைக்கும். ஆனால் மாறுவேடம் போட்டுக் கொண்டு, வாடகையாக ஒரு நடிகையை அமர்த்திக்கொண்டு போய், காவலர்கள் கைது செய்தபோது, அந்த வாடகைக்கு, நடிப்புக்கு வந்த நடிகை '' என்னை விட்டு விடுங்கள் '' என்று சொன்ன நிகழ்ச்சிகள் எல்லாம் பத்திரிகை யில் நாம் பார்த்திருக்கிறோம். அதைத்தான் தவறு என்று சொல்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : சில நேரங்களில் முன்னெச்சரிக்கை யாக கைது செய்யப்பட வேண்டாம் என்பதற்காக அரசியல் வாதியாக இருக்கின்றவர், அந்தப் பணியிலே ஈடுபடுகிறார். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான் போராட்டத்திலே ஒரு இடத்திலே தலைமை தாங்குகிறேன் என்று சொன்னால், என்னுடைய தம்பி வணிகம் செய்து கொண்டிருக்கிற வசந்த குமார் முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்படுகிறார், சம்பந்தமே இல்லாமல். அப்படியெல்லாம் நடக்கிற காரணத்தினாலேதான், அவர்களும் அந்தப் போராட் டத்திற்குப் போவதற்கு முன்னால், மாறு வேடத்திலே சென்று தன்னுடைய காரியத்தை நிறைவேற்றுவதற்கு சென்றிருக்கலாம்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அன்பரசு அவர்கள் சட்டையை பாராளுமன்றத்திலே காட்டினார் என்று சொன்னார்கள். ஆனால், எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கொள்கை வீரன் சிட்டிபாபு சிறையிலே தாக்கப்பட்டு, செத்தே போய்விட்டார் என்பதை—அவ்வளவு பெரிய கொடுமைக்கு ஆளாக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை—காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் நெஞ்சைத் தொட்டு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாராளுமன்ற உறுப்பினர் அன்பரசு அவர் கள் மாறுவேடத்தில் சென்றார், குட்டி நடிகையை வாடகைக்கு அமர்த்திச் சென்றார் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குட்டி நடிகையை வாடகைக்கு அமர்த்து கின்ற பழக்கம் காங்கிரஸ்காரர்களுக்கு இல்லை. அதே நேரத்தில்

[திரு. ஆர். சிங்காரம்] [1990 ஏப்ரல் 9

அமைச்சர் அவர்கள் இவ்வளவு தாராளமாக சொல்கிறார்களே,
என்ன ஆதாரத்தோடு சொல்கிறார்? அவர்களுடைய பழக்கமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

13-25 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர்
அவர்களே, நான் சொன்ன உண்மையை மறைப்பதற்காக என்
மீது ஒரு களங்கத்தை சுமத்த அவர் முயற்சிக்கிறார்கள். ஒரு
வேளை அவருக்குக் கண் ஏதாவது குருடாகிவிட்டதா என்று
நான் அறிய விரும்புகிறேன். படிப்பறிவு இல்லாதவரா? எல்லாப்
பத்திரிக்கைகளிலும் செய்தி வந்திருக்கிறது. கைது செய்யப்
பட்டபோது அந்த நடிகை, 'என்னை விட்டுவிடுங்கள், வாடகைக்
காக அவர் நடிக்கச் சொன்னார், அதற்காக நடித்தேன், ஆகவே
என்னைக் கைது செய்யாதீர்கள், விட்டு விடுங்கள்' என்று
தப்பித்துக் கொண்டு ஓடினாள் என்று பத்திரிகைகளிலே செய்தி
வந்திருக்கிறது. அவர் அதை மறுக்கிறாரா? ஆகவே, பிரச்சினை
ஒன்றிருக்கிறபோது, வேறு வகையிலே திசை திருப்புவது அவரு
டைய வாடிக்கை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சிங்காரம்
உட்காருங்கள். (குறுக்கீடு) வேண்டாம், முடித்து விடலாம்.
திரு. மோகன்.

திரு. இரா. மோகன் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குட்டி
நடிகை என்று சொன்னதே சரியான சொல் அல்ல. அவர்
ஒரு தேசிய நடிகை. அதனால்தான் தேசியப் போராட்டத்திலே
கலந்து கொண்டார். இரண்டாவது, அன்பரசு தாக்கப்பட்டார்
என்று சொன்னார்கள். எங்களுக்குக் கிடைத்த செய்தி,
காங்கிரஸ் கட்சியினுடைய கோஷ்டித் தகராறிலே அவர்
தாக்கப்பட்டார் என்ற செய்திதான் வந்ததே தவிர, சிறையிலே
இருக்கின்ற கைதிகள் அடித்தார்கள் என்ற தகவல் யாருக்கும்
வரவில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு புதிய தகவலை
இங்கே கொடுக்கின்றார்கள். எல்லாமே புதுமையாகத் தான்
இருக்கின்றது. (குறுக்கீடு) அப்படி எதுவும் இல்லை என்று
நான் மறுக்கின்றேன். மேலும், எங்களுடைய தலைவர்
வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் தொண்டர்களைப்



1990 ஏப்ரல் 9] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

பார்வையிடுவதற்காக ஜெயிலுக்கு வரும்போது, அங்குள்ள
அதிகாரிகள் அவரை மிகவும் கடுமையாக நடத்தினார்கள்.
அதாவது 'விசிட்டர்ஸ் ரூமிலே' வைத்துக்கொண்டு, ஐந்தைந்து
பேராக நாங்கள் பார்ப்பதற்கு அனுமதிப்போம் என்று கூறி,
கொஞ்சம் பேர்களை அனுமதித்தார்கள். அவர் வெளியே வந்து—
அந்த கேட்டைப் பூட்டியிருந்தார்கள். அந்த கேட் வழியாக—
தொண்டர்கள் எல்லாம் அங்கே நின்று, தலைவரைப் பார்க்க
வேண்டும் என்பதற்காக, அவர் முகத்தையாவது பார்க்கின்
றோம் என்று அவர்கள் நின்று கொண்டிருக்கும் சமயத்தில்,
அங்கே ஒரு சேர் கிடந்தது. அதிலே கூட அவர்கள் உட்கார
விடவில்லை. பாளையங்கோட்டை சிறையிலே நடந்தது இது.
அவர்களை உட்காரக் கூட விடவில்லை. அந்தச் சேரை
சடாரென்று சூப்பிரண்டு எடுக்கின்றார். அந்த நிலைமை
அங்கே இருக்கிறது. ஒரு தலைவர், ஒரு பாராளுமன்ற
உறுப்பினர் அவர். காங்கிரஸ் கட்சியினுடைய, மாபெரும்
கட்சியினுடைய தலைவர், அவரைப் பார்ப்பதற்குக் கூட,
தொண்டர்களுடைய முகத்தைப் பார்ப்பதற்குக் கூட அனுமதிக்
காமல் சிறையை விட்டு வெளியே தள்ளிக் கதவை அடைத்
தார்கள் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காங்கிரஸ் கட்சி
யினுடைய தலைவர் நேர் காணலுக்கு வந்தபோது அவருக்கு
ஒரு நாற்காலி கூட இல்லாமல் அதை ஓர் அதிகாரி இழுத்து
விட்டார் என்றால் அது பெரிய தவறு தான். குறிப்பிட்டு
அந்த அதிகாரியின் மீது புகார் சொன்னால் அதிகாரி மீது
நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் மாண்புமிகு காங்கிரஸ்
கட்சியினுடைய உறுப்பினருடைய கவனத்திற்கு ஒன்றைச்
சொல்கின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்களும், நானும்,
நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், ஈ.வே.கி. சம்பத் அவர்
களும் ஒரு முறை கைது செய்யப்பட்டு அடையாறு சிறைச்
சாலையிலே அடைக்கப்பட்டபொழுது, எங்களை உள்ளே
அழைத்துச் செல்வதற்கு முன்பு எங்களுடைய தோள்களிலே இருந்த
துண்டுகளையெல்லாம், அண்ணா அவர்களுடைய தோளிலே
இருந்த துண்டு முதற்கொண்டு அத்தனை துண்டுகளையும்
போலீஸ் அதிகாரிகள் எடுத்து விட்டார்கள், துண்டு போட்டுக்
கொண்டு உள்ளே போகக் கூடாது என்று. இவைகள் எல்லாம்
செய்திகள் அல்ல. வரலாறுகள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
அங்கே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் போன நேரத்
திலே அன்று அவருக்கு நாற்காலி கொடுக்கப்படவில்லையா,

[திரு. குமரி அனந்தன்] [1990 ஏப்ரல் 9

அப்படியென்றால் நான் புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்
கிறேன் என்கிறார்கள். அதைப்போலவே பாராளுமன்ற உறுப்
பினர் அன்பரசு அவர்கள் தாக்கப்பட்டது கோஷ்டிச் சண்டை
யிலே என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்காகத்
தான் மொத்தமாகவே கேட்கிறோம். ஒரு நீதி விசாரணை
வைத்து விடுங்கள். ஏனென்றால் காவல் கைதிகள் ஆயுள்
காலக் கைதிகள் தான் அடித்தார்கள் என்று நான் சொல்கிறேன்.
எனவே, தயவு செய்து ஒரு நீதி விசாரணை வைத்து விடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் இந்தப் பிரச்
சினையிலேயே நுழைய வேண்டாம் என்று கருதுகிறேன். ஏனென்
றால் இதிலே ஏதோ நடிகைகள் எல்லாம் வந்த காரணத்தால்,
நாம் ஏன் வீணாக நுழைய வேண்டும் என்று இருந்து விட்டேன்.
ஆனால் நம்முடைய காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் இதை
ஒரு நீதி விசாரணைக்கு விட வேண்டுமென்று சொன்ன காரணத்
தால் சொல்ல விரும்புகிறேன். அன்பரசு அவர்கள் விடுதலையான
அன்று விடுத்த அறிக்கையிலேயே திட்டவட்டமாகச் சொல்லி
யிருக்கிறார், சிறைச்சாலையிலே இரண்டு கோஷ்டிகளில் மூப்பனார்
கோஷ்டி ஆட்கள் என்னைத் தாக்கினார்கள், என்னைத் துரத்தி
னார்கள் என்று சொல்லியிருக்கிறார். அன்று அது மாலைப்
பத்திரிகைகளில் எல்லாம் வெளிவந்திருக்கிறது. இது வரையிலே
அன்பரசு அதை மறுக்கவில்லை. மறுக்காத காரணத்தால்தான்
அதைப்பற்றி பேசப்பட்டது.

திரு. குமரி அனந்தன் : அந்த அறிக்கையிலேயே 'என்னைக்
காவல் கைதிகளை வைத்து, உருட்டைக் கம்புகளை வைத்து
ஓட, ஓட அடித்தார்கள்' என்றும் வருகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள்
சிறைக்குச் சென்ற நேரத்திலே கொடுமையாக நடத்தியதை எல்
லாம் சொன்னார்கள். இதே காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே சிறைக்
குள்ளேயே, சேலம் சிறைக்குள்ளேயே நான்கு மூலைக்குள் வைத்து
21 பேரைச் சுட்டுக் கொன்றார்களே, அது என்ன நீதியாகும்
என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

13-30 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 16-2-1990 மாலை முரசு
சென்னைப் பதிப்பில் 'என்னை வெளியே தூக்கி வீச முயற்சித்தார்
கள், மூப்பனார் கோஷ்டி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்,



1990 ஏப்ரல் 9] [டாக்டர் மு. கருணாநிதி]

அன்பரசு வற்புறுத்தல்' என்ற தலைப்பில் வந்த செய்தியில் ஜெயி
லில் நடைபெற்ற மற்றொரு விஷயத்தையும் கண்டிப்பாக நான்
சொல்ல வேண்டும். 'மூப்பனாருடைய ஆதரவாளரான ரங்கநாதன்
வெற்றிவேல் ஆகியோர் ஜெயிலிலிருந்து என்னை வெளி
யேற்றும்படி ஜெயில் அதிகாரிகளை வற்புறுத்தினார்கள். அப்படி
வெளியேற்றாவிட்டால் அவர்களே என்னைத் தூக்கி வெளியில்
போடப்போவதாக கூறியிருக்கிறார்கள். தொண்டர்களை
வாழப்பாடி ராமமூர்த்திக்கு எதிராகத் தூண்டிவிட்டு இருக்கி
றார்கள். இவர்கள் இருவர் மீதும் வாழப்பாடி ராமமூர்த்தி
நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் அன்பரசு அறிக்கை
விடுத்து இருக்கிறார்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைச்
சபாநாயகர் அவர்களே, மற்றொரு விஷயத்தையும் சொல்ல
வேண்டும் என்று இருக்கிற காரணத்தால் பிறிதொரு விஷயத்
தையும் அவர் சொல்லியிருக்கிறார் அல்லவா? அதற்காகத்தான்
கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அவர் வேஷம் போடுவதில்
கெட்டிக்காரர் என்று நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத்
தலைவர் இங்கே ஏற்றுக்கொண்டிருக்கிறார். அதனால் மற்ற
வையும் வேஷமாக இருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன்.
எனவேதான் பாராளுமன்றத்தில் அது உரிமைக் குழுவுக்குப்
போயிருக்கிற காரணத்தால் அதைப்பற்றி மேலும் விரிவாகப் பேச
நான் விரும்பவில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்
லும்போது மற்றவைகளும் வேஷமாக இருக்குமோ என்று சொன்
னார்கள். சுமார் 25 ஆயிரம் தொண்டர்கள் கைது செய்யப்
பட்டிருக்கிறார்கள். இதைக் கூட நீங்கள் வேஷம் என்று நினைக்
கிறீர்களா?

அடுத்து, ஆயுள் தண்டனைக் கைதிகள் பற்றி. ஆயுள் தண்
டனைக் கைதிகளைப் பற்றி ஒரு அறிஞர் சொல்லும்போது அதா
வது எந்த ஆயுள்தண்டனைக் கைதியும் 6 ஆண்டுக்குள் அவன்
திருந்தவில்லை என்றால் நிச்சயமாக அவன் திருந்தப்போவது
இல்லை. ஆகவே அதில் திருந்தி வாழ்கின்ற ஆயுள் தண்டனைக்
கைதிகளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட
ஒரு இடத்திலே பேசும்போது எட்டரை ஆண்டுகளில் திருந்தி
வாழ்கின்றவர்களை பொது மன்னிப்பு அளித்து அந்த ஆயுள்
தண்டனைக் கைதிகளை விடுதலை செய்யலாம் என்று சொல்லி
யிருக்கிறார்கள். அப்படி அதாவது திருந்தி வாழ்கின்றவர்
களுக்கு கடுமையான கொலைக் குற்றம் புரியாமல் சில நேரங்

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1990 ஏப்ரல் 9

களில் சந்தர்ப்ப வசத்தில் ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருக் கின்றவர்களுக்கு ஒரு பொது மன்னிப்பு வழங்க 8 ஆண்டு என்று நீங்கள் நிர்ணயம் செய்து விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெண்களுக்கான சிறைச்சாலைகள். திருநெல்வேலி மாவட்டத்தில் கொக்கரக்குளத்திலே ஒரு ஜெயில் இருக்கிறது. அதாவது ஒரு டன்ஜன் மாதிரி தான் பெண்களுக்கு அங்கே எந்த விதமான வசதியும் இல்லாமல், தண்ணீர் வசதி இல்லை, கழிப்பிட வசதி இல்லை, பெண்கள் மிகவும் கடுமையான ஒரு தண்டனைக்கு உள்ளாகிறார்கள். அவர்களுக்கு வசதி செய்கின்ற வகையில் பெண்களுக்கு நல்ல சிறைச்சாலை வசதிகளை இன்னும் அதிகமாக கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பி.ஏ.,பி.எல். படித்தவர்களுக்கு அதா வது சட்டத் துறையிலே படித்தவர்களுக்கு சட்டத் துறையில் பணிபுரிகின்றவர்களுக்கு வக்கீல்கள் எல்லாம் பல விஷயங்களில் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்கிறார்கள் என்று பத்திரிகை யில் கூட வருகின்றன. இவர்கள் எல்லாம் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் வாழ்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் வாழ்கின்றன.

தமிழ்நாடு வெல்பேர் பண்டு ஆக்ட் 1981ல் ஒரு சட்டம் கூட வைக்கப்பட்டு இருக்கிறது. அதிலே குறைந்த பட்சம் 30 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு, குடும்பங்களுக்கு வழங்கவேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. சட்டம் படித்தவர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே அவர்களுக்கு, அந்தக் குடும்பங்கள் வாழ்வதற்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகத்தின் சார்பாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 27 கோடி ரூபாய்க்கு மேல் நிதி வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். கேட்ட தொகையை முழுமையாக நாம் ஒதுக்கி கொடுக்க தயாராக இருக்கிறோம். குறிப்பாக நீதி நிர்வாகத் துறையின் சார்பாக நமக்கு, அரசுக்கு வரவேண்டிய வருமானத்தை நீதி மன்றத்திற்குச் சென்று தடை கோரி இருக்கின்ற வழக்குகளை நம்முடைய சட்ட ஆலோசகர்கள் எத்தனை பேர் முயன்று அதிலே வென்று அங்கே இருக்கின்ற நிதியை நம்முடைய அரசுக்கு தருவதற்கு முயற்சி எடுத்து இருக்கிறார்கள் என்று பார்க்கின்றபோது பரவலாக அதிலே அவர்கள் கவனம் காட்டவில்லை.

13-35 மணி

இந்த சட்ட ஆலோசர்களுக்காக இரண்டு கோடி ரூபாய் ஆண்டு தோறும் நாம் செலவழித்துக் கொண்டு இருக்கிறோம்



1990 ஏப்ரல் 9] [திரு. கோ. பூவராகன்]

ஒவ்வொரு துறையிலும், இன்றைய தினம் பார்த்தால். நீதிமன்றங் களிலே தடை பிறப்பிக்கப்பட்டு அந்த வழக்குகள் அங்கே தேங்கி யிருப்பதை நாம் காணுகின்றபோது அதற்காக ஏற்படுத்தப் பட்ட சட்ட வல்லுநர்கள் என்ன செய்கின்றார்கள்? இந்தச் சட்ட இலாக்கா எத்தனை முறை முயன்று இந்த வழக்குகளிலே நம்முடைய அரசுக்கு வெற்றி தேடி கொடுப்பதற்கு முயன்று இருக்கிறது என்பதை நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் பதிலுரையில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, சென்னை மாநகரத்திலே அவுசிங் போர்ட்டிலே, அசோக் நகரில் கட்டப்பட்ட புதிய வீடுகள், ஒரு அடுக்கு, இரண்டு அடுக்கு என்று கட்டப்பட்டு வேலைகள் முடியாமல் பாதியிலே நிற்கிறது. பல கோடிக் கணக்கான ரூபாய் பெருமானமுள்ள அந்தச் சொத்து இன்றைய தினம் அதிலே ஈடுபட்டிருக்கிற காண்டி ராக்டர்களால் நீதிமன்றத்திற்குச் சென்று தடை விதிக்கப்பட்ட தாலே பல ஆண்டுகளாக அந்த வழக்கு நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டு இருப்பதாலே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. உதாரணத் திற்காகச் சொல்கிறேன், இதுபோன்று பல இருக்கின்றன.

அதேபோன்றுதான் இன்றையதினம், கமர்சியல் டாக்ஸ் ஆபீ சிலே ஏற்படுத்தப்பட்ட வழக்குகள் ஏராளமாக இருக்கின்றன. நம்முடைய அதிகாரிகள் ஒவ்வொரு துறையிலும் விற்பனை செய்கின்றவர்களுக்கு வரி விதிப்பு செய்கின்றார்கள். அந்த வரி விதிப்பை எதிர்த்து அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகிறார் கள், நீதி மன்றத்திற்குப் போகிற போது, அதிலே நம்முடைய சட்டத் துறை வல்லுநர்கள் நீதி மன்றத்திலே நம்முடைய வழக்கு களை எடுத்து வைத்து அதன் மூலம் வழக்காடி வெற்றி பெற்றுத் தந்தால் இன்றைய தினம் கோடிக்கணக்கான ரூபாய் நம்முடைய அரசாங்கத்திற்கு வருவாய்க் கணக்கிலே வரும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று மோட்டார் வெகிகிள்ஸ்-லே ஏதாவதுசட்டத்தின் மூலம் வரி போடுகிறபோது நீதி மன்றத்திற்குப் போகிறார்கள். தடை வாங்கி விடுகிறார்கள். அந்தத் தடையை நம் முடைய வழக்கறிஞர்கள் அப்படி பல ஆண்டுகள் போட்டு வைத்து அதனாலே நம்முடைய அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானம் போய் விடுகிற நிலை இருக்கிறது. அதே போன்றுதான் பொதுவாக நம்முடைய அரசாங்கம் எடுக்கிற நல்ல காரியங் களுக்கு இன்றைய தினம் தடை வாங்குவதாலே, பொதுவாக நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்-சென்னை நகரத்திலே 100 அடி சாலை போடுவதற்கு ஏற்பாடு மிக வேகமாக உருவாகி நடந்து கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். அங்குமிங்குமாக சில பேர்கள் குறுக்கிட்டு தடையைப் பெற்றுவிட்டதாலே அந்தச் சாலையை இன்றைய தினம் பயன்படுத்தமுடியாமல், உரிய

[திரு. கோ. பூவராகன்] [1990 ஏப்ரல் 9

பணத்தை அதற்குச் செலவிட முடியாமல் இருக்கின்ற நிலையை
நீங்கள் அறிவீர்கள். இதுபோன்ற நிலை நகரங்களிலே மட்டு
மல்ல பெரிய ஊர்களிலே கூட இருக்கிறது.

என்னைப் பொறுத்தளவிலே, என்னுடைய தொகுதியிலே
நெய்வேலி இருக்கிறது. நெய்வேலியிலே இன்றையதினம் அந்த
நிறுவனத்தார் அந்த இடங்களைப் பெறுவதற்கு நம்முடைய அர
சாங்கம் முயற்சி எடுத்து இருக்கிறது. அந்த முயற்சியிலே இன்
றைய தினம் பார்த்தால் பல இடங்களிலே வழக்கு மன்றங்களிலே
அந்த வழக்குகள் நிலுவையில் இருந்து கொண்டிருக்கின்றது. அவர்
களுக்குரிய பணம் போய் சேரவில்லை. அந்த இடத்தை அவர்
கள் விட்டுவிட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நீதிமன்றத்திலே
இருக்கிறவர்கள், அதிலும் நம்முடைய இலாக்காவைச் சேர்ந்த
வர்கள், நீதிபதிகள் இதனுடைய நிலையை உணர்ந்து அவர்
களுடைய கஷ்டங்களை உணர்ந்து விரைவிலே அதிலே தீர்ப்பு
கொடுத்து அவர்களுக்குரிய பணத்தை பெறுவதற்கு முயற்சி எடுக்க
வேண்டும். கீழ்க்கோர்ட்டிலே தீர்ப்பு ஆகிவிட்டது. உயர்நீதி
மன்றத்திற்கு வருகிறார்கள். உயர்நீதிமன்றத்திலேகூட விசா
ரணை முடிந்து 10 மாதங்கள் ஆகின்றன. 10 மாதங்களாக
அவர்கள் இன்னும் தீர்ப்பு சொல்லவில்லை. ஒரு நீதி இருக்க
வேண்டும். ஒருவழக்கு, நீதி மன்றத்திற்கு வந்து, விசாரணை
செய்தால் அதற்கு தீர்ப்பு கொடுப்பதற்கு, கட்டாயப்படுத்த
வேண்டாம் என்று சொன்னாலும்கூட, குறைந்த பட்சம் 2, 3
மாதங்களிலே தீர்ப்பு வழங்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்தால்
நலமாக இருக்கும் என்று நான் இந்தச் சமயத்திலே சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். பல வழக்குகள் இன்றையதினம் விசா
ரணை முடிந்தும்கூட, தீர்ப்பு வழங்கப்படாமல் காத்திருக்கிறது.

அதேபோன்று, நெய்வேலியையொட்டி இருக்கின்ற நிலங்கள்
ஆர்ஜிதம் செய்யப்பட்ட அந்த மக்களுக்கு தகுந்த அளவிலே
இன்னொரு நீதிபதியை வைத்து விசாரணை செய்து விரைவிலே
அவர்களுக்கு உரிய தொகை கிடைப்பதற்கு நீங்கள் ஏற்பாடு
செய்ய வேண்டும். நீதிபதிகள் குறைவாக இருக்கிறார்கள், நீதி
மன்றத்திலே பணியாற்றுகின்றவர்களுக்கு, சட்ட ஆலோசர்கள்
இன்னும் நியமிக்கவில்லை என்றெல்லாம் காரணங்கள் சொல்லா
மல் விரைந்து நீதிபதிகளை நியமித்து உரிய நீதி கிடைப்பதற்கு
நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

குறிப்பாக, இன்றைய தினம் நம்முடைய மாநிலத்திலே லாட்
டரிச் சீட்டு ஒரு மாதத்திற்கு கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய்க்கு
மேலே விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டொன்றுக்கு கிட்டத்
தட்ட 300 கோடி ரூபாய்க்கு மேலே இன்றைய தினம் நம்முடைய
வருவாய் மற்ற மாநிலங்களுக்கு போய்க்கொண்டு இருக்கிறது.
நம்முடைய சட்ட இலக்கா அமைச்சர் அவர்கள், சட்ட காரிய
தரிசி அவர்களையும் கலந்து ஆலோசித்து இந்த வருவாய்



1990 ஏப்ரல் 9] [திரு. கோ. பூவராகன்]

முழுவதும் வேறு மாநிலங்களுக்குச் செல்வதற்கு என்ன காரணம்
யார் பொறுப்பு, அதிலே என்ன சட்ட சிக்கல் இருக்கிறது என்பன
வற்றை ஆராய்ந்து முழுக்க முழுக்க நம்முடைய அந்த வருவாயை
நாம் பெறுவதற்கு, ஏற்பாடு செய்யவேண்டுமென்பதை அவர்கள்
கவனத்தில் கொள்ள வேண்டுமென்று இந்தச் சமயத்திலே
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

13–40 மணி

அதேபோன்றுதான் ஒரு வழக்கு. இந்த உயர்நீதிமன்றத்தில்
தீர்ப்பு அளிக்கப்பட்டது. பல நீதிபதிகள் அதிலே தீர்ப்பு
கொடுத்து இருக்கிறார்கள். அதாவது ஜெயபிரகாஷ் கொலை
வழக்கு. அந்த வழக்கில் அவருக்கு தூக்குத் தண்டனை விதிக்
கப்பட்டது. பிறகு மேல்முறையீடு செய்தார்கள். அதாவது
பாரத ஜனாதிபதிக்கு மேல் முறையீடு செய்தார்கள். அங்கே
சென்றது. அது திரும்பி வந்தபோது ஏதோ காலதாமதம் ஆன
தாகவும், அதனால் நிறைவேற்றப்படவில்லை என்றும் ஏதோ
காரணத்தைக் காட்டி அவர்களே இன்றைய தினம் தூக்குத்
தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றியிருக்கிறார்கள்.
ஆனால் பரவலாக வெளியே பேசப்பட்டது என்னவென்றால்
வேண்டும் என்றே சில இடங்களில் இவ்வாறு செய்து அதாவது
இந்த ஜெயபிரகாஷோடு இன்னும் இரண்டு மூன்று பேர்களும்
சேர்த்து அதாவது அவர்களுக்கும் இந்த தூக்குத் தண்டனையை
ஆயுள் தண்டனையாக ஆக்கவேண்டும் என்பதற்காகத்தான்
அவர்கள் காலத்தை நீட்டியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்
கள். இதேபோல் பல வழக்குகள்.

ஆட்டோ சங்கர் வழக்கைப் பற்றி நீங்கள் எல்லாம் கேள்விப்
பட்டிருப்பீர்கள். நாமெல்லாம் மறந்துபோய் இருப்போம். அது
என்ன ஆயிற்று? அது ஆய்வில் இருக்கிறது. அது கோர்ட்டுக்கு
வந்து நீதிமன்றத்திற்கு வந்து இடையிலே நின்றுகொண்டிருக்
கிறது. ஏன் முழு விசாரணை நடத்தப்படவில்லை என்பதை
அறிவிக்கவேண்டும். அதேபோன்று பல வழக்குகள். முதலில்
பரபரப்பாகப் பேசப்படுகிறது. பத்திரிகையில் செய்திகள் எல்
லாம் வருகின்றன. கோர்ட்டுக்குப் போகிறது. கடைசியில்
அதன் நிலை என்ன? யாரும் அறிந்துகொள்ள முடியாது. அது
அப்படியே முடங்கிப் போய்விடுகிறது. இவ்வாறெல்லாம் இருந்
தால் நீதி நிருவாகம் எந்த அளவுக்கு நம்முடைய அரசாங்கத்
தைப் பாதிக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்
பதற்காகத்தான் நான் சொல்கிறேன். காலம் இல்லாத காரணத்
தால் ஒவ்வொன்றாக நான் சொல்லிக்கொண்டு போக விரும்ப
வில்லை. நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் எவ்வாறு இது
போன்ற தேக்கங்களை நிவர்த்திக்கப்போகிறார்கள். அதிக
நீதிபதிகளை வைத்தா? சட்ட ஆலோசகர்கள் பற்றிச் சொல்
கிறார்கள். பதிலுரை அளிக்கிற போது பல ஆண்டுகள் பயிற்சி

[திரு. கோ. பூவராகன்] [1990 ஏப்ரல் 9]

பெற்றவர்களையும் நல்லவர்களையும் நியமித்திருக்கிறோம்
என்று சொல்கிறார்கள். ஆனால் பரவலாகப் பேசப்படுவதை
நான் சொல்ல விரும்புகிறேன். உயர்நீதிமன்றத்திற்கு நம்
முடைய சட்ட ஆலோசகர்கள் போகிறபோது சரியான முறை
யில் வழக்குகளை எடுத்துவைக்கவில்லை என்று சொல்கிறார்கள்.
வல்லவர்களாக நீங்கள் நியமிக்கவேண்டும். இவர்களைப் போடு.
அவர்களைப் போடு என்று நான் சிபாரிசு செய்யவில்லை,
நல்லவர்களாகப் போடுகின்றபோதே வல்லவர்களாகவும் பார்த்துப்
போட வேண்டும். சட்ட நுணுக்கம் அறிந்தவர்களாக, நம்
முடைய வழக்குகள் தோல்வி அடையாமல் பார்த்துக்கொள்கிற
வர்களாகப் பார்த்து நியமிக்கவேண்டும் என்று இந்தச் சமயத்
தில் நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் சில சமயங்களில்
வல்லுநர்கள் வேண்டும் என்பதற்காக அதிக செலவினங்களை
மேற்கொண்டு சிறந்த வழக்கறிஞர்களை நியமிப்பதை மாற்ற
வேண்டும். நம்முடைய வழக்கறிஞர்களே நல்ல வழக்கறிஞர்
களாக அமைகின்ற வகையில், அவர்களே நம்முடைய வழக்கு
களை எடுத்து சிறப்பாக நடத்தக்கூடியவர்களாக நாம் உரு
வாக்கித் தீரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்தெந்த
மாவட்டங்களில் வழக்குகள் அதிகமாகச் சேர்கிறதோ அதற்குத்
தகுந்தவாறு ஸ்பெஷல் கோர்ட்களை நடத்த ஏற்பாடு செய்து
அந்த வழக்குகளை விரைவில் விசாரித்து நல்ல முடிவுக்கு
வருவதற்கு முயற்சிக்கவேண்டும் என்று நான் இந்தச் சமயத்தில்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது 62-க்கு மேற்பட்ட முன்சிப் பதவியிடங்கள் காலி
யாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களை நியமிப்பதில்
என்ன சிக்கல் இருக்கிறது? ஆட்கள் கிடைக்கவில்லையா? நிறைய
சட்டம் படித்தவர்கள் ஏராளமானபேர் இருக்கிறபோது ஏன்
அதில் காலம் கடத்துகிறீர்கள்? ஏதோ தேர்வாணைக்குழுவில்
சொல்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. வெளியே பேசப்
படுகிற பேச்சு இது. தேர்வாணைக் குழுவால் மறுபடியும் பயிற்சி
வைத்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.
இந்தத் தேர்வாணைக் குழு முட்டுக்கட்டையாக இருக்கும்
என்று சொன்னால் வேறு மாற்று காரியங்களை ஏற்பாடு செய்து
விரைவில் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தேர்வாணைக்
குழுவினர் தங்களையே சிறந்த வல்லுநர்கள் என்று சொல்
கிறார்கள். ஆனால் நான் ஒரு நாள் அந்தப் பக்கம் போன
போது பார்த்தேன். எவ்வாறெல்லாம் செய்கிறார்கள் என்று.
அதாவது ஒரு நாள் விடைகளைத் திருத்தும்போது 16,000
ரூபாய்க்கு பிரியாணி வாங்கிப்போட்டார்கள் என்று எழுதி
வைத்திருந்தார்கள். அப்படி வெளியே போர்டு வைத்து இருந்
தார்கள். அப்படி இருந்தும் கூட அங்கே எவ்வாறு தவறு
நடக்கிறது? எனவே இந்தமாதிரி காரியங்களில் இடையூறாக
நடக்கிறது என்று சொன்னால் அதைத் தடுத்து வேறு வகையில்
நீங்கள் தேர்ந்து எடுக்க முயற்சிக்கவேண்டும் என்று நான்



1990 ஏப்ரல் 9] [திரு. கோ. பூவராகன்]

இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எடுக்கின்ற போது விகிதாச்சாரப்படி அதாவது 20 பெர்சன்ட், 30 பெர்சன்ட், 18 பெர்சன்ட் என்று அது என்ன இருக்கிறதோ அந்த அளவுக்கு உத்தியோகத்தில் தகுதி அடிப்படையில் நீங்கள் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சட்ட வல்லுநர்களைப் போடும்போது கூட சென்னை நகரத்தில் 30-க்கு மேற்பட்டவர்களைப் போட்டிருக்கிறீர்கள். அதிலே ஒரே தரப் பட்டவர்களாக நீங்கள் போட்டு இருப்பதாக நான் கேள்விப் படுகிறேன். மிகவும் பிற்பட்டவர்கள் கிடைக்கவில்லை ஆட்கள் இல்லை என்று சொல்ல முடியாது. ஏனென்றால் இன்றைக்கு முக்கால்வாசிப்பேர் சட்டம் படித்தவர்கள், ஆசிரியர்களுக்குப் படித்தவர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே ஆட்களே இல்லை என்று சொன்னால் அதை ஒத்துக்கொள்ள நான் தயாராக இல்லை. எத்தனைபேர்களை எவ்வாறெல்லாம் நியமித்திருக்கிறீர்கள் என்ற பட்டியலை வெளியிட்டால் நலமாக இருக்கும் என்று இந்தச் சமயத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். நேரம் இல்லாத காரணத்தால் நான் அடுத்த சிறை துறைக்குப் போக விரும்புகிறேன்.

நீங்கள் 16 கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்து இருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். இருந்தாலும் அடிப்படைத் தேவையைப் பற்றி எல்லா உறுப்பினர்களும் இங்கே சொன்னார்கள். குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை என்றும், சுகாதார வசதிகள் இல்லை என்றும் சொன்னார்கள். அதாவது சுகாதாரக் கேடுகள் நிறைந்த இடமாக இருக்கிறது. அதைப் போக்குவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

13–45 மணி

உங்களுடைய கவனம் அதிலே இருக்கும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். 16 கோடி ரூபாயிலே ஒரு ஆண்டிலே நீங்கள் செய்யவில்லை என்று சொன்னாலும்கூட, ஆண்டுதோறும் படிப்படியாக இந்த குறைகளை, அடிப்படை வசதிகளை பெற்று தருவதற்கு சிறைச்சாலைகளிலே நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்தச் சமயத்திலே உங்களிடம் சொல்லிக் கொள்கிறேன். இப்போது சட்ட அமைச்சர் அவர்கள் நீதி சார்பாகவும் சிறைச்சாலை சார்பாகவும் கொண்டு வந்திருக்கின்ற மானியத்தை நான் பெரிதும் வரவேற்கிறேன், என்னுடைய தொகுதியிலே ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டப்பட்டு முடிவடையும் தருவாயில் இருக்கிறது. அதிலே ஒரு குறை இருக்கிறது. அங்கே நீதிபதிகளுக்கு குடியிருப்புக்கு இடமில்லாமல் இருக்கிறது. அவர்கள் ஒரு ஏக்கர் நிலம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள், ஒரு ஏக்கர் நிலத்தைப் பெற்றுத்தருவதற்கு இந்த பகுதி

யிலே ஒரு இடம் இருக்கிறது. இந்த ஆண்டே தொடர்ந்து அதற்கு அனுமதி அளித்து அவர்கள் தங்குவதற்கு இடவசதியை பெற்றுத்தருவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நம்முடைய நீதிமன்றங்களில் தேங்கிக்கிடக்கின்ற வழக்கு களில் எல்லாம் முக்கியமாக 'அசைன்மெண்ட்' வழக்கு ஏதாவது இருக்கும் என்று சொன்னால் விரைந்து அந்த மக்களுக்கு நிலவுடமையாளருக்கு பணம் போய் சேரும்படியாக ஏற்பாட் டினை செய்யவேண்டும் என்று சொல்லி என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம், அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வயிற்றிற்கு ஈயவேண்டிய நேரத்தில் கருத்துக்கு ஈவதற்காக நான் இந்த நெருக்கடியான நேரத்தில் நின்றிருக்கிறேன். நெருக்கடிகள் வந்தாலே சட்டங்களே சிறைச் சாலைக்குச் செல்லும். சட்டங்கள் எல்லாம்.....

திரு. என். கணபதி: On a point of clarificatioר, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரம்ஜான் நோன்பு இருக்கின்றார். அவர் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசிக்கொண்டிருக்கலாம். எங்களைப் போன்றவர்கள் நோன்பு இருக்கமுடியாது. எனவே எங்களையும் சற்று கவனிப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நான் ஜாக்கிரதையாகவே சொன்னேன். ஈயவேண்டிய நேரம் என்று சொன்னேன். உங் களுக்கு ஈயவேண்டுமென்றுதான் சொன்னேனே தவிர, நான் உணவு உண்ண வேண்டிய நேரம் என்று சொல்லவில்லை. இருந்தாலும் இந்த நேரம்தான் மிக நெருக்கடியான நேரம், நோன்பு இருந்தால் இந்த நேரத்தில்தான் கொஞ்சம் நாசுக்கான நேரம் மயக்கம் வரும், பேசுவதற்கும் தயக்கம் வரும். அந்த நேரத்திலேதான் என்னைப் பேச துணைத் தலைவர் அவர்கள் அழைத்திருக்கிறார்கள். எனவே துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி நான் சுருக்கமாக முகவுரைகளை எல்லாம் விடுத்து நேரடியாகப் பொருளுக்கு வரலாம் என்று கருதுகிறேன். இன்றைக்கு அரசில் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற ஜனநாயகத்தில் நீதித்துறைக்கு எவ்வளவு குறை இருக்கின்றது என்பதை நாம் உணர்வோம். என்னவென்றால் நிர்வாகம், சட்டத்துறை, சட்டமன்றத்துறை, சட்டமன்றம் இயற்றுகின்ற சட்டங்கள், அதை நடைமுறைப்படுத்துகின்ற நிர்வாகம், இவைகளுடைய நடைமுறைகளையும் சட்ட நுணுக்கங்களுடைய பொருளையும் விளக்குகின்ற, ஆய்வு செய்து வியாக்கியானம் செய்யும் பொறுப்பிலே சட்டத்துறை இருக்கிறது. எனவே





சட்டத்துறைதான் ஜனநாயகத்தினுடைய அடிப்படையாகத் திகழ்கிறது என்பதும், அரசமைப்பு சட்டம் என்று சொன்னால், நீதிமன்றம் உணர்த்துகின்ற வகையிலேதான் அந்த அரசமைப்பு சட்டம் இறுதியாக உருவாகிறது என்பதும் நாம் அறிந்த உண்மையாகும். எனவே ஜனநாயக நாட்டிலே நீதிமன்றங்களும் அந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதிலே இடம் பெறக்கூடியவர்கள் இடம்பெறுகிற நேரத்தில் [illegible] களாக, திறமையானவர்களாக நடுநிலை தவறாதவர்களாக, பொது வாழ்விலே தூய்மையுடையவர்களாக, தாம் செய்கின்ற பணி நாட்டிற்குச் செய்கின்ற பணி, இது நமக்கு செய்கிற பணி அல்ல, தூய பொதுநோக்கு, பெரு நோக்கு உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை கணித்து ஆய்வு செய்து அவர்கள் நியமிக்கப் படவேண்டும் என்பதில் நாம் அதிக அக்கறை காட்டுவதில்லை என்ற ஒரு நிலைக்கு ஆளாகி இருக்கிறோம்.

13-50 மணி

இங்கே பேசியவர்கள் எல்லாம் நீதிமன்றங்களிலே தேக்கங் கள் ஏற்படுகின்றன, வழக்குகள் எல்லாம் தேங்கி நிற்கின்றன என்பதை சுட்டிக்காட்டிப் பேசினார்கள். நீதிமன்றத்தில் தேவை யில்லாத வழக்குத் தேக்கங்கள் ஏற்பட்டால் நாட்டிலே ஏக்கங் கள்தான் ஏற்படும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நீதிமன்றத்திலே பணியாற்றுகின்ற நீதிபதிகளை மட்டும் சுட்டிக்காட்டினால் பயன் இல்லை. வழக்குகளை எடுத்துரைக்கின்ற வழக்குறைஞர் கள் ஒரு காலவரையரைக்குள், பெற்றுக்கொண்ட வழக்குகளை நீதிமன்றத்தின் முன் எடுத்துச் சொல்லி, அதற்கு தீர்ப்பைப் பெற்று கட்சிக்காரருக்கு வழங்கவேண்டும் என்ற பொறுப் புணர்வு வழக்குரைஞர்களுக்கு இருக்கவேண்டும். அடிக்கடி அட்ஜர்ன்மென்ட் கொடுப்பது. ஒரு வக்கீல், நான் ரெடியாக இருக்கிறேன் என்று சொன்னால், அடுத்த வக்கீல் அதற்கு அட்ஜர்ன்மென்ட் கேட்பது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. இதனால் தொடர்ந்து வழக்குகள் நடைபெறா மல், முறையாக தீர்ப்புகள் கிடைக்காமல், வழக்குகள் தேக்க மடைகின்றன. எனவேதான் இன்றைக்கு வழக்கறிஞர்களாக இருப்பவர்களுக்குக்கூட சில தகுதிகள் வேண்டும், சில தன்மைகள் வேண்டும். இரண்டும் இல்லாதவர்கள் இருந்தால் அது நல்ல தல்ல. நேச்சரல் ஆப்டிட்யூட், இயற்கையாக இருந்தால்தான் சட்ட நுணுக்கங்களை ஆராயும் பாங்கு அவர்களுக்கு வரும். அது இருந்தால்தான் அவர்கள் இந்தத் துறையில் வெற்றிபெற முடியும். ஆனால் ஏதாவது படிக்க வேண்டுமென்று படிப்பவர் கள்தான் நிறைய பேர் இருக்கிறார்கள். ஒரு டிகிரி, பிறகு ஒரு போஸ்ட் கிராஜுவேட் அல்லது சட்ட டிகிரி இப்படி வாங்க நினைப்பவர்கள் தான் அதிகம். அப்படி இருந்தால்தான்

கல்யாண மார்க்கெட்டில் ரேட்டுகளை அதிகமாகக் கொடுப்பார்கள். அதுமாத்திரமல்ல, அழைப்பிதழ்களில் தங்களுடைய பெயருக்குப் பிறகு நீண்ட வாசகங்கள் இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் அவர்கள் கடைசியாக போகும் இடம்தான் சட்டக் கல்லூரியாக இருக்கிறது என்பது உண்மை நிலை. இந்நிலை நீடிக்குமானால் அது நாட்டுக்கு நல்லதல்ல. எனவேதான் இன்றைக்கு எங்கேயும் சட்டக் கல்லூரி வந்துவிட்டது. எங்கள் பகுதிக்கு சட்டக் கல்லூரி வேண்டுமென்று கேட்பது போன்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. துறைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர். அவர் எந்த வகையைச் சார்ந்தவர் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலம் மாறிவிட்டது என்ற அங்கலாய்ப்பில் அப்படி நான் பேசுகிறேன். என் காலத்தில் அப்படி இல்லை. என் காலத்தில் ஒரே ஒரு சட்டக் கல்லூரிதான். இப்போது எங்கே பார்த்தாலும் சட்டக் கல்லூரிகள். மதுரையிலே சட்டக் கல்லூரி, திருப்பூரில் சட்டக் கல்லூரி; கொஞ்சம் ஏமாந்தால் வாணியம்பாடியிலும் சட்டக் கல்லூரி என்கின்ற அளவுக்கு எங்கே வேண்டுமானாலும் சட்டக் கல்லூரி தொடங்க அனுமதி கொடுப்பது என்பது இந்தத் தொழிலில் உள்ள முக்கியத்துவத்தைக் குறைக்கிறது.

மாண்புமிகு திரு. துறைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்தில் திருப்பூரை விட்டால் வேலூரில்தான் நீதிமன்றம் இருந்தது. இப்போது வாணியம்பாடியில் இருக்கிறது. குடியாத்தத்திலும் இருக்கிறது. ஆகவே, வழக்கறிஞர்களும் இப்போது அதிகமாக தேவைப்படுகிறார்கள். ஒரே சட்டக் கல்லூரியில் அவ்வளவு பேரையும் உருவாக்குவது சாத்தியமில்லை. ஆகவேதான் ஆங்காங்கே சட்டக் கல்லூரிகள் தோன்றியிருக்கின்றன.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற நிலை ஒரு சட்டப் படிப்பைப் படிப்பது அல்லது பட்ட மேற்படிப்பைப் படிப்பது, மனிதன் மனிதனாக வாழ, சில உண்மைகளை, அறிவுரைகளைப் படிக்க அது தேவை என்று படித்தால் அதில் ஆட்சேபனையில்லை. ஆனால், படிப்பவர்கள் எல்லாம் சர்க்கார் உத்தியோகத்திற்கு வரவேண்டும், சட்டப் படிப்பு படித்தவர்கள் எல்லாம் வழக்கறிஞர்களாக ஆகி, நீதிமன்றத்திற்கு வந்து வழக்கு நடத்த வேண்டுமென்று சொன்னால் வழக்குமன்றத்தில் பல்வேறு குறைகள் ஏற்படும். வழக்குமன்றம் கறைபடும். இது நான் அறிந்த உண்மை. ஆனால் விவகாரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லோரும் அப்துல் லத்தீப் ஆக முடியாது. (சிரிப்பு)

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லோரும் என்னைப் போல ஆக வேண்டும் என்ற நோக்கம் இருக்க வேண்டும் அல்லவா ? ஆனால் இன்றைக்கு எந்தக் கருத்தில் இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, On a point of clarificatian எல்லோரும் திரு அப்துல் லத்தீப் மாதிரி ஆக வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் சட்டம் படித்திருக்கிறார்கள். ஆனால் நீதிமன்றத்திற்கு போவதில்லை. ஆகவே, எல்லோரும் அவரைப் போல ஆகக் கூடாது. (சிரிப்பு).

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் போல இன்றைக்கு வழக்கறிஞர்களாக இருப்பவர்கள் ஏன் என்னைப் போன்று சம்பந்தப்பட்ட துறையை விட்டு சற்று வெளியே சென்று வேறு துறையை தேர்ந்தெடுக்கக்கூடாது? அப்படி தேர்ந்தெடுத்தால் துறையில் தூய்மை ஏற்படும். நான் இரண்டிலும் இருந்தவன் என்ற காரணத்தால் சொல்கிறேனே தவிர கறை அங்கே இருந்தது என்ற பொருளில் தயவுசெய்து யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. நான் சொல்வது மாதிரி நிலை ஏற்பட்டால் அங்கே இருக்கும் பழி குறையும், பழி காரணமாக ஏற்பட்டிருக்கிற கறை அகலும் என்பதிலே நான் பெற்றிருக்கிற அனுபவத்தின் காரணத்தால் சட்டத் துறையைப் பற்றி நெருக்கமாக நான் அறிந்திருக்கிற காரணத்தால் இதை வற்புறுத்தி சொன்னேனே தவிர வேறல்ல.

இன்றைக்கு லட்சம் வழக்குகளுக்கு மேல் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், வழக்கை கோர்ட்டில் போட்டுவிட்டால், அதற்குப் பிறகு தீர்ப்பை விரைந்து பெறுவது என்பது அரிது. அரிது என்கிற நிலைமை இருந்தால் அது நாட்டுக்கு ஏற்புடையதல்ல. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அவை எல்லாம் தொழில் ரகசியங்கள். தொழில் ரகசியங்களை இங்கே பேச முடியாது. நான் கேட்டுக்கொள்வது, இதிலே நீங்கள் ஒரு முறையை வகுத்துக் கொள்ளவேண்டும்.

13–55 மணி

ஒரு காலவரையறையை ஏற்படுத்த வேண்டும். காலவரையறை ஏற்படுத்தி, இந்த வழக்குகளை தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்று சட்டபூர்வமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இல்லையென்றால் எதுவுமே நடக்காது. அதுவும் இன்றைக்கும்

நாம் பார்க்கிறோம். ஒரு வழக்கை எடுத்துக்கொண்டால், குறிக்பாக ரிட் ஜூரிஸ்டிக்ஷன் என்றால் அது மிக உயர்வானது, புனிதமானது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. Ordinarily it is not available to everybody. ஆகையால் அப்படி ஒரு Writ jurisdiction இருப்பதிலே கூட ஒரு subtle distinction வைத்திருக்கிறார்கள். நவீனமான பாகுபாடு. Executive orders and Administative orders Executive Orders-ஆக இருந்தால் write jurisdiction-ஐ invoke செய்ய முடியும். இன்றைக்கு அந்த distinction-ல் பார்க்கக்கூடியதில் எதை எடுத்தாலும் ஸ்டே கொடுப்பது, injunction கொடுப்பது என்றால் Write has become so cheaper. It has become cheaper than a Rent Control Petition.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ரெண்ட் கன்ட்ரோல் சீப்பாகி, எதெற்கடுத்தாலும் ரிட் பெட்டிசன் போடுவது என்ற அளவுக்கு, Anybody can go to the Court, anybody can file any petition on any ground whether it is against an administrative order or against an Executive Order. The Court is inclined to give stay and that all depends on the person who appears before the Court. அதையெல்லாம் விட்டுவிட்டு, இன்றைக்கு ரிட் ஜூரிஸ்டிக்ஷன் நடக்கிறதென்றால், If that is the order of the day, the writ petition has become so cheaper while it is most costly and most precious right of a citizen affected by a Government order or any action. This is a matter which should attract the deepest and gravest concern of everybody of this country, particularly of the Legislature.

Some way must be found out. We must devise some way-out to fix a time-limit within which the cases are to be disposed of, and to the satisfaction of the party. Whatever may be the judgement. That is immaterial. The court must dispose of the case and deliver the judgement within the stipulated period. If any legislative device is contemplated and brought before the Legislature, I will be the first person to welcome such a legislative measure.

அதே நேரத்தில் இன்றைக்கு நான் சார்ந்துள்ள துறை வஃக்ப் துறை. வக்ஃப் துறை என்ன ஜூடிஷியல் பாடியா? இல்லை அட்மினிஸ்டிரேடிவ் பாடியா? என்பது அதனுடைய தலைவனாக இருக்கிற எனக்கே கூட தெரியவில்லை. வக்ஃப் போர்டுக்கு வருகிற வழக்குகள் எல்லாம் கோர்ட் ப்ரோசீடிங்ஸ் மாதிரி ஃபைலாகி நடக்கிறது. அட்ஜர்ன்மென்ட் கொடுக்கப்படுகிறது. வருஷக்





கணக்காக நடக்கிறது. 1976-ல் ஃபைலான கேஸ் இன்னும் நிலுவையில் இருக்கிறதென்று சொன்னால், அதற்கு சம்மரி டிஸ்பொசல்—அப்போதுதான் அது ஒரு நீதியைச் செய்கிற, நிர்வாகத்தைச் செய்கிற அமைப்பாக இருக்க முடியும். இன்றைக்கு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது, Civil Jurisdiction என்ற அளவுக்கு அது ஆக்கப்பட்டு, வக்ஃப்க்கு தனி டிரிப்யூனலை ஏற்படுத்துங்கள். வக்ஃப் கேஸ்களை விசாரிக்க வக்ஃப் டிரிப்யூனல் என்ற தனி டிரிப்யூனலை ஏற்படுத்துங்கள். விரைவில் நீதி கிடைக்க வேண்டுமென்றால் அதைத்தான் செய்ய வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு பூவராகன் அவர்கள் பேசும்போது அரசுத் துறையிலே பணியாற்றுகிற வழக்குரைஞர்களைப் பற்றிச் சொன்னார்கள். வழக்குரைஞர்களுக்கு அக்கறை வேண்டுமல்லவா? அக்கறை இல்லாவிட்டால் பைல்களில் கறைகள் அல்லவா படிந்துவிடும். இன்றைக்கு இருக்கும் முறையிலே அதற்குச் சாத்தியம் இல்லை. Law Officer களுக்குச் சம்பளம் கொடுக்கிறோம். But the tendency of an Advocate is, not to get salary but to get fees. The Hon. Minister for Law is well-aware of the fact that, that is the tendency of the advocate. ஒவ்வொரு கேசின் பைலை எடுக்கும்போதும் அவர்களுக்கு பீஸ் கிடைக்க வேண்டும். மாதம் ஒரு முறை சம்பளம் கொடுக்கிறீர்கள் என்றால், பைலை அனுப்பும்போது பீஸ் வாங்கும் டென்டன்சி தான் இவர்களிடம் இருக்கும். Government Law Officer. களைக் கேட்டுக்கொள்வது Do not give them any fixed salary. Treat them as Standing Counsel to the Government and pay them on merit of each and every case the fees for that particular case.

14—00 மணி

நீங்கள் ரேட் வைத்து பீஸாக அவனுக்குக் கொடுத்தால் அவனுக்கு இன்டரஸ்ட் வரும். இந்த கேஸை நடத்தினால் இவ்வளவு பீஸ் வரப் போகிறது என்று எண்ணி விரைவாக ஆர்வத்தோடு செயல்படுவான். நீங்கள் அவனுக்கு சம்பளமாக கொடுத்தால், கேஸ் நடந்தாலும், நடக்காவிட்டாலும் அவனுக்கு சம்பளம் கிடைக்கப் போகிறது என்ற எண்ணத்திலே இருப்பான். நீங்கள் சட்ட அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுப்பதைவிட ஒவ்வொரு கேஸுக்கும் பீஸ் பிக்ஸ் பண்ணினால்....

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் தவறான கருத்தைச் சொல்கிறார். அவருக்கு விளங்குவதற்காகச் சொல்கிறேன்.

As Standing Council, they are given retainer fees ரூ. 1,000 அல்லது 1,500 என்று சம்பளம் கொடுக்கிறோம். வழக்கிற்குத் தகுந்த மாதிரி பீஸ் கொடுக்கப்படுகிறது. சில வழக்குகளுக்கு நிறைய பீஸ் வருகிறது. அந்தத் தொகையைச் சொன்னால் ஒருவேளை அப்துல் லத்தீப் அவர்கள் கூட அங்கே போய்விடுவார்களோ என்று பயமாக இருக்கிறது. அந்த வழக்கு மன்றத்தில் நடைபெறுகின்ற வழக்கைப் பொறுத்து பீஸ் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அப்துல் லத்தீப் அவர்கள் நோன்பு இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். உங்கள் மீது எங்களுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : என்ன செய்வது? நோன்பு வைப்பதே நாட்டு நன்மைக்காகத்தான். இப்போது நாட்டு நன்மையைப் பொறுத்த விஷயங்களில் நான் கலந்துகொண்டு விவாதம் செய்து கொண்டு இருக்கிறேன். நோன்பு என்பது தெரிந்து தானா என்னை இந்த நேரத்தில் பேச அழைத்து இருக்கிறீர்கள் ? முன்பே அழைத்து இருக்கக் கூடாதா ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் அறிவேன். அவர்களுக்கு கேஸ் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்றாலும், சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்களை கவர்ன்மெண்ட் ஆபீசர் என்று சொல்லும்போது அவர்களை நீங்கள் முறைப்படுத்த வேண்டும். இந்த இந்த கேஸுக்கு இவ்வளவு தான் கொடுக்கப்படும் என்பதை முறைப்படுத்த வேண்டும். அப்படி முறைப்படுத்தினால் தான் அவர்களுக்கு இன்டரஸ்ட் ஏற்படும் என்று நான் கருதுகிறேன். எனவே அரசு அதைச் செய்தால் ஓரளவுக்கு அங்கே சீர்திருத்தம் ஏற்படும் என்று கருதுகிறேன்.

வக்ஃப் போர்டில் அட்வகேட்ஸ் இருக்கிறார்கள். I mean the Wakf Board Advocates, not the Advocates who appear before the wakf Board, but the Advocates who appear for the Wakf Board in different Civil courts. அவர்களை நீங்கள் கவர்ன்மென்ட் அட்வகேட்ஸ் ஆக ட்ரீட் பண்ண வேண்டும். அப்படி அவர்களை நீங்கள் ட்ரீட் பண்ணி, you must pay or you entrust the files of the Wakf Board to your own Advocates. கவர்ன்மென்ட் அட்வகேட்களிடமே கொடுங்கள்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மன்னிக்க வேண்டும். நான் தலையிடுவதற்காக. வக்ஃப் போர்டு நடைபெறுவது, வக்ஃப் போர்ட்டு சட்டத்தின் அடிப்படையில். ஒருவேளை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல் அரசாங்கமே எல்லாப் பொறுப்பையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், வக்ஃப் போர்டு சேர்மனுக்கே அங்கு வேலை இல்லாமல் போய்விடும் என்ற நிலை தான் இருக்கிறது. வக்ஃப் ஆக்ட் 54-ன்படி இப்போது நடைபெற்று வருகிறது. அது ஒரு பூரண அதிகாரம் பெற்ற அமைப்பு. அந்த அமைப்பின் மூலம் வக்கீலை நியமித்துக் கொண்டு வழக்குகளை நடத்துகிறார்கள். ஒருவேளை அப்படி முடியவில்லை என்று சொன்னால் அது வேறு விஷயம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : நான் சொல்வது வக்ஃப் போர்டினுடைய கேஸ்களை அரசு துறையிலே வக்ஃப் போர்டுக்காக வழக்கறிஞர்களாகப் பணியாற்றக் கூடியவர்கள் ஒரு மைய அதிகாரத்தின் கீழ் உட்படுத்தப்பட்டு அவர்கள் நிர்வகிக்கப்படுவார்கள் என்று சொன்னால் அதற்கான நிர்வாகச் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கோருகிறேன். நிர்வாகச் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். வேறு மானியக் கோரிக்கையிலே நான் இதை எல்லாம் பேச முடியாது. அரசு மற்ற துறைகளுக்கு அதன் கஜானாவிலிருந்து செலவு செய்கிறது. The Muslims also are tax-payers. The Government is duty-bound to protect their property, not only for this generation but for all generations to come. But the Government is not defraying any cost of administration of the Muslims' property, especially the Wakf property. Therefore, I demand the Government that as it has been done in several other States, this Government also should come forward to defray the cost of the general administration of the Wakf property. இந்த வக்ஃப் போர்டில் உள்ளவர்களுக்கு கவர்ன்மென்ட் ரேட் போட்டு சம்பளம் கொடுங்கள் என்று சொல்கிறார்கள். வக்ஃப் போர்டு ஆட்டனாமஸ் பாடி என்று சொன்னால் அரசாங்கம் என்ன செய்கிறது ? What is the control which the Government has? If it has control, the Government must also come to our rescue. அதுதான் எங்களுடைய கோரிக்கை. (மணி அடிக்கப்பெற்றது) அதை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த மாவட்ட நீதிமன்றங்களில் கூட இதே நிலை தான். அங்கு ஏகப்பட்ட காலி இடங்கள் இருக்கின்றன. பல நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டிய நிலை இருந்தும் அவர்கள் நியமிக்கப்படாதது நீதிமன்றங்களில் காலி இடங்கள் இருக்கின்றன என்பதுதான் நமக்குக் கிடைத்த தகவல்.

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 9

14—05 மணி

எனவே அரசு உடனடியாக அந்த இடங்களிலே நீதிபதிகளை நிறுவுவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும்.

சில ஊர்களிலே நாம் பார்க்கிறோம். சிவில் கோர்ட் அங்கே ஒரு இடத்திலே இருக்கும். அதைத்தள்ளி நான்கு கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் கிரிமினல் கோர்ட் இருக்கும். அதிலேயும் பல கோர்ட்டுகள் பல இடங்களிலே இருக்கும். ஒரு அட்வகேட் ஒரு இடத்திலே அவரது பணியைச் செய்து விட்டு, வழக்குக்கு வந்து சென்று விட்டு இன்னொரு கோர்ட்டுக்குப் போவதற்குள் அந்த கேஸ் அழைக்கப்பட்டு, அது அட்ஜர்ன் செய்யப்பட்டோ அல்லது டிஸ்மிஸ் செய்யப்பட்டோ இந்த நிலைமைக்கு ஆளாகிறது. நான் ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். உதாரணத்திற்குச் சேலத்தை எடுத்துக்கொண்டால், சேலத்திலே இப்பொழுது இருக்கின்ற முறையிலே நாம் ஏற்காடு ரோட்டிலே அந்த ஒருங்கிணைந்த எல்லா வழக்கு மன்றங்களும் ஒரேயிடத்திலே இருப்பதைப் போல வழக்கு மன்றங்களை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்காடு ரோட்டிலே ஏற்படுத்தினால், எங்களைப் போன்ற வழக்கறிஞர்கள், ஒரேயிடத்திலேயிருந்து எந்தக் கோர்ட்டாக இருந்தாலும், இந்தக் கோர்ட்டிலேயிருந்து அந்தக் கோர்ட்டுக்குப் போய், எங்களுடைய பணியைச் செம்மையாக செய்ய முடியும். ஆகையினாலே, இப்பொழுது சேலத்திலே தயவு செய்து ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். சேலம் போன்று மற்ற நகரங்களிலே இதே நிலைமையை அரசு மேற்கொள்ள வேண்டும். சேலத்திலே அரசு தயவுகூர்ந்து அந்த ஒருங்கிணைந்த—ஒரேயிடத்திலே கட்டிடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று-எல்லா வழக்கு மன்றங்களுக்காகவும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, வாணியம்பாடியிலே—நான்கூட அந்தக் காலத்திலேயிருந்து சொல்லி வருகிறேன். என்ன? நாங்கள் சொல்வது ஒன்று. யாரோ உட்கார்ந்து, யாரோ வந்து கமிஷன் வருகிறார்கள். அவர் ஒரு ஊருக்குச் சிபாரிசு செய்கிறார்கள் என்றால் இதிலே என்ன நியாயம்? நான் எத்தனை நாளாக இந்த மன்றத்திலே வாதாடி வருகிறேன். வாணியம்பாடி ஒரு தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸ். தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸ்-ஐ விட்டுவிட்டு வேறே ஒரு ஊருக்கு வேறு ஒரு ஊர் என்றால் அந்த ஊரும் எனக்கு ஊர்தான். ஆகையினால் அந்த ஊர்க்காரர்கள் கோபித்துக்கொள்வார்கள் என்பதற்காக நான் இதை மறைத்துப் பேச விரும்பவில்லை. வாணியம்பாடி தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸ். அது இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற ஊரை விடப் பெரிய ஊர்.



1990 ஏப்ரல் 9] [திரு. எம். அப்துல் லத்தீப்]

அங்கே ஆலங்காயத்திலிருந்து, ஜமுனாமரத்தூரிலேயிருந்து அங்கேயிருந்து ஜவ்வாது மலையிலே இருக்கிற கேஸ்கள் எல்லாம் இந்தப் பக்கம் மலைப் பகுதியான மாலகடப்பா, வெல்டிமானி பஞ்சா போன்ற மலைப் பகுதிகளிலே யெல்லாம் இருந்து வழக்குகள் வாணியம்பாடிக்கு வந்தால் தான் அவர்களுக்கு முறையாக இருக்கும். அவர்கள் நீதியாக வர முடியும். ஆகவே, தயவு செய்து வாணியம்பாடியிலே முன்சீப் கோர்ட்டை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக ஏற்படுத்தப்பட்ட கமிஷன் வேறு ஒரு முறையிலே சிபார்சு செய்திருந்தாலும், மக்களுடைய பிரதிநிதிகள் சொல்வதை நீங்கள் கருத்திற்கொண்டு அரசு நல்ல முடிவை எடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்து, இந்த நடமாடும் நீதிமன்றங்களைப் பற்றி எழுதியிருக்கிறீர்கள். சென்னையிலே இந்த டிராபிக் கேஸ் களையெல்லாம் பிடித்து, பைன் போடுகின்ற முறையை நடமாடும் நீதிமன்றங்கள் செய்கின்றன. ஆனால் தெரு வீதிகளிலே கடை வைப்பது, தெரு வீதிகளிலே குப்பைகளைக் கொட்டுவது, தெரு வீதிகளிலே நியூசன்ஸ்களைச் செய்வது என்ற இந்த மாதிரி கேஸ்களையும் உள்ளடக்கி இந்த மொபைல் கோர்ட்டுகள் என்று சொல்லப்படுகின்ற இந்தக் கோர்ட்டுகள் உடனுக்குடன் அதற்குத் தண்டனை அல்லது அந்தக் கேஸை விசாரணை செய்து தண்டனை அளிப்பதோ, விடுதலை அளிப் பதோ என்ற வேலையை உடனடியாகச் செய்தால், சென்னை நகரத்திலே நெருக்கடிகள் கொஞ்சம் குறையும். நினைக்கிறதை யெல்லாம் கொண்டுவந்து, தெருவிலே குப்பையைப் போட்டு விடுவது, வீடு கட்டுபவனெல்லாம் டெப்ரியைக் கொண்டு வந்து தெருவிலே போட்டு விடுவது. அதையெல்லாம் யார் எடுப்பது என்று நம்மால் தெரிந்து கொள்ள முடியவில்லை ஆகையினாலே, தெருவிலே இப்படியெல்லாம் குப்பைகளையும், டெப்ரிகளையும் அல்லது தெருவிலே உட்கார்ந்து தகாத, அதாவது மறைந்து செய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் பகிரங்கமாக நடக்கின்றன. இவைகளுக்கெல்லாம் உடனடியாக தண்டனை கொடுக்கக்கூடிய வகையிலே மொபைல் கோர்ட்டு களை நீங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது தமிழைப்பற்றி இங்கே சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது) இறுதியாக நான் சொல்கிறேன். தமிழைப்பற்றி இங்கே சொன்னார்கள். கோர்ட்டுகளிலே யெல்லாம் தமிழ் வர வேண்டுமென்று சொன்னார்கள். நான்கூட எல்லாயிடங்களிலும் தமிழ் வந்தால் ஏற்றுக் கொள்கிறேன். நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால்,

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 9

நம்முடைய வழக்கு மன்றங்களிலே கொடுக்கப்படுகின்ற தீர்ப்புகள் தமிழ் நாட்டிற்கு மட்டும்—அதுவும் உயர் நீதி மன்றத்திலே கொடுக்கப்படுகின்ற தீர்ப்புகள், தமிழ்நாட்டு மக்களால் மட்டும் பயன்படுத்தப்படுவது இல்லை. அதை எல்லா கோர்ட்டுகளிலேயும் பயன்படுத்துகிறார்கள். For Citation, என்று சொல்லக்கூடிய அளவில் கல்கத்தாவிலும் பயன்படுத்தலாம்; பாட்னாவிலும் பயன்படுத்தலாம்; கேரளாவிலும் பயன்படுத்தலாம். அதை நீங்கள் முழுமையாகத் தமிழிலே அமைப்பீர்கள்கள் என்று சொன்னால் நான் சொல்கிறேன். நம்முடைய மெட்ராஸ் ஹைகோர்ட்டினுடைய ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அந்தப் பாரம்பரியத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடுவீர்கள். அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று சொல்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. அப்படிச் சொல்வதாக இருந்தாலும், தமிழ்நாடு-சென்னை உயர்நீதிமன்றம் என்று சொல்வது மிக முக்கியம். ஏனென்றால் இந்தியாவிலே இருக்கின்ற உயர்நீதி மன்றங்களிலே மிகப் புராதனமான உயர்நீதிமன்றம் நம்முடைய மெட்ராஸ் உயர்நீதிமன்றம். இன்றைக்குக்கூட உச்ச நீதிமன்றமாக இருந்தாலும், Privy Council வரையிலேகூட, ஏனைய நாடுகளிலே கூட எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துகின்ற நல்ல தீர்ப்புகளை இந்த மெட்ராஸ் ஹைகோர்ட் செய்திருக்கிறது.

14—10 மணி

மற்றும் ஹைகோர்ட் என்றால் தான் எல்லா நாடுகளிலும் தெரியும். ஆகவே, தயவு செய்து முழுக்க முழுக்க தமிழ்நாடு ஹைகோர்ட் என்று மாற்றுவதை நான் எதிர்க்கிறேன். அதை தமிழ்நாடு-சென்னை ஹைகோர்ட் என்று வேண்டுமானால்-சென்னையை உள்ளிட்டு வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். எனவே, உணர்ச்சிக்கு ஆளாகி இன்றைக்கு அதில் தமிழ் கொண்டு வந்தால் நம்முடைய தரம் குறையும். தரம் குறையும் என்றால் மொழியை பயன்படுத்துகிற காரணத்தால் தரம் குறையும் என்று லத்தீப் சொன்னார் என்று யாரும் தயவு செய்து அதற்கு தப்பான அர்த்தத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம். இதுவரையில் நடைமுறையில் இருந்து வருகிற மொழியைப் பயன்படுத்துவது முறையாக இருக்கும் என்பதை உங்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

இறுதியாக அரங்கம்பாடியில் நீண்டகாலமாக ஒரு கேம்ப் கோர்ட், ஒரு குற்றவியல் நீதிமன்றம் நடநது வந்தது. கடந்த ஒரு வருடமாக அங்கே அது நடைபெறவில்லை. இதனால் சின்ன பிரச்சினைக்கு கூட சீர்காழி கோர்ட்டிற்கு தான் செல்ல வேண்டியிருக்கிறது என்று அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், சகோதரர் சித்திக் அவர்கள் குறைபடுகிறார்கள். நான் அவருடைய சார்பாக அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது. மீண்டும் அந்த கேம்ப் கோர்ட்டை தரங்கம்பாடியில் நடத்தும் வகையில் அரசாங்கம் உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.



1990 ஏப்ரல் 9] [திரு. எம். அப்துல் லத்தீப்]

திரு. ஆ. அறிவழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கையில் எனக்கு பேசுவதற்கு அனுமதி வழங்கியமைக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதித் துறையின் செயல்பாட்டில் முக்கியமான பிரச்சினையாக இருப்பது வழக்குகள் நீண்ட காலமாகத் தேங்கியிருப்பதாகும். இதற்கு ஒரு காரணம் போதிய நீதிபதிகள் இல்லாதது ஆகும். அதனால் தான் அந்த குறைபாடு இருந்து வருகிறது. ஆகவே, உடனடியாக நீதிபதிகள் காலியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது நம்முடைய மாநிலத்தில் 62 முன்சிப் நீதிபதிகளும், மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளும் நிரப்பப்படாமல் இடங்கள் காலியாக இருக்கின்றன. அதே போல 11 சார்பு நீதிபதிகள் இடங்கள் இருக்கின்றன. ஆகவே, உடனடியாக அவர்கள் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓய்வு பெற்று ஆறு மாதங்களிலிருந்து ஒரு வருடம் வரையில் இந்த இடங்களை காலியாகவே வைத்திருக்கிறார்கள். இதற்கு மேலும் நீடிக்க அனுமதிப்பது சரியான முறையல்ல. ஒரு நீதிபதி எந்த வருடத்தில் ஓய்வு பெற இருக்கிறார் என்பது மாநில சட்டத் துறைக்கும், உயர் நீதிமன்றத்திற்கும் நன்கு தெரியும். எனவே, அதற்கு ஆறு மாதங்கள் முன்பாக காலியாக இருக்கிற இடத்திற்கு நபரை உடனடியாக தேர்வு செய்து நீதிபதியை நியமிக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நீதி நிர்வாகத் துறையில் பணியாற்றுகிற உதவியாளர்களும், தட்டெழுத்தர்களும் சரியாக நியமிக்கப்படாத காரணத்தால் அங்கே இருக்கிற வழக்குகள் மேலும் தேங்குகிற நிலை இருக்கிறது. எனவே, அவர்களையும் அதிகமான ஆட்களை தேர்வு செய்து நியமிக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

சட்டக் கல்வி தற்போது பொதுக் கல்வியோடு சேர்ந்தே இருக்கிறது. ஆனால் மற்ற தொழில் கல்விகள், வேளாண்மை, மருத்துவம், பொறியியல், கால்நடை போன்ற பிரிவுகள் அந்தந்த துறையின் கீழே செயல்படுகின்றன. அப்படி செயல்படுவதால் அந்தக் கல்வியின் விசேஷத்தேவையை உணர்ந்து அதை

மேம்படுத்த இயலும். அப்படி இருக்கிற போது ஏன் சட்டக் கல்வி மட்டும் சட்டத் துறைக்கு மாற்றப்படாமல், இன்னமும் பொதுக் கல்வியின் கீழே இருந்து இயங்குகிறது என்று தெரியவில்லை. அரசு சட்டக் கல்வி அறிஞர்களைக் கலந்து கொண்டு, ஆலோசித்து சட்டக் கல்வித் துறையின் கீழே சட்டக் கல்வியைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட முன்சீப்புகள், சார்நிலை நீதிபதிகள் நியமிக்கப்படும்போது அவர்கள் சிவில் கோர்ட்டில், கிரிமினல் கோர்ட்டில் வழக்கறிஞர்களாக இருந்து நேரிடையாக வழக்குகளை நடத்தி வருகிறார்கள். அவர்களை நேரிடையாகத் தேர்வு செய்யும் போது அவர்களுக்கு தகுந்த பயிற்சி அளிக்கப்படாத காரணத்தால் அவர்கள் சரியான தீர்ப்புகளை வழங்க முடியவில்லை. ஆகவே அரசு அவர்கள் தேர்ந்தெடுக்கப்படும்போதே, அவர்களுக்கு 6 மாதமாவது நல்ல பயிற்சியை அளிக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

*14-15 மணி*

இன்றைய தினம் மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அதனால், இங்கே நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், என்னைப் போன்ற பெரும்பாலான வழக்கறிஞர்களும் இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற காரணத்தால், எங்களுடைய துறையிலே மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள வழக்கறிஞர்களுக்கு ஒரு நல்ல எதிர் காலத்தையும், நல்ல நிலையையும் உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நீண்ட நாட்களாக நம்முடைய மாநிலத்தில் உச்ச நீதிமன்றத்தினுடைய, சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் ஒன்று வருவதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்தும், இன்று வரையிலும் அது வராமல் இருப்பது உள்ளபடியே வருத் த்தை உண்டு பண்ணுகிறது. அதே சமயத்தில் இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும் போது, சென்னை சட்டக் கல்லூரியிலே அந்த பெஞ்சை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கூறியபோது எனக்கு எல்லாம் வேதனையாக இருந்தது. காரணம் நானும் இந்தச் சென்னை சட்டக் கல்லூரியிலே படித்த காரணத்தால், அந்தப் பேரும், புகழும் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற காரணத்தால், அங்கே அமைக்கக் கூடாது, அதற்குண்டான தனியான ஒரு இடத்தில் அமைக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.





அதே சமயத்தில் உயர் நீதிமன்றத்தில் இருக்கிற பெஞ்சை மதுரைக்கு மாற்றப்பட வேண்டும் என்று நீண்ட நாட்களாக இருந்து வந்த கோரிக்கை இன்று வரையிலும் நிறைவேற்றப்படவில்லை. இந்த அரசு உடனடியாக அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று என் சார்பாக கேட்டுக் கொண்டு, என்னுடைய திருச்சி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்திலே சார்பு நீதிமன்றம் ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று கோரி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகத் துறை, சிறைச்சாலைத் துறை ஆகிய துறைகளின் செலவினங்களுக்காக கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் நல்ல ஆலோசனைகளைக் கொடுத்திருக்கிறார்கள். மொத்தமாக 10 பேர்கள் பேசியிருக்கிறார்கள். முதலாவதாக, எஸ். டி. உகம்சந்த் அவர்களும், இரண்டாவதாக தென்னரசு அவர்களும், மூன்றாவதாக எஸ். டேனியல் ராஜ் அவர்களும் நான்காவதாக திரு. ரகுமான்கான் அவர்களும், ஐந்தாவதாக பி. எச். பாண்டியன் அவர்களும், ஆறாவதாக திரு. வரதராசன் அவர்களும், ஏழாவதாக ராமசுப்பு அவர்களும், எட்டாவதாக பூவராகன் அவர்களும் ஒன்பதாவதாக திரு. லத்தீப் அவர்களும், பத்தாவதாக அறிவழகன் அவர்களும் பேசியிருக்கிறார்கள். பல்வேறு நல்ல கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் சொல்ல நேரம் உண்டோ என்று நான் அஞ்சினாலும், முடிந்தவரை நான் பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த நீதித் துறையைப் பற்றி நான் தெளிவாக பதில் சொல்வதற்கு முன்னால், அடிப்படையான இரண்டு, மூன்று விஷயங்களை மனதிலே கொள்வது அவசியம் என்று நான் கருதுகிறேன். உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், சுப்ரீம் கோர்ட் ஜட்ஜுகளை நியமிக்கிற அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு இருக்கிறது. அதேபோல் ஹைகோர்ட் ஜட்ஜுகளைப் பொறுத்த வரையில், மாநில அரசுகளையும் மாநில தலைமை நீதிபதிகளையும் கலந்து ஆலோசித்து ஜனாதிபதி அவர்கள் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமிக்கிறார்கள்.

மாவட்ட நீதிபதிகளைப் பொறுத்தவரையில், டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுகளைப் பொறுத்தவரையில், மாநில கவர்னர் அவர்கள், உயர்நீதி மன்றத்தைக் கலந்து ஆலோசித்து, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுகளை நியமிக்கிறார்கள். அதற்கு அடுத்தபடியாக சபார்டினேட் ஜுடிசியரி. சபார்டினேட் ஜுடிசியரியைப் பொறுத்தவரையில், அரசாங்கம், தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனைக் கலந்து ஆலோசித்து, அவர்களுடைய நியமனம் நடைபெறுகிறது. இதை

நாம் மனதிலே கொள்ள வேண்டும். இவர்கள் நியமனம் ஆனதற்குப் பிறகு, குறிப்பாக, சபார்டினேட் ஜுடிசியரி, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜஸ் என்றாலும் சரி, சபார்டினேட் ஜுடிசியரி என்றாலும், அவர்களைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் நம்முடைய அரசாங்கத்திற்குக் கிடையாது. சூப்பர்விசன், கண்ட்ரோல், டிரான்ஸ்பர் போன்ற அத்தனை அதிகாரமும் உயர் நீதிமன்றத்தைச் சார்ந்தது. இதிலே மாநில அரசு தலையிட முடியாது என்பதை கவனத்திலே கொள்ள வேண்டும். ஏன் என்றால், சட்டத்துறை அமைச்சராக இருக்கிறவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்று நினைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக இவைகளை நான் விளக்கமாகச் சொன்னேன்.

14-20 மணி

மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசியபோது முக்கியமாக நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்ற சென்னை உயர் நீதிமன்றத்திற்கு தமிழ்நாடு உயர் நீதிமன்றம் என்ற பெயர் வைக்க வேண்டுமென்று ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தை ஏற்கனவே மாநிலத்தினுடைய உயர் நீதிமன்றத்திற்கு எழுதப்பட்டு, கருத்து அறிந்தபொழுது அவர்கள் அதை ஏற்கவில்லை. சென்னை உயர்நீதி மன்றம் என்று இருப்பதுதான் பொருத்தம் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். என்றாலும் உறுப்பினருடைய அந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு, மீண்டும் தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்ற பெயரைச் சூட்ட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துவோம் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் இரகுமான்கான் பேசும்போது சொன்னார்கள். தமிழ் அறிந்த ஒருவர்தான் தமிழ்நாட்டு உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது ஒரு காலக் கட்டம் வரை பொருத்தமாக இருக்கலாம். ஆனால் இப்படி இருக்கும் நிலைமைகளில் வேறு மாநிலங்களிலிருந்து சில நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். அப்படி வரும் பொழுது அவர்களுக்கு தமிழ் மாத்திரம் இருந்தால் போதாது என்ற நிலை இருப்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. தமிழில்தான் நீதிமன்றங்கள் நடத்தப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வருகிறது. குறிப்பாக சபார்டினேட் கோர்ட்டுகள், டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜஸ் கோர்ட்டுகள், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், சப் ஜுடிசியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், சப் ஜுடிசியல் முன்சிப் கோர்ட்டுகள் இவைகள் எல்லாம் தமிழில்தான் நடைபெறுகின்றன. அதற்குப் பொருத்தமாக சட்டங்களும், தமிழிலே மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன. அது மாத்திரமல்ல. 'The Law Report' எப்படி மெட்ராஸ் லா ஜர்னல் ஆங்கி



லத்தில் வருகிறதோ, அது போன்று தமிழில் தீர்ப்பு திரட்டு என்ற புத்தகம் மாதந்தோறும் வெளியாகிறது. அதன் விலை ரூ. 5. எனவே தமிழ்நாட்டு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழில் நீதிமன்றங்கள் நடக்க வேண்டும் என்பதில் தமிழ்த் துறை மூலமாக நீதித்துறை தீர்ப்புகள் வெளிவருகின்ற நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருப்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து முக்கியமாக பேசப்பட்ட கருத்து. சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவு மதுரையில் அமைக்கப்பட வேண்டுமென்பதுதான். இன்னொரு கருத்து சுப்ரீம் கோர்ட்டினுடைய பிரிவு சென்னையில் அமைக்கப்பட வேண்டுமென்பது ஆகும். ஆக இரண்டு கருத்துக்கள். சென்னையினுடைய ஒரு கிளையை மதுரையில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இங்கே வரதராசன் அவர்கள் சொன்னது போல் 1973 ஆம் ஆண்டிலிருந்து இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்த கோரிக்கை அடிப்படையில் ஜஸ்டீஸ் ஜஸ்வந்த் சிங் தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷன் நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, நம்முடைய கோரிக்கை நியாயமானது என்றுதான் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இதில் முடிவு செய்வதற்கான அதிகாரம் நமக்குக் கிடையாது. இங்கே இருக்கின்ற மாநிலத்தின் நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை மதுரைக்குக் கொண்டு போக வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி தேவையாக இருக்கிறது. மத்திய அரசாங்கம் நம்மிடம் என்ன கேட்கிறது என்று சொன்னால், மாநிலத்தினுடைய தலைமை நீதிபதி அவர்களையும், உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதி அவர்களையும் கலந்தாலோசித்து முடிவு செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏற்கெனவே சில வேளைகளில் கேட்ட பொழுது தமிழ்நாட்டில் உயர் நீதிமன்றம் ஒப்புக் கொள்ளவில்லை என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு ஒரு மாற்றம் இருப்பதாக நான் கருதுகிறேன்.

எப்படி என்று சொன்னால் தமிழ்நாட்டு ஹைகோர்ட்டினுடைய சாங்ஷண்டு ஸ்ட்ரெங்த் 25 நீதிபதிகள். 25 நீதிபதிகளில் இதுவரை 23 நீதிபதிகள் நியமித்து ஆகிவிட்டது. இதிலே பெருமைக்குரிய ஒரு விஷயமாக நான் சொல்ல விரும்புவது நம்முடைய ஆட்சி வந்த பிறகு 5 நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த 5 நீதிபதிகளில் 2 பேர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். இதை மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அரசாங்கம் பொறுப்புக்கு வந்த பிறகு நியமிக்கப்பட்ட 5 நீதிபதிகளில் ஜஸ்டீஸ் சுவாமிதுரை, ஜஸ்டீஸ் மருதமுத்து

ஆகிய இருவரும் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஜஸ்வந்த் சிங் கமிஷன் ரிப்போர்ட்டின் அடிப்படையில் நாம் வலியுறுத்தி வந்திருக்கிறோம். நான் இப்போது சொல்ல விரும்புவது இதுவரை நம்முடைய நீதிமன்றங்களிலே சாங்ஷண்டு ஸ்ட்ரெங்த் 25. இப்போது 7 நீதிபதிகளை அதிமாக்கி இடம் கொடுத்திருக்கிறார்கள். எனவே இப்போது நீதிபதிகளின் எண்ணிக்கை 32 ஆகிறது. இதுவரை 25 நீதிபதிகளை கொண்ட ஒரு ஹைகோர்ட்டில் ஒரு பிரிவை ஏற்படுத்துவதற்காக அப்பீல் செய்வதாக இருந்தால் கூட, 3, 4 பேர் போதும். இப்போது 7 நீதிபதிகள் புதியதாக வருகின்ற காரணத்தால் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்வார்கள் என நான் நம்புகிறேன்.

14-25 மணி

இன்றைக்கு வந்திருக்கிற புதிய தலைமை நீதிபதி அவர்களும் திருச்சியில் நடைபெற்ற ஒரு பத்திரிகைக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள் The matter is under Consideration—என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே தான் தேவையான வசதிகள் இருக்கின்றன. எனவே தான் அரசாங்கத்தின் சார்பாக நாங்கள் மீண்டும் அதை வற்புறுத்துவோம் என்று சொல்ல விரும்புகிறேன். In the changed cirumstances 25 நீதிபதிகளுக்குப் பதிலாக 32 நீதிபதிகள் ஏற்பட்ட நிலையில் தலைமை நீதிபதியும்கூட மத்திய சர்க்காரும் மதுரையில் ஒரு பிரிவை அமைப்பதற்கு ஒத்துக்கொண்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அதே போல் சுப்ரீம் கோர்ட் பென்ச் ஒன்று வேண்டும் என்பதும் பல ஆண்டுகளாக இருக்கிற ஒரு கோரிக்கை. திரு. வரதராசன் அவர்கள் சொன்னது போல 1983-லிருந்து இருந்துக் கொண்டு வருகிறது. சுப்ரீம் கோர்ட் பென்ச் ஒன்று தென்னகத்தில் இருக்க வேண்டும் என்பது ஒரு கோரிக்கை. அதில் குறிப்பாக நம்முடைய கோரிக்கை அது சென்னையில் அமைய வேண்டும் என்பதற்காக. சென்னையில் அமைக்கப்படுவதற்காக வேண்டிய Infastructure Libuary esidential facilities இவைகளெல்லாம் செய்து கொடுக்க அரசு தயாராக இருக்கிறது. எனவேதான் நாம் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகிறோம். இன்றைக்கு நாம் என்ன சொல்லுகிறோம் Carrying justice to the door steps of the people மக்களை நாடிச்சென்று நீதிவழங்கவேண்டும் என்பது இப்போதைய கொள்கை. எனவே தான் சுப்ரீம் கோர்ட்டினுடைய



ஒரு பென்ச், ஒரு பிரிவை சென்னையிலே அமைக்க வேண்டும் என்று அதேபோல உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு பென்ச்சை மதுரையிலே அமைக்க வேண்டும் என்றும் நாம் கேட்கிறோம். சில நீதிமன்றங்களுடைய நிலைமைகளையெல்லாம் நாம் பார்க்கும்போது, திரு. ரகுமான்கான் அவர்கள் கூட சொன்னார்கள். உ.பி.யிலே. இருக்கிற அலகாபாத் ஹைகோர்ட்டினுடைய பிரிவு லக்னோவிலே தனியாக ஒரு பென்ச் இருக்கிறது. பாம்பே—மகாராஷ்டிராவைப் பொறுத்த வரையில் நாக்பூரிலே தனியாக ஒரு பென்ச் இருக்கிறது. மத்தியப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில், இந்தோர், குவாலியர் ஆகிய இரண்டு இடங்களில் இருக்கிறது. என்னுடைய கருத்தின்படி இப்போது 7 நீதிபதிகள் புதியதாக வந்திருக்கிற காரணத்தினால் நம்முடைய மாநிலத்திலே கூட இரண்டு இடங்களில் வைத்துக் கொள்ளலாம். இரண்டு அல்லது மூன்று நீதிபதிகள் இருந்தால் ஒரு பென்ச் என்ற நிலைமை இருப்பதால் இன்றைக்கு இங்கே 7 பேர்கள் இருக்கிறார்கள். 25 பேர்களை அங்கேயே அக்காமடேட் செய்துவிட்டு இந்த 7 பேர்களுக்கு தனியாக வசதிகளை செய்து தர முடியும் என்று நான் நம்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய தலைமை நீதிபதி அவர்கள் பத்திரிகை செய்தி மூலமாக தெரிவித்திருக்கிறார்கள். புதியதாக நியமிப்பதற்கு வேண்டிய தேவையான வசதிகள் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வசதிகளை மதுரையில் செய்து தர முடியும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது நம்முடைய கோரிக்கை, அது ஏற்றுக் கொள்ளப்படும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து மாவட்ட நீதிமன்றங்களைப் பற்றி இங்கே பரவலாக பேசினார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்பது கொள்கை. அது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கொள்கை. புதியதாக மாவட்டம் அமைக்கப்படும்போது அதற்கு ரிப்போர்ட் தயார் செய்கிறார்கள். ஒரு குறிப்பு தயார் செய்யப்படுகிறது. அந்தக் குறிப்பில் மாவட்ட கலெக்டர் அவரது அலுவலகம், அவருடைய வீடு, மாவட்ட போலீஸ் அதிகாரி அவரது அலுவலகம், அவருக்கு வீடு என்று ஒதுக்குகிறார்கள். ஆனால் என்ன காரணமோ துரதிருஷ்டமோ மாவட்ட நீதிபதிக்கு வீடும் ஒதுக்கப்படுவதில்லை மாவட்ட நீதிமன்றத்திற்கான கட்டிடமும் அதில் வருவதில்லை.

எனவேதான் இனிமேல் அமைக்கப்படுகின்ற மாவட்டங்கள் புதிதாக அமைக்கப்படும்போது எப்படி மாவட்ட டிஸ்டிரிக் கலெக்டருக்கும் டிஸ்டிரிக்ட் எஸ்.பி-க்கும் அல்லது டி.ஐ.ஜி.க்கும் அலுவலகமும் குடியிருப்பும் ஏற்பாடு செய்யப்படுகிறதோ அப்படி

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1990 ஏப்ரல் 9

இதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது. அதைத்தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது முக்கியமாக இராமநாதபுரம் மாவட்டத்தைப பொறுத்தவரையில்—முகவை மாவட்டம் 3 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று இராமநாதபுரம் மாவட்டம், இரண்டு காமராசர் மாவட்டம், மூன்று பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டம் ஆகிய 3 மாவட்டங்களாக அமைக்கப்பட்டிருக்கிறது. 3 மாவட்டங்களில் இருக்கிற நீதிமன்றங்களும் இப்போது மதுரையில் இயங்கி வருகிறது. அரசாங்கம் எடுத்திருக்கிற முடிவின்படி இப்போது கோடை விடுமுறைக்குப் பிறகு இராமநாதபுரத்திலும், சிவகங்கையிலும்—சிவகங்கை என்பது பசும்பொன் தேவர் மாவட்டம்—அடுத்து காமராசர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஹைகோர்ட்டினுடைய சிபாரிசினுடைய அடிப்படையிலே ஸ்ரீவில்லிபுத்தூரிலும் அமைக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் இப்போது இன்னொரு கோரிக்கை. திருநெல்வேலி மாவட்டத்தில்—மாவட்டம் இரண்டாகப் பிரிந்த பிறகு, வ.உ. சிதம்பரனார் மாவட்டம், நெல்லைக் கட்டபொம்மன் மரவட்டம் என்று—இரண்டாக பிரிந்த பிறகு, வ.உ. சிதம்பரனார் மாவட்டத்திலே, தூத்துக்குடியிலே ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை. அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, தூத்துக்குடியிலே, இந்த '' சம்மர் வெகேஷன் '' முடிந்தவுடன், அங்கே மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படுமென்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல், கொடைக்கானலில் டிஸ்டிரிக்ட் முன்சிப்......

.14–30 மணி

**பேராசிரியர் க. பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்படுமென்று அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற இந்த நேரத்தில் ஒரு சிறிய விளக்கத்தைத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நேற்றைய முன்தினம், நம்முடைய உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள், திருச்சியிலே பத்திரிகை செய்தியாளர்களிடத்திலே பேசுகின்றபோது, ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றம் அமைக்க உத்தரவிட்டிருக்கிறேன் என்று சொன்னதாக செய்தி வந்திருக்கிறது. ஆனால், உங்களுடைய கொள்கைக் குறிப்பில், பத்தி—19-ல், குடும்பத் தகராறுகளைத் தீர்த்து வைக்க நீதிபதி ஒருவரை அமர்த்துவது குறித்த செய்ற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மட்டும் தான் இருக்கிறது.



1990 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** அவ்வாறு சொல்வது ஃபேமிலி கோர்ட், பேமிலி கோர்ட் வேறு, டிஸ்ட்ரிக்ட் கோர்ட் வேறு. நீங்கள் ஃபேமிலி கோர்ட்டுக்குப் போக மாட்டீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். எங்கெங்கு சண்டைச் சச்சரவுகள், கல்யாணம் ஆகாதவர்கள் தகராறு, மெயின்டனன்ஸ் இந்த விவகாரங்கள் எல்லாம் அங்கே போகிறது. அது இங்கே சென்னை மாவட்டத்திலேதான் ஒன்று இருக்கிறது. அதை இன்னொரு அடிஷனல் கோர்ட்டாக இப்போது நாங்கள் சேங்ஷன் செய்திருக்கிறோம். விஷயம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) கடைசியாகக் கேளுங்கள் ; நேரம் போதாது ; நான் கடைசியாக பதில் சொல்கிறேன்.

கொடைக்கானலில் இதுவரை, டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் கிடையாது. தமிழ்நாடு முழுவதும், ''Separation of judiciary'' ஏற்பட்டு விட்டது. கொடைக்கானலில் மாத்திரம் தாசில்தார் தான் உத்தரவுகள் போட்டுக் கொண்டிருக்கிறார். ஆக, தாசில்தார் அவர்கள், '' Injunction order '' கூட கொடுக்கிறார்கள். இன்று அதை மாற்றி, கொடைக்கானலிலே, முன்சிப் கோர்ட் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. இடம் கிடைப்பதற்கு கொஞ்ச காலதாமதம் ஆகிறது. எனவே தான், கோர்ட்டுக்கு வேண்டிய இடத்தை ஏற்பாடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசப்பட்டு, உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, கொடைக்கானலில், டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பொன்னம்மாள் அவர்கள் இருக்கிறார்கள். நான் சொல்வதை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் சொல்வேனா இல்லையா என்பதை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களது முக்கியமான கோரிக்கை—நிலக்கோட்டை டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் வேண்டுமென்று பலமுறை வற்புறுத்தினார்கள் அந்த அம்மையார். அம்மையாருடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, நிலக்கோட்டையில் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் நிச்சயமாக அமைக்கப்படும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்படுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ராணிப்பேட்டையில் ஒரு சப்-கோர்ட், ராணிப் பேட்டை எம். எல். ஏ., இருக்கிறாரோ இல்லையோ தெரியவில்லை. அக்கறை அவருக்கு இல்லைபோல இருக்கிறது. ராணிப் பேட்டையில் ஒரு சப்-கோர்ட் அமைப்பதற்கான குறிப்பும்

அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அங்கே அமைக்கப்படுமென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், விழுப்புரம் வட்டத்தைச் சேர்ந்த வானூரில் Constitution of a JFCM Court at Vanoor by shifting JFCM Court No. II from Villupuram. விழுப்புரத்தில் இருக்கின்ற ஒரு கோர்ட், வானூரில், ஒரு பர்ஸ்ட்கிளாஸ் மேஜிஸ்ட்ரேட் கோர்ட் அமைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அப்துல் லத்தீப் அவர்களின் கோரிக்கையை மறந்து விடமுடியுமா ? அவரும் பசியோடு சொல்லியிருக்கிறார். அதை நான் மறந்து விட்டால், பாவம் என்னை வந்து சேர்ந்துவிடும். அதற்காக, அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, ஏற்கெனவே வரதராஜன் ஜூரிஸ்டிக்ஷன் கமிஷன் மூலமாக அறிக்கை கொடுக்கப்பட்டிருந்தாலும், அவருடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, வாணியம்பாடியில், அந்த வழக்கு மன்றத்தை அமைப்பதற்கு. மறுபரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு). ஏனென்றால் அங்கேதான் நான் மெட்ரிகுலேஷன் வரை படித்தேன். ஆகையினால் ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டும். எனவே, மறுபரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிறகு, கோர்ட் காம்ப்ளெக்ஸ் பில்டிங், சென்னை, உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையில், அதற்கு பணம் சேங்ஷன் செய்யப்பட்டு அந்த வேலை நடைபெற்று வருகிறது. இன்று நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் மிகுந்த அக்கறையோடு சேலம் நகரத்தைப் பற்றி சொன்னார்கள். ஒரு கோர்ட் காம்ப்ளெக்ஸ் வேண்டுமென்று சொன்னார்கள் இது எல்லா மாவட்டத்திலேயும் இருக்கிற பிரச்சினை. பல மாவட்டங்களில் சொந்தமாக கோர்ட் கட்டிடமே கிடையாது. என்ன காரணமோ ரொம்ப நாட்களாக அதை விட்டு விட்டார்கள். இப்போது கோரிக்கை வந்திருக்கிறது. பல மாவட்டங்களிலிருந்தும். ஒரே இடத்தில் எல்லா கோர்ட்டுகளும் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. முக்கியமாக சேலம் மாவட்டத்தில் இருந்து வந்திருக்கிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அந்த மாவட்டத்தினுடைய நீதிமன்றங்கள் இப்போது இருக்கின்ற நீதிமன்றத்திற்கு அருகிலேயே அவர்கள் குறிப்பிடுவது போல், ஏற்காடு சாலையிலுள்ள அந்த நீதிமன்றங்கள் படிப்படியாக ஒரு " பேஸ்டு புரோகிராமில் "—உடனடியாகச் சொல்ல முடியாது. படிப்படியாக அமைக்கப்படும் என்ற உத்திரவாதத்தை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.



14-35 மணி

அடுத்து, பரங்கிப்பேட்டை மொபைல் கோர்ட் பற்றிச் சொன்னார்கள். மொபைல் கோர்ட் ஏற்பாடு செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கோர்ட்டைப் பொறுத்த வரையில், இது போதும் என்று நினைக்கிறேன். சிறைச்சாலைகளைப் பொறுத்து சில விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, (குறுக்கீடு) கோயம்புத்தூர் பற்றி ஒன்றும் இல்லை. உட்காருங்கள் (குறுக்கீடு).

திரு. இரா. மோகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதித்தாலும் இவர்கள் அனுமதிக்கமாட்டேன் என்கிறார்கள். முதலிலே, ஆனரரி மாஜிஸ்திரேட் என்று நிறையப் பேர் ஒரு காலத்திலே போட்டு, சின்ன வழக்குகளை எல்லாம் இந்த கௌரவ மாஜிஸ்திரேட்டுகள் வந்து முடித்துக் கொண்டிருந்தார்கள். அது என்ன காரணத்தாலோ, தெரியவில்லை. பல ஆண்டுக் காலமாக ஆனரரி மாஜிஸ்திரேட் நியமனம் இல்லாமல் இருக்கின்றது. அந்த ஆனரரி மாஜிஸ்திரேட்களை நியமிக்கக் கூடிய ஒரு எண்ணம் அரசிற்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

இரண்டாவது, நாம் பப்ளிக் ப்ராசிக்யூட்டர், அசிஸ்டென்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர்களை எல்லாம் போடுகிறோம். அவர்கள் தினசரி போலீசோடும், மற்ற துறைகளோடும் ஏராளமான தொடர்பு கொண்டவர்கள். அவர்களுக்கு டெலிபோனே கிடையாது. கோயம்புத்தூரிலேயே டெம்பரரி கனெக்ஷன்தான் மூன்று மாதத்திற்குக் கொடுத்து இருக்கிறார்கள். பப்ளிக் பிராசிக்யூட்டருக்கே. இதை அரசாங்கம் கவனிக்குமா, ஆனரரி மாஜிஸ்திரேட்டுகளை நியமிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அந்த ஆனரரி எல்லாம் " டிஸ்—ஆனர் " ஆகி அதை நீக்கிவிட்டார்கள். மறுபடியும் கொண்டு வருகிற குறிப்பு என்னிடத்தில் இல்லை. ஒரு வேளை தாங்கள் விரும்பினால் அதை எழுதிக் கொடுத்தால் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பப்ளிக் பிராசிக்யூட்டரைப் பற்றி ரொம்ப அக்கறையாகக் கேட்கிறார். என்ன விஷயம் என்று தெரியவில்லை. பப்ளிக் பிராசிக்யூட்டருக்கு போன் வேண்டுமென்பது முக்கியம் தான். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் ஆங்காங்கே போன் அப்ளிகேஷன் கொடுத்தால் அதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும என்ற ஒரு கருத்து அரசாங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கே அதைத்தான் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1990 ஏப்ரல் 9

நம்முடைய அரசு, சிறைகளில் நோய்வாய்ப்படும் சிறைவாசிகளை உடனடியாக, காலதாமதம் ஏற்படாமல் உள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு வசதியாக அனைத்து மத்திய சிறைகளிலும், தனிக் கிளைச் சிறைகளிலும் ஆம்புலன்ஸ் வேன் வாங்க 13.75 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடிக்கடி ஏற்படும் மின் தடங்கலை போக்கிட பாதுகாப்பினை முன்னிட்டு, கோவை மத்திய சிறைச்சாலையிலும் மற்றும் சென்னையில் புதிதாகக் கட்டப்படும் புழல் மத்தியச்சிறையிலும் ஜெனரேட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. எல்லா மத்தியச் சிறைகளிலும் மருத்துவ வசதிகளைப் பெருக்கிடும் வகையில் இரத்தப் பரிசோதனை நிலையம் அமைக்க 1.91 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சிறைச்சாலைக்கும் இ.சி.ஜி. மெஷின் வாங்கிட 2.66 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மற்ற விஷயங்களை எல்லாம் நம்முடைய நண்பர்கள் பேசியிருக்கிறார்கள். அதிலெல்லாம் அதிகமாகச் செலவிட விரும்பவில்லை. ஆனால் சிறைவாசத்திலே, அஜிட்டேஷன் எல்லாம் ரொம்ப நேரம் எடுத்துக் கொண்டது, காங்கிரஸ் நண்பர்களுடைய அஜிட்டேஷன். நான் ஒரு புள்ளி விவரத்தை வாங்கிப் பார்த்தேன்.

அதிலே பார்க்கும்போது, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 3,620 நாட்கள் ஜெயிலுக்குப் போய் இருக்கிறார். அதேபோல் தமிழ்நாட்டு தலைவர் கலைஞரைப் பற்றி ஒரு குறிப்பு எடுத்துப் பார்த்தேன். 1953-ஆம் ஆண்டு கல்லக்குடி போராட்டம், 1958-ஆம் ஆண்டு நேருவுக்கு கருப்புக் கொடி போராட்டம். 1962-இலே விலைவாசிப் போராட்டம். 1963-இலே சட்ட எரிப்புப் போராட்டம் மதுரையிலே. 1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம். மீண்டும் 1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம். 1977-இல் இந்திரா காந்தி கருப்புக் கொடி போராட்டம். 1981-ல் ஈழப் பிரச்சினை சம்பந்தமாக போராட்டம். 1986-இல் அதே ஈழப் பிரச்சினை பற்றி போராட்டம். ஆக 420, 500 நாட்கள் அவர்கள்—இன்னமும் இருக்கிறது—1953, 1962, 1965, ஆக எல்லாம் பார்க்கும்போது மொத்தமாக, இந்திரா காந்தி கருப்புக் கொடி எல்லாம் சேர்த்து மொத்தமாக 420 நாட்கள் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், சிறைக்குச் செல்லும்போது சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இது நாம் போட்ட சட்டம் அல்ல. ஏற்கெனவே இருக்கின்ற சட்டம். சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடந்தால்தான் எல்லோரும் முறையாக இருக்கமுடியுமே தவிர, அதிகாரிகளைக் கண்டிப்பதும், அவர்களைக் குறைகூறுவதும் சரியல்ல என்று நான் நினைக்கிறேன். நான் ஒவ்வொரு சிறைச்சாலை பற்றியும் குறிப்பு வைத்திருக்கிறேன். நேரம் இல்லாத காரணத்தினாலே இதை நான் படிக்க விரும்பவில்லை. ஒட்டுமொத்தமாக நான் சொல்லுவது சிறைத்துறை அதிகாரிகள் மிகுந்த கட்டுப்பாடோடு தான் டேக்ட்புல் ஆகத்தான் நடந்து இருப்பார்கள் என்று நான்



1990 ஏப்ரல் 9] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

14-40 மணி

நினைக்கிறேன். சிறைகள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்று ஒரு குறிப்பைப் பார்க்கும்போது நான் ஒரு குறிப்பைப் படித்தேன். அதைப்படிப்பதற்கு நேரம் இல்லை. ஆகவே சுருக்கமாக படிக்க விரும்புகிறேன். சுனில்பாத்ரா வெர்சஸ் டெல்லி அட்மினிஸ்ட்ரேஷன், டிகார் ஜெயிலைப் பற்றி வி. ஆர். கிருஷ்ண ஐயர் அவர்கள் சொல்லுவதைப் பார்க்கும்போது அந்த ஜெயிலில் குல்தீப் நய்யார் இருந்து இருக்கிறார். குல்தீப் நய்யார் அவர்கள் அந்த ஜெயிலிலிருந்து வந்த பிறகு "ஜெயில்" என்ற ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அந்த புத்தகத்திலுள்ள குறிப்புகளைப் பார்த்தால் எவ்வளவு அந்த டிகார் சிறையின் கொடுமைகளைப் பற்றி நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

"..... one could get as much money as one wanted from outside—again at a price. There was a money order and mail service that perhaps was more dependable than what the postal department could offer.

For instance, when a prisoner in my ward wanted two hundred rupees, he sent a note through a warder to his people in old Delhi and in less than 24 hours he had the money. He paid Rs. 66 as collecting charges—33 per cent was the prescribed "money order charge ".....Dharma Teja, the shipping magnate who served his sentence in Tihar, for instance, had thousands of rupees delivered to him, we were told. And if one could pay the jail functionaries one could have all the comforts one sought. Teja had all the comforts—he had an air-cooler in his cell, a radio–*cum*–record player set and even the facility of using the phone.... Haridas Mundhra, a businessman who was convicted of fraud, was another richman who spent some time in Tihar. Not only did he have all the facilities, but he could also go out of the jail whenever he liked: at times he would be out for several days and travel even up to Calcutta. All this, of course, cost a lot of money. An even richer prisoner was Ram Kishan Dalmia: he spent most of his jail term in hospital. He was known for his generosity to jail authorities, and one doctor received a car as a gift.

But more than businessmen it was the smugglers jailed in Tihar who were lavish spenders. Their food came from Moti Mahal and their whisky from Connaught Place. They had not only wine but also women. "Babuji, not tar's but real society girls'', one warder said. The women would be brought in when "the Sahiblog" went home for lunch, and their empty offices became "recreation rooms". இதுபோல் எல்லாம் இங்கே கிடையாது.

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1990 ஏப்ரல் 9

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப் பற்றி கேட்டார்கள். இஸ்மாயில் கமிஷன் அறிக்கை என்ன ஆகியது. நடவடிக்கை உண்டா ; என்று எல்லாம் கேட்டார்கள். நேரம் இல்லை அதை முழுமையாகப் படிப்பதற்கு, சில குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் நான் படிக்கிறேன். இந்த அறிக்கையைப் பார்க்கும்போது அந்தக் கைதிகளுக்கு மண், யூரினெட்டடு சப்ஸ்டென்ஸ் இவைகளை எல்லாம் போட்டு உணவு கொடுத்து இருக்கிறார்கள் என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். கொடுமையிலும் கொடுமை நடைபெற்று இருக்கிறது. இவைகள் மீது எல்லாம் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வழக்கு மன்றத்திற்குச் சென்று தேங்கி இருந்தாலும் கூட அவைகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு உண்டான குறிப்புகளை வைத்து இருக்கிறோம்.

14-45 மணி

குறிப்பாக, சிறையில் இருப்பவர்களைப் பற்றி ரிஸ்க் அலவன்ஸ் பற்றி சொன்னார்கள். சப்சிடைஸ்டு ரேட்டில் உணவுப் பொருட்கள் வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். 8 மணி நேரம் வேலை வேண்டும் என்று கேட்டார்கள். இப்போது போலீஸ் துறையில் ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. 20 ரூபாய் வீதம் சாதாரண கான்ஸ்டேபிள் முதல் ஐ.ஜி. வரை கொடுக்கப்படுகிறது. அதே கோரிக்கை நம்முடைய சிறைத் துறையின் மூலமாக வைத்து இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு இப்போது சிறைத் துறை காவலர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு வழங்குவதுபோல மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் சிறைத் துறை பணியாளர்களுக்கு வழங்குதல், சிறை தலைமைக் காவலர், முதுநிலைக் காவலர் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் ஆக மொத்தம் 2,650 பேருக்கு 20 ரூபாய் வீதம் கொடுக்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போல, அசிஸ்டென்ட் ஜெயிலர், டெபுடி ஜெயிலர் போன்றவர்களுக்கும், மொத்தம் 2,250 பிளஸ் 171 பேருக்கு மாதம் ஒன்றுக்கு ரிஸ்க் அலவன்ஸாக 20 ரூபாய் வழங்கப்படும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து சப்சிடைஸ்ட் ரேஷன், சப்சிடைஸ்ட் ரேஷன் என்று சொன்னால் பாதி விலையிலே ரேஷன் கொடுப்பது. நான் கூட விசாரித்தேன், என்னென்ன பொருள்கள் பாதி விலையிலே கொடுக்கிறார்கள் என்று. அரிசி, எண்ணெய், சர்க்கரை, மைதா, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை பாதி விலையில்



1990 ஏப்ரல் 9] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

கொடுக்கப்படுகின்றன. அத்தியாவசிய உணவுப் பொருட்கள்
காவல்துறை அலுவலர்களுக்குக் கொடுப்பது போல, சிறைத்
துறை பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் பாதி விலையில்
உணவுப் பொருட்கள் விநியோகிக்கும் முறை நடைமுறைப்
படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஹெட்
வார்டர், வார்டன் கிரேடு 1, கிரேடு 2 போன்றவர்களுக்கு,
ஆக மொத்தம் 2,250 பேருக்கும் அதைப்போல அசிஸ்டென்ட்
ஜெயிலர், டெபுடி ஜெயிலர் ஆகிய 171 பேருக்கும் சப்சிடைஸ்டு
ரேட்டிலே உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத
னால் ஆண்டொன்றுக்கு 18 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய்
செலவாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே, இந்த இரண்டு அறிவிப்புகளை நான் அறிவித்து
மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களுக்கு நான் நன்றி
கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே
சொல்லும்போது, குடும்ப விவகார நீதிமன்றங்களைப் பற்றிச்
சொன்னார்கள். பத்தி 19-ல் குடும்பத் தகராறுகளைத் தீர்த்து
வைக்க கூடுதல் நீதிபதி ஒருவரை அமர்த்துவது குறித்து செயற்
குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று குறிக்கப்
பட்டிருக்கிறது. ஆனால், தலைமை நீதிபதி அவர்கள் திருச்சி
யிலே சொன்னபோது, மாவட்டங்கள்தோறும் அமைக்கப்
படும் என்று சொன்னதாக கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது.
இதிலே எது சரி என்று தயவுசெய்து விளக்க வேண்டும்.

இன்னொன்று, சட்டங்கள் தமிழிலே வரவேண்டும் என்ப
திலே அதிக ஆர்வம் காட்டுகின்ற இந்த அரசு 15 சட்டங்கள்,
ஏறத்தாழ மத்திய மாநில சட்டங்கள் வடிவமைக்கப்பட்டு,
மொழி பெயர்க்கப்பட்டு, அச்சு கோர்க்கப்பட்டு, அச்சடிக்கப்
படுகின்ற நிலையிலே இருந்ததை, அண்மையில் அந்த அச்சுக்
கோர்வையை கலைத்துவிடச் சொல்லி, எழுதுபொருள் அச்சுத்
துறைக்கு ஒரு ஆணை சென்று இருப்பதாகக் கேள்விப்படுகிறேன்.
அது உண்மையா? என்பதையும் தயவுசெய்து கண்டறிந்து
ஆவன செய்ய வேண்டுமென்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஃபேமிலி கோர்ட் பொறுத்த
வரையிலே இப்போது ஒன்றுதான் இருக்கிறது. அதுவும் சென்னை
யிலேதான் இருக்கிறது அந்த கோர்ட்டினுடைய நீதிபதியாக திரு.
சோமசுந்தரம் இருக்கிறார். தலைமை நீதிமன்றத்தினுடைய
சார்பாக இன்னொரு ஃபேமிலி கோர்ட் வேண்டுமென்று கேட்டார்
கள். அதை நாம் அனுமதித்து இருக்கிறோம். அதற்குதிரு. கிருஷ்ண
சாமி நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். உத்தரவுகள்

பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. தலைமை நீதிபதி சொல்லியிருப்பது என்பது அடுத்த ஸ்டேஜாக இருக்கலாம். இப்போது கேட்டிருப்பது அடிஷனல் கோர்ட் வேண்டுமென்று. அதை அனுமதித்து இருக்கிறோம். மாவட்டங்கள்தோறும் ஒரு கோர்ட் வேண்டுமென்று கேட்டிருப்பார் போல் தெரிகிறது. அதைப் பரிசீலித்துப் பார்த்துதான் முடிவு செய்யவேண்டும்.

இந்தச் சட்டங்களை மொழிபெயர்ப்பது பொறுத்த வரையிலே, இப்போது விவரம் இல்லை. விவரம் சேகரித்து நான் உங்களுக்குத் தருகிறேன்.

*திரு. உ.ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறையில் பார்வையாளர்கள் என்று வருகின்றபோது, சமூகப் பணியாளர்கள், சமூகவியலாளர்கள், மனநல மருத்துவர்கள் என்றெல்லாம் வருகிறபோது சட்டமன்ற உறுப்பினர்களையும் பார்வையாளர்களாக நியமிக்க வேண்டுமென்று நான் கோரியிருந்தேன். அதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

இன்னொன்று, குடும்பக் கோர்ட்டிலே ஜீவனாம்சம் வழங்கும்போது, ஜீவனாம்சம் பெறுகின்றவர்கள் வந்து காத்திருந்து வாங்க வேண்டிய சிரமமெல்லாம் இருக்கிறது. அதை மணியார்டர் மூலமாக, குடும்பக் கோர்ட்டுகளிலே ஜீவனாம்சம் பெறுகின்ற பெண்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்ற இரண்டு விளக்கங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைகளிலே எம்.எல்.ஏ-க்களை விசிட்டர்களாக நியமிப்பதிலே, அதிலும் குறிப்பாக திரு வரதராஜன் போன்றவர்களை பார்வையாளர்களாகநியமிப்பதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. இரண்டாவதாக, குடும்பக் கோர்ட்டிலே வரக்கூடிய அந்த ஜீவனாம்சத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டுமென்ற தன்னுடைய எண்ணத்தை ஹைக்கோர்ட்டிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ர. ன. பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுக் காலமாக வற்புறுத்தி வந்த நிலக்கோட்டை முன்சிப் கோர்ட் சாங்ஷன் செய்ததற்கு நம்முடைய மதிப்பிற்குரிய, மாண்புமிகு லா மினிஸ்டர் அவர்களுக்கும் குறிப்பாக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தின் பிரிவை மதுரையில் அமைக்கலாம் என்று சொன்ன ஆலோசனையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு பதிலைச் சொன்னார்கள். அதேபோல 2 நீதிமன்றங்கள் அமைப்பது பற்றி வாய்ப்பு இருப்பதற்கான பல மாவட்டங்களையும் சுட்டிக் காட்டினார்கள். அப்படி ஒரு நிலை வருமானால், வளர்ந்து வருகிற கோவை நகரத்திலே அது அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இப்போது சொல்லிவிட்டால் அதனுடைய சுவாரஸ்யமே போய்விடும்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு பிரிவினருக்கு ஆதரவான பல அறிவிப்புகளை வெளியிட்டார்கள். ஆனால் வழக்குரைஞர்களுக்கு எதுவும் அறிவிக்கவில்லை. ஏற்கெனவே அமல்படுத்தப்படாமல் இருக்கிற Advocates Welfare Fund Actடை அமல்படுத்தினால் அதனுடைய பலன் வழக்கறிஞர்களுக்குக் கிடைக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி நியாயமான கேள்வி. Advocates Welfare Fund Amendment Bill இந்த செஷனிலேயே கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி, மற்றும் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 27,68,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்

திருமதி பாப்பா உமாநாத் மற்றும் திரு. எஸ். பு. உகம்சந்த் ஆகியோர் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,28,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசிற்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (10-4-1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 14-52 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

60 தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது (தமிழ் ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள், எதுவுமில்லை.



## இணைப்பு-1

### மானியக் கோரிக்கை எண் 13.

### நீதி நிருவாகம் 1990-91

### கொள்கை விளக்கக் குறிப்பு.

[59-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அரசின் செயற் பிரிவு மற்றும் நிருவாகப் பிரிவினின்றும் இது தனித்து செயல்படுகின்றது. வழக்கு நிலுவைகளை அகற்ற, அவசியமான இடங்களிலெல்லாம், உயர்நீதி மன்றத்தின் பரிந்துரையின் பேரில், புதியதாகவும் கூடுதலாகவும் நீதிமன்றங்கள் ஏற்படுத்த காலந்தாழ்த்தாது ஒப்புதல் வழங்குவது நீதிமன்றங்களுக்குத் தேவையான இட வசதி, பணியாளர், மேசை நாற்காலி போன்றவை உட்பட அனைத்து வசதிகளுக்கும் வகை செய்வது ஆகிய வழிகளில் அரசு தனது பணிகளை ஆற்றுகிறது.

2. நீதி நிருவாகம் பற்றிய சிறப்புக் கூறுகள் வருமாறு ;— 13 ஆம் எண் மானியக் கோரிக்கையும் நீதி நிருவாகம் தொடர்பான மானியங்களும் இதன் கீழ் குறிப்பிட்டுள்ள நீதி மன்றங்கள், அதிகாரிகள், பணியாளர் அமைப்பு ஆகியவை தொடர்பானவையாகும் :—

(1) உயர் நீதிமன்றம், சென்னை

(2) நொடித்தவர், சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை

(3) சிவில் செஷன்ஸ் நீதிமன்றங்கள் (சென்னை மாநகர் சிவில் நீதிமன்றம் உட்பட) :

(4) சிறு வழக்கு நீதிமன்றங்கள், சென்னை

(5) பெருநகர் மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்

(6) குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்கள் (நீதித்துறைத் தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள், நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்டுகள்).

(7) அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை

(8) அரசு சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்

(9) சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம்.

விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றம், அரசுப்
போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றம், கூட்டுறவுச்
சங்கங்களின் வழக்குகளுக்கான நடுவர் மன்றங்கள், 1976 ஆம்
ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின்படி
செய்துகொள்ளப்படும் மேல் முறையீடுகளைக் கவனிக்கும் மேல்
முறையீட்டு நடுவர் மன்றம் போன்ற நடுவர் மன்றங்கள் அந்தந்
தத் துறையின் நிதிக் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அத்த
கைய நடுவர் மன்றங்களின் செலவு அந்தந்தத் துறைக் கணக்கு
களில் பற்று எழுதப்படுகிறது.

(10) குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றம், சென்னை
மாநகர்.

3. நீதிமன்றங்கள், அலுவலர்களிடையே பின்வருவனவற்றைப்
பற்றிய செலவு, ''சாட்டிய செலவினம்'' என்றும் ''அனு
மதிக்கப்பட்ட செலவினம்'' என்றும் வகைப்படுத்தப்படுகிறது: -

சாட்டியவை.
(1)

1. உயர்நீதிமன்றம் நீதிபதிகள், பதிவாளர் அசல் வழக்குகள் மேல் முறையீடுகள் ஆகிய வற்றைக் கவனிக்கும் பணியாளர் அமைப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் அச்சுத் துறை, சட்டத் தீர்ப்பு அறிக்கையாளர் மற்றும் பணியாளரமைப்பு, உதவிப் பதிவாளர், புதுச்சேரி, புதுச்சேரிக்கு வரம்பை நீட்டித்தல் தொடர்பான பணியாளரமைப்பு, சென்னை மாநகர ஷெரீப் மற்றும் அவரது பணியாளர்கள்.

2. நொடித்தவர் சொத்தாட்சியரும் அவரது பணியாளரமைப்பும்.

அனுமதிக்கப்பட்டவை.
(2)

1. சென்னை மாநகர் சிவில் நீதிமன்றம் உட்பட சிவில் செஷன்ஸ் நீதிமன்றங்கள்.
2. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை.
3. பெருநகர் மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள், சென்னை.
4. குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்கள்.
5. அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை.
6. அரசுச் சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்.
7. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம்.
8. பதிப்பு ஆசிரியர், பணியாளர்கள், தமிழ் சட்ட இதழ் வெளியீடு, சென்னை.



4. சென்னை உயர்நீதிமன்றம்.—மாநிலத்தில் மிக உயரிய
நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். உயர்நீதி மன்றத்திற்கு
ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை தலைமை
நீதிபதியும் சேர்த்து 25 ஆகும். உயர்நீதிமன்ற நீதிபதிகளின்
எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும், உயர்நீதிமன்றத்தில்
முடிவுறாமலுள்ள வழக்குகளைத் துரிதமாக முடிக்கவும்
உயர்நீதிமன்ற நீதிபதிகளின் தற்போதைய எண்ணிக்கையான 25
உடன் மேலும் 7 பதவிகளை அதிகரிக்கக் கோரி இந்திய
அரசுக்கு நேர்வு அனுப்பப்பட்டுள்ளது. இந்நேர்வு இந்திய
அரசினால் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

5. உயர் நீதிமன்றம், உரிமை வழக்குகளில் அசல் தரப்பு
வழக்குகளையும் 'ரிட்' வழக்குகளையும் விசாரணை செய்யும்
அதிகாரம் பெற்றதாகும். உரிமை வழக்குகளிலும், குற்றவியல்
வழக்குகளிலும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம்
இதற்கு உண்டு. சென்னை மாநகருக்குட்பட்ட ரூ. 1,00,000-க்கு
மேல் மதிப்புள்ள அசல் தரப்பு வழக்குகளை சென்னை உயர்நீதி
மன்றம் விசாரணை செய்கிறது. தலைமை நீதிபதி ஏனைய
நீதிபதிகளுக்குப் பணிகளைப் பிரித்து வழங்குகிறார். அனுமதி
கப்பட்ட நீதிபதி எண்ணிக்கை 25-ல், தற்போது தலைமை நீதிபதி
உட்பட 23 நீதிபதிகள் உள்ளனர். தலைமை நீதிபதி மாத
மொன்றுக்கு ரூ. 9,000-மும் ஏனைய நீதிபதிகள் ஒவ்வொருவரும்
ரூ. 8,000-மும் ஊதியமாகப் பெறுகின்றனர். நீதிபதிகளின்
ஊதியம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி வரையறுக்கப்
படுகிறது. அவர்களுடைய பணி நிலைமைகள் உயர் நீதிமன்ற
நீதிபதிகளின் (பணி நிலைமைகள்) சட்டத்திற்குட்பட்டவை
யாகும்.

6. பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிருவாகத்
தலைவர் ஆவார். இவருக்கு உதவியாகப் பல அதிகாரிகள்
அதாவது, கூடுதல் பதிவாளர், மாஸ்டர், துணைப் பதிவாளர்,
நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப்
படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவாளர்கள், நிருவாக அதி
காரிகள், முதுநிலை கணக்கு அதிகாரி அகியோர் உள்ளனர்.

உயர்நீதிமன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது.
அவை நிருவாகத்துறை, நூலகம், அசல் தரப்பு வழக்குப் பிரிவு,
மேல் முறையீட்டுத் தரப்பு வழக்குப் பிரிவு, நொடிப்பு நிலை
வழக்குப் பிரிவு, உச்ச நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் வழக்குப்
பிரிவு, புதுச்சேரி பிரிவு, நீதிமன்ற அதிகாரிகள் பிரிவு, மேல்
முறையீடுகள் பரிசீலனையாளர்கள் பிரிவு, நேர்முக உதவி
யாளர்கள் பிரிவு, மொழி பெயர்ப்பு மற்றும் அச்சுத்துறைப்
பிரிவு, நகல் எடுப்போர் பிரிவு, வரவு-செலவுத் திட்டப் பிரிவு
மற்றும் ஆவணப்பிரிவு ஆகியவையாகும்.

புதுச்சேரி (மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி) தொடர்
பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும் உயர்நீதி
மன்றத்திற்குரியதாகும். புதுச்சேரி தொடர்பான வழக்குகளை

உயர்நீதிமன்றத்தில் கவனிக்கும் அதிகாரி, பணியாளர் ஆகியோர் குறித்த செலவை தமிழ்நாடு அரசு முதலில் ஏற்றுக் கொண்டு பின்னர் புதுச்சேரி அரசிடமிருந்து அத்தொகையைத் திரும்பப் பெறுகிறது.

நீதி வழங்குவதோடு, மாநில நீதித்துறையின் நிருவாகத்திற்கும் உயர்நீதிமன்றம் பொறுப்பு வகிக்கிறது.

7. சட்ட அதிகாரிகள்.—மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள சட்ட அதிகாரிகள், அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்காட நியமிக்கப்பட்டுள்ள வழக்குரைஞர் குறித்த செலவுகளையும் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பான செலவுகள் உட்பட அரசு உரிமையியல் வழக்குரைஞர்களால் செய்யப்படுகிற செலவுகளையும் செய்வதற்கு இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. உயர்நீதிமன்றத்தில் ஒரு மாநில தலைமை வழக்குரைஞரும், ஒரு அரசு உரிமையியல் வழக்குரைஞரும் உள்ளனர். அரசு உரிமையியல் வழக்குரைஞர் தவிர, 8 கூடுதல் அரசு உரிமையியல் வழக்குரைஞர்களும், 28 அரசு வழக்குரைஞர்களும் (உரிமையியல்), இரு அரசு உரிமையியல் சிறப்பு வழக்குரைஞர்களும், உரிமையியல் வழக்குகளை கவனித்து வருகின்றனர். குற்றவியல் வழக்குகளைப் பொறுத்தமட்டில், ஒரு குற்றவியல் அரசு வழக்கு நடத்துநர் உள்ளார். குற்றவியல் அரசு வழக்கு நடத்துநர் ஒருவரைத் தவிர இரு கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்கள், மூன்று அரசு வழக்குரைஞர்கள் (குற்றவியல்) உயர்நீதிமன்றத்தில் உள்ளனர். இவர்களைத் தவிர. மாநகர் அரசு வழக்குரைஞர், மாநகர் அரசு கூடுதல் வழக்கு நடத்துநர்கள் I மற்றும் II, மாநகர அரசு வழக்கு நடத்துநர், மாநகர் அரசு கூடுதல் வழக்கு நடத்துநர்கள் I முதல் VI, அரசு உதவி வழக்கு நடத்துநர்கள், நிலை I, நிலை II ஆகியோரும் உள்ளனர்.

வெளியூர்களில் அரசு வழக்குரைஞர்களும், அரசு வழக்கு நடத்துநர்களும் உள்ளனர். அவர்கள் பதவிக்கால அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர். மேலும் அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் நிலை I, நிலை II ஆகியோரும் உள்ளனர். இவர்கள் நிரந்தரக்காலச் சம்பள ஏற்றமுறையில்சம்பளம் பெறும் முழுநேர அதிகாரிகள் ஆவர். மாவட்ட முன்சிப் நீதிமன்றங்களிலும், சார்நிலை நீதிமன்றங்களிலும் அரசுப் பணியாற்றுவதற்காக வழக்குரைஞர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. அவர்கள் வழக்குரைஞர் அமர்த்துக் கட்டணம் பெற இயலாது. சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள், சம்பந்தப்பட்ட துறையின் வரவு-செலவுத் திட்டத் தலைப்பில் பற்று எழுதப்படுகின்றன. அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு அரசினால் அல்லது சம்பந்தப்பட்ட துறைத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.



8. குற்றவியல் அரசு உதவி வழக்கு நடத்துநர்கள்.—மாநகரிலும், வெளியூர்களிலும், உள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் (நிலை I, நிலை II) மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளைக் கவனிக்கின்றனர். இவர்கள் 1973ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 25ஆம் பிரிவின் கீழ் (மத்தியச் சட்டம் 2/1974) மாநில அரசால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் முறையான சம்பள விகிதம் பெறும் முழுநேர அரசுப் பணியாளர்களாவர்.

குற்றவியல் அரசு உதவி வழக்கு நடத்துநர்களின் சம்பள விதம் வருமாறு :—

(1) குற்றவியல் அரசு உதவி வழக்கு நடத்துநர், நிலை I, ரூ. 2,500–75–3,100–100–-4,200.

(2) குற்றவியல் அரசு உதவி வழக்கு நடத்துநர், நிலை II, ரூ. 2,200–75–2,800–100–4,000.

குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகளில் விசாரணையை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்குடன், ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை II) ஒருவரை அரசு நியமித்துள்ளது.

அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களை மேற்பார்வை செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் தற்போது துறைத் தலைவர் யாருமில்லை. நிருவாக வசதிக்காக, வெளியூர்களிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் மாவட்ட ஆட்சியர்களின் கட்டுப்பாட்டின் கீழும், சென்னை மாநகரிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் சென்னை மாநகர காவல் துறை ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழும் உள்ளனர்.

9. அரசுத் துறைகள் சார்பில் உரிமையியல் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற முத்திரைத்தாள் வாங்கும் வகையில் கணிசமான தொகையை அரசு உரிமையியல் வழக்குரைஞர் செலவிடுகிறார். மேற்சொன்ன செலவு, தற்போது "2014. நீதி நிருவாகம்-114, சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்-A.B. அரசு உரிமையியல் வழக்கறிஞர்-04. அலுவலகச் செலவுகள்" என்பதன்கீழ் பற்று வைக்கப்படுகிறது.

1990–91ஆம் ஆண்டில் "சட்ட அதிகாரிகள்" என்ற தலைப்பின் கீழ் ஆகக்கூடிய மொத்த செலவுத் தொகை ரூ. 1,98,60,000 என்று மதிப்பிடப்படுகிறது. மேற்சொன்ன செலவில் வெளியூரிலுள்ள I, II ஆம் நிலை குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் சம்பளமும், படியும் பணியாளர்களின் சம்பளமும் படியும் அடங்கும். மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சட்ட அதிகாரிகள் (வெளியூர்), அதாவது I, IIஆம் நிலை குற்றவியல் அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் தொடர்பான செலவு, 1981–82ஆம் ஆண்டு முதல் "114. சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்" என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டு வருகிறது.

10. தலைமை ஆட்சியாளர்—பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை.—சென்னை, தலைமை ஆட்சியாளர்—பொறுப்பு சொத்தாட்சியர் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாக துணை தலைமை ஆட்சியாளர்—பொறுப்பு சொத்தாட்சியர் ஒருவர் உள்ளார். இவ்விரு அதிகாரிகளும் உரிய வயதடையாப் பிள்ளைகளின் சொத்துக்கள், மரணமடைந்தவர்களின் எஸ்டேட்டுகள் ஆகிய வற்றைக் கவனித்து வருகின்றனர். அவர்கள் தலைமை ஆட்சியாளர் சட்டத்திலும், பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத் திலும் உள்ள விதி முறைகளுக்கு இணங்க அவர்களிடம் ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். இவ்வதிகாரிகளுக்கு தொழில் நுட்ப முறையில் உதவி செய்வ தற்காக உதவிப் பொறியாளர் ஒருவர் உள்ளார். பட்டயக் கணக்கர் கல்வித் தகுதியுடைய சிறப்பு கணக்கர் பதவி ஒன்றும் இவ்வலுவலகத்தில் உள்ளது.

1990–91ஆம் ஆண்டிற்கு இத்தலைப்பின்கீழ் ரூ. 8,26,000 செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

11. பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்.—சென்னை மாநகரில், பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம், பெருநகர் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் உட்பட 25 பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் இருவர் நடமாடும் நீதிமன்றங்கள் இரண்டில் மாஜிஸ்டிரேட்டுகளாகப் பணியாற்று கின்றனர். பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட்டு மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவராவர். பெருநகர் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட், சார்நிலை நீதிபதி தரத்தைச் சேர்ந்த வராவார். பொருளாதாரக் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த, மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் கூடுதல் தலைமைப் பெருநகர் மாஜிஸ்டிரேட், பதவிகள் இரண்டும் உள்ளன. இரண்டாம், மூன்றாம், நான்காம், பத்தாம், பதினொன்றாம் பெருநகர் மாஜிஸ்டிரேட்களும் சார்நிலை நீதிபதிகள் பதவித்தரத்தைச் சேர்ந்தவர்களாவர். ஏனைய அனைத்துப் பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகளும் மாவட்ட முன்சீப் பதவித் தரத்தைச் சேர்ந்தவராவர். பெருநகர் மாஜிஸ்டி ரேட்டுகள், சென்னை மாநகர் காவல் நிலையங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரமுடையோ ராவர்.

1990–91ஆம் ஆண்டில் இம்மாநகரிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் தொடர்பாக ஏற்படும் செலவு ரூ. 68,28,000 ஆக இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்வது போன்ற குற்றங்கள் குறித்து இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் விசாரணை செய்து தீர்ப்பளிப்பதற்காக, எழும்பூர் இரயில் நிலையத்தில் ஒன்றும், சென்ட்ரல் இரயில் நிலையத்தில் ஒன்று மாக இரயில்வே மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் இரண்டு உள்ளன.





12. மாநகர் சிவில் நீதிமன்றம், சென்னை.—சென்னை மாநகர் சிவில் நீதிமன்றத்தின் 26 நீதித்துறை அதிகாரிகள் (8 மாவட்ட நீதிபதிகள், 18 சார்நிலை நீதிபதிகள்) பணி புரிகின்றனர். மாநகர் சிவில் நீதிமன்றத்தில், மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் தனியாக ஒரு பதிவாளர் பதவி உள்ளது. இவர் நிருவாகத்திற்கு பொறுப்பு வகிக்கிறார். மாநகர் சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகர் முழுவதுமாகும். சென்னை மாநகரில் சிவில் நீதிமன்றம் ரூபாய் 1,00,000 வரை பண அதிகார வரம்பையும், ரூ. 30,000 வரை மேல் முறையீட்டு அதிகார வரம்பையும் கொண்டுள்ளது. சென்னை, மாநகர் நீதிமன்றம் சென்னை மாநகர் செஷன்ஸ் நீதிமன்றமாகவும் செயற்பட்டு வருகிறது. குற்றவியல் சட்டத் திருத்த சட்டத்தின்கீழ் பட்டியலிடப்பட்ட வழக்குகளை (calender Cases) விசாரிக்கும் தனி நீதிபதிகளுக்கான அதிகாரம் சென்னை மாநகர் சிவில் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தை சேர்ந்த சில நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாநகர் சிவில் நீதிமன்றங்கள் தொடர்பாக 1990—91 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 83,54,000 செலவாகுமென்று மதிப்பிடப்படுகிறது.

13. மாவட்டத்திலுள்ள சிவில் நீதிமன்றங்கள்.—இம் மாநிலத்தில் மொத்தம் 17 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. கோயம்புத்தூர், தென் ஆற்காடு (கடலூரில்), இராமநாத புரம், வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம் (வேலூரில்), மதுரை, பெரியார் (ஈரோட்டில்) ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்கள் அமைந்துள்ளன. சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றங்கள் இரண்டு உள்ளன. அந்தந்த கோட்டங்களைச் சேர்ந்த மாவட்ட நீதிபதிகளே செஷன்ஸ் நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர். தொழிலாளர் காப் புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், மோட்டார் வண்டிகள் சட்டம் போன்ற சில தனிச் சட்டங்களின்கீ சிறப்பு நடுவர் மன்றங்களாகவும் இந்த நீதிபதிக பணியாற்றுகின்றனர். சம்பந்தப்பட்ட கோட்டங்களில் சார்நிலை சிவில் நீதிமன்றங்களையும் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களையும் மாவட்ட நீதிபதிகள் ஆய்வு செய்கின்றனர். மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட நீதிபதிகள், அடுத்துள்ள மூன்று அல்லது அதற்கும் அதிகமான மாவட்டங்களில் குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகார வரம்பு கொண்ட சிறப்பு நீதிபதிகளாக செயல்படுகின்றனர். இந்நீதிபதிகள், ரூபாய் 30,000 வரை யிலும் சிவில் மேல்முறையீட்டு அதிகார வரம்பு கொண்டவர் களாயுள்ளனர்.

மேலும் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மாவட்ட செஷன்ஸ் நீதிபதி பதவித் தரத்தில் ஆறு கூடுதல் நீதிமன்றங்களை சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம் புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் அமைக்க அரசு 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பான செலவு '2014 நீதி நிருவாகம்' என்ற கணக்குத் தலைப்பின்கீழ் '' 108. குற்றவியல் நீதிமன்றங்கள் '' என்பதில் பற்று எழுதப்படுகிறது.

மத்திய அரசு தெரிவித்த யோசனையின் அடிப்படையில், இந்த அரசு,சென்னை உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசனை செய்த பின்னர், உள் துறையின் (நீதிமன்றங்கள்) 29—1—1990 ஆம் நாளிட்ட 219 எண் அரசாணையில் 1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் பழங்குடியினர் (அட்டூழியங்களைத் தடுத்தல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 33/1989) 14ஆம் பிரிவின் கீழ் சென்னையிலுள்ள முதன்மை செஷன்ஸ் நீதிமன்றம் உட்பட ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள செஷன்ஸ் நீதிமன்றங்களை 30—1—1990 ஆம் நாளிலிருந்து, அவற்றின் செஷன்ஸ் கோட்டங்களை உள்ளடக்கிய அதிகார வரம்பெல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ஆதிதிராவிடர்—பழங்குடியினருக்கு எதி ராக இழைக்கப்படும் அட்டூழியங்களை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களாகச் செயற்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

14. சார்நிலை நீதிமன்றங்கள்.—இம்மாநிலத்தில் 66 சார் நிலை நீதிமன்றங்கள் (Sub-courts) உள்ளன. இவற்றில், கோயம்புத்தூர், மதுரை ஆகிய இரு இடங்களிலுள்ள விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றக் கூடுதல் ஆயங்களைச் சேர்ந்த நீதிபதி பதவிகள் இரண்டும் அடங்கும், சார்நிலை நீதிபதிகள் அசல் தரப்பு வழக்குகளில், வரம்பேதுமின்றி வழக்குகள் அனைத்தையும் விசாரிக்கும் அதிகாரம் உடையவ ராவார். இவர்களுடைய அதிகார வரம்பு பற்றி சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் 15,000 ரூபாய் வரை மதிப்புடைய பண வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் உள்ள மாவட்ட முன்சிப்கள் வழங்கும் தீர்ப்புகளுக்கெதிராகச் செய்யப்படும் மேல்முறையீடுகளையும், விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரமுடையவராவர். சார் நிலை நீதிபதிகளே செஷன்ஸ் உதவி நீதிபதிகளுமாவர், மேலும் தற்போது சார்நிலை நீதிமன்றங்கள் அனைத்தும் மோட்டார் வண்டி விபத்து கோரிக்கை நடுவர் மன்றங்களாக அமைக்கப் பட்டுள்ளன. 10 ஆண்டுகள் நீதித்துறையில் பணியாற்றிய அனுபவமுள்ள சார்நிலை நீதிபதிகளே மோட்டார் வண்டி விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றங்களாகவும் செயல் படுவதுடன் இந்நடுவர் நீதிமன்றங்களின் நீதிபதிகளாகவும் ப ணியாற்றுகின்றனர்.



15. மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள்.—இம்மாநிலத்தில் 127 மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் உள்ளன, இவற்றோடு மாவட்ட முன்சிப் நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், 8 உள்ளன. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ஆம் நாளி லிருந்து ரூ. 15,000 வரையிலும் பண வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை மாவட்ட முன்சிப்புகள் பெற்றுள்ளனர். மாவட்ட முன்சிப் நீதிமன்றம் ஒவ்வொன்றும் வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பைக் கொண்டுள்ளன. இவர் கள், ரூ. 500 வரை சிறு வழக்கு அதிகார வரம்பையும் செலுத்துகின்றனர். மேலும், இந்நீதிபதிகள் அவர்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் வாடகைக் கட்டுப் பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.

நகலெடுப்போர், நீதிமன்றக் கட்டளைகளைச் சார்வு செய்வோர் ஆகிய பணியாளர் அமைப்புகள் உட்பட, வெளியூர் களிலுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள் மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் ஆகியவை தொடர்பாக 1990–91 ஆம் ஆண்டில 12,46,90,000 ரூபாய் செலவு ஏற்படு மென்று மதிப்பிடப்படுகிறது. இச்செலவில் அதிகாரிகளின் சம்பளம், படிகளும், அரசுப் பணி அஞ்சல் வில்லைகள், கட்டண விதங்கள், வரிகள், வாடகைகள், அலுவலகச் செலவுகள், புத்தகங்கள், குறித்த கால வெளியீடுகள், மின் கட்டணம் தொலை பேசிக் கட்டணம், அறைக்கலன்கள் போன்றவையும் செஷன்ஸ் நீதிமன்றங்கள் முதலியவற்றில் சாட்சியம் அளிக்க வரும் சாட்சி களுக்கு வழங்கத்தக்க உணவு, போக்குவரத்துக் கட்டணம் முதலிய சில்லறைச் செலவுகளும் அடங்கும்.

16. சென்னை,மதுரை,கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.—சென்னையிலுள்ள நான்கு மதுரையில் இரண்டு,கோயம்புத்தூரில் ஒன்று என மொத்தம் ஏழு தொழிலாளர் நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழி லாளர் நலன் வேலைவாய்ப்புத் துறையின் 23–2–1990-ம் நாளிட்ட 279 ஆம் எண் அரசாணையில் வேலூர், சேலம், திருச்சிராப் பள்ளி ஆகிய இடங்களில் தொழிலாளர் நல நீதிமன்றங்களை அமைப்பதற்கும், சென்னையிலுள்ள III கூடுதல் தொழிலாளர் நல நீதிமன்றத்தை கடலூருக்கு மாற்றவும், மதுரையிலுள்ள கூடுதல், தொழிலாளர் நல நீதிமன்றத்தை திருநெல்வேலிக்கு மாற்றவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. மாநிலம் முழுவதிலும் அதிகார வரம்பைச் செலுத்தும் தொழில் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது. தொழிலாளர் நல நீதிமன்றங் கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர், அரசு அனுப்புகின்ற தொழில் தகராறுகள் குறித்தும் சம்பந்தப் பட்ட தரப்பினர் தாக்கல் செய்யும் கோரிக்கை மனுக்கள் குறித்தும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகின்றன.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் அனைவரும் முகாம் அதிகாரிகள் ஆவர். அவர்கள் அனைவரும் முகாம் நீதிமன்றங்களை அமைத்து, அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் எழும் தொழிலாளர் தகராறுகளையும் கோரிக்கை மனுக்களையும் விசாரித்து தீர்வு செய்கின்றனர்.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் தொடர்பாக ஏற்படும் செலவு, கோரிக்கை எண். 13-ன் கீழ், "2230. தொழிலாளர் நலன் வேலைவாய்ப்பு—01 தொழிலாளர்—101. தொழில் உறவு I-திட்டத்தில் சேராதது—AC சென்னை, மதுரை கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள்" என்ற தலைப்பின் கீழ் பற்று எழுதப்படுகிறது.

சென்னை தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவை தொடர்பாக 1990–91 ஆம் ஆண்டில் மொத்தம் 25,41,000 ரூபாய் செலவு ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது.

17. சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை.—மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த நீதிபதியே இந்த நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாவார். சார்நிலை நீதிபதி (Sub-Judge) பதவித் தரத்தைச் சேர்ந்த 7 நீதிபதிகளும் மாவட்ட முன்சீப் பதவித் தரத்தைச் சேர்ந்த 8 நீதிபதிகளும் உள்ளனர். இந்நீதிமன்றத்தில், மாவட்ட முன்சீப் பதவித் தரத்தைச் சேர்ந்த பதிவாளர் பதவி ஒன்று தனியாக உள்ளது. இப்பதிவாளரே நிருவாகத்திற்கும் பொறுப்பு வகிக்கிறார். குறிப்பிட்ட சில ஆணை நிறைவேற்று மனுக்களை முடிவு செய்தல் போன்ற சில நீதித்துறை அலுவல்களையும் இவர் கவனித்து வருகின்றார். மாநகர் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை தலைமை நீதிபதியும், துணை நீதிபதிகளும் செலுத்துகின்றனர். மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே நடுவர் மன்றமாக நீதிபதிகள் V, VI ஆகியோர் பணியாற்றி வருகின்றனர். தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை வாடகை கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் மேல் முறையீட்டு அதிகாரிகளாக நீதிபதிகள் VII, VIII ஆகியோர் பணியாற்றுகின்றனர். IX லிருந்து XV வரையிலான நீதிபதிகள் சென்னை மாநகரத்தில் வாடகை கட்டுப்பாடு அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும், II, III, IV, VII, VIII நீதிபதிகள் வாடகை கட்டுப்பாடு மேல் முறையீடுகளை விசாரணை செய்வதற்குரிய அதிகாரம் உடையவராவர். சிறு வழக்குகள் நீதிமன்றம் தொடர்பாக, 1990–91 ஆம் ஆண்டில் 42,80,000 ரூபாய் செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

முன்னாள் ஜமீன் எஸ்டேட்டுகள், இனாம் எஸ்டேட்டுகள் ஒழிப்பு குறித்து இழப்பீட்டுத் தொகையைப் பங்கிட்டுப் பகிர்ந்தளிக்கும் பணிக்காக, திருச்சிராப்பள்ளியிலும்,





இராமநாதபுரத்திலும் உள்ள நடுவர் மன்றம் தொடர்பாக இந்த உள் சிறு தலைப்பின் கீழ் ஏற்படும் 86,000 ரூபாய் செலவுத் தொகையும் மேற்சொன்ன தொகையில் அடங்கும்.

18. மாவட்டங்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் :

(i) நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்.—இம்மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் 14 உள்ளன. இவற்றுடன், கும்பகோணத்தில் ஒன்றும் கன்னியாகுமரியில் ஒன்றுமாக நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் உள்ளன. பொருளாதார குற்றங்களை விசாரணை செய்ய மதுரையில் கூடுதல் தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட் ஒருவர் உள்ளார். இதற்காக தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் கூடுதல் தனி நீதிபதி ஒருவர் உள்ளார். இந்நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகள் சார்நிலை நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் தங்கள் மாவட்டங்களிலுள்ள குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் தங்களுடைய நிருவாகப் பணியோடு, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் விதிமுறைகளின்கீழ், மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மேல் முறையீடுகள், அந்நீதிமன்றங்களால் மேற்கூறிய நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்போது, அவற்றை இவர்கள் விசாரணை செய்ய மேற்கூறிய சட்டக் கோவையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

(ii) நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்—நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவி, நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவியாக நிலை உயர்த்தப்பட வேண்டுமென்றும், நிலை உயர்த்தப்பட்ட பதவி தமிழ்நாடு மாநில நீதித்துறைப் பணியின் கீழ் ஒரே பதவியாக மாவட்ட முன்சீப் பதவியுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்றும், உள்துறையின் 31–1–1976 ஆம் நாளிட்ட 202 ஆம் எண் ஆணையில் அரசு ஆணை பிறப்பித்தது.

தமிழ்நாடு மாநில நீதித்துறைப் பணி விதிகளைத் திருத்தி அரசு உள்துறையின் 6–10–1988 ஆம் நாளிட்ட 2196 ஆம் எண்ணில் ஆணை பிறப்பித்துள்ளது. திருத்த விதிகள் 6–10–1988 லிருந்து செயலுக்கு வந்துள்ளன. உயர்நீதிமன்றம், 31–10–1988 ஆம் நாளிட்ட தன்னுடைய 102/88 ஆம் எண் அறிவிக்கையில் மாவட்ட முன்சிப்புகள், நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள், உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோருக்கு மாவட்ட முன்சிப் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள் என மறு பதவிப்பெயர் அளித்துள்ளது. தற்போது நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு [illegible] 224 உள்ளன.

19. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்
திற்கும் 1990—91 ஆம் ஆண்டில் 6,48,50,000 ரூபாய் செலவு
ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

இவை தவிர, பயணச் சீட்டின்றிப் பயணம் செய்வது போன்ற
குற்றங்களை இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் விசாரணை
செய்ய இரயில்வே மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், எழும்பூர்
இரயில் நிலையத்தில் ஒன்றும், சென்ட்ரல் இரயில் நிலையத்தில்
ஒன்றும் இருப்பதுடன், வட ஆற்காடு-அம்பேத்கார், தென் ஆர்க்
காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சி
ராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இரயில்வே மாஜிஸ்டிரேட்
நீதிமன்றங்களும் உள்ளன. இரயில்வே மாஜிஸ்டிரேட் நீதிமன்
றங்களுக்குரிய செலவை நீதித்துறையே ஏற்கிறது. மேற்குறிப்
பிட்ட நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத் தொகை, நீதித்
துறை மேற்கொண்ட செலவிற்குப் பதிலாக அத்துறைக் கணக்கில்
வரவு வைக்கப்படுகிறது.

ஏழாம் நிதிக்குழு நீதித்துறையின் நிலையை உயர்த்துவதற்
காக குற்ற வழக்கு நீதிமன்றங்கள் நான்கினை அதாவது நெய்
வேலியில் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதி
மன்றத்தையும், திருவண்ணாமலை, கோபிச்செட்டிப்பாளையம்,
வள்ளியூர், ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் உட்கோட்ட
நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தையும் ஏற்படுத்துவதற்
காக 1979 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையிலான
கால அளவிற்கு 10:04 இலட்சம் ரூபாயை ஒதுக்கியது. நீதித்
துறை, மேற்குறிப்பிட்ட நிதி ஒதுக்கத்தை முழுவதுமாகப் பயன்
படுத்தியுள்ளது. அத்துறை மேற்குறிப்பிட்ட கால அளவில்
13,47,439 ரூபாய் செலவிட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நான்கு
நீதிமன்றங்களுக்கு, மாஜிஸ்டிரேட்டுகள் மாவட்ட முன்சீப் பதவி
கள் ஒருங்கிணைப்பு குறித்த அரசு ஆணையின்படி மறு பதவிப்
பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவை இப்போதும் செயல்
பட்டு வருகின்றன. அந்நீதிமன்றங்களுக்கான செலவைத் தற்
போது தமிழ்நாடு அரசு 1984—85 ஆம் ஆண்டிலிருந்து மேற்
கொண்டு வருகிறது.

1955 ஆம் ஆண்டு மக்களுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்
கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மதுரை, திருச்சிராப்
பள்ளி, கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்
வொன்றிலும் ஒன்று என்ற வகையில் நீதித்துறை முதல் வகுப்பு
மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் நான்கிற்கும் உள்துறையின்
13—11—1981 ஆம் நாளிட்ட 2688 ஆம் எண் அரசாணையில் அனு
மதி அளிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்களுக்கான
செலவில் 50 சதவீதத் தொகை மத்திய அரசிடமிருந்து பெறத்
தக்கதாகும். மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தனி
நீதிமன்றங்கள், பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்
யும் தனி நீதிமன்றங்கள் ஆகியவை தொடர்பாக ஏற்படுகின்ற
செலவைப் பற்றெழுதுவதற்காக இரண்டு தனியான கணக்குத்
தலைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்சொன்ன நீதிமன்



றங்கள் தொடர்பாக ஏற்பட்ட செலவு இதற்கு முன்னர் '' குற்ற
வழக்கு நீதிமன்றங்கள் '' என்னும் கணக்குத் தலைப்பின் கீழ்
பற்றெழுதப்பட்டன. மக்கள் உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்
கீழ் வழக்குகளை விசாரணை செய்யும் தனி நீதிமன்றங்களுக்
காக 1990—91 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 8,66,000
ரூபாயும், பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்யும்
தனி நீதிமன்றங்களுக்காக 7,50,000 ரூபாயும் ஒதுக்கீடு செய்
யப்பட்டது. குடும்பத் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் நீதி
மன்றம் ஒன்றை சென்னையில் ஏற்படுத்த அரசு உள்துறையின்
21—9—1988 ஆம் நாளிட்ட 2062 ஆம் எண்ணுள்ள ஆணையில்
அனுமதியளித்துள்ளது. இந்நீதிமன்றம் 3—10—1988 முதல்
செயற்பட்டு வருகிறது. குடும்பத் தகராறு நீதிமன்றம் தொடர்
பாக 1990—91 ஆம் ஆண்டில் 7,57,000 ரூபாய் செலவு ஏற்
படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. குடும்பத் தகராறுகளைத்
தீர்த்து வைக்கக் கூடுதல் நீதிபதி ஒருவரை அமர்த்துவது பற்றிய
செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

20. தமிழில் சட்ட இதழ்கள்.—''தீர்ப்புத் திரட்டு'' என்னும்
சட்டத் தமிழ் (திங்கள்) இதழ் ஒன்றை உயர்நீதிமன்றம் வெளி
யிட்டு வருகிறது. மாவட்ட நீதிபதி நிலை பதவித் தரத்தில்
தலைமைப் பதிப்பாசிரியர் ஒருவரும், சார்நிலை நீதிபதி பதவித்
தரத்தில் இணைப் பதிப்பாசிரியர் ஒருவரும், உதவிப் பதிப்
பாசிரியர், சுருக்கெழுத்துத் தட்டச்சர், தட்டச்சர், படி திருத்து
பவர், அலுவலக உதவியாளர்கள் ஆகிய பணியாளர்களை நிய
மிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. தமிழ் சட்ட இதழ்
தலைமைப் பதிப்பாசிரியர் அலுவலகப் பணியாளர்களுக்கு வழங்
கப்படும் சம்பளம், படிகள் குறித்த செலவு '' 2014. நீதி நிரு
வாகம்—800. ஏனைய செலவு—ஏசி. சட்ட இதழ் வெளியிடுதல்''
என்னும் கணக்குத் தலைப்பில் பற்றெழுதப்படுகிறது, 1990—
91 ஆம் ஆண்டுக்கான செலவு ரூ. 5,46,000 என்று மதிப்பிடப்
பட்டுள்ளது. தீர்ப்புத் திரட்டு என்னும் சட்டத் தமிழ் (திங்கள்)
இதழ், வழக்குரைஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஓர் இதழ்
ரூ. 5 என்று குறைந்த விலையில் விற்பனைக்குக் கிடைக்கிறது.

21. நீதிமன்றக் கட்டிடங்கள்.—நீதித்துறையில் உயர்நீதி
மன்றக் கட்டிடங்களையும், ஏனைய கட்டிடங்களையும் பரா
மரிப்பதற்குரிய செலவு 13 ஆம் எண். மானியக் கோரிக்கையில்
'' 2059. பொதுப் பணிகள் '' என்கிற கணக்குத் தலைப்பின்கீழ்
காட்டப்படுகிறது. 1990—91 ஆம் ஆண்டில் செய்யக் கருதி
யுள்ள செலவு, 12,50,000 ரூபாய் ஆகும்.

22. 1989—90 ஆம் ஆண்டில் பின்வரும் இனங்களுக்கான
செலவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

(1) படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டமாக 4.13
கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், சென்னை உயர்நீதி
மன்றத்தில் கூடுதலாகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு,
உள்துறையின் 27—2—1988 ஆம் நாளிட்ட 371 ஆம்

எண்ணுள்ள ஆணையில் நிருவாக அனுமதியை அளித்துள்ளது. 1989—90 ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய்க்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

(2) நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூரில் மாவட்ட முனிசிப் நீதிமன்றக் கட்டிடங்களை விரிவுபடுத்துவதற்காக 90,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது. 1989—90 ஆம் ஆண் டிற்கு 65,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(3) சென்னை மாநகர் கூடுதல் சிவில் நீதிமன்றக் கட்டிடத் திற்கு மேல் இரண்டாம் தளம் கட்டுவதற்காக 66 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டது.

(4) போளூரில், நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் தனிவகைப் பழுதுபார்ப்புப் பணியை மேற்கொள்வதற்காக 26,950 ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டது.

(5) சென்னை உயர்நீதிமன்றக் கட்டிடத்தில் தாழ்வாரம், நீதிமன்றக் கூடங்கள், அறைகள், அலுவலகம், பழைய வழக் குரைஞர் அறைகள் ஆகியவற்றின் மேல்தளத்திலிருந்து மழைநீர் ஒழுகாமலிருக்கத் தனிவகைப் பழுதுபார்ப்புப் பணியை மேற் கொள்வதற்காக 12.70 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கப் பட்டது.

(6) ஆரணியிலுள்ள மாவட்ட முனிசிப் நீதிமன்றக் கட்டி டத்தில் தனிவகைப் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள் வதற்காக 78,000 ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டது.

(7) படிப்படியாக நிறைவேற்றப்படும் முறையின்கீழ் உயர்நீதிமன்றத்தின் II, III, IV, V, VI, VII, X, XI, XII, XIII, XIV, XVII ஆம் எண்களுள்ள கூடங்களில், கூரையில் பொருத்தப்படும் மின்விசிறிகளைக் கூடுதலாக அமைக்க 75,820 ரூபாய்க்கு அனுமதியளிக்கப்பட்டது. முதற்கட்டமாக இவ்வாண்டில் ரூ. 22,260 வழங்கப்பட்டுள்ளது.

(8) போளூரில் இலவசச் சட்ட உதவி மையத்திற்கான கட்டிடத்தை கட்டுவதற்காக 50,000 ரூபாய்க்கு அனுமதி யளிக்கப்பட்டது.

(9) திருப்பூரில் இலவசச் சட்ட உதவி மையத்திற்கான கட்டிடத்தைக் கட்டுவதற்காக 76,000 ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டது.

(10) விழுப்புரத்தில் இலவசச் சட்ட உதவி மையத்திற் கான கட்டிடத்தைக் கட்டுவதற்காக 50,000 ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டது.

23. மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுதல்.—மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுதன் அவசியம் குறித்து 1973-ம் ஆண்டிலேயே அரசு





பரிசீலித்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246-ம்
பிரிவின்படி உயர்நீதிமன்றத்தினை அமைத்து நிருவகிக்கும்
அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு மட்டுமே உரியதாகும்.
எனவே, இம்மாநிலத்தின் தென் மாவட்டங்களிலுள்ள வழக்கு
தொடுக்கும் பொதுமக்களின் தேவையினை நிறைவு செய்யும்
வகையில், உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றை அல்லது முகாம்
நீதிமன்றத்தையாவது நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்கு
மாறு 1973 ஆம் ஆண்டிலேயே மத்திய அரசுக்கு இம்மாநில
அரசு கடிதம் எழுதியது. மாநிலத் தலைநகரங்கள் தவிர
ஏனைய இடங்களில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை
நிறுவுவது குறித்து அனைத்துக் கூறுகளையும் கண்டறிவதற்காக
உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியான திரு. ஜஸ்வந்த்
சிங் என்பவர் தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு ஏற்கனவே
நியமித்தது. தமிழக அரசின் மேற்படி கோரிக்கையை மத்திய
அரசு இக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியது. திரு. ஜஸ்வந்த்
சிங் தலைமையிலான குழு 1984-ல் தமிழ்நாட்டிற்கு மூன்று
முறை வருகை தந்து இம்மாநில அரசின் பிரதிநிதிகளுடன்
கலந்துரையாடியது. கோயம்புத்தூர், உதகமண்டலம், திருச்சி
ராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, கொடைக்கானல், திருநெல்வேலி,
சென்னை ஆகிய இடங்களில் வசிக்கும் வழக்காடு மக்கள், இதில்
ஆர்வமுள்ள மக்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின்
கருத்துக்களைக் கேட்டறிந்தது. சென்னை உயர்நீதிமன்றத்
தலைமை நீதிபதியுடனும் தமிழக அரசின் ஏனைய அதிகாரி
களுடனும் விவாதித்தது. ஜஸ்வந்த்சிங் குழு தம்முடைய
அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தது. மத்திய அரசு
நீதிபதி ஜஸ்வந்த்சிங் கமிஷன் அறிக்கையையும் பரிந்துரை
யையும் தமிழ்நாடு ஆளுநர், முதலமைச்சர், சென்னை உயர்நீதி
மன்றத் தலைமை நீதிபதி ஆகியோருக்கு அனுப்பி, சென்னை
உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியைக் கலந்தாலோசித்துக்
குறிப்புரைகள் அளிக்குமாறு மாநில அரசைக் கேட்டுக் கொண்
டது. இது குறித்து சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி
யுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. உயர்நீதிமன்றம் தனது கருத்
துக்களை அரசுக்கு அனுப்பியுள்ளது. இதுபற்றி உயர்நீதிமன்றத்
திற்கும் அரசுக்கும் இடையே கடிதப் போக்குவரத்து தொடர்ந்து
நடைபெற்று வருகிறது.

24. சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றை
நிறுவுதல்.—இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246 ஆம்
பிரிவின்படி உச்ச நீதிமன்றத்தினை நிறுவுதல், அமைத்தல்,
அதிகார வரம்பினை வரையறுத்தல், அதிகாரங்களை நிர்ண
யித்தல் ஆகியவை நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உரிய
அதிகாரமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130 ஆம்
பிரிவின்படி இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன்
இந்தியத் தலைமை நீதிபதி அவ்வப்போது குறிப்பிடக்கூடியவாறு
டில்லியில் அல்லது வேறு இடம் அல்லது இடங்களில் உச்ச

நீதிமன்றம் கூடும். சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றை நிறுவுவதற்கு மத்திய அரசின் இசைவினைப் பெற வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக விரைவில் முடிவு எடுக்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. அமைக்கக் கருதியுள்ள உச்ச நீதிமன்ற ஆயத்திற்கான கட்டிடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்பு போன்ற தேவையான வசதிகளைச் செய்து தருவதாகவும் இம்மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. இது தொடர்பான செயற்குறிப்பு இந்தியத் தலைமை நீதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மத்திய அரசு 1983 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இம்மாநில அரசுக்குத் தெரிவித்தது. சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயத்தை நிறுவுவதற்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஆதரவளிக்கவில்லை என்று 1989 மார்ச்சு திங்களில் மத்திய அரசு தெரிவித்தது. இருப்பினும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246 ஆம் பிரிவின் கீழ் சென்னையில் உச்ச நீதிமன்ற ஆயத்தை விரைவில் நிறுவ, மத்திய அரசு இசைவளிக்கும்படி 1989 ஜூலைத் திங்களில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின்படி உச்சநீதிமன்ற ஆயத்தை நிறுவுவது தொடர்பாக இந்தியத் தலைமை நீதிபதியின் கருத்துக்களை அறிந்து தெரிவிக்கும்படி இந்திய உச்ச நீதிமன்றப் பதிவாளரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்று 1989 நவம்பர் திங்களில் மத்திய அரசு தெரிவித்தது. இது மத்திய அரசு, உச்ச நீதிமன்றம் ஆகியவற்றின் பரிசீலனையின்கீழ் இன்னும் உள்ளது.

25. பொது.—குறிப்பிட்ட ஒரு பகுதியில் நீதிமன்றங்கள் அதிக அளவில் இருப்பதைத் தவிர்ப்பதற்காகவும், வழக்குத் தொடுக்கும் பொதுமக்கள் தங்களுடைய வழக்குகளுக்காகத் தலைமை இடங்களுக்குச் செல்வது தற்போது கடினமாக உள்ளது என்பதால் அவர்களுக்குத் தகுந்த உதவி அளிப்பதற்காகவும் சார்நிலை நீதிமன்றங்களை வெளியூர்களில் அமைக்க வேண்டும் என்று கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது உள்ளவாறு, வெளியூரிலுள்ள சிவில் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்படுகிறது. இதுபோன்றே, சென்னை மாநகர் சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகர் சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழும், சிறு வழக்குகள் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, மாநில சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழும் நிர்ணயிக்கப்படுகிறது.

மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. சார்நிலை நீதிமன்றத்தின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முன்சிப் நீதிமன்றத்திற்கு நீட்டிக்கப்



பட்டுள்ளது. மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில், அதன் அதிகார வரம்பு வருவாய் மாவட்டம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால் தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் வட ஆற்காடு—அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களில் இவ்வாறில்லை.

தஞ்சாவூர் வருவாய் மாவட்டம் இரு நீதித்துறைப் பிரிவுகளாக அதாவது தஞ்சாவூர் (மேற்கு), தஞ்சாவூர் (கிழக்கு) எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை தனி மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளைக் கொண்டு, முறையே, தஞ்சாவூரிலும், நாகப்பட்டினத்திலும் செயல்படுகின்றன.

முன்னாள் வருவாய் மாவட்டம், இராமநாதபுரம் மூன்று வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன :—

(1) இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம்.

(2) சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.

(3) விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராசர் மாவட்டம்.

இராமநாதபுரம் மாவட்ட நீதிபதி மேற்சொன்ன மூன்று வருவாய் மாவட்டங்களின்மீது அதிகார வரம்பைக் கொண்டுள்ளார்.

முன்னாள் இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாகப் பிரித்ததால், இம்மூன்று புதிய மாவட்டங்களிலும் நீதிமன்றங்கள் அமைக்க அரசு உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து வந்துள்ளது. பின்வரும் பரிந்துரைகளை அரசு ஏற்க வேண்டியுள்ளது :—

(1) தற்போது மதுரையில் செயற்படும் இராமநாதபுரம் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தையும், இராமநாதபுரம் சார்நிலை நீதிமன்றத்தையும் இராமநாதபுரத்திற்கு மாற்றுதல்.

(2) மதுரையில் செயற்படும் இராமநாதபுரம் கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தை காமராசர் மாவட்டத்தின் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றமாக ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மாற்றுதல்.

(3) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திற்காக சிவகங்கையில் மாவட்ட, செஷன்ஸ் நீதிமன்றத்தைப் புதிதாக அமைத்தல்.

143803

மேற்சொன்ன நீதிமன்றங்கள் கோடை விடுமுறைக்குப் பின்னர் அந்தந்த இடங்களில் செயற்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னாள் திருநெல்வேலி வருவாய் மாவட்டம், இரு வருவாய் மாவட்டங்களாக, அதாவது திருநெல்வேலி--கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்ட நீதிபதி மேற்சொன்ன இரு வருவாய் மாவட்டங்கள் மீது அதிகார வரம்பு செலுத்துகிறார். வட ஆற்காடு வருவாய் மாவட்டம், இரு வருவாய் மாவட்டங்களாக, அதாவது வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு– அம்பேத்கார் மாவட்ட நீதிபதி மேற்சொன்ன இரு மாவட்டங்கள்மீது அதிகார வரம்பு செலுத்துகிறார். குற்றவியல் நீதிமன்றங்களுக்கு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் (மத்தியச் சட்டம் 2/1974) கீழ் அதிகார வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது.

புதிதாக நீதிமன்றங்களை அமைக்குமாறு கோரி வழக்கறிஞர்கள் சங்கத்திடமிருந்து அல்லது வழக்காடும் பொது மக்களிடமிருந்து முறையீடுகள் வரும்போது, உயர்நீதிமன்றம், அந்த முறையீடுகளைப் பரிசீலித்த பின்னர், புதிதாக நீதிமன்றங்களை அமைப்பதற்குரிய செயற் குறிப்புகளை அனுப்புகிறது. உயர் நீதிமன்றம், அந்தந்த மாவட்ட நீதிபதிகளுடன் அல்லது நீதித் துறை தலைமை மாஜிஸ்ட்ரேட்டுகளுடன் கலந்தாலோசித்து முறையீடுகளைக் கவனமாகப் பரிசீலித்த பின்னர், புதிதாக நீதிமன்றத்தை ஏற்படுத்துவது அவசியமென்று உயர்நீதிமன்றம் மனநிறைவடைந்தால் அதுபற்றி அரசுக்கு எழுதுகிறது.

பிரித்தல் குழு (Separation Committee) அறிக்கையின் பத்தி 209-ன்படி குறிப்பிட்ட ஒரு நீதிமன்றத்தில் முடிவடையாமலுள்ள வழக்குகள், ஒரு மாஜிஸ்ட்டிரேட்டுக்கு இரு மாதங்களுக்கான அல்லது அதற்கு மேற்பட்ட கால அளவிற்கான பணியாக இருக்கும்போது அவற்றிற்குக் கூடுதலாக ஒரு மாஜிஸ்ட்டிரேட்டை நியமிப்பதன் மூலம் உடனடியாக நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். கூடுதல் மாஜிஸ்ட்டிரேட்டுகளை நியமிப்பதில் காலம் தாழ்த்துவதால் செலவு குறையும் என்று எண்ணுவது தவறான கருத்தாகும். ஏனெனில் மேலும் மேலும் பணி கூடுதலாகச் சேர்ந்து கொண்டு வரும் நிலையில் கூடுதல் அதிகாரி தேவைப்படும். கால அளவும் அதற்கு நிகராக அதிகரிக்கும்.



புதிய இடங்களில் புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்துவது தவிர உரிமையியல் வழக்குகள், சமாளிக்க முடியாத அளவுக்கு முடிவடையாமல் இருந்தால், வழக்காடு பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவற்றை விரைவில் முடிப்பதற்காக கூடுதலாக உரிமையியல் வழக்கு நீதிமன்றங்களை ஏற்படுத்துமாறு உயர்நீதிமன்றம் அவ்வப்போது அரசுக்குப் பரிந்துரைக்கிறது.

சாதாரணமாக, மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட வேண்டிய 200 பழைய வழக்குகள் அல்லது சார் நிலை நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட வேண்டிய 75 வழக்குகள் முடிவடையாமல் இருப்பின், கூடுதலாக நீதிமன்றங்ளை ஏற்படுத்த இவை போதுமானது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

1975ஆம் ஆண்டில் கடன் நிவாரண அவசரச் சட்டத்தைச் செயல்படுத்தியதன் விளைவாக, முடிவடையாமலுள்ள சில வழக்குகளில், மேற்கொண்டும் நடைமுறைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. புதிதாக வழக்குகள் தாக்கல் செய்வதும் தடை செய்யப்பட்டது.

தடையாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததால், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமலிருந்த வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும், 1978ஆம் ஆண்டில் கடன் நிவாரண அவசரச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும், புதிதாக வழக்குகளும் அதிகமாக தாக்கல் செய்யப்பட்டன. இதனால் உரிமையியல் நீதிமன்றங்களில் அதிக வழக்குகள் முடிவடையாமலுள்ளன.

26. கோடைக்கானலில் தற்போதுள்ள மாவட்ட முன்சீப் மற்றும் சப்-மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றத்தை மாற்றியமைத்ததின் மூலம் அங்கு மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நீதிமன்றம் கொடைக்கானல் வட்டம் முழுவதும் உரிமையியல் அதிகார வரம்பையும் கொடைக்கானல் வட்டத்திலுள்ள காவல் நிலையங்களின் வரம்புக்குட்பட்ட பகுதிகள் மீது குற்றவியல் அதிகார வரம்பையும் செலுத்துகிறது.

27. உயர்நீதிமன்றத்தின் அசல் தரப்பு, மேல் முறையீட்டுத் தரப்பு ஆகியவற்றின்கீழ் வரும் வழக்குகளின் மூலமும், சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்களின் மூலமும் "நீதி நிருவாகம்" என்ற தலைப்பின் கீழ வருவாய் பெறுவது முக்கியமானதொரு கூறு ஆகும்.

1985–86 முதல் 1990–91 வரை "0070.01.102 நீதி நிருவாகம்" மற்றும் "0030.01.101 நீதித்துறை முத்திரைத் தாள்கள் (முத்திரைத்தாள் வகையில் வசூலிக்கப்பட்ட நீதி

மன்றக் கட்டணங்கள்)'' என்ற தலைப்பின் கீழ் கிடைத்த வருவாய் இனங்கள், '' 2014. நீதி நிருவாகம் '' என்பதன்கீழ் ஏற்பட்ட செலவு ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு :—

| | 1985–86ஆம் ஆண்டுக் கணக்கு. | 1986–87ஆம் ஆண்டுக் கணக்கு. | 1987–88ஆம் ஆண்டுக் கணக்கு. | 1988–89ஆம் ஆண்டுக் கணக்கு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| வரவுகள்— | | | | |
| 0070 01 102 நீதி நிருவாகம். | 357.26 | 375.78 | 417.18 | 483.26 |
| 0030 01 101 நீதித்துறை முத்திரைத் தாள்கள் | 897.30 | 1,225.84 | 1,310.58 | 1,330.99 |
| மொத்த வரவு | 1,254.56 | 1,601.62 | 1,727.76 | 1,814.25 |
| செலவு | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 2014. நீதி நிருவாகம் | 1,720.00 | 1,938.05 | 2,155.01 | 2,443.21 |

| | 1989–90ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1989–90ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு. | 1990–91 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) |
| வரவுகள்— | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 0070 01 102 நீதி நிருவாகம். | 412.20 | 664.20 | 664.20 |
| 0030 01 101 நீதித்துறை முத்திரைத் தாள்கள். | 1,526.30 | 1,526.30 | 1,708.67 |
| மொத்த வரவு .. | 1,938.50 | 2,190.50 | 2,372.87 |
| செலவு— | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 2014. நீதி நிருவாகம் | 2,470.55 | 2,765.41 | 3,048.97 |



28. ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை உதவி— இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39-ஏ பிரிவின்படி ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை அளிக்க வேண்டியது அரசியலமைப்புச் சட்டப்படி அரசின் கடமையாகும். ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை நல்கும் பொருட்டு 1977 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு அமைத்த தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருவரின் கீழ் செயற்பட்டு வருகிறது. சட்ட உதவி அளிப்பதற்கென்று மாவட்ட வட்டக் குழுக்கள் இருப்பதுடன், மாநகரிலும், மாவட்டங்களிலும் சட்ட ஆலோசனை மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இச் சட்ட ஆலோசனைக் குழுவில் 36 சட்ட உதவி மையங்கள், 147 சட்ட ஆலோசனை மையங்கள், 77 இணக்க ஏற்பாட்டு மையங்கள், 17 மகளிர் ஆலோசனை மையங்கள் ஆகியவை இருப்பதுடன் 18 மாவட்டக் குழுக்களும், 89 வட்டக் குழுக்களும் உள்ளன.

இக்குழு, ஏழை எளியவர்களுக்கும், சட்ட ஆலோசனை அளிக்கப்பட வேண்டியவர்களுக்கும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது. மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வாங்கித்தர இக்குழு சட்ட உதவி அளிக்கிறது. மாவட்ட நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்கள் ஆகியவற்றிலுள்ள அதிகாரிகள் மூலமாக நிவாரணம் வாங்கித்தர உதவுவதும், மகளிருக்கும் குழந்தைகளுக்கும் வாழ்க்கைச் செலவுப் படியை பெற்றுத்தர உதவுவதும் இக்குழுவின் பணித் திட்டங்களில் அடங்கும்.

இக் குழுவின் பணிகளை அரசு அலுவலர்களும், அரசு அலுவலர் அல்லாத ஏனையோரும் அடங்கிய நிருவாகக் குழு கவனிக்கின்றது. அரசு தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழுவிற்கு, அதன் செலவுகளுக்காக ஆண்டு மானியம் வழங்குகிறது. இக்குழுவிற்கு, 1989–90 ஆம் ஆண்டிற்கென, ரூ. 58.95 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. சாதாரணமாக தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழுவிற்கு, ஓராண்டின் நான்கு காலாண்டுகளுக்கு, நான்கு சம தவணைகளில் மானியம் வழங்கப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டிற்கான மானியம் குழுவிற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

இந்நாட்டின் பல்வேறு மாநிலங்களில் செயற்பட்டு வரும் சட்ட உதவித் திட்டப் பணிகளுக்குச் சட்டப்படிக்கான ஆதார நிலை அளிக்கும் பொருட்டும், அவற்றை மிகவும் பயனுள்ள வகைகளில் செயற்படுத்தும் பொருட்டும், 1987ஆம் ஆண்டு சட்டப் பணிகள் அதிகார மன்றங்கள் சட்டத்தை (மத்தியச் சட்டம் 39/1987) மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் இன்னும் செயலுக்குக் கொண்டு வரப்படவில்லை.

29. மக்கள் நீதிமன்றம்—தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி—ஆலோசனைக் குழுவின் பல திட்டங்களில், மக்கள் நீதிமன்றங்களின் கூட்டங்களைக் கூட்டும் திட்டமும் ஒன்றாகும். லோக் அதாலத் என்பது மக்கள் நீதிமன்றம் என்று பொருள்படும். இத்திட்டம், சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையேயான சட்டப்படிக்கான பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலமும், இணக்கப் பேச்சு வார்த்தைகள் மூலமும் தீர்த்து வைப்பதும், சமூக நலனை நோக்கமாகக் கொண்ட அனுபவம் வாய்ந்தவர்கள் அடங்கிய குழு உறுப்பினர்களின் உதவியுடன், இசைவு, பொது அறிவு, மனிதாபிமான அணுகுமுறை ஆகியவற்றின் மூலம் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதுமே இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கங்கள் (i) இதுவரையில் நீதிமன்றங்களுக்குச் செல்லாத பிரச்சினைகளையும் (வழக்குத் தொடர்வதற்கு முன்னர்), (ii) நீதிமன்றத்தில் தீர்ப்பாகாமலுள்ள வழக்குகளையும் (நிலுவையாகவுள்ள வழக்குகள்) தீர்ப்பதே ஆகும். இரண்டாவது நோக்கம் தொடர்பாக நீதிமன்றங்களிலும் நடுவர் மன்றங்களிலும் தீர்ப்பாகாமலுள்ள வழக்குகள், மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்காக, சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் அனைவரின் இசைவைப் பெற்று, மக்கள் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையொட்டி ஆணைகளைப் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களுக்கும் நடுவர் மன்றங்களுக்கும் திரும்ப அனுப்பி வைக்கும் வகையில் இக்குழு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. வழக்கிற்கு ஒரு முடிவை எடுக்க இத்திட்டம் வகை செய்கிறது. ஈட்டுறுதி செய்யப்பட்ட வண்டிகள் சம்பந்தமான மோட்டார் விபத்துக்கள் உரிமைக் கோரிக்கைகள், நீதிமன்றங்களிடம் தீர்ப்பாகாமலுள்ள உரிமை கோரிக்கைகள் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான வண்டிகள் தொடர்பான ஒரு சில வழக்குகள் ஆகியவற்றை முடிப்பதற்காகவும் இக்குழு இதுவரையில் மக்கள் நீதிமன்றக் கூட்டங்கள் பலவற்றைக் கூட்டியுள்ளது. இதுவரையில், பல்வேறு குழுக்கள் 1,927 வழக்குகளுக்குத் தீர்ப்பளித்தன. ரூ. 4,11,18,232 வழங்கப்பட்டுள்ளது.

30. நடமாடும் நீதிமன்றங்கள்—போக்குவரத்து தொடர்பான குற்றங்களை விசாரணை செய்வதற்கென்று நடமாடும் நீதிமன்றங்கள் நான்கு செயற்பட்டு வருகின்றன. சென்னையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

31. உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்குதல்—உயர்நீதிமன்றத்தின் கீழுள்ள, நடுவர் மன்றங்கள், வாடகை குறித்த நீதிமன்றங்கள், வருவாய் நீதிமன்றங்கள் உட்பட உரிமையியல் நீதிமன்றங்களில் 1-2-1982ஆம் நாளிலிருந்து தமிழில் தீர்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



32. சென்னை உயர் நீதிமன்றத்திலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் (உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்கள் இரண்டிலும்) 1987, 1988, 1989 ஆகிய மூன்று ஆண்டுகளில் தொடரப்பட்ட வழக்குகள், தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள், விசாரணை முடிவுறாமலுள்ள வழக்குகள் ஆகிய விவரங்களைக் காட்டுகின்ற விவர அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1987, 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றம், சார்நிலை நீதிமன்றங்கள் (சிவில்) ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட, முடிவு செய்யப்பட்ட மற்றும் விசாரணையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள் வருமாறு :—

| வழக்குகளின் தன்மை. | 1987 | | | | 1988 | | | | 1989 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (8) | (10) | (11) | (12) | (13) |
| உயர்நீதிமன்றம், சென்னை :— | | | | | | | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .. | 1,053 | 4,558 | 312 | 4,246 | 1,607 | 5,853 | 253 | 5,600 | 1,050 | 5,650 | 415 | 6,235 |
| 2 உயில் தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 52 | 152 | 10 | 142 | 36 | 178 | 6 | 172 | 19 | 191 | 11 | 180 |
| 3 இல்வாழ்க்கை தொடர்பான அசல் தரப்பு வழக்குகள் | 42 | 123 | 29 | 94 | 52 | 146 | 24 | 122 | 9 | 13 | 27 | 104 |
| 4. நடுவர் தீர்ப்புச் சட்டத்தின் கீழ் மனு | 60 | 198 | 93 | 105 | 38 | 143 | 20 | 123 | 76 | 199 | 25 | 174 |
| 5 இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் மனு | 414 | 676 | 364 | 312 | 361 | 673 | 327 | 346 | 432 | 778 | 338 | 440 |
| 6 ஏனைய அசல் தரப்பு மனுக்கள் | 101 | 457 | 136 | 321 | 161 | 482 | 126 | 356 | 95 | 451 | 70 | 381 |
| 7 நிறுவனங்கள்-சங்கங்கள் கலைப்பு தொடர்பான வழக்குகள் | 73 | 290 | 20 | 270 | 135 | 405 | 15 | 390 | 86 | 476 | 20 | 456 |
| 8 நிறுவனம் தொடர்பான ஏனைய மனுக்கள் | 58 | 100 | 25 | 75 | 23 | 98 | 13 | 85 | 43 | 108 | 44 | 84 |
| 9 தேர்தல் மனுக்கள் .. .. | .. | 3 | 1 | 2 | .. | 2 | 2 | .. | .. | 16 | .. | 16 |
| 10 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள் | 98 | 188 | 59 | 129 | 94 | 223 | 72 | 151 | 101 | 252 | 108 | 144 |
| 11 நிறைவேற்று மனுக்கள் | 146 | 217 | 121 | 96 | 83 | 179 | 69 | 110 | 179 | 289 | 62 | 227 |
| 12 நிறுவனம் தொடர்பான விண்ணப்பங்கள் | 733 | 1596 | 282 | 1,311 | 590 | 1,901 | 206 | 1,695 | 1,336 | 3,031 | 227 | 2804 |
| 13 அவதூறு தொடர்பான விண்ணப்பங்கள் | 566 | 919 | 509 | 410 | 666 | 516 | 337 | 539 | 460 | 909 | 347 | 65- |

| வழக்குகளின் தன்மை. | 1987 | | | | 1988 | | | | 1989 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்யத்தகுந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்யத்தகுந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்யத்தகுந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| **பல்வகை விண்ணப்பங்கள் :—** | | | | | | | | | | | | |
| 14. தொடிப்பு நிலை மனுக்கள் தொடர்பான கோப்புகள். | 369 | 582 | 229 | 333 | 516 | 849 | 484 | 365 | 448 | 813 | 450 | 363 |
| 15. முதலாம் மேல் முறையீடுகள் .. | 1,129 | 7,088 | 798 | 6,290 | 1,519 | 7,809 | 234 | 7,575 | 1,379 | 8,954 | 585 | 8,369 |
| 16. அசல் தரப்பு மேல் முறையீடுகள் .. | 216 | 1,059 | 127 | 932 | 208 | 1,140 | 196 | 944 | 484 | 1,328 | 231 | 1,097 |
| 17. முத்திரைப் பத்திரம் தொடர்பான மேல் முறையீடுகள். | 179 | 587 | 108 | 478 | 202 | 681 | 380 | 301 | 154 | 455 | 224 | 231 |
| 18. ரிட் மேல் முறையீடுகள் .. | 2,339 | 4,710 | 1,554 | 3,156 | 1,665 | 4,821 | 1,493 | 3,328 | 1,136 | 4,464 | 2,385 | 2,079 |
| 19. இரண்டாம் மேல் முறையீடுகள் .. | 1,957 | 12,755 | 1,103 | 11,652 | 1,771 | 13,423 | 1,112 | 12,311 | 2,085 | 14,396 | 999 | 13,397 |
| 20. ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகள். | 1,109 | 5,406 | 864 | 4,542 | 1,192 | 5,734 | 361 | 5,373 | 1,143 | 6,516 | 734 | 5,782 |
| 21. மேல் முறையீட்டு ஆணைக்கு எதிரான மேல் முறையீடுகள். | 65 | 434 | 48 | 386 | 76 | 462 | 120 | 342 | 58 | 400 | 30 | 370 |
| 22. சிவில் மறு விசாரணை மனுக்கள் | 4,869 | 13,921 | 4,054 | 9,867 | 3,465 | 13,332 | 4,018 | 9,314 | 3,591 | 12,905 | 3,549 | 9,356 |
| 23. வரி வழக்குகள் .. .. .. | 1,420 | 11,324 | 191 | 11,133 | 1,310 | 12,443 | 306 | 12,137 | 859 | 12,996 | 490 | 12,506 |
| 24. வரி வழக்கு மனுக்கள் .. .. | 377 | 1,035 | 393 | 642 | 246 | 888 | 123 | 765 | 463 | 1,228 | 754 | 474 |
| 25. பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படுகிற வழக்குகள். | 11 | 72 | .. | 72 | 12 | 84 | .. | 84 | 3 | 87 | 7 | 80 |
| 26. இல்வாழ்க்கைத் தொடர்பான வழக்குகள். | 42 | 127 | 35 | 92 | 45 | 137 | 25 | 112 | 48 | 160 | 15 | 145 |
| 27. ரிட் மனுக்கள் .. .. .. | 13,342 | 56,844 | 9,655 | 47,189 | 16,196 | 63,385 | 7,343 | 56,042 | 16,290 | 72,332 | 19,204 | 55,616 |

| வழக்குகளின் தன்மை. | 1987: இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 1988: இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 1989: இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| பல்வகை விண்ணப்பங்கள் :— | | | | | | | | | | | | |
| 28. உச்ச நீதிமன்ற (இசைவு மனுக்கள்) | 26 | 135 | 20 | 115 | 35 | 150 | 31 | 119 | 14 | 133 | 21 | 112 |
| 29. தனி நடுவர் மன்ற மேல் முறையீடுகள். | 25 | 715 | 8 | 707 | 32 | 739 | 553 | 186 | 14 | 200 | 10 | 190 |
| 30. அவதூறு தொடர்பான மேல் முறையீடுகள். | 13 | 29 | 6 | 23 | 4 | 27 | 4 | 23 | 22 | 45 | 10 | 35 |
| 31. வணிகக் குறி தொடர்பான மேல் முறையீடுகள். | 5 | 46 | .. | 46 | 6 | 52 | 2 | 50 | 10 | 60 | .. | 60 |
| 32. வணிகக் குறி தொடர்பான இரண்டாம் மேல் முறையீடுகள். | .. | 4 | .. | 4 | .. | 4 | 1 | 3 | .. | 3 | .. | 3 |
| 33. பல்வகை வழக்குகள் .. .. | 40,944 | 1,07,497 | 45,738 | 61,759 | 42,163 | 1,03,922 | 29,501 | 74,421 | 41,396 | 1,15,817 | 47,701 | 68,116 |
| மாநகர சிவில் நீதிமன்றம், சென்னை :— | | | | | | | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .. | 11,800 | 27,252 | 10,056 | 17,196 | 13,996 | 31,192 | 8,320 | 22,872 | 12,221 | 35,093 | 12,383 | 22,710 |
| 2. சிவில் பல்வகை வழக்குகள் .. | 21,495 | 46,169 | 21,378 | 24,791 | 14,087 | 38,878 | 19,094 | 19,784 | 37,018 | 56,802 | 28,226 | 28,576 |
| 3. சிவில் மேல் முறையீடுகள் .. | 771 | 1,222 | 652 | 570 | 647 | 1,217 | 623 | 594 | 522 | 1,116 | 568 | 548 |
| 4. சிவில் பல்வகை மேல் முறையீடுகள் | 234 | 405 | 270 | 135 | 250 | 385 | 194 | 191 | 216 | 407 | 244 | 162 |
| 5. நிறைவேற்று நடைமுறைகள் .. | 3,143 | 6,251 | 2,598 | 3,652 | 3,397 | 7,050 | 2,223 | 4,827 | 4,131 | 8,958 | 3,433 | 5,525 |
| சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை :— | | | | | | | | | | | | |
| 1. சிவில் வழக்குகள் .. .. | 7,161 | 9,822 | 4,387 | 5,435 | 9,022 | 15,268 | 4,967 | 10,401 | 7,402 | 17,803 | 9,249 | 8,554 |
| 2. சிவில் பல்வகை வழக்குகள் .. | 20,172 | 28,569 | 19,141 | 9,428 | 9,044 | 17,472 | 4,846 | 12,626 | 9,170 | 1,796 | 7,831 | 13,965 |
| 3. ஆணை நிறைவேற்று நடைமுறைகள் | 1,204 | 3,494 | 2,245 | 1,249 | 889 | 1,438 | 808 | 830 | 2,810 | 2,440 | 2,107 | [illegible] |

[1990 ஏப்ரல் 9

உயர்நீதி மன்றத்திலும் (குற்றவியல்) சார்நிலை நீதிமன்றங்களிலும், 1987, 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் தொடரப்பட்ட, முடிவு செய்யப்பட்ட மற்றும் விசாரணையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள் :—

| வழக்குகளின் தன்மை. | 1987 | | | | 1988 | | | | 1989 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டின் இறுதியில் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| உயர் நீதிமன்றம், சென்னை :— | | | | | | | | | | | | |
| 1. பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படும் விசாரணைகள். | 16 | 22 | 10 | 12 | 6 | 18 | 10 | 8 | 9 | 17 | 12 | 5 |
| 2. குற்றவியல் வழக்கு மேல்முறையீடுகள் | 1,052 | 4,616 | 731 | 3,885 | 672 | 4,557 | 447 | 4,110 | 1,104 | 5,214 | 554 | 4,660 |
| 3. குற்றவியல் மறுவிசாரணை மனுக்கள். | 840 | 3,449 | 845 | 2,604 | 664 | 3,268 | 502 | 2,786 | 761 | 3,467 | 510 | 2,957 |
| 4. வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் வழக்குகள். | .. | .. | .. | .. | — | .. | .. | — | — | .. | — | — |
| 5. பல்வகை வழக்குகள் .. .. | 14,213 | 25,564 | 13,391 | 12,173 | 12,078 | 24,251 | 10,510 | 13,741 | 17,142 | 30,883 | 12,323 | 18,560 |
| செசன்ஸ் நீதிமன்றங்கள் :— | | | | | | | | | | | | |
| 1. செசன்ஸ் வழக்குகள் .. .. | 2,520 | 3,341 | 2,436 | 905 | 5,788 | 6,693 | 3,437 | 3,256 | 3,960 | 7,216 | 3,590 | 3,626 |
| 2. குற்றவியல் வழக்கு மேல்முறையீடுகள் | 3,192 | 4,941 | 3,021 | 1,920 | 3,398 | 5,318 | 2,918 | 2,400 | 2,792 | 5,192 | 2,818 | 2,374 |
| 3. குற்றவியல் மறுவிசாரணை மனுக்கள் | 1,139 | 1,699 | 978 | 721 | 1,014 | 1,735 | 999 | 736 | 1,059 | 1,795 | 1,111 | 684 |
| பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள் நீதிமன்றம்— | | | | | | | | | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள் .. | 2,04,532 | 2,33,523 | 1,98,248 | 35,275 | 2,74,816 | 3,10,091 | 2,79,560 | 30,531 | 3,22,897 | 3,53,428 | 3,16,979 | 36,449 |
| நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்டு நீதிமன்றங்கள்— | | | | | | | | | | | | |
| 1. மேல் முறையீடுகள் .. .. | 794 | 1,048 | 819 | 229 | 596 | 825 | 678 | 147 | 32 | 179 | 150 | 29 |
| 2. ஏனைய சட்ட வழக்குகள் .. | 5,49,118 | 6,59,026 | 5,32,693 | 1,2[illegible],333 | 4,86,098 | 6,12,431 | 4,69,945 | 1,42,486 | 7,89,081 | 9,31,567 | 7,67,356 | 1,64,211 |
| 3. இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் வரும் வழக்குகள் | 1,00,231 | 1,76,701 | 89,990 | 89,711 | 1,06,582 | 1,96,293 | 97,528 | 98,765 | 1,51,293 | 2,50,058 | 1,32,629 | 1,17,429 |
| 4. குற்றவியல் நடைமுறைக்கோவை வழக்குகள் மற்றும் பல்வகை வழக்குகள். | 41,667 | 44,735 | 41,145 | 3,590 | 43,629 | 47,219 | 43,434 | 37,950 | 82,000 | 35,785 | 81,614 | 4,171 |

1990 ஏப்ரல் 9]

[1990 ஏப்ரல் 9

## இணைப்பு 2

### தமிழ்நாடு சிறைகள் நிருவாகம்.

''மானியக் கோரிக்கை எண். 14 சிறைச்சாலைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91.

(59-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

இம் மாநிலத்திலுள்ள எட்டு மத்திய சிறைகள், புதுக் கோட்டையில் உள்ள இளைஞர் சீர்திருத்தப்பள்ளி, சென்னை அருகே புழலில் உள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம், வேலூர் மற்றும் மதுரையில் பெண்களுக்கான இரு தனிச் சிறைகள், சேலம், திருச்சிராப்பள்ளி, கொக்கிரகுளம், செங்கற்பட்டு, கடலூர், கோயம்புத்தூர் ஆகிய ஆறு இடங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், சிங்காநல்லூரில் உள்ள திறந்த வெளிச் சிறை, சேலம் மத்திய சிறையோடு இணைக்கப் பட்டுள்ள பண்ணைச் சிறை, இம்மாநிலத்திலுள்ள 114 கிளைச் சிறைகள் ஆகியவற்றின் அமைப்பு, கட்டுப்பாடு, நிருவாகம் முதலியவற்றைச் சிறைத் துறை கவனிக்கிறது. குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பிரிவும் இத் துறையின் பொறுப்பில் இயங்குகிறது. குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யும் நிலைக்குத் திரும்புவதைத் தடுத்து நிறுத்தவும், அவர்கள் விடுதலையான பின்னர், சட்டத்திற்குக் கட்டுப் பட்டு நன்மக்களாக வாழவும், மீண்டும் சமூகத்துடன் இணைந்து செயற்படவும், உரிய பயிற்சிகளை நல்கி, சீர்திருத்தி அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதே அரசின் தலையாய நோக்க மாகும். முன்னதாக மருத்துவப் பணிகள் குடும்ப நலத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டிலிருந்த, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களும் சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த மேல்பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமும், மேம்பட்ட நிருவாகம் மற்றும் கண்காணிப்பிற்காக, சிறைத் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

1. சிறைகளின் வகைப்பாடு மற்றும் நிறுவனங்களின் விவரம் :

இம் மாநிலத்தில் சிறைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் எண்ணிக்கை வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | மத்திய சிறைகள் .. .. .. | 8 |
| 2. | மகளிர் தனிச் சிறைகள் .. .. | 2 |
| 3. | இளைஞர் சீர்திருத்தப்பள்ளி. .. | 1 |
| 4. | தனிக் கிளைச் சிறைகள் .. | 6 |
| 5. | கிளைச் சிறைகள் .. | 114 |
| 6. | திறந்த வெளிச் சிறைகள் .. | 1 |
| 7. | பண்ணைச் சிறைகள் .. | 1 |
| 8. | ஆடவர் பிற்காப்பு இல்லம் .. | 1 |



1990 ஏப்ரல் 9]

| | | |
|---|---|---|
| 9. | அரசு மறுவாழ்வு இல்லங்கள் .. | 10. |
| 10. | அரசு காப்பு முகாம் .. | 1. |

பொதுவாக, ஒரு திங்களுக்கு மேலாகத் தண்டனை
அடைந்தவர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர்.
விசாரணைக் கைதிகளும், ஒரு திங்களுக்கும் குறைவாகத்
தண்டனை பெற்றவர்களும், கிளைச் சிறைகளில் வைக்கப்
படுகின்றனர். வயது வந்த கைதிகள் இளங்குற்றவாளிகளிட
மிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். ஆண் கைதிகளும்,
பெண் கைதிகளும், தனித் தனிச் சிறைகளில் வைக்கப்
படுகின்றனர். குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்ட
வர்கள் சேலம் மத்திய சிறையில் வைக்கப்படுகின்றனர்.
வழக்கமாகச் சிறைக் குற்றம் செய்யும் சிறைக் கைதிகள்
இதர சிறைக் கைதிகளைக் கெடுத்துவிடக் கூடாது என்பதற்
காக, மற்றவர்களிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர்.
இத்தகைய சிறைக் கைதிகள் கடலூர் மத்திய சிறையில் வைக்கப்
படுகின்றனர். ஒரு திங்களுக்கும் மேலாகச் சிறைத் தண்டனை
பெற்ற பெண் கைதிகள் வேலூர் மற்றும் மதுரையில் உள்ள
பெண்கள் தனிச் சிறையில் வைக்கப்படுகின்றனர். இச் சிறைகள்
பெண்களுக்கே உரிய சிறைகளாகும். பெண்களே இங்கு
அதிகாரிகளாக இருந்து இச்சிறைகளை நிருவகிக்கின்றனர்.
இளஞ்சிறைக் கைதிகளைக் காவலில் வைத்திருப்பதற்காக
புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி இயங்குகிறது.
மனநோய்வாய்ப்பட்ட கைதிகள். சென்னை அரசினர் மன
நலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர். தொழு நோய்க்
கைதிகளுக்கு தனிப்பட்ட முறையில் சிகிச்சையளிக்க தனிச்
சிறைக் கூடங்கள் வேலூர் மத்திய சிறையில் உள்ளன.

கிளைச் சிறைகள் மற்றும் மத்திய சிறைகளில் மொத்தம்
18,228 பேருக்கு இட வசதியளிக்க அனுமதிக்கப்பட்டிருக்
கிறது. அரசு மறுவாழ்வு இல்லங்களில் 4,250 பேருக்கு
(பெரியவர்கள்—4,000, சிறுவர்கள்—250) இட வசதியளிக்க
அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. மேல்பாக்கத்திலுள்ள அரசு
காப்பு முகாமில் 950 பேருக்கு (ஆண்கள்—770, பெண்கள்—
180) இட வசதி அளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
சிறைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள்
குறித்த பட்டியலொன்று இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்
டுள்ளது.

2. நிருவாகம் :

இத் துறையின் நிருவாகம் நான்கு சிறைத் துணைத் துறைத்
தலைவர்களின் உதவியினைக் கொண்டு, சிறைத் துறைத்
தலைவரால் நிருவகிக்கப்பட்டு வரப்படுகின்றது. இதுவரை
தலைமையகத்தில் மட்டுமே ஒரு சிறைத் துறைத் துணைத்
தலைவர் பதவி இருந்து வந்தது. நிருவாகத்தினைச் சீரமைக்க
வும், நிருவாகத்தில் திறமையைக் கொணரவும் மற்றும் பல்வித
அதிகாரங்களைப் பன்முகப்படுத்தும்பொருட்டும், சென்னை,
திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரையைத் தலைமையக

மாகக் கொண்டு நான்கு சரகங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறைத் துறைத் துணைத் தலைவரின், பொறுப்பின் கீழ் கொணரப்பட்டுள்ளது. மத்திய சிறையின் சிறைக் கண்காணிப்பாளர் தனக்குக் கீழ் உள்ள காவல் பணியாளர்கள், அமைச்சு மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்களைக் கொண்டு நிருவகிக்கின்றனர். இதே போன்று, நன்னடத்தைப் பிரிவு தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரால் நிருவகிக்கப்படுகின்றது. பிச்சைக்காரர் மற்றும் மறுவாழ்வு இல்லங்கள் தலைமைக் கண்காணிப்பாளரால் நிருவகிக்கப்படுகின்றது. இத் துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையினை காட்டும் பட்டியல் இணைப்பு 2-ல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்துறையில் கடந்த ஐந்தாண்டின் செலவு மற்றும் வரவு விபரங்கள், 1989—90 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 1990—91 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு விபரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:—

| வருடம். | செலவு. (ரூபாய் ஆயிரத்தில்.) | வரவு. |
|---|---|---|
| 1984—85 .. .. .. | 8,34,66 | 1,25,89 |
| 1985—86 .. .. .. | 10,44,87 | 1,48,14 |
| 1986—87 .. .. .. | 12,66,09 | 1,81,10 |
| 1987—88 .. .. .. | 12,40,63 | 2,33,27 |
| 1988—89 .. .. .. | 13,99,57 | 4,52,53 |
| 1989—90 .. .. .. (திருத்திய நிதி ஒதுக்கீடு) | 14,49,29 | 3,61,64 |
| 1990—91 .. .. .. (வரவு செலவு மதிப்பீடு) | 14,61,77 | 3,61,64 |

3. திறந்தவெளிச் சிறைகள் :

இம் மாநிலத்திலுள்ள ஒரே ஒரு திறந்தவெளிச் சிறை தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் உள்ளது. இதில் 100 கைதிகள் தங்குவதற்கான இட வசதி உள்ளது. மேலும், சேலம் மத்திய சிறையுடன் பண்ணைச் சிறை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

(2) திறந்தவெளிச் சிறைகளின் நோக்கங்கள் பின்வருமாறு:—

(அ) சிறைகளில் நெருக்கடியைத் தவிர்த்தல் ;

(ஆ) சிறைக் கைதிகளின் எதிர்காலப் புது வாழ்விற்காக, அவர்களுக்குச் சரியான முறையில் உழவுத் தொழில் பயிற்சியளித்தல் ;

(இ) நன்முறையில் நடந்து கொள்ளும் கைதிகளுக்கு நம்பிக்கையின் பேரில் அவர்களுக்கு ஓரளவு உரிமை அளித்தல்;



(ஈ) கைதிகள் குறைந்த அளவு காவலிலுள்ள சிறைகளில் அடைத்து வைக்கப்பட வேண்டும் ; சிறைகளில் அவர்களை நல்லமுறையில் நடத்த வேண்டும்; அவர்கள் மீதான கட்டுப்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பன போன்ற கோட்பாடுகளைச் செயலுக்குக் கொண்டு வருதல்.

சிங்காநல்லூரிலுள்ள திறந்தவெளிச் சிறையில் சிறைக் கைதிகளுக்கு நவீன வேளாண்மை முறைகளில் பயிற்சியளிப்பதற்காக, உதவி வேளாண்மை அலுவலர் ஒருவர் உள்ளார். ஏற்கெனவே இயங்கி வந்த திறந்த வெளிச் சிறை, நீலகிரி தெற்கு கோட்டம் நிலங்கள், கட்டிடங்கள் முதலியவற்றைப் புதிய தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்க வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, திருமலை சமுத்திரத்தில் ஒரு புதிய திறந்த வெளிச் சிறை ஆரம்பிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகின்றன.

4. கைதிகளின் வகைப்பாடும், சிறப்புரிமைகளும் :

சிறைகளில் உள்ள கைதிகளுக்காக 'எ', 'பி' என்ற இரு பிரிவுகள் மட்டுமே உள்ளன. விசாரணை மற்றும் காவல் கைதிகளுக்குச் சிறப்பு வகுப்பு நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. ஒரு கைதியின் சமூகத் தகுதி, கல்வி, வாழ்க்கைத் தரம், நடத்தை, முன்வரலாறு, சொந்தமாக வைத்துள்ள சொத்து விவரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அக்கைதிக்கு 'ஏ' வகுப்பு அரசால், வழங்கப்படுகிறது. சமூகத் தகுதி, கல்வி, பழக்க வழக்கம், ஆகியவற்றால் உயர்தர வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டிருக்கும் சிறைக் கைதிகள் 'ஏ' வகுப்புப் பெறத் தகுதியுடையவராவர். முற்றிலும் நாகரீகமற்ற முறையில் அல்லது, நன்னடத்தையற்ற முறையில் நடந்து கொண்டு குற்றத்தைச் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்ட எவருக்கும் 'எ' வகுப்பு அளிக்கப்படமாட்டாது. சமுதாயத்திற்கு எதிராகக் குற்றங்கள் புரிந்த கைதிகளும், சிறையில் 'எ' வகுப்புப் பெறத் தகுதியுடையவரல்லர், 'எ' வகுப்பைச் சேராத இதர சிறைக் கைதிகள் 'பி' வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

5 (அ) 1 உணவு—சாதாரண உணவு முறை :

'எ' வகுப்புச் சிறைக் கைதிகளுக்கு கொடுக்கப்படும் பல்வேறு வகை உணவின் விபரமும் அவற்றின் ஒரு நாள் செலவும் வருமாறு :—

| | நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு. ரூ. | பை. |
|---|---|---|
| சைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக் கைதி ஒருவருக்கு .. | 15 | 20 |
| சைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக் கைதி ஒருவருக்கு. | 14 | 10 |

டி 2 53—89—27

| | | |
|---|---|---|
| அசைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக் கைதி ஒருவருக்கு. | 17 | 05 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக் கைதி ஒருவருக்கு. | 13 | 80 |

'பி' வகுப்புச் சிறைக் கைதிகள், சாதாரண காவலில் வைக்கப்பட்டவர்கள் விசாரணையிலுள்ள சிறைக் கைதிகள் ஆகியோருக்கு திருத்தியமைக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட உணவு வகைகள் வழங்குவதற்கான செலவு வருமாறு :—

| (1) | அரிசி உணவு. (2) ரூ. பை. | கோதுமை உணவு. (3) ரூ. பை. |
|---|---|---|
| வேலை செய்வோர் மற்றும் வேலை செய்யாதோர். | 8 00 | 7 60 |

'எ' வகுப்புக் கைதிகள் தங்களுடைய சொந்தச் செலவில் பழங்களையும், பிஸ்கட்டு, கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற உணவுப் பொருட்களையும் வாங்குவதற்கு அனுமதியளிக்கப் படுகிறார்கள். 'பி' வகுப்புச் சிறைக் கைதிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர், கைதிகளுக்கு மருத்துவக் காரணங்களுக்காக பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய் மற்றும் பழங்கள் ஆகியவற்றைக் கொடுக்க அனுமதி வழங்கலாம்.

2. பாலூட்டும் பெண் சிறைவாசிகளுக்கு 1/2 லிட்டர் பாலும் அவர்களுடன் இருக்கும் ஓராண்டுக்கு குறைவாக உள்ள குழந்தைகளுக்கு குழந்தை உணவான ஸிளாக்ஸோ/அமுல், மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் வழங்கப் படுகிறது.

(ஆ) சிறப்புணவு :

பொங்கல், சுதந்திர தினம் ஆகிய நாட்களில் சிறை கைதிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 கூடுதல் செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

(இ) உடையும், படுக்கையும் :

'எ' வகுப்புச் சிறைக் கைதிகள் சொந்தப் படுக்கையை பயன்படுத்தவும், வேலை நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை நேரத்தில் அவர்கள் சிறைச்சாலை உடையில் இருக்க வேண்டும். 'எ' வகுப்புச் சிறைக் கைதிகள் அவர்களின் உறவினர்களைக் காணும்போது தங்கள் சொந்த



உடைகளை அணியலாம். 'பி' வகுப்புச் சிறைக் கைதிகள் எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடைகளையே அணிய வேண்டும். பெண் சிறைவாசிகளுக்கு மூன்று ஜோடி உடைகளும், இரண்டு டவல் மற்றும் மூன்று உள்ளாடைகள் (பாவாடை, சோளி, பிரா) வழங்கப்படுகிறது.

(ஈ) சோப்பு முதலியன :

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக சிறைக் கைதி ஒவ்வொருவருக்கும் திங்களுக்கொரு முறை 30 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்குச் சிகைக்காய்த் தூளும் சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்திய சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைக் கைதிகளுக்குக் கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது. நன்னடத்தை உடைய அனைத்து வகுப்புச் சிறைக் கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப் படுகிறார்கள்.

(உ) நேர்காணலும், கடிதங்களும் :

'எ' வகுப்பு சிறைக் கைதிகள் வாரத்திற்கு ஒரு முறை கடிதம் எழுதுவதற்கும், பெறுவதற்கும், இருவாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில் மூவருடன் அரைமணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைக் கைதிகள் மாதத்திற்கு இரு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவதற்கும், மேலும் இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஊ) செய்தித் தாள்களும் குறித்த கால வெளியீடுகளும்:

அரசுச் செலவில் 'பி' வகுப்பு சிறை9 கைதிகளுக்குக் கீழ்க்கண்ட நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன: —

1. தினமணி,
2. முரசொலி.
3. தினத்தந்தி.
4. தினமலர்.
5. இந்து.
6 தினகரன்.

'எ' வகுப்புச் சிறைக் கைதிகள் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த செய்தித் தாள்களை வாங்கிக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து வகுப்புச் சிறைக் கைதிகளும் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிகைகளை வாங்கிக்கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்

றனர். இது தவிர சிறைக் கைதிகளின் பயனுக்காக நல்ல தரமான புத்தகங்கள் சிறை நூலகத்தில் வைக்கப்படுகின்றன. உள்ளூர் நூலக ஆணைக் குழுவிடமிருந்தும், புத்தகங்கள் பெறப்பட்டு சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. சிறைக் கண்காணிப்பாளர்கள் தேவையெனக் கருதினால் மாவட்டக் கல்வி அதிகாரி மற்றும் அவர்களது உதவியாளர்களைக் கலந்தாலோசித்துத் தயாரிக்கப்பட்ட பயனுள்ள புத்தகங்களின் பட்டியலிலுள்ள புத்தகங்களை வாங்குவதற்கு இயலும் வகையில் அப்பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

(எ) இதர சலுகைகள் :

'எ' வகுப்புச் சிறைக் கைதிகள் மரச் சாமான்கள், கொசுவலை ஆகியவற்றைப் பயன்படுத்தவும், சமையலுக்கும், அருந்துவதற்கும், தேவைப்படும் அவர்களது சொந்த பாத்திரங்கள், புகையிலை ஆகியவை போன்ற பிற வசதிகளை பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைச் சிறைக் கைதிகள் அவர்களுடைய நன்னடத்தையைப் பொறுத்தும், அவர்கள் அனுபவித்துள்ள தண்டனைக் காலத்தைக் கணக்கிட்டும், இரவுக் காவற்காரர்கள் மேற்பார்வையாளர்கள் மற்றும் காவலர்கள் என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவர். சிறைக் கைதிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக அனைத்து மத்திய சிறைகளிலும் புதுக்கோட்டையில் உள்ள பார்ஸ்டல் பள்ளியிலும் முடி வெட்டுபவர்கள் உள்ளனர். அரசு தற்போது 'பி' வகுப்பு சிறைவாசிகள் தங்களது துணிகளைச் சிறையில் உள்ள, சலவையகத்தில் அவர்களது செலவில் சலவை செய்து கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

(ஏ) பொழுது போக்கு வசதிகள் :

ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் சிறை விடுமுறை நாட்களில் மத்திய சிறைகளிலுள்ள எல்லாச் சிறைக் கைதிகளும், கைப்பந்து, கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுக்களை விளையாடவும் வேலூரிலுள்ள பெண்கள் தனிச்சிறையில் பெண் சிறைக் கைதிகள் வளை பந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆழ்நிலை தியான முறை, அனைத்து மத்திய சிறைச்சாலைகளிலும் வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக் கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மகரிஷி நிறுவனம் மூலம் விரும்பும் சிறைக் கைதிகளுக்கு கற்பிக்கப்படுகின்றது. சென்னையிலுள்ள மத்திய சிறைக் கைதிகளுக்கு, சென்னை, யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்த அரசு அனுமதித்துள்ளது. தற்போது மத்திய சிறை, சென்னை கோவை, மதுரை, திருச்சி, சேலம், பார்ஸ்டல் பள்ளி, புதுக் கோட்டை, பெண்கள் தனிச் சிறை, வேலூர் மதுரை மற்றும் திறந்தவெளிச் சிறை, சிங்காநல்லூர் ஆகிய இடங்களில் பொதுமக்கள் சேவை செய்பவர்களால் தொலைக்காட்சிப் பெட்டி சிறைவாசிகளின் உபயோகத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.



சிறைக் கைதிகளுக்கான செய் தொழிலும், சிறைகளில் தொழிற்சாலைகளும் :

கடுங்காவல் தண்டனை பெற்ற சிறைக் கைதிகள் சிறையில் பலவித வேலைகளில் அமர்த்தப்படுகிறார்கள். தற்போது விருப்பம் உள்ள விசாரணை மற்றும் காவல் கைதிகளும் சிறைகளில் வேலை செய்யவும் ஊதியம் பெறவும் அனுமதிக்கப்படுகின்றனர். சிறைக் கைதிகள் விடுதலையடைந்த பின்பு அவர்களுக்குப் புது வாழ்வு கிடைக்க வகை செய்வதே அதன் நோக்கமாகும். எனவே, பயனில்லா வேலை மற்றும் உற்பத்தியை நோக்கமாகக் கொண்டிராத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. சிறை வேலை, கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி சிறைக் கைதிகளுக்கு உரிய வேலை கொடுக்கப்படுகிறது. சிறைக் கைதிகள் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை, நெசவு வேலை சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோல் பொருட்கள் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், சோப்பு செய்தல் மற்றும் பினாயில் செய்தல் ஆகிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. சிறைக் கைதிகள் தங்கள் விடுதலைக்குப்பின் தங்களைச் சொந்தத் தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ளும் வகையில், நவீன வேளாண்மை முறைகள், பால் பண்ணை ஆகிய தொழில்களிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கோவை மத்திய சிறையில் நெசவுப் பிரிவு மற்றும் சாய பிரிவு அடங்கிய துணி ஆலை ஒன்றுள்ளது. மத்திய சிறைகள், வேலூரிலுள்ள பெண்கள் தனிச் சிறை, புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்களின் பட்டியல் இணைப்பு 3-ல் குறிக்கப்பட்டுள்ளது.

7. எளிய சிறு தொழில்கள் :

தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் உள்ள சிறைக் கைதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அரசு கீழ்க்காணும் எளிய சிறு தொழில்களை அவற்றிற்கெதிரே குறிப்பிட்ட சிறைகளில் துவங்கியுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | செங்கல் கட்டுமானத் தொழில் | மத்திய சிறை, வேலூர். |
| 2. | குழாய்களைப் பழுது பார்த்து இணைத்தல். | மத்திய சிறை, மதுரை, சேலம், திருச்சி, பாளையங்கோட்டை. |
| 3. | எளிய மின் இணைப்புப் பயிற்சி | மத்திய சிறை, சென்னை, கடலூர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. |
| 4. | வண்ணம் பூசுதல் (பெயர் பலகை எழுதுதல் உட்பட). | மத்திய சிறை, கோவை. |

மேற்கண்ட தொழில்களில், பயிற்சி பெற்ற சிறைக் கைதிகள் குறைந்த முதலீட்டில் சொந்தமாகத் தொழில் நடத்தி தங்கள் பிழைப்புக்கேற்ற வருமானம் தேடிக் கொள்ளலாம். மேலும், வேலூர் பெண்கள் தனி சிறையிலுள்ள 20 பெண் கைதிகளுக்கு ஒவ்வோராண்டும், வேலூர் ''நேரு யுவக் கேந்திரா'' பயிற்சி ஆசிரியர்கள் மூலம் தையல் தொழிலில் பயிற்சியளிக் கப்பட வேண்டும் என்றும் தையல் தொழிலில் தேர்ச்சிப்பெற்றவர் களை அரசினர் தொழில் நுட்ப நிறுவனத் தேர்வுக்கு அனுப்பப் படவேண்டுமென்றும் அரசு கட்டளையிட்டுள்ளது.

8. சிறைவாசி அலுவலர்கள் :

சிறைவாசிகள் கீழ்க்காணும் வீதங்களில் பணிக் கொடை பெறத் தகுதியுள்ளவர்களாவார்கள் :—

| | | பணிக் கொடையின் வீதம் (ஒரு திங்களுக்கு). |
|---|---|---|
| 1. சிறைவாசி இரவுக் காவலர்கள் | .. .. | 0.50 |
| 2. சிறைவாசி மேற்பார்வையாளர்கள் | .. | 1.00 |
| 3. சிறைவாசி காவலர்கள் | .. .. | 2.00 |

9. சிறைவாசிகளுக்கான ஊதியம் ஈட்டும் திட்டம் :

அனைத்து மத்திய சிறைகளிலும், பார்ஸ்டல் பள்ளி, புதுக் கோட்டை மற்றும் பெண்கள் தனிச்சிறை, வேலூரிலும் சிறை வாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் தற்போது செயலிலுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிறைவாசி ஒருவருக்கு நாளொன்றுக்கு வழங்கப்படக்கூடிய ஊதிய வீதங்கள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | .. | 2.00 |
| 2. ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | .. | 1.00 |
| 3. தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள் | .. | 0.50 |

10. மருத்துவம் துப்புரவு வசதிகள் :

சிறைகளில் போதுமான மருத்துவ, துப்புரவு வசதிகள் உள்ளன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மருத்துவமனை உள்ளது. அதில் பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரும் (அம்மாவட்டத்தில் மாவட்ட மருத்துவ அதிகாரி அல்லது மாவட்ட மருத்துவ அலுவலர் வேறு ஊரில் இருந்தால் உள்ளூரிலுள்ள அரசு மருத்துவமனை அல்லது மருத்துவக் கல்லூரியிலுள்ள சிவில் மருத்துவரின் பதவி நிலையி லுள்ள மருத்துவ அலுவலர்) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவரும், ஒரு செவிலியரும் ஒன்று அல்லது இரண்டு மருந்தாக்குநரும், 2 அல்லது 3 செவிலியர் உதவியாளர்களும் உள்ளனர். கண் மருத்துவர் மற்றும் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் அரசு செலவில் தேவைப்படுகின்ற



இலவசமாக மூக்குக் கண்ணாடியும் வழங்கப்
கைதிகளுக்கு
படுகிறது. மேலும் சிறையைப் பார்வையிடும் பல் மருத்துவ
ரால் கைதிகளுக்குப் பல்நோய் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது.
வேலூர் மத்திய சிறையில் தொழுநோய் கைதிகள் தனியாகப
பிரிக்கப்பட்டு, தனிக் கூடங்களில் வைக்கப்படுகின்றனர். இவர்
களைக் கவனித்துக்கொள்வதற்காக இயற்கை முறை மருத்துவர்
அமர்த்தப்பட்டுள்ளார். மனநிலை சரியில்லாத கைதிகள்
மனநோய்க் குற்றவாளிகள் ஆகியோர் அரசினர் தலைமையிட
மருத்துவமனை உள்நோய் மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில்
சென்னை அரசு மனநலக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்
றனர். அரசு தற்போது மத்திய சிறை, சென்னை மற்றும்
வேலூர் ஆகிய இரு இடங்களில் நோயுற்ற சிறைவாசிகளை
மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல ஒரு நோயாளி ஊர்தி
வழங்கியுள்ளது. அரசு தற்போது பிற மத்திய சிறைகள்,
பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் தனிக் கிளைச்
சிறைகளில் நோயாளி ஊர்தி வாங்க அனுமதி வழங்கியுள்ளது.
மற்றும் அனைத்து மத்திய சிறை, பார்ஸ்டல் பள்ளி, புதுக்
கோட்டை மற்றும் பெண்கள் தனிச் சிறை, வேலூரில் இரத்த
பரிசோதனை நிலையம் அமைக்கவும் மற்றும் இ.சி.ஜி. சாதனம்
வாங்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அகில இந்தியச்
சிறைச் சீர்திருத்தக் குழுப் பரிந்துரையின் அடிப்படையில் கைதி
யின் உடல் நலம் மிகவும் கடுமையாகப் பாதிக்கும் போதும்,
ஆபத்தான நிலையில் இருக்கும் போதும் மருத்துவமனையில்
அவருடைய நண்பர்களும் உறவினர்களும் கைதியைத் தினந்
தோறும் பார்க்க அனுமதித்து அரசு உத்திரவிட்டுள்ளது.

அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், தனிக் கிளைச் சிறைகளிலும் மற்றும் அனைத்து கிளைச் சிறைகளி லும் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

11. சிறைவாசிகளுக்கு கல்வி வசதி:

சிறைவாசிகளுக்கு சிறையில் கல்வி வசதி அளிக்கப்படுகிறது.
ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக்
கொண்ட தொடக்கப்பள்ளி உள்ளது. முதியோர் கல்வி கற்
பிக்க சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறை
களில் புதிய முறையில் கைதிகளுக்குக் கல்வி புகட்டப்படு
கின்றது. மாநில திறமையளிக்கும் நிறுவனம், சிறை ஆசிரியர்
களுக்கு முதியோர் கல்வி தொடர்பாக முறைசாரா கல்வி
பயிற்சி 5-12-1989 முதல் 10-12-1989 வரை வழங்கியுள்ளது.
கல்வி பயிற்சிக்கான பொருட்கள் மாநில திறமையளிக்கும்
நிறுவனம் மூலமாக சிறைகளுக்கு வழங்கப்படும். சிறைக் கல்வி
யின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, சிறைக் கண்காணிப்
பாளர்கள், சிறந்த கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களை
யும், விரிவுரையாளர்களையும் வரவழைத்து சிறை விடுமுறை
நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் விரிவுரையாற்ற

ஏற்பாடு செய்கிறார்கள். அஞ்சல் வழிக் கல்வி மூலம் முதுகலைப் பட்டப் படிப்புத் தேர்வும், பி.ஜி.எல்., பி.எல்., பி.எட்., எம்.எட்., போன்ற கல்வித் தேர்வுகளையும் எழுத சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். இது தொடர்பாக புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வுக் கட்டணம் குறித்த செலவு, இதர இடைநிகழ் செலவு ஆகிய செலவுகள் முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. சிறைவாசிகள் தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால், மறுமுறையும் அரசு செலவில் தேர்வு எழுதலாம். இது போன்று மொத்தம் மூன்று தடவை தேர்வுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். சிறைவாசிகள் தேர்வு எழுதச் செல்லும் போது அவர்கள் சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதே போன்று அவர்களைக் காவல் காத்து அழைத்துச் செல்லும் வழித்துணைக் காவலர்களும், சாதாரண உடை அணிந்து செல்கின்றனர்.

நீதி அல்லது மதம் சம்பந்தமாக போதனைகள் என்ற பெயரால் மத மாற்றம் செய்தல் கூடாது என்ற நிபந்தனையுடன் சிறையில் மதம், நீதி நெறி வகையான போதனைகளும் விருப்பப்படும் கைதிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

12. இளைஞர் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை :

இப்பள்ளியில் 18 வயதிலிருந்து 23 வயது வரை உள்ள இளங்குற்றவாளிகள் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளி மாணவர்களுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில்களில் அல்லது வாழ்க்கைத் தொழில் கல்வியில் பயிற்சி அளிக்கப்படுகிறது:—

1. தச்சு வேலை.
2. கருமார் வேலை.
3. புத்தகம் கட்டுதல்.
4. தையல் வேலை.
5. வேளாண்மை.
6. கட்டுமான வேலை.
7. சலவைத் தொழில்.
8. பாண்டு இசைக் கருவி பயிற்சி.
9. சமையல் வேலை போன்ற வீட்டு வேலைகள்.

இப்பள்ளியில் உள்ளவர்கள் அங்கிருந்து விடுதலை செய்யப்பட்ட பின்னர் வேலை தேடிக் கொள்ள இயலும் பொருட்டு அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இங்குள்ள துயிற் கூடம் ஒன்று இளங்குற்றவாளிகளுக்கான இடமாக மாற்றப்பட்டு அங்கு 18—25 வயது தொகுதியைச் சேர்ந்த இளங்



குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை இளைஞர் சீர்திருத்தப் பள்ளியிலுள்ள துயிற்கூடம் 1894 ஆம் ஆண்டு சிறைச்சாலை சட்டத்தின் கீழ் 'சிறையாக' அறிவிக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தப் பள்ளியிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களின் புதுவாழ்வுக்காக இயந்திரங்கள் பசு அல்லது எருமை வாங்க நிதி உதவி வழங்கப்படுகிறது. இவ்வகையாக அவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி அவர்களிடமிருந்து எளிய தவணையில் வசூலிக்கப்படுகிறது.

தமிழ்நாடு சிறைச் சீர்திருத்த கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில் சிறைவாசிகள் பணியாளர் ஒருவரின் பொறுப்பில் 15 நாட்களுக்கு திறந்த வெளியில் ஒரு கூடாரத்தின் கீழ்த் தங்கியிருக்க இயலும் வகையில் இளைஞர் சீர்திருத்தப் பள்ளியைச் சேர்ந்த 25 பேர்களுக்கு ஆண்டு முகாமிற்கு ஏற்பாடு செய்யும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

13. ஆடவர் பிற்காப்பு இல்லம், புழல் :

சீர்திருத்த பள்ளிகளிலிருந்தும், சீர்திருத்தப்பள்ளி சாராத பிற நிறுவனங்களிலிருந்தும் வெளிவரும் அத்தகையோர் ஆதாயம் தரத்தக்க சொந்தத் தொழில் புரிந்து நல்ல முறையில் வாழ்வை அமைத்துக்கொள்ள இயலும் வகையில் இரண்டு ஆண்டுகளுக்குத் தச்சு வேலை, உலோக வேலை, தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதே இந்த ஆடவர் பிற்காப்பு இல்லத்தின் நோக்கமாகும். பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, இருப்பிடம் அளிக்கப்படுவதோடு முதலாண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 1.50 விதமும், இரண்டாம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 2.00 விதமும் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. பிற்காப்பு இல்லத்திற்கு செல்பவர் இல்லாமையால் இவ்வில்லம் தற்போது செயல்படவில்லை.

14. சிறைப் பார்வையாளர்கள் :

மாஜிஸ்ட்ரேட்டுகளையும், நீதிபதிகளையும் மற்றும் மருத்துவம், நல்வாழ்வு, தொழில்கள், தீயணைப்புப் பணிகள், ஏனைய துறைகளிலிருந்து நியமிக்கப்படும் அரசு சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, இத்துறையில் நாட்டமுள்ள பொது மக்கள், முக்கியமாக சமூகப் பணியாளர்கள், உளநோய் மருத்துவ வல்லுநர்கள், உளநூல் வல்லுநர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் ஆகியோர் ஒவ்வொரு சிறையிலும் அலுவல் சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். சிறைவாசிகள் நடத்தும் விதம், சிறைகளை நிருவகிப்பது தொடர்பான சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியன சிறைகளில் உரியவாறு செயற்படுத்தப்படுகின்றனவா என்று தெரிந்துகொள்ளவும், சிறைகளில் பல பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடுவதும், சிறைவாசிகள் எவரேனும் அவர்களிடம் புகார் செய்தால் அதனைக் கேட்டு

விசாரணை செய்வதும், பார்வையாளர்களின் கடமையாகும். சிறைப் பார்வையாளரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

15. சிறைவாசிகளை விடுப்பில் விடுவித்தல் :

சிறைவாசிகள் தங்களது குடும்பத் தேவைகளை கவனிப்பதற்காக, சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்பு அலுவலரின் அறிக்கையைப் பெற்று பிறகு அவர்களுக்கு இதுவரை அரசால் விடுப்பு அளிக்கப்பட்டு வந்தது. அரசு இந்த அதிகாரத்தை தற்போது சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களுக்கு வழங்கியுள்ளது. மூன்று ஆண்டு சிறைத் தண்டனை அனுபவித்துள்ளவரும், இதுவரையில் விடுப்பில் செல்லாதவருமான கைதிகளுக்கு முதலில் ஒரு மாத விடுப்பு அளிக்கப்படுகிறது. அதன் பிறகு, கடைசியாக விடுப்பில் சென்று திரும்பிய நாளிலிருந்து இரண்டாண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்த பிறகு மீண்டும் விடுப்பு அளிக்கப்படுகிறது. இன்னும் 3 ஆண்டுக்காலம் மட்டுமே சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய கைதிகளுக்கு அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு இயலும் வண்ணம், ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மாதம் என்ற விதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

இவற்றோடு, சிறைவாசிகள் தங்களுடைய நெருங்கிய உறவினர்களான தந்தை / தாய் / கணவன் / மனைவி / சொந்த மகன்/சொந்த மகள்/சொந்த சகோதரி/சொந்த சகோதரன் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்து போனாலோ அவர்களைச் சென்று பார்க்கவும், சிறைவாசிகள் அல்லது அவர்களது நெருங்கிய உறவினர்களான சொந்த மகன்/சொந்த மகள்/சொந்த சகோதரர்/சொந்த சகோதரி ஆகியோரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவும், அவசர கால விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய அவசர கால விடுப்பு ஓர் ஆண்டிற்கு 15 நாட்களுக்கு மேற்படக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு 4 முறையில் சிறைவாசிகளின் வசதிக்கேற்ப (6+3+3+3) என அளிக்கப்படுகிறது. இத்தகைய விடுப்புகள் சிறைவாசியின் நடத்தை நன்முறையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுகிறது.

16. தண்டனை குறைப்பு :

(அ) (1). சிறைவாசிகளின் நன்னடத்தை, வேலை செய்யும் ஆர்வம் ஆகியவற்றை வளர்க்கவும், ஊக்கமளிக்கவும் பலவிதமான தண்டனைக் குறைப்புகள் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சிறைவாசிகளின் நன்னடத்தைக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனை



குறைப்பும் சாதாரண வகை தண்டனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன. சிறைப் பணிகளுக்காக ஞாயிறு அன்றும் ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும் சமையற்காரர்களாகவும் துப்புரவு செய்வோராகவும் பணிபுரிய வேண்டிய கைதிகளுக்கு இவ்விதிகளின்கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்போடு மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் தண்டனைக் குறைப்பும் வழங்கப்படுகிறது. தண்டனைக் கைதிகளாக இருந்து பின்னர் கைதிக் காவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மாதத்திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறைகளில் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டை பேணிவரும் சிறைவாசிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்புத தண்டனை குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும், சிறந்த நற்பணிக்காக சிறப்புத் தண்டனைக் குறைப்பாக சிறைத் துறைத் தலைவரால் ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் சிறைவாசிகளுக்கு உயரளவு ஓராண்டுக்கால சிறப்புத் தண்டனைக் குறைப்பும், இரத்த தானம் செய்யும் சிறைவாசிகளுக்கு ஒரு சமயத்தில் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட தண்டனைக் குறைப்புகளைத் தவிர ஆயுள் தண்டனை அடைந்த மற்றும் மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனையடைந்த சிறைவாசிகளை முன்னதாக விடுதலை செய்வது குறித்து ஆலோசனைக் குழு பரிசீலனை செய்கிறது.

2. அந்த சிறைவாசியின் கடந்த கால நன்னடத்தை பற்றிய குறிப்பையும், உள்ளூர் அதிகாரிகளின் அதாவது மாவட்ட ஆட்சித் தலைவர், நன்னடத்தை அலுவலர், சிறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து, அச்சிறைவாசியை அவருக்கு அளிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே விடுவிக்க அரசின் பரிசீலனைக்காக இக்குழு தனது பரிந்துரையினை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

3. சென்னை உயர்நீதி மன்றம், டபிள்யூ பி. எண் 3430/82, நாள் 2—11—1983-ல் ஆயுள் தண்டனையடைந்த சிறைவாசிகளை முன் விடுதலை செய்வது குறித்த பரிசீலனை செய்வதற்காக பின்பற்றத்தக்கதான சில வழிமுறைகளைத் தனது தீர்ப்பில் வெளியிட்டுள்ளது. மேற்காணும் கருத்துக்களின் அடிப்படையில் அரசு ஆயுள் தண்டனையடைந்த சிறைவாசிகளை முன் விடுதலை செய்வது குறித்து பரிசீலனை செய்வதற்காக பின்பற்றத்தக்கதான வழி முறைகளை நிர்ணயித்து ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையின்படி, ஒரு ஆயுள் தண்டனை அடைந்த சிறைவாசி 10½ ஆண்டுகள் தண்டனை அனுபவிக்க வேண்டும். 10½ ஆண்டுகள் தண்டனை அனுபவித்த ஆயுள் தண்டனையடைந்த சிறைவாசிகளின் நேர்வு மட்டுமே முன் விடுதலைக்காக ஆலோசனைக் குழுவால் பரிசீலனை செய்யப்படுகின்றன.

4. குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 433-எ பிரிவின்படி ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகள் (அதாவது 18—12—1978 அன்றோ அல்லது அதற்குப்பின்னரோ தண்டனை யடைந்தவர்கள்) 14 ஆண்டு காலம் தண்டனை அனுபவித்த பின்பே ஆலோசனைக் குழுவால் முன்விடுதலைக்காக பரிசீலனை செய்யப்படுகிறார்கள். இவ்வகையான நேர்வுகள் 18—12—1992-க்கு பின்னர்தான் பரிசீலனைக்கு வரும்.

5. வியாதியுள்ள ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன் விடுதலை செய்வது தொடர்பாக சிறை மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் மாநில சிறைச்சாலை நடைமுறை நூலில் உள்ள விதிகளின்படி பரிசீலனை செய்யப்படுகிறது.

6. புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்தவரையில் தண்டனைக் காலம் முடியும்முன் விடுதலை செய்யும் முறை செயலில் உள்ளது. ஆனால் இது குறித்து பின்பற்றப்படுகிற நடைமுறை வேறாகும். இம்முறை "நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்தல் அல்லது விடுவித்தல்" என்று அழைக்கப்படுகிறது. 1925 ஆம் ஆண்டு சீர்திருத்தப் பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்யக் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற வாழ்க்கைத் தொழில் பயிற்சி குறித்த விவரங்களையும், உரிய விசாரணைகளைச் செய்து அவற்றின் மூலம் பெற்ற தகவலை பார்வையிடும் குழுவிடம் தாக்கல் செய்ய இயலும் வகையில் அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் வெளியூர்களாயிருந்தால், அந்தந்த வட்டங்களிலுள்ள நன்னடத்தை அலுவலர்களுக்கும், சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கும், சீர்திருத்தப் பள்ளி கண்காணிப்பாளர் அனுப்பி வைக்கவேண்டும். நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காகப் பார்வையிடும் குழு பரிந்துரைத்துள்ள இளங்குற்றவாளிகள் பற்றி பரிசீலித்து பின்னர் சிறைத் துறைத் தலைவர் ஆணை பிறப்பிக்கிறார்.

7. அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அரசு ஆணை எண் 1762, உள்துறை (சிறை-6) நாள்: 20-7-1987-ல் கீழ்க்காணும் வகையைச் சார்ந்த சிறைவாசிகளின் நேர்வுகள் முன் விடுதலைக்காக பரிசீலிக்கப்படக் கூடாது என ஆணை பிறப்பித்துள்ளது :—

(1) கற்பழிப்பு, பொய் கையெழுத்து, கொள்ளை ஆகிய குற்றங்களுக்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள், பயங்கரவாத குற்றவாளிகள் மற்றும் மாநிலத்திற்கெதிரான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள் மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவுகள், 224, 376, 396 முதல் 400 வரை, 402, 467, 471, 472, 474, 489-ஏ, 489-பி மற்றும் 489-டி ஆகிய பிரிவுகளின்கீழ் தண்டனை அடைந்த சிறைவாசிகள்.





(2) பொருளாதாரக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள், பொருட்களை பதுக்கி வைத்தல், கடத்தல் மற்றும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதற்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள்.

(3) லஞ்ச ஒழிப்பு தடுப்புச் சட்டத்தின்கீழ் தண்டனை பெற்ற சிறைவாசிகள், பெண்கள்—மகளிர் விபச்சாரத் தடைச் சட்டம், மருத்துவச் சட்டம் மற்றும் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள்.

(ஆ) (1) டாக்டர் பேரறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்களின் 20-வது ஆண்டு நினைவு நாளை ஒட்டி அரசின் ஆணை எண் 180, நாள் 28-1-1989-ன் படி ஒரு சில சிறைவாசிகளுக்கு கீழ்க்காணும் தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளது.

அ. கொலை, கள்ளக் கடத்தல் போன்ற குற்றங்களுக்கான தண்டனை தவிர, ஏனைய குற்றங்கள் புரிந்த அனைத்து மகளிர் சிறைவாசிகளுக்கு முழு தண்டனைக் குறைப்பு.

ஆ. இதர சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் தண்டனைக்கு கீழே விவரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவரப்பட்டியல்—

| தண்டனை வழங்கப்பட்ட நபர்களின் பிரிவு. | தண்டனைக் குறைப்பின் அளவு. |
|---|---|
| (1) | (2) |
| ஆயுள் சிறைவாசிகள் .. | ஒரு வருடம். |
| இதர சிறைவாசிகள் .. | ஆறு மாதம். |

மேற்கண்ட அரசாணைப்படி, 772 ஆண்களும் 71 பெண்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

(2) சிறைவாசிகள் நலனை கருத்தில் கொண்டு தமிழ் புத்தாண்டு தினத்தினை முன்னிட்டு 14-4-1989 அன்று 14 வருட ஆயுட் தண்டனையைக் கழித்த [மேலே பத்தி 16 (7)—ல் கூறப்பட்ட சிறைவாசிகள் தவிர] 125 ஆயுட் தண்டனை சிறைவாசிகளை அரசு விடுவித்துள்ளது.

(3) டாக்டர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 81-வது பிறந்த தினத்தினை முன்னிட்டு 15-9-1989 அன்று 12 ஆண்டுகள் சிறைவாசம் கழித்த [மேலே பத்தி 16(7)ல் கூறப்பட்ட சிறைவாசிகள் தவிர] 279 சிறைவாசிகளை அரசு விடுதலை செய்துள்ளது.

17. சிறைவாசிகளின் நலன் :

தற்போது நல அலுவலர் பதவிகள் மொத்தம் 10 உள்ளன. அதாவது மத்திய சிறைகள் ஒவ்வொன்றிலும், ஒரு பதவி விதம் எட்டு மத்திய சிறைகளில் எட்டு பதவிகளும், வேலூரில் பெண்கள் தனிச் சிறையில் ஒரு பதவியும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியில் ஒரு பதவியும் உள்ளன. இந்த நல அலுவலர், சிறையின் விதிமுறைக்கேற்ப சிறைவாசிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும், அவர்கள் உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி செய்தும் வருகிறார். மேலும், தனிப்பட்ட முறையில் மேல் முறையீடு செய்ய வசதி இல்லாத சிறைவாசிகளுக்கு மேல் முறையீடு செய்யவும் உதவிசெய்கிறார்.

பெண் சிறைவாசிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால் அக்குழந்தைகள் தாயோடு, சிறையில் வைக்கப்படுகின்றனர். அக்குழந்தைகளுக்காக ஒரு குழந்தைகள் காப்பகமும், வேலூர் மாநில மகளிர் சிறையில் செயல்பட்டு வருகிறது. அவர்களை சரியான முறையில் வைத்துப் பராமரிக்க ஒருவரும் முன் வரா விட்டால், அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன் சென்னை மாநகரை சேர்ந்தவர்களாயிருந்தால், சென்னையிலுள்ள பால மந்திர் மருத்துவமனைக்கும், மாநிலத்திலுள்ள இதர பாகங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தால் மதுரை காந்தி கிராமத்திலுள்ள குழந்தை இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர்.

ஒவ்வொரு மத்திய சிறையிலும், சிறைவாசிகளின் பயனுக்காக பண்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்பாட்டுக் குழு சிறைவாசிகளின் நன்மைக்காக சிறைக்குள் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை திரைப்படம் காட்டுகிறது. மேலும், வெளியில் உள்ளவர்களைக் கொண்டு, பலவகை கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்கிறது.

மத்திய சிறைகள் அனைத்திலும், சிறைவாசிகளுக்காக சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் சிறைவாசிகளும், பணிக்கொடை ஈட்டும் சிறைவாசிகளும் இந்த சிற்றுண்டி விடுதி வசதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். இந்தியக் குடியரசு தலைவரால், கருணை மனு நிராகரிக்கப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட இருக்கும் சிறைவாசிகளின் நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/மனைவி/கணவன்/மகன்/மகள்/சொந்த சகோதரன்/சொந்த சகோதரி ஆகிய நெருங்கிய உறவினர்கள் 5 நபர்களுக்கு மேற்படாமல், அச்சிறைவாசி தூக்கிலிடப் படுவதற்கு முன் வந்து பார்த்து திரும்புவதற்கு வசதியாக தமிழ் நாட்டிலுள்ள எவ்விடத்திலிருந்தும் குறைந்த வழித்தடம் மூலம், குறைந்த பட்ச வகுப்பில் புகைவண்டி அல்லது சாலை வழிப்பயண போக்குவரத்துச் செலவுகளை அனுமதிக்க எல்லா மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி மற்றும் வேலூர் மாநில மகளிர் சிறை ஆகியவற்றின் கண்காணிப்பாளர்களுக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது.





8. சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவி :

விசாரணைச் சிறைவாசிகளுக்கும், தண்டனை அடைந்த
சிறைவாசிகளுக்கும் தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோ
சனை குழு இலவச சட்ட உதவி அளித்து வருகிறது. சிறை
வாசிகளுக்கு சட்ட உதவி அளிப்பதற்காக இக்குழு பணி
வழக்குரைஞர்களை அனைத்து நிறுவனங்களுக்கும் அனுப்பி
வைக்கிறது.

19. சிறைகளில் புகார் பெட்டிகள் வைத்தல் :

அரசு பிறப்பித்துள்ள ஆணைகளின்படி எல்லா மத்திய
சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும்,
வேலூர் தனி மகளிர் சிறையிலும், சிறைவாசிகள் தங்கள்
குறைகளை தெரிவிக்க இயலும் வகையில், புகார் மனுக்களைத்
தாக்கல் செய்ய முத்திரையிடப்பட்ட புகார்ப் பெட்டிகள் சிறை
வாசிகளுக்கு எளிதில் எட்டும் இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.
சிறைவாசிகளுக்கு எழுது பொருட்கள் கொடுக்கப்படுகின்றன.
புகார்/குறை மனுக்கள் போடப்பட்டுள்ள பெட்டிகள், ஒவ்வொரு
மாதத்தின் முதல் பணி நாளில், சிறை அதிகாரிகளால் மாவட்ட
செசன்ஸ் நீதிபதிகளின் முன்னிலையில் கொண்டுவரப்படுகின்
றன. அவை ஒவ்வொன்றையும் அவர்கள் திறந்து, அம்மனுக்
களை ஆய்வு செய்து, சிறை அதிகாரிகள் அல்லது அரசு அல்லது
சிறைத்துறைத் தலைவர், நடவடிக்கை எடுக்க வேண்டியவற்றின்
பகுதி நகல்களை சம்மந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவர்.
சிறைவாசிகள் கொடுக்கும் புகார்களின்மீது நடவடிக்கை எடுக்
கப்படுகிறது. மேற்காணும் நிறுவனங்களில் முறைகேடு செய்ய
இயலாவண்ணம் இரும்பினால் தயாரிக்கப்பட்ட புகார்
பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சிறையில் இருக்கும் புகார்ப் பெட்டிகளின் எண்ணிக்கை வருமாறு :—

| தொடர் எண். | சிறையின் பெயர். | பெட்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | சென்னை மத்திய சிறை .. .. | 3 |
| 2 | வேலூர் மத்திய சிறை .. — — | 3 |
| 3 | கடலூர் மத்திய சிறை .. .. .. | 3 |
| 4 | திருச்சிராப்பள்ளி மத்திய சிறை .. | 3 |
| 5 | சேலம் மத்திய சிறை .. .. .. | 3 |

| தொடர் எண். | சிறையின் பெயர். | பெட்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 6 | கோயம்புத்தூர் மத்திய சிறை .. | 3 |
| 7 | மதுரை மத்திய சிறை .. .. | 3 |
| 8 | பாளையங்கோட்டை மத்திய சிறை .. | 3 |
| 9 | புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி .. | 3 |
| 10 | மகளிர் தனிச் சிறை, வேலூர் .. .. | 2 |

20. பயிற்சி :

(அ) சிறைக் காவலர்களின் பயிற்சிப் பள்ளி :

சிறைக் காவலர்களின் பயிற்சிப் பள்ளி ஒன்று வேலூரில் உள்ளது. இதில் பல்வேறு சிறைகளிலுள்ள 100 இரண்டாம் நிலைச் சிறைக் காவலர்களுக்கு உடற் பயிற்சி, ஒழுங்கு, சிறை நிருவாக கோட்பாடுகள் மற்றும் சீர்திருத்த முறைகளை கடைப்பிடித்தல் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப் படுகிறது. பயிற்சிக் கால அளவு 6 திங்களாகும். மேலும் 25 முதல் நிலை சிறைக்காவலர்களுக்கும், 4 முதன்மைத் தலைமை காவலர்களுக்கும், முறையே 30, 15 நாட்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், பயிற்சிக் காலத்தில் சீர் திருத்த முறைப்படி சிறைவாசிகளை அணுகும் முறை குறித்துப் பயிற்சி அளிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சிறைக் காவலர் பயிற்சி பள்ளியினை முன்னேற்றம் செய்ய அரசு தற்போது ரூ. 15 இலட்சம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(ஆ) மண்டல சிறை சீர்திருத்த பயிற்சி நிறுவனம் :

தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு) குற்றவாளிகள் சீர்திருத்த அலுவலர்களுக்கான மண்டல சிறை சீர்திருத்த பயிற்சி நிறுவனம் ஒன்று வேலூரில் 1—10—1979 முதல் செயல்பட்டு வருகிறது. சிறைகள், நன்னடத்தை கண்காணிப்பு பிரிவு, சான்றளிக்கப்பட்ட பள்ளிகள், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் சீர்திருத்தப் பணியிலும், அது தொடர்பான பணிகளிலும் ஈடுபட்டிருக்கிற இது போன்ற பிற நிறுவனங்கள் ஆகியவற்றி லுள்ள அலுவலர்களுக்கு குற்றங்களைத் தடுக்கவும், குற்ற வாளிகளைச் சீர்திருத்தவும், குற்றவாளிகளுக்கு மறு பணி நோக்குப் பயிற்சி அளிக்கும்பொருட்டு தொழில் வகையில் நுட்ப அறிவு, பயிற்சித் திறன் ஆகியவற்றில் பயிற்சி அளித்து, சமூக தொழில் மறு வாழ்வுக்கு அவர்களைத் தயார் செய்வது பயிற்சிப் பள்ளியின் நோக்கமாகும். மத்திய சிறை களில் உதவி சிறை அலுவலர் முதற் கொண்டு கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையுள்ளவர்களுக்கும், ஏனைய சீர்திருத்த நிறுவனங்களில் உள்ள அதற்கு நிகரான பதவித் தரம்



அலுவலர்களுக்கும் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. குற்ற
இயல், உளவியல், சமூக வாழ்வியல், சிறை நிருவாகம்,
இளம் குற்றவாளிகள் நன்னடத்தை, சமூக நலப்பணி சட்டம்,
நிறுவன மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.
ஒரே சமயத்தில் இம்மாநிலத்தைச் சேர்ந்த 12 அலுவலர்
களுக்கு இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை
இம்மாநிலத்தைச் சார்ந்த 172 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்
ளார்கள். இந்நிறுவனத்தின் தொடர் மற்றும் தொடரா இனம்
செலவுகள் நான்கு தென் மாநிலங்களாலும் சமமாகப் பகிர்ந்து
கொள்ளப்படுகிறது. மத்திய அரசு இப்பயிற்சி நிறுவனத்தில்
ஆய்வு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு அமைக்க, சிறைகளை நவீனப்
படுத்தும் மத்திய திட்டத்தின் கீழ் ரூ. 20.80 இலட்சம் அங்கீ
காரம் வழங்கியுள்ளது.

இ. நற்பணிக்கான முதலமைச்சரின் சிறைப் பதக்கம் வழங்குதல் :

சிறைக் காவலர்கள் நேர்மையுடனும், விசுவாசத்துடனும்,
கடமையுணர்வுடனும், திறமையுடனும், உயர்தர ஒழுங்குடனும்
மற்றும் தியாக மனப்பான்மையுடனும் பணியாற்ற அவர்களை
ஊக்குவிப்பதற்காக, நவம்பர், 1985-ல் ''தமிழ்நாடு முதலமைச்சர்
சிறைத்துறை நற்பணிப் பதக்கம்'' என்றதொரு பதக்கம் வழங்க
வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்
வரால் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் தினத்தன்று 20 சிறைக்
காவலர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதக்கங்
களைப் பெறும் சிறைக்காவலர்கள் நிலை ஒன்று மாதமொன்றுக்கு
ரூபாய் 25 என்ற வீதத்திலும், சிறைக் காவலர்கள் நிலை இரண்டு
மாதமொன்றுக்கு ரூ. 20 என்ற வீதத்திலும் மாதாந்திரப்படி
பெறுவதற்கு தகுதியானவர்களாவர்.

21. குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பணிகள் :

குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பணியானது
குற்றவாளிகளின் சுற்றுப்புற சூழ்நிலையையும், அவர்கள்
நடந்து கொள்ளும் விதம் பற்றியும், பிணைய பத்திரத்தின்
பேரில் உரிய காலத்திற்கு முன் கூட்டியே நன்னடத்தை ஜாமீன்
அளிப்பதன் பேரில் விடுதலையான குற்றவாளிகள், பார்ஸ்டல்
பள்ளியிலிருந்தும், சீர்திருத்தப்பள்ளியிலிருந்தும், ஒழுக்கக் கண்
காணிப்பு இல்லத்திலிருந்தும் விடுதலை செய்யப்பட்டவர்
கள் ஆகியோர் குறித்தும் விசாரிப்பது, கண்காணிப்பது, அவர்
களைப் பற்றி நீதிமன்றங்களுக்குத் தகவல் கொடுப்பது முதலி
யன ஆகும். சிறைத்துறைத் தலைவரின் முழுக் கட்டுப்பாட்
டிற்கும் கண்காணிப்புக்கும் உட்பட்ட நன்னடத்தைக் கண்
காணிப்பு பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரி
நேரடி பொறுப்பில் உள்ளது. மண்டல நன்னடத்தை அலு
வலர் ஒருவரைக் கொண்ட நன்னடத்தை ஆராய்ச்சிப் பிரிவு
ஒன்றும் இப்பிரிவில் உள்ளது.

**22. தமிழ்நாடு விடுதலையடைந்த சிறைவாசிகளுக்கான உதவிச் சங்கம்:**

— தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கம் 1981-ல் அமைக்கப்பட்டது. தற்செயலாகக் குற்றம் புரிபவர்களும், இளங் குற்றவாளிகளும் கைதேர்ந்த குற்றம் புரிகிறவர்களாக மாறுவதை தடுக்கும் நோக்குடன், கைதிகளுக்கு புதுவாழ்வு அமைத்துக் கொடுத்தல் அவர்களுக்குத் தேவைப்படும் சகலவித உதவிகள் செய்து கொடுத்தல், அவர்களின் நலனுக்காகச் சட்டங்களை இயற்றுதல், ஏற்கனவே இருக்கும் சட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி புதிய சட்டங்களை இயற்றுதல் ஆகியனவை இச்சங்கத்தின் நோக்கங்களாகும். விடுதலை செய்யப்பட்ட கைதிகள் சிறு தொழில்களை மேற்கொண்டு நடத்தவும், கருவிகள், தேநீர்க் கெட்டில், தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், இச்சங்கம் உதவித் தொகை கொடுக்கிறது. மேலும், பகை வண்டி அல்லது பேருந்து கட்டணத்திற்கான உதவித் தொகையையும், தொழில்களில் பயிற்சி பெறுவதற்கும், வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளவும், வழிகாட்ட சட்ட உதவி பெறுவதற்குப் முதியோர் உதவிப் பணம் பெறுவதற்கும், உதவித் தொகை அளிப்பதோடு, ஆடைகள், மூக்குக் கண்ணாடி முதலியவற்றையும் வழங்குகிறது.

அரசால் இச்சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 18,000 உதவி மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

**23. சென்னை மாநகரிலும், செங்கை—அண்ணா மாவட்டத்திலும் உள்ள தண்டனைக் கைதிகளை வைப்பதற்கென ஒரு புதிய சிறையை புழலில் (செங்குன்றம்) கட்டுதல் :**

தற்போது சென்னையில் உள்ள மத்திய சிறையினை நகருக்கு வெளியே மாற்றும்பொருட்டு புழல் கிராமத்தில் தற்போது சிறைத்துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீன அடிப்படையில் ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. அரசு முதல் மற்றும் இரண்டாம் கட்ட பணிகளுக்காக இதுவரை ரூ. 320.97 இலட்சத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தப் பணிகள் யாவும் நிறைவு பெற்று விட்டன. தற்போது ரூ. 294.07 இலட்சம் அளவில் மூன்றாம் கட்ட பணிகளுக்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அப்பணிகள் முடிவுற்றபின் தற்போதுள்ள மத்திய சிறை, இப்புதிய வளாகத்திற்கு விரைவில் மாற்றப்படும்.

**24. அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழுவின் அறிக்கை :**

(நீதிபதி திரு. ஏ. என். முல்லா, இதன் தலைவர் ஆவார்.)

இந்தியாவிலுள்ள சிறைகளின் நிருவாகத்தில் செய்யப்பட வேண்டிய மேம்பாடுகள் குறித்து பரிசீலிப்பதற்கும், செயல்படுத்தப்பட வேண்டிய தக்க சீர்திருத்தங்களைத் தெரிவிக்கும்



பொருட்டும், நீதிபதி திரு. ஏ. என். முல்லா, தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்தது. இந்தக் குழுவின் அறிக்கையில் 658 பரிந்துரைகள் உள்ளன. மொத்தமுள்ள 658 பரிந்துரைகளில் 592 பரிந்துரைகளின் மீதான தமிழக அரசின் குறிப்புரைகள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள 66 பரிந்துரைகள் தமிழக அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

**25. சிறை நிருவாகத்திற்கான அலுவலர் குழு பற்றிய அறிக்கை :**

இந்திய அரசு, சிறை நிருவாகம் மற்றும் சிறைகளை நிருவகிக்கும் பணி தொடர்பான பல்வேறு பொருள்களை குறிப்பாக சிறைகளில் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான பொருட்களை ஆராய்ந்து, அவைகளை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைப் பரிந்துரை செய்வதற்காக திரு. ஆர். கே. கபூர், இ.கா.ப. (ஓய்வு) தலைமையில் அலுவலர்கள் அடங்கிய ஒரு சிறு குழுவை 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நியமனம் செய்தது. இக்குழுவின் அறிக்கை இந்திய அரசிடமிருந்து 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெறப்பட்டது. இவ்வறிக்கையின் மீது அரசு விரைவான நடவடிக்கையை எடுப்பதற்கு வசதியாக, இவ்வறிக்கையினை ஆராய்ந்து அதன் பரிந்துரைகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மாநில அரசு கீழ்க்காணும் அலுவலர்கள் அடங்கிய ஒரு சிறு குழுவை நியமித்துள்ளது:—

1. சிறைத் துறைத் தலைவர் .. .. தலைவர்.
2. உள் துறையின் அரசு துணைச் செயலர் .. உறுப்பினர்.
3. நிதித் துறையின் அரசு துணைச் செயலர் .. உறுப்பினர்.
4. பொதுப் பணித்துறை (கட்டிடங்கள்) தலைமைப் பொறியாளர் .. .. உறுப்பினர்.
5. சிறைத்துறைத் துணைத் தலைவர், சென்னை .. .. .. .. உறுப்பினர், செயலர்.

திகார் மத்திய சிறை மற்றும் காவல்துறை போன்ற இதர துறைகள் சம்பந்தப்பட்ட கருத்துரைகளையும் பரிந்துரைகளையும் தவிர்த்து மேற்காணும் அறிக்கை சிறை நிருவாகம் சம்பந்தப்பட்ட 366 பரிந்துரைகளை உள்ளடக்கியதாக உள்ளது. இக்குழுவின் பெரும்பாலான பரிந்துரைகள் இம்மாநிலத்தில் நடைமுறையில் உள்ள விதிகளின்படி செயல்பாட்டிலுள்ளது. சில இதர பரிந்துரைகள் தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழு மற்றும் அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழு போன்ற

குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையின்படி ஏற்கனவே செயல்படுத்தப்பட்டதாகவும் உள்ளன. எனவே எஞ்சியுள்ள 95 பரிந்துரைகளை ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

26. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல் :

அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்திய அரசு சிறை நிருவாகத்தை நவீனப் படுத்துவதற்காக 1987–90 ஆம் ஆண்டுகளில் இணையான மானிய உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ. 432 இலட்சம் மத்திய உதவியாக அளிக்க இசைந்துள்ளது. இந்த மத்திய உதவித் தொகையைப் பயன்படுத்துவதற்காக, தமிழக அரசு 50 சதவீதம் இணையான மானிய உதவித் தொகை அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. எனவே, சிறைகளின் நிலைமையை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 864 இலட்சங்களாகும். ஆனால் இதுவரை மத்திய அரசு ரூ. 111.69 இலட்சத்திற்கு மட்டுமே ஒப்புதல் வழங்கி நிதியினை விடுவித்துள்ளது. ஆகவே தமிழ்நாடு அரசு ரூ.223.98 இலட்சத்திற்கான திட்டங்களுக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் எல்லா சிறைகளிலும் நோயாளி ஊர்தி, வாக்கி டாக்கி, மின் ஆக்கி, மெட்டல் டிடெக்டர், இ.சி.ஜி. மிஷின் மற்றும் இரத்த பரிசோதனை நிலையம் அமைக்கும் திட்டங்கள் அடங்கும். காவலர் பயிற்சிப் பள்ளி வேலூரினை முன்னேற்றம் செய்யவும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவை தவிர கிளைசிறைகளில் காவலர் அறை, அலுவலர் அறை, நேர்க்காணல் அறை, சுற்றுச் சுவர், தண்ணீர் வசதி மற்றும் சுகாதார வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணத்திற்கான திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது.



## இணைப்பு 1.

(1ஆம் இனத்தைக் காண்க.)

சிறைத்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்கள் :

1. மத்திய சிறை, சென்னை.
2. மத்திய சிறை, வேலூர்.
3. மத்திய சிறை, கடலூர்.
4. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி.
5. மத்திய சிறை, சேலம்.
6. மத்திய சிறை, கோயம்புத்தூர்.
7. மத்திய சிறை, மதுரை.
8. மத்திய சிறை, பாளையங்கோட்டை.
9. பெண்கள் தனிச் சிறை, வேலூர்.
10. பெண்கள் தனிச் சிறை, மதுரை.
11. சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை.
12. தனிக் கிளைச் சிறை, சேலம்.
13. தனிக் கிளைச் சிறை, கொக்கிரகுளம்.
14. தனிக் கிளைச் சிறை, திருச்சிராப்பள்ளி.
15. தனிக் கிளைச் சிறை, செங்கல்பட்டு.
16. தனிக் கிளைச் சிறை, கடலூர்.
17. தனிக் கிளைச் சிறை; கோயம்புத்தூர்.
18. திறந்தவெளிச் சிறை, சிங்காநல்லூர்.
19. பண்ணை சிறை, சேலம்.
20. ஆண்கள் பிந்காப்பு இல்லம், புழல்.

1. செங்கை-அண்ணா மாவட்டம் :

21. கிளைச் சிறை, சைதாப்பேட்டை.
22. கிளைச் சிறை, மதுராந்தகம்.
23. கிளைச் சிறை, பூவிருந்தவல்லி.
24. கிளைச் சிறை, திருவள்ளூர்.
25. கிளைச் சிறை, திருத்தணி.
26. கிளைச் சிறை, பொன்னேரி.
27. கிளைச் சிறை, காஞ்சிபுரம்.

2. கோயம்புத்தூர் மாவட்டம் :

28. கிளைச் சிறை, அவினாசி.
29. கிளைச் சிறை, மேட்டுப்பாளையம்.
30. கிளைச் சிறை, திருப்பூர்.
31. கிளைச் சிறை, உடுமலைப்பேட்டை.
32. கிளைச் சிறை, பொள்ளாச்சி.
33. கிளைச் சிறை, பல்லடம்.

3. பெரியார் மாவட்டம் :

34. கிளைச் சிறை, தாராபுரம்.
35. கிளைச் சிறை, பவானி.
36. கிளைச் சிறை, ஈரோடு.
37. கிளைச் சிறை, கோபிசெட்டிப்பாளையம்.
38. கிளைச் சிறை, காங்கேயம்.
39. கிளைச் சிறை, சத்தியமங்கலம்.
40. கிளைச் சிறை, பெருந்துறை.

4. நீலகிரி மாவட்டம் :

41. கிளைச் சிறை, உதகமண்டலம்.
42. கிளைச் சிறை, குன்னூர்.
43. கிளைச் சிறை, கூடலூர்.

5. வட ஆர்க்காடு—அம்பேத்கார் மாவட்டம் :

44. கிளைச் சிறை, அரக்கோணம்.
45. கிளைச் சிறை, ஆம்பூர்.
46. கிளைச் சிறை, குடியாத்தம்.
47. கிளைச் சிறை, திருப்பத்தூர்.
48. கிளைச் சிறை, வாணியம்பாடி.
49. கிளைச் சிறை, வாலாஜாபேட்டை.

6. திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் :

50. கிளைச் சிறை, செய்யாறு.
51. கிளைச் சிறை, ஆரணி.
52. கிளைச் சிறை, செங்கம்.
53. கிளைச் சிறை, போளூர்.
54. கிளைச் சிறை, திருவண்ணாமலை.
55. கிளைச் சிறை, வந்தவாசி.

7. தென்னார்க்காடு மாவட்டம் :

56. கிளைச் சிறை, கள்ளக்குறிச்சி.
57. கிளைச் சிறை, சிதம்பரம்.
58. கிளைச் சிறை, செஞ்சி.
59. கிளைச் சிறை, பரங்கிப்பேட்டை.
60. கிளைச் சிறை, திண்டிவனம்.
61. கிளைச் சிறை, திருக்கோயிலூர்.
62. கிளைச் சிறை, உளுந்தூர்பேட்டை.
63. கிளைச் சிறை, விழுப்புரம்.
64. கிளைச் சிறை, பண்ருட்டி.
65. கிளைச் சிறை, விருத்தாசலம்.



சென்னை-600 008

8. சேலம் மாவட்டம் :

66. கிளைச் சிறை, ஆத்தூர்.
67. கிளைச் சிறை, நாமக்கல்.
68. கிளைச் சிறை, ஓமலூர்.
69. கிளைச் சிறை, பரமத்தி.
70. கிளைச் சிறை, ராசிபுரம்.
71. கிளைச் சிறை, சங்ககிரி.
72. கிளைச் சிறை, திருச்செங்கோடு.

9. திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம் :

73. கிளைச் சிறை, திண்டுக்கல்.
74. கிளைச் சிறை, நிலக்கோட்டை.
75. கிளைச் சிறை, பழனி.
76. கிளைச் சிறை, வேடசந்தூர்.
77. கிளைச் சிறை, கொடைக்கானல்.

10. மதுரை மாவட்டம் :

78. கிளைச் சிறை, மேலூர்.
79. கிளைச் சிறை, உசிலம்பட்டி.
80. கிளைச் சிறை, திருமங்கலம்.
81. கிளைச் சிறை, பெரியகுளம்.
82. கிளைச் சிறை, உத்தமபாளையம்.

11. கன்னியாகுமரி மாவட்டம் :

83. கிளைச் சிறை, தக்கலை.
84. கிளைச் சிறை, குழித்துறை.
85. கிளைச் சிறை, நாகர்கோயில்.

12. இராமநாதபுரம் மாவட்டம் :

86. கிளைச் சிறை, திருவாடானை.
87. கிளைச் சிறை, பரமக்குடி.
88. கிளைச் சிறை, முதுகுளத்தூர்.
89. கிளைச் சிறை, இராமநாதபுரம்.

13. காமராசர் மாவட்டம் :

90. கிளைச் சிறை, ஸ்ரீவில்லிபுத்தூர்.
91. கிளைச் சிறை, சாத்தூர்.
92. கிளைச் சிறை, அருப்புக்கோட்டை.
93. கிளைச் சிறை, விருதுநகர்.

[1990 ஏப்ரல் 9

14. பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் :

94. கிளைச் சிறை, சிவகங்கை.
95. கிளைச் சிறை, திருப்பத்தூர்.

15. திருச்சிராப்பள்ளி மாவட்டம் :

96. கிளைச் சிறை, அரியலூர்.
97. கிளைச் சிறை, ஜெயங்கொண்டான்.
98. கிளைச் சிறை, குளித்தலை.
99. கிளைச் சிறை, லால்குடி.
100. கிளைச் சிறை, மணப்பாறை.
101. கிளைச் சிறை, முசிறி.
102. கிளைச் சிறை, பெரம்பலூர்.
103. கிளைச் சிறை, துறையூர்.
104. கிளைச் சிறை, கரூர்.

16. புதுக்கோட்டை மாவட்டம் :

105. கிளைச் சிறை, புதுக்கோட்டை.
106. கிளைச் சிறை, அறந்தாங்கி.
107. கிளைச் சிறை, கீரனூர்.
108. கிளைச் சிறை, திருமயம்.

17. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் :

109. கிளைச் சிறை, அம்பாசமுத்திரம்.
110. கிளைச் சிறை, சங்கரன்கோவில்.
111. கிளைச் சிறை, தென்காசி.
112. கிளைச் சிறை, நாங்குநேரி.

18. சிதம்பரனார் மாவட்டம் :

113. கிளைச் சிறை, கோவில்பட்டி.
114. கிளைச் சிறை, தூத்துக்குடி.
115. கிளைச் சிறை, ஸ்ரீவைகுண்டம்.
116. கிளைச் சிறை, திருச்செந்தூர்.

19. தஞ்சாவூர் மாவட்டம் :

117. கிளைச் சிறை, கும்பகோணம்.
118. கிளைச் சிறை, மயிலாடுதுறை.
119. கிளைச் சிறை, மன்னார்குடி.
120. கிளைச் சிறை, நாகப்பட்டினம்.
121. கிளைச் சிறை, நன்னிலம்.



1990 ஏப்ரல் 9]

122. கிளைச் சிறை, பட்டுக்கோட்டை.
123. கிளைச் சிறை, பாபநாசம்.
124. கிளைச் சிறை, சீர்காழி.
125. கிளைச் சிறை, திருத்துறைப்பூண்டி.
126. கிளைச் சிறை, திருவாரூர்.
127. கிளைச் சிறை, தரங்கம்பாடி.
128. கிளைச் சிறை, திருவிடைமருதூர்.
129. கிளைச் சிறை, தஞ்சாவூர்.

20. தருமபுரி மாவட்டம் :

130. கிளைச் சிறை, ஓசூர்.
131. கிளைச் சிறை, அரூர்.
132. கிளைச் சிறை, தருமபுரி.
133. கிளைச் சிறை, கிருஷ்ணகிரி.
134. கிளைச் சிறை, ஊத்தங்கரை.

டி 2 53—89—30

## இணைப்பு 2.

(இனம் எண் 2-ஐ காண்க.)

(சிறைத் துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.)

| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. சிறைத் துறைத் தலைவர் .. .. .. | 1 |
| 2. சிறைத் துறைத் துணைத் தலைவர் .. | 4 |
| 3. கணக்கு அலுவலர் .. .. .. | 1 |
| 4. உதவி கணக்கு அலுவலர் .. .. | 1 |
| 5. சிறைத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர். | 1 |
| 6. சிறைக் கண்காணிப்பாளர்கள் .. .. | 9 |
| 7. பெண்கள் தனிச் சிறை கண்காணிப்பாளர் .. | 1 |
| 8. கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பில்லம், புழல். | 1 (தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.) |
| 9. சிறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் .. | 8 |
| 10. புதுக்கோட்டை, இளங்குற்றவாளிகள் சீர் திருத்தப்பள்ளி மற்றும் மதுரையிலுள்ள பெண்களுக்கான தனிச் சிறையின் துணைக் கண்காணிப்பாளர்கள். | 2 |
| 11. சிறை அலுவலர்கள் .. .. .. | 9 |
| 12. உதவி மருத்துவர்கள் .. .. .. | 19 |
| 13. தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் | 1 |
| 14. மண்டல நன்னடத்தை அலுவலர்கள் .. | 12 |



### பணியாளர் அமைப்பு.

### பொதுவான வகையினர்.

| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 15. அலுவலக கண்காணிப்பாளர்கள்/மேலாளர் | 19 |
| 16. கணக்கர் .. .. .. .. | 9 |
| 17. உதவியாளர்/தேர்வு நிலை உதவியாளர்கள் | 96 |
| 18. இளநிலை உதவியாளர்கள் .. .. | 83 |
| 19. சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் .. .. | 3 |
| 20. தட்டச்சர்கள் .. .. .. .. | 46 |
| 21. பதிவுரு எழுத்தர்கள் .. .. .. | 38 |
| 22. டபேதார் .. .. .. .. .. .. | 1 |
| 23. அலுவலக உதவியாளர்கள் .. .. | 91 |

### 2. சிறப்பு வகையினர்.

| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 24. மூதாய் .. .. .. .. .. | 4 |
| 25. துணைச் சிறை அலுவலர் .. .. | 17 |
| 26. உதவி கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 27. துணை உதவி கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 28. தனிக் கிளைச் சிறைகளின் கண்காணிப்பாளர்கள் | 3 |
| 29. உளவியல் வல்லுநர்கள் .. .. .. | 3 |
| 30. சமூக நலப் பணியாளர்கள் .. .. | 3 |
| 31. உதவி சிறை அலுவலர்கள் .. .. | 136 |
| 32. தொழிற்சாலை மேலாளர் .. .. .. | 1 |

| (1) | (2) |
|---|---|
| 33. செவிலியர் .. .. .. | 10 |
| 34. மருந்தாக்குநர்கள் .. .. .. .. | 18 |
| 35. ஆண்/பெண் செவிலியர் உதவியாளர்கள் .. | 29 |
| 36. முதன்மைத் தலைமைக் காவலர்/வாயில் காப்பாளர்கள். | 39 |
| 37. சிறைக் காவலர்கள்/சிற்றலுவலர் (நிலை-1) | 365 |
| 38. சிறைக் காவலர்/சிற்றலுவலர் (நிலை-2) .. | 2,291 |
| 39. சிப்ப எழுத்தர்கள் .. .. | 9 |
| 40. இடைநிலை ஆசிரியர்கள் .. .. | 30 |
| 41. தொடக்க நிலை ஆசிரியர் .. .. | 1 |
| 42. உடற் பயிற்சி ஆசிரியர் .. .. .. | 1 |
| 43. தச்சுப் பயிற்றுநர்-கம்மியர் .. .. | 17 |
| 44. நெசவுப் பயிற்றுநர் .. .. .. | 5 |
| 45. உற்பத்தி உதவியாளர் .. .. .. | 1 |
| 46. தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் .. .. | 5 |
| 47. புத்தகம் கட்டும் மேற்பார்வையாளர்கள் | 1 |
| 48. தையற் பயிற்றுநர்கள் .. .. .. | 11 |
| 49. கருமார் தொழில் பயிற்றுநர்கள் .. .. | 3 |
| 50. தச்சு முதலாள் .. .. .. .. | 3 |
| 51. மின் கம்பியாள் .. .. .. .. | 12 |
| 52. நன்னடத்தை அலுவலர்கள் .. .. | 96 |
| 53. நல அலுவலர்கள் .. .. .. | 10 |
| 54. லாரி ஓட்டுநர்கள் .. .. .. | 8 |
| 55. லாரி ஆள் .. .. .. .. | 1 |





| (1) | (2) |
|---|---|
| 56. பூட் தயாரிப்புப் பணி மேற்பார்வையாளர் .. | 1 |
| 57. பூட் பணி கம்மியர் .. .. .. | 1 |
| 58. பூட் பணி மேஸ்திரிகள் .. .. .. | 4 |
| 59. அலுமினிய பட்டறை முதலாள் .. .. | 1 |
| 60. வண்டிக்காரர்கள் .. .. .. | 7 |
| 61. நெசவு ஆசிரியர் .. .. .. .. | 1 |
| 62. சாய வேலை ஆசிரியர் .. .. .. | 2 |
| 63. பாவு ஆசிரியர் .. .. .. .. | 1 |
| 64. இசைக் குழு ஆசிரியர் .. .. .. | 1 |
| 65. கொட்டகைப் பணி உதவி மேற்பார்வையாளர் | 1 |
| 66. பாவு அமைத்துக் கஞ்சி போடும் பணியாளர் | 1 |
| 67. கொதிகலன் பணியாளர் .. .. .. | 1 |
| 68. பொருத்துத் தச்சர் .. .. .. | 1 |
| 69. நெசவுப் பணியாளர் .. .. .. | 5 |
| 70. விசையேற்று நிலையத்திற்குப் பொறுப்பு வகிக்கும் பொருத்துநர். | 1 |
| 71. கட்டுக்கட்டும் பணியாளர் .. .. .. | 1 |
| 72. குழாய் பொருத்துநர் .. .. .. | 1 |
| 73. கொதிகலன் எரியூட்டுபவர் .. .. | 1 |
| 74. மோட்டார் பணியாள் .. .. .. | 3 |
| 75. மின் மேற்பார்வையாளர் .. .. .. | 1 |
| 76. தோட்டக்காரர்கள் .. .. .. | 2 |
| 77. பினாயில் தயாரிப்பு உதவியாளர் .. | 1 |
| 78. கால்நடை உதவி ஆய்வாளர்கள் .. .. | 4 |

[1990 ஏப்ரல் 9

| (1) | (2) |
|---|---|
| 79. உலோகம் பற்றவைப்பவர்கள் .. .. | 1 |
| 80. தலைமை ஆயா .. .. .. .. | 1 |
| 81. ஆயாக்கள் .. .. .. .. | 8 |
| 82. மின் மோட்டார் பணியாட்கள் .. .. | 2 |
| 83. மேற்பார்வையாளர்கள் ஆசிரியர்கள் (கைமுறை காகிதத் தொழில்). | 5 |
| 84. சவுக்கார வேதியியல் பணியாளர் .. | 1 |
| 85. என்ஜின் ஓட்டுநர் .. .. .. | 1 |
| 86. மெருகிடும் உதவியாளர் .. .. .. | 1 |
| 87. காகித கூழ் செய்யும் உதவியாளர்கள் .. | 3 |
| 88. காவலாட்கள் .. .. .. .. | 14 |
| 89. இயல் மருத்துவத் தொழில் நுட்பப் பணியாளர். | 1 |
| 90. கால்நடை மேய்ப்பவர் .. .. .. | 1 |
| 91. டிராக்டர் ஓட்டுநர்கள் .. .. .. | 3 |
| 92. துப்புரவாளர்/பெருக்குபவர் .. .. | 62 |
| 93. சமையற்காரர்கள் .. .. .. | 18 |
| 94. டிராக்டர் சுத்தம் செய்பவர் .. .. | 1 |
| 95. துப்புரவுத் தொழிலாளர்கள் .. .. | 6 |
| 96. கைத்தொழில் பயிற்றுநர்கள் .. .. | 9 |
| 97. முடி திருத்துநர் .. .. .. | 9 |
| 98. உதவி வேளாண் அலுவலர் .. .. | 1 |
| 99. பிரம்பு பயிற்றுநர் .. .. | 1 |



1990 ஏப்ரல் 9]

இணைப்பு -3.

(6-ம் இனத்தைக் காண்க.)

மத்திய சிறைகள், மகளிருக்கான தனிச் சிறை, வேலூர், புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழிற்சாலைகள், வாழ்க்கைத் தொழில், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு நிலையங்கள் குறித்த பட்டியல்.

| தொடர் எண் மற்றும் நிறுவனத்தின் பெயர். (1) | தொழில்கள். (2) |
|---|---|
| 1. மத்திய சிறை, சென்னை | தச்சு வேலை பினாயில் தயாரிப்பு, கூர் நாடா உற்பத்தி, சோப்புத் தயாரித்தல், முத்திரை அரக்கு. |
| 2. மத்திய சிறை, வேலூர் .. | நெசவு, தையல், புத்தகம் கட்டுதல், தச்சு வேலை, காகிதம் தயாரித்தல் பல வகை. |
| 3. மத்திய சிறை, சேலம் .. | அலுமினியம் கருமார் பட்டறை, தச்சு வேலை, நெசவு, காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தையல். |
| 4. மத்திய சிறை, கோயம்புத்தூர். | நெசவு, சாயம் தோய்த்தல், தையல், கூடாரம் தயாரித்தல், கைமுறை காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தச்சு வேலை. |
| 5. மத்திய சிறை, திருச்சி .. | தச்சு வேலை, நெசவு, பாய் முடைதல், சோப்பு தயாரித்தல். |
| 6. மத்திய சிறை, மதுரை .. | நெசவு, தையல், காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தச்சு வேலை. |
| 7. மத்திய சிறை, பாளையங்கோட்டை. | தச்சு வேலை, நெசவு, தையல், கைமுறை காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல். |
| 8. மத்திய சிறை, கடலூர் | நெசவு, தையல், தச்சு வேலை. |
| 9. பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. | தச்சுவேலை, தையல், கருமார் பட்டறை. |
| 10. மகளிர் தனிச் சிறை, வேலூர். | நாடா உற்பத்தி, முறுக்கு நூல் உற்பத்தி, தையல், நெசவு. |

[1990 ஏப்ரல் 9

## அத்தியாயம் II.

### தமிழ்நாட்டில் அரசினர் புதுவாழ்வு இல்லங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1990-91.

தொழு நோயால் அவதியுறும் பிச்சைக்காரர்கள் நோயினைக் குணப்படுத்தவும் அவர்கட்கு புதுவாழ்வு அளிக்கவும் தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கென புதுவாழ்வு இல்லங்களை அமைத்துள்ளது :—

1. பரனூர், செங்கை அண்ணா மாவட்டம்.
2. உளுந்தூர்பேட்டை, தென்னாற்காடு மாவட்டம்.
3. பர்கூர், தருமபுரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. விண்ணப்பள்ளி, பெரியார் மாவட்டம்.
6. மனையேரிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம்.
7. யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
8. மல்லவாடி, திருவண்ணாமலை, சம்புவராயர் மாவட்டம்.
9. செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.
10. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.

மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநரின்கீழ் இயங்கி வந்த அரசு புதுவாழ்வு இல்லங்கள், 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் நாள் முதல் சிறைத்துறைத் தலைவர் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு இயங்கி வருகின்றன.

அனுமதி மற்றும் நீக்கம் :

ஒவ்வொரு இல்லத்திலும் 400 பெரியவர்களும் (ஆண், பெண் உட்பட), 25 சிறுவர்களும் தங்குவதற்கு வசதியுள்ளது. தொழு நோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களும், பிச்சை எடுத்ததற்காகத் தண்டனை வழங்கப்பட்டவர்களும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். மணமானவர்களில் கணவனோ அல்லது மனைவியோ தொழுநோயால் பாதிக்கப்பட்டு பிச்சை எடுப்பவராக இருந்தால், மற்றவரையும் இல்லத்தில் சேர்க்க அனுமதி உள்ளது. அவர்களுக்குக் குழந்தைகள் இருப்பின் அவர்களும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர்.



1990 ஏப்ரல் 9]

உள்ளிருப்போர்கள். தொழுநோய் இல்லாதவர்கள் என்று மருத்துவ அதிகாரிகளால் சான்று அளிக்கப்பட்டால், அவர்கள் சொந்த முயற்சியில் வாழ்க்கை நடத்த இயலுமாயின் அவர்கள் வெளியில் அனுப்பப்படுகிறார்கள். மேலும் திரும்பத் திரும்ப ஒழுங்கற்ற முறையில் நடந்துக்கொள்வோர் மற்றும் இல்லம் சீரிய முறையில் நடைபெற தடையாய் இருப்போர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியே அனுப்பப்படுகிறார்கள்.

உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள் :

இவ்வில்லத்திலுள்ள உள்ளிருப்போருக்கு இலவசமாகத் தங்க வசதியும், உணவு, உடை மருத்துவ வசதி மற்றும் பல தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் விளையாடுவதற்கான வசதியும் திரைப்படம் காண்பிக்க வசதியும், நூலகம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

உணவு :

இல்லத்திலிருப்பவர்களுக்குக் காலைச் சிற்றுண்டியும், தேநீரும் மதிய உணவும் மாலை தேநீரும், மற்றும் இரவு உணவும் அளிக்கப்படுகின்றன. நாள்தோறும் முட்டையும் மோரும் வழங்கப்படுகிறது. வாரம் ஒரு முறை இறைச்சியும் வழங்கப்படுகிறது. இதற்காக வயதுவந்த இல்லவாசி ஒவ்வொருவருக்கும் தினமும் ரூ. 5.50-ம் அவர்களைச் சார்ந்த உறவினர் மற்றும் சிறுவருக்கு தினமும் ரூ. 4.00-ம் செலவிடப்படுகிறது. சுதந்திர தினம் காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் முக்கியமான நாட்களிலும் ஒவ்வொரு உள்ளிருப்போருக்கும், கூடுதல் ரூபாய் ஒன்றுக்கு சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

இருப்பிடம் :

உளுந்தூர்பேட்டை, பர்கூர் இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களும் குடும்பத்தினர்கள் தங்கக்கூடிய அறைகள் கொண்ட 4 தொகுதிகளாக (பிளாக்) கீழ் தளத்தில் கட்டப்பட்டுள்ளன. மேலும் முதல் மாடியில் தனியாள் தங்குவதற்குத் துயில் கூடங்கள் (Dormitories) கட்டப்பட்டு உள்ளன. உளுந்தூர்பேட்டை, பர்கூர் இல்லங்கள் ஒன்றைக் கட்டிடமாகவும் நிரந்தர கொட்டகையாகவும் கட்டப்பட்டுள்ளன.

உடை :

பொங்கல் நாள், சுதந்திர நாள் ஆகிய தினங்களில் உள்ளிருப்போருக்கு (இருமுறை) உடைகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு ஆண்டு தோறும் இரப்பர் காலணிகளும் வழங்கப்படுகின்றன.

**இதர வசதிகள் :**

பாய், தட்டு, கரண்டி, எண்ணெய், சோப்பு, பற்பொடி, பல் துலக்கும் பிரஷ் (விரல்கள் செம்மையாக இல்லாதவர்களுக்கு மட்டும்) ஆகிய பொருட்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படுகின்றன. கண்நோயால் அவதியுறுபவர்களுக்கு பரிசோதனைக் குப்பின் மூக்குக்கண்ணாடிகளும் மற்றும் கறுப்பு மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. மாவட்ட காசநோய் மருத்துவ நிபுணர்களும், மற்றும் கண் மருத்துவ நிபுணர்களும் இவ்வில்லவாசிகளின் மற்ற நோய்களையும் கண்டு அறிய இவ்வில்லங்களைப் பார்வையிடுகின்றனர். இல்லவாசிகளுக்காக இரு தினசரி செய்தித் தாள்கள் வாங்கப்படுகின்றன. அவர்களின் இலக்கியம் மற்றும் பொதுக் கல்வி மேம்பாட்டிற்காக இலக்கிய நூல்கள் வழங்கப்படுகின்றன.

**இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் :**

தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் ஏத்தாப்பூர் என்னும் இடத்தில் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில் அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி நோயினால் பாதிக்கப்படாத குழந்தைகள் கூடுமான வரையில் தனியாகப் பிரிக்கப்பட்டு இவ்வில்லங்களின் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

முதன்மை செலவினங்களுக்காகவும், சீருடை, புத்தகங்கள், பெட்டி முதலியவைகளுக்காகவும் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 75 அரசு வழங்குகிறது.

மறுவாழ்வு இல்லங்களிலிருந்து பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் மேற்கொண்டும் படிப்பதற்காக, வகுப்பு வாரியாக ஆண்டு தோறும் கீழ்க்கண்டவாறு செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

இரண்டாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை—ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) ரூ. 120 (ஆறு ஆண்டுகளுக்கு).

எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்புகளுக்கு—ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்) ரூ. 60 (ரூபாய் அறுபது மட்டும்) (இரண்டு ஆண்டுகளுக்கு).

பத்தாம் வகுப்பிற்கு—ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்).

பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளுக்கு—ரூ. 75 (ரூபாய் எழுபத்தைந்து மட்டும்) ரூ. 150 (இரண்டு ஆண்டுகளுக்கு).



**விளையாட்டும், பொழுதுபோக்கும் :**

ஒவ்வொரு இல்லத்திலும் விளையாட்டுப் பொருட்கள் வாங்கு
வதற்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 200 அரசு அனுமதித்துள்ளது.
ஒவ்வொரு இல்லத்திலும், இல்லவாசிகள் இன்புற்று இருக்க
இசைக்கருவிகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

**மருத்துவ வசதிகள் :**

இல்லவாசிகளுக்கு மருத்துவ சிகிச்சை இலசவமாக அளிக்கப்
படுகிறது. இரு மருத்துவ அதிகாரிகள், இரு செவிலியர்கள், ஒரு
ஆய்வுக்கூட தொழிற் நுட்பப் பணியாளர். ஒரு மருந்தாளுநர்
ஒரு உடற்கூறு பயிற்சியாளர், ஒரு தாய்மை மருத்துவத் துணை
செவிலியர், ஒரு உதவி ஆண் செவிலியர், ஒரு உதவி பெண்
செவிலியர் முதலானவர்கள் ஒவ்வொரு இல்லத்திலும் இல்லவாசி
களின் மருத்துவத் தேவைகளைக் கவனிக்கின்றனர். அங்குள்ளவர்
களுக்குத் தொழுநோய் சிகிச்சை அளிப்பதோடு மட்டுமின்றி
மற்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தீவிர
சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள், 10 பேர் தங்கக்கூடிய
தனி வார்டுகளில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்குச் சிறப்பு உணவு
மற்றும் மருந்துகள் அளிக்கப்படுகின்றன. எல்லாவித வசதிகளும்
கொண்ட அறுவை சிகிச்சைக் கூடங்கள், பர்கூர், உளுந்தூர்
பேட்டை இல்லங்களைத் தவிர மற்ற இல்லங்களில் உள்ளன.
கைவிரல் முடமானவர்கள், கால் விளங்காதவர்கள் மற்றும்
உடற்கூறு சரியில்லாத நிலையில் உள்ளவர்களுக்கு
அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இல்லவாசிகளாலேயே
செய்யப்படும் தனிச்சிறப்பு வாய்ந்த காலணிகள் மற்றும்
செயற்கை உறுப்புகள் (கை, கால்) முதலியவைகள் வழங்க இல்லம்
ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, ரூ. 300 செலவிட அரசு அனுமதி
வழங்கியுள்ளது.

**உடற்பயிற்சியும், தொழில் பயிற்சியும் ;**

ஒவ்வொரு இல்லத்திலும் ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்
ளார். இவர் மின்கருவி ( Electrical Stimulator ) மெழுகு
தொட்டி (Wax Bath) ஆகியவற்றின் உதவியைக் கொண்டு
ஊனமுற்ற உறுப்பினர்களுக்கும், உடற்கூறு பயிற்சி தேவையுள்ள
உள்ளிருப்போர் அனைவருக்கும் பயிற்சி அளிக்கிறார். குடற்புண்
மற்றும் உறுசிதைந்த நோயாளிகளை உடற்கூறு பயிற்சியாளர்
களும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் அறுவை சிகிச்சைக்காக
தெரிந்தெடுக்கின்றனர்.

இல்லவாசிகளுக்கு நுண்ணிய துளையுடன் கூடிய ரப்பர்
காலணிகள் அளிக்கப்படுகின்றன.

[1990 ஏப்ரல் 9

**தலைமை தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் கடமைகளும் பணிகளும் :**

தலைமை அலுவலகத்தில் உள்ள தலைமைத் தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் அனைத்து இல்லங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பட்டியலை ஆய்வு செய்வதிலும், உடற்கூறு பயிற்சியாளர்கள், மற்றும் ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர்களின் குறிப்புகளைக் கவனிப்பதிலும் ஈடுப்பட்டுள்ளார். இவர் மறுவாழ்வு இல்லங்களைப் பார்வையிடும் போது அங்குள்ள உற்பத்திப் பிரிவுகள் சரியாக இயங்குகின்றனவா என்பதையும் உடற்கூறு பயிற்சியாளர்கள் நடவடிக்கைகைள் மற்றும் ஆபத்தான தொழில் நுட்ப விஷயங்களை நோயாளிகளுக்கு விளக்குவதுடன், நோயாளிகளின் சக்திக்கேற்ற வெவ்வேறு தொழில் பயிற்சிக்கு இல்லவாசிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். உணர்வு இல்லாதவர்களுக்கு சிறு பொறியமைப்பு மற்றும் முறிந்த எலும்பு உதவும் வரிச்சில்கள், நுண் துளையுடன் கூடிய ரப்பர் பாதுக்காப்புள்ள கருவிகளையும், பாதுகாப்பு மற்றும் தற்காப்பு சாதனங்களையும் கொடுக்கும்படியும், மறுவாழ்வு திட்டங்களுக்கு நோயாளிகளைத் தயார் செய்யும்படியும் உடற்சிகிச்சைத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு அவர் ஆலோசனை வழங்குகிறார்.

**இல்லவாசிகளின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் :**

இவ்வில்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழுநோயாளிகளில் உடல் நலததுடன் இருப்போருக்கு கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது :—

1. துணி நெய்தல் (கைத்தறி, விசைத்தறி).
2. பாய் பின்னுதல்.
3. செருப்பு செய்தல் மற்றும் பழுது பார்த்தல்.
4. தையல்.
5. தச்சு வேலை.
6. விவசாயம்.
7. காகித உறை செய்தல் (புதுக்கோட்டை இல்லத்தில்).

**நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடம் :**

பரனூர் மறுவாழ்வு இல்லத்தில், காட்பாடியிலுள்ள ஸ்வீடன் நாட்டு செஞ்சிலுவைச் சங்க மறுவாழ்வு தொழிற்சாலையினரால் அமைக்கப்பட்டுள்ள/நவீன தொழிற்சாலையுடன் அமைந்த



1990 ஏப்ரல் 9]

தொழிற்கூடத்தில், பயிற்சி அளிக்கப்பட்டவர்கள், திருச்சி, காட்பாடி ஆகிய இடங்களில் உள்ள மேற்படி சங்கத் தொழிற்சாலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், உள்ளிருப்போருக்கு பட்டறைகளில் (லேத்) தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. முக்கியமாக இத்தொழிற்சாலைகளில் கட்டுப்பாடான ஒழுங்கு முறையில் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் அவர்களின் சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகின்றன.

**கைத்தறிகள் மற்றும் விசைத்தறிகள் :**

தற்போது 135 கைத்தறிகளும், 77 பாய் தறிகளும் எல்லா இல்லத்திலும் உள்ளன. இல்லவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் அவர்களின் தேவைகள் போக, மீதமுள்ளவை அருகிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளுக்கு விற்கப்படுகின்றன. கிராமப்புற நூற்பு கேந்திரம், யா. புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்பேட்டை இல்லங்களில் நிறுவப்பட்டுள்ளது. வைகளில் பிரதி மாதம் 10,000 சிட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. 34 தையல் மிஷின்கள் இவ்வில்லங்களில் உள்ளன. இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உடைகள், தையல் கலையில் தேர்ச்சி பெற்ற இல்லவாசிகளாலேயே தைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.

**காகித உறை தயாரிப்புப் பிரிவு :**

புதுக்கோட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் காகித உறை தயாரிப்பு பிரிவு 1—2—1978 முதல் இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களிலுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை, இல்லங்களின் உற்பத்தித் திறன், உற்பத்திப் பொருட்கள், விற்பனை விவரம், இல்லவாசிகள் வேலைக்கு அமர்த்தப்பட்ட எண்ணிக்கை, அலுவலர்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் இல்லங்களில் தயாரித்த பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/நட்ட விவரங்கள் முறையே அட்டவணைகள் 1, 2 (அ) 2 (இ), 3, 4, 5 மற்றும் 6—ல் உள்ளன.

### அட்டவணை 1.

அரசு மறுவாழ்வு இல்லங்களில் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் நிலவரப்படி தங்கியுள்ள உள்ளிருப்போர் விவரம்.

| வரிசை எண்ணும், புது வாழ்வு இல்லத்தின் பெயரும். | உள்ளிருப்போர் மொத்த எண்ணிக்கை (400 பெரியவர்கள், 25 சிறியோர்). | பெரியோர்கள். | | சிறியோர்கள். | | | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். | சிறார். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. உளுந்தூர்பேட்டை. | 425 | 129 | 79 | 8 | 10 | 7 | 233 |
| 2. புதுக்கோட்டை | 425 | 227 | 120 | 12 | 8 | .. | 367 |
| 3. யா. புதுப்பட்டி | 425 | 262 | 125 | 19 | 19 | .. | 425 |
| 4. மல்லவாடி | 425 | 175 | 87 | 8 | 14 | .. | 284 |
| 5. மனையேரிப்பட்டி | 425 | 280 | 85 | 7 | 6 | .. | 378 |
| 6. பர்கூர் | 425 | 187 | 124 | 10 | 13 | .. | 334 |
| 7. தேவியாக்குறிச்சி | 425 | 193 | 107 | 16 | 13 | .. | 329 |
| 8. பரனூர் | 425 | 211 | 148 | 23 | 24 | .. | 406 |
| 9. செல்லியம்பட்டி | 425 | 143 | 78 | 11 | 4 | .. | 236 |
| 10. வின்னப்பள்ளி | 425 | 109 | 57 | 5 | 3 | .. | 174 |
| மொத்தம் .. | 4,250 | 1,916 | 1,010 | 119 | 114 | 7 | 3,166 |



### அட்டவணை 2 (ஏ).

புதுவாழ்வு இல்லங்களில் உற்பத்தி பொருட்களின் விவரம் (அக்டோபர் 1988 முதல் செப்டம்பர் 1989 முடிய.)

| வரிசை எண்ணும் புது வாழ்வு இல்லங்களின் பெயரும். | காய்கறி. (கிலோ) | தானியம். (கிலோ) | புளி. (கிலோ) | எலுமிச்சை. (எண்ணிக்கை.) | தேங்காய். (எண்ணிக்கை.) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. பரனூர் | 580 | .. | .. | ... | .. |
| 2. உளுந்தூர்பேட்டை | 123 | .. | .. | .. | .. |
| 3. பர்கூர் | 271 | 25 (பருப்பு). | 405 | .. | 315 |
| 4. புதுக்கோட்டை | .. | .. | .. | .. | 803 |
| 5. மனையேரிப்பட்டி | 4,228 | .. | 13 | .. | 2,247 |
| 6. யா. புதுப்பட்டி | 89 | 4,885 (நெல்). | .. | .. | 76 |
| 7. மல்லவாடி | 1,705 | .. | .. | .. | 307 |
| 8. தேவியாக்குறிச்சி | 921 | ... | ... | 15,375 | 920 |
| 9. வின்னப்பள்ளி .. | .. | ... | ... | .. | .. |
| 10. செல்லியம்பட்டி .. | 1,363 | .. | .. | .. | 780 |
| மொத்தம் .. | 9,280 | 4,910 | 418 | 15,375 | 5,448 |

அட்டவணை 2 (ஏ)—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் புது வாழ்வு இல்லத்தின் பெயரும். | விறகு. (மெ. டன்.) | துடைப்பம். (எண்ணிக்கை.) | பாய். (எண்ணிக்கை.) | காலணி. (ஜதை). |
|---|---|---|---|---|
| (1) | (7) | (8) | (9) | (10) |
| 1. பரூர் .. .. | 3,189 | ... | 1,054 | 283 |
| 2. உளுந்தூர்பேட்டை .. .. | 1,662 | .. | 672 | 70 |
| 3. பர்கூர் .. .. | 2,980 | 20 | 231 | 130 |
| 4. புதுக்கோட்டை .. | .. | .. | 266 | 240 |
| 5. மனையேரிப்பட்டி .. | 4,866 | | 588 | 492 |
| 6. யா. புதுப்பட்டி .. .. | 702 | | 391 | 260 |
| 7. மல்லவாடி .. .. | 3,530 | .. | 688 | 75 |
| 8. தேவியாக்குறிச்சி .. ... | 1,950 | .. | .. | 624 |
| 9. வின்னப்பள்ளி .. .. | .. | .. | 186 | 90 |
| 10. செல்லியம்பட்டி .. ... | 2,704 | 415 | 754 | 160 |
| மொத்தம் ... | 21,581 | 435 | 4,830 | 2,424 |



அட்டவணை 2 (இ).

புதுவாழ்வு இல்லங்களில் உற்பத்திப் பொருட்கள் விவரம் (அக்டோபர் 1988 முதல் செப்டம்பர் 1989 வரை).

| வரிசை எண்ணும், புது வாழ்வு இல்லத்தின் பெயரும். | தையல் மையம். சட்டை. (எண்ணிக்கை) | ரவிக்கை. (எண்ணிக்கை) | பாவாடை. (எண்ணிக்கை) | சிறு பிள்ளைகள் ஆடை (எண்ணிக்கை) | கட்டு கட்டும் துணி (மீட்டர்.) | சல்லாத் துணி. (மீட்டர்.) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. பரூர் .. | 402 | 305 | 312 | 172 | 33,423 | ... |
| 2. உளுந்தூர்பேட்டை | 174 | 67 | 59 | 44 | 2,528 | ... |
| 3. பர்கூர் .. | 520 | 222 | 345 | 20 | 604 | 852 |
| 4. புதுக்கோட்டை | 200 | 124 | 232 | 38 | 4,875 | ... |
| 5. மனையேரிப்பட்டி | 789 | 92 | 170 | 54 | 3,100 | 150 |
| 6. யா. புதுப்பட்டி | 255 | 111 | 211 | 85 | 4,680 | .. |
| 7. மல்லவாடி ... | 279 | 80 | 203 | 81 | 6,027 | .. |
| 8. தேவியாக்குறிச்சி | 281 | 124 | 212 | 69 | 4,140 | .. |
| 9. வின்னப்பள்ளி | 127 | 38 | 65 | 21 | 9,705 | .. |
| 10. செல்லியம்பட்டி | 260 | 171 | 184 | 46 | 3,168 | .. |
| மொத்தம் ... | 3,287 | 1,334 | 1,993 | 630 | 72,250 | 1,002 |

அட்டவணை 2 (இ)—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும், புது வாழ்வு இல்லத்தின் பெயரும். | காடா. | சேலை. | வேட்டி. | துண்டுகள். | சட்டைத் துணி மற்றும் ரவிக்கை. | அம்பர் சர்க்கா மையம். | காகித உறை. |
|---|---|---|---|---|---|---|---|
| | (மீட்டர்) | (எண்ணிக்கை) | (எண்ணிக்கை) | (எண்ணிக்கை) | (எண்ணிக்கை) | (எண்ணிக்கை) | (எண்ணிக்கை) |
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1 பரஞர் .. | 1,171 | 90 | .. | .. | .. | .. | .. |
| 2. உளுந்தூர்பேட்டை | 16 | 27 | 32 | 85 | 272 | 74,285 | .. |
| 3. பர்கூர் .. | 640 | 221 | 24 | 310 | 692 | .. | .. |
| 4. புதுக்கோட்டை | .. | 24 | .. | 420 | .. | .. | 7,29,400 |
| 5. மனையேரிப்பட்டி | .. | .. | 780 | .. | 1,140 | .. | .. |
| 6. யா. புதுப்பட்டி | .. | .. | .. | 2,072 | 1,300 | 22,258 | .. |
| 7. மல்லவாடி .. | 489 | 149 | 82 | 467 | 572 | .. | .. |
| 8. தேவியாக்குறிச்சி | .. | 275 | 360 | 395 | 1,260 | .. | .. |
| 9. வின்னப்பள்ளி | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 10. செல்லியம்பட்டி | .. | 108 | 275 | 248 | 1,028 | .. | .. |
| மொத்தம் ... | 2,316 | 894 | 1,553 | 3,997 | 6,264 | 96,543 | 7,29,400 |



அட்டவணை 3.

அரசு புதுவாழ்வு இல்ல உற்பத்திப் பொருட்களின் விற்பனை விபரம் (அக்டோபர் 1988 முதல் செப்டம்பர் 1989 முடிய).

| வரிசை எண்ணும், புது வாழ்வு இல்லத்தின் பெயரும். | காடா. | டவல். | எம்.ஜி.ஆர். காலணி. | பாய். | கட்டு கட்டும் துணி. |
|---|---|---|---|---|---|
| | (மீட்டர்) | (எண்ணிக்கை) | (ஜதை) | (எண்ணிக்கை) | (மீட்டர்) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. பரஞர் .. .. .. | .. | .. | .. | 350 | 27,485 |
| 2. உளுந்தூர்பேட்டை ... | .. | .. | 30 | 412 | .. |
| 3. பர்கூர் .. .. .. | 80 | 174 | .. | .. | .. |
| 4. புதுக்கோட்டை .. ... | ... | ... | .. | 190 | .. |
| 5. மனையேரிப்பட்டி .. | .. | ... | 100 | 100 | .. |
| 6 யா. புதுப்பட்டி ... ... | .. | 380 | .. | .. | .. |
| 7. மல்லவாடி .. ... ... | .. | — | .. | 616 | 3,675 |
| 8. தேவியாக்குறிச்சி .. ... | .. | ... | 200 | 150 | .. |
| 9. வின்னப்பள்ளி ... .. | — | .. | — | 100 | 9,154 |
| 10. செல்லியம்பட்டி ... ... | .. | ... | .. | 950 | 744 |
| மொத்தம் ... | 80 | 554 | 330 | 2,868 | 41,058 |

அட்டவணை 4.

பணியில் அமர்த்தப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை (அக்டோபர் 1988 முதல் செப்டம்பர் 1989 முடிய).

| மாதங்கள். (1) | பரனூர். (2) | உளுந்தூர் பேட்டை. (3) | பர்கூர். (4) | புதுக் கோட்டை. (5) | மனை யேரிப் பட்டி. (6) |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் 1988 .. .. | 93 | 93 | 93 | 122 | 69 |
| நவம்பர் 1988 .. .. .. | 99 | 92 | 94 | 116 | 80 |
| டிசம்பர் 1988 .. .. .. | 113 | 99 | 98 | 116 | 81 |
| ஜனவரி 1989 .. .. .. | 108 | 89 | 87 | 114 | 80 |
| பிப்ரவரி 1989 .. .. .. | 115 | 82 | 79 | 116 | 75 |
| மார்ச் 1989 .. .. .. | 104 | 83 | 81 | 116 | 77 |
| ஏப்ரல் 1989 .. .. .. | 106 | 86 | 154 | 111 | 79 |
| மே 1989 .. .. .. | 106 | 86 | 154 | 116 | 73 |
| ஜூன் 1989 .. .. .. | 117 | 92 | 176 | 118 | 77 |
| ஜூலை 1989 .. .. .. | 110 | 92 | 85 | 116 | 77 |
| ஆகஸ்ட் 1989 .. .. | 107 | 96 | 81 | 109 | 73 |
| செப்டம்பர் 1989 .. .. | 97 | 98 | 85 | 118 | 78 |
| மொத்தம் .. | 1,275 | 1,088 | 1,267 | 1,388 | 919 |



அட்டவணை-4—தொடர்ச்சி.

| மாதங்கள். (1) | யா. புதுப் பட்டி. (7) | மல்ல வாடி. (8) | தேவியாக் குறிச்சி. (9) | வின்னப் பள்ளி. (10) | செல்லி யம்பட்டி (11) |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் 1988 .. .. | 140 | 114 | 88 | 86 | 82 |
| நவம்பர் 1988 .. .. .. | 133 | 126 | 83 | 85 | 85 |
| டிசம்பர் 1988 .. .. .. | 135 | 116 | 81 | 79 | 79 |
| ஜனவரி 1989 .. .. .. | 138 | 117 | 89 | 76 | 88 |
| பிப்ரவரி 1989 .. .. .. | 131 | 112 | 81 | 80 | 82 |
| மார்ச் 1989 .. .. .. | 126 | 109 | 79 | 76 | 75 |
| ஏப்ரல் 1989 .. .. .. | 127 | 115 | 70 | 73 | 75 |
| மே 1989 .. .. .. | 119 | 116 | 79 | 60 | 76 |
| ஜூன் 1989 .. .. .. | 137 | 117 | 78 | 54 | 89 |
| ஜூலை 1989 .. .. .. | 127 | 127 | 77 | 72 | 79 |
| ஆகஸ்ட் 1989 .. .. | 131 | 129 | 89 | 77 | 85 |
| செப்டம்பர் 1989 .. .. | 147 | 130 | 91 | 79 | 91 |
| மொத்தம் .. | 1,591 | 1,428 | 985 | 897 | 986 |

* இந்த வருடம் வேலையில் இருந்த இல்லவாசிகளின் மொத்த எண்ணிக்கை 11,824.

அட்டவணை-5.

அரசு புதுவாழ்வு இல்லங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் பற்றிய விவரப்பட்டியல்.

| வரிசை எண்ணும், பதவியின் பெயரும். (1) | பதவிகள் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1 தலைமை கண்காணிப்பாளர் (புதுவாழ்வு இல்லங்கள் மற்றும் இரவலர் இல்லங்கள்) | 1 (ஒன்று) |
| 2 உதவி சிறப்பு அலுவலர் (மருத்துவம்) .. | 1 (ஒன்று) |
| 3 உதவி கணக்கு அலுவலர் .. .. .. | 1 (ஒன்று) |
| 4 தலைமை, தொழிற் பயிற்சி பணியாளர் .. | 1 (ஒன்று) |
| 5 அலுவலகக் கண்காணிப்பாளர்கள் .. | 2 (இரண்டு) |
| 6 உதவியாளர்கள் .. .. .. .. | 5 (ஐந்து) |
| 7 இளநிலை உதவியாளர் .. .. .. | 1 (ஒன்று) |
| 8 தட்டச்சர் .. .. .. .. | 1 (ஒன்று) |
| 9 சுருக்கெழுத்தர் (தலைமை கண்காணிப்பாளருக்காக) .. .. .. .. | 1 (ஒன்று) |
| 10 அலுவலக உதவியாளர் (தலைமை கண்காணிப்பாளருக்காக) .. .. .. | 1 (ஒன்று) |
| 11 அலுவலக உதவியாளர் (இல்லம்) .. .. | 1 (ஒன்று) |
| 12 ஓட்டுநர் மற்றும் சுத்தம் செய்பவர் .. | 1 (ஒன்று) |
| 13 உதவி சிறப்பு அலுவலர்களுக்காக (மருத்துவம்) நியமிக்கப்பட்ட அலுவலக உதவியாளர் .. | 1 (ஒன்று) |
| 14 அலுவலக உதவியாளர் (அலுவலகம்) .. | 1 (ஒன்று) |

பத்து (10) புதுவாழ்வு இல்லங்களில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

| (1) | (2) |
|---|---|
| 1 நிருவாக அலுவலர்கள் .. .. .. | 10 (பத்து) |
| 2 உதவி மருத்துவர்கள் .. .. .. | 20 (இருபது) |
| 3 செவிலியர்கள் .. .. .. .. | 20 (இருபது) |
| 4 தாய்மை மருத்துவ துணைச் செவிலியர்கள் | 10 (பத்து) |
| 5 தொழுநோய் உடற்கூறு பயிற்சியாளர்கள் | 10 (பத்து) |
| 6 ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர், நிலை-1. | 10 (பத்து) |
| 7 மருந்தாளுனர்கள் .. .. .. | 10 (பத்து) |
| 8 ஆண் செவிலி உதவியாளர்கள், நிலை-2 .. | 10 (பத்து) |
| 9 பெண் செவிலி உதவியாளர்கள், நிலை-2 .. | 10 (பத்து) |
| 10 துப்புரவுப் பணியாளர்கள் .. .. .. | 20 (இருபது) |
| 11 சமையலரின் உதவியாளர்கள் .. .. | 20 (இருபது) |
| 12 அலுவலக உதவியாளர்கள் .. .. .. | 10 (பத்து) |
| 13 சமையலாளர்கள் .. .. .. .. | 10 (பத்து) |
| 14 அலுவலகக் கண்காணிப்பாளர்கள் .. | 10 (பத்து) |
| 15 பண்டகக் காப்பாளர் மற்றும் கணக்கர்கள் | 10 (பத்து) |
| 16 இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் .. .. .. .. | 10 (பத்து) |
| 17 ஓட்டுநர்கள் மற்றும் சுத்தம் செய்பவர்கள் .. | 10 (பத்து) |
| 18 தொழில் பயிற்சிப் பணியாளர்கள் .. | 3 (மூன்று) |
| 19 தலைமைக் காப்பாளர்கள் .. .. | 20 (இருபது) |
| 20 காப்பாளர்கள் .. .. .. .. | 80* (எண்பது) |
| 21 மின்னாள் நிலை-2 .. .. .. .. | 10 (பத்து) |
| 22 மின் விசைத்தறி விரிவுரையாளர் .. .. | 1 (ஒன்று) |
| 23 இளநிலை முதலாள் .. .. .. | 1 (ஒன்று) |
| 24 இளநிலை புத்தகம் கட்டுபவர்கள் .. | 1 (ஒன்று) |

* வார்டர்கள் ஆண் 60
பெண் 20

அட்டவணை-6.

புதுவாழ்வு இல்லங்களில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/நட்ட விவரம்.

(ரூபாய் இலட்சத்தில்)

| | 1983–84 | 1984–85 | 1985–86 | 1986–87 | 1987–88 | 1988–89 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| மூலப் பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு .. | 3.69 | 4.00 | 4.04 | 4.68 | 5.63 | 6.47 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு .. | 3.56 | 3.95 | 3.98 | 5.62 | 6.76 | 5.39 |
| ஆதாயம் இழப்பு .. | (—) 0·13 | (—) 0.05 | (—) 0.06 | (+) 0.94 | (+) 1.13 | (—) 1.80 |



அத்தியாயம்-III

## அரசினர் காப்பு முகாம், மேல்பாக்கம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1990–91

காவல்துறையின் மேற்பார்வையில் 1-3-1954 முதல் நடத்தப்பட்டு வந்த மேல்பாக்கம் அரசினர் காப்பு முகாம் இத்தகைய முகாம்களில் முதன்மையானதாகும். சென்னை நகரில் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைத் தடுத்து அவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் தொழிற்பயிற்சி கொடுத்து சிறந்த ஒரு குடிமகனாக ஆக்குவதே இவ்விடுதியின் நோக்கமாகும்.

2. இவ்வில்ல நிர்வாகம் 1–10–1973 முதல் சென்னை, காவல்துறைத்தலைவர் பொறுப்பிலிருந்து சமூக நல இயக்குநர் தலைமைப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டு மீண்டும் 1–12–1984 முதல் சிறைத்துறைத் தலைவர் தலைமையின்கீழ் மாற்றப்பட்டுள்ளது.

**அனுமதி மற்றும் நீக்கம் :**

இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை 950 பிச்சைக்காரர்கள் (770 ஆண்கள், 180 பெண்கள்) ஆகும். அரசாணை நிலை எண். 891, சமூக நலத்துறை, நாள் 30–9–1972-ல் வெளியிடப்பட்ட விதிமுறைகளுக்கிணங்க இவ்வில்லம் நடத்தப்பட்டு வருகிறது. 1945 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்புத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். தண்டனைக்காலம் ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடங்களாகும். இங்கு சேர்க்கப்படும் இல்லவாசிகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலம் முடிவடைகிற தேதியில் விடுதியிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். எந்த ஒரு இல்லவாசியும் குற்றத் தீர்ப்பு ஆணையில் குறிப்பிடப்பட்ட தண்டனை காலம் முடிந்த பின் விடுதியில் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை.

**உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள் :**

இம்முகாமில் இருப்போருக்கு இலவசமாக சாப்பாடு, தங்கும் வசதி, ஆடைகள், மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதுடன் பல்வேறு துறைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**உணவு :**

இல்லவாசிகளுக்கு உணவுக்காக நாளொன்றுக்கு உரிய வயதடைந்த ஒரு நபருக்கு ரூ. 5.50 வீதமும் குழந்தைகளுக்கு ரூ. 4.00 வீதமும் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகைகளுக்குள் இவர்களுக்கு சைவ உணவு வழங்கப்பட்டு வருகிறது. காலை கேழ்வரகு கஞ்சி மற்றும் வெங்காயம், பகல் உணவு, இரவு உணவு வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும்

மோர் வழங்கப்படுகிறது. முக்கியமான நாட்களான புதுவருடப் பிறப்பு, சுதந்திர தினம் போன்ற குறிப்பிட்ட நாட்களிலும், தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்சான் போன்ற சில பண்டிகை நாட்களிலும் ஒரு இல்லவாசிக்கு கூடுதலாக ரூ. 1.00 விதம் சிறப்புணவு வழங்கப்பட்டு வருகிறது.

இருப்பிடம் :

இவ்வில்லம் ஏறக்குறைய 9 ஏக்கர் மொத்தப் பரப்பளவில் அமைந்துள்ளது. ஒரே தளமுள்ள படுக்கைக் கூடங்களில் இல்லவாசிகள் தங்கவைக்கப்படுகின்றனர். ஒரு கூடத்தில் 100 பேர் விதம் தங்குவதற்குரிய நான்கு படுக்கைக் கூடங்கள் உள்ளன. இந்த நான்கில் ஒன்று பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உடை

இரண்டு துண்டுகள், இரண்டு சட்டை மற்றும் இரண்டு கால் சட்டைகள் ஆண்களுக்கும், பெண்களுக்கு இரண்டு சேலை மற்றும் இரண்டு ஜாக்கெட்டுகள் ஆண்டுக்கு ஒருமுறை இலவசமாக வழங்கப்படுகிறது. விடுதியில் சேர்க்கப்படும் நாள் அன்று ஒரு துண்டு, ஒரு சட்டை, ஒரு கால்சட்டை விதம் வழங்கப்படுகிறது.

இதர வசதிகள் :

1. ஒவ்வொரு இல்லவாசிக்கும், பாய், படுக்கை, விரிப்பு தட்டு மற்றும் நல்லெண்ணெய் வழங்கப்படுகிறது.

2. இல்லத்தில் அனுமதிக்கப்படும்போது ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஒரு அஞ்சல் அட்டையும், மேலும் அவர்களின் தேவைக்கு ஏற்ப கூடுதல் அஞ்சல் அட்டையும் வழங்கப்படுகிறது.

3. தண்டனைக் காலம் முடிந்து வெளியேறும் இல்லவாசிகளுக்கு அவர்களின் சொந்த ஊர் செல்ல வசதியாக ரெயில்வே வாரண்ட் அல்லது பேருந்து கட்டணம் அளிக்கப்படுகிறது.

4. இல்லவாசிகளுக்காக இரண்டு தினசரி செய்தித் தாள்கள் வாங்கப்படுகிறது.

5. இல்லவாசிகள் விளையாடுவதற்கான வசதியும், தொலைக்காட்சி பார்க்க வசதியும், வானொலி போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவ வசதிகள் :

இவ் விடுதிக்கென ஒரு மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம் மருத்துவமனையில் ஒரு மருத்துவ அலுவலரும் இரு செவிலியரும், இரண்டு ஆண் உதவி செவிலியரும், இரு



பெண் உதவி செவிலியரும், மற்றும் இரு மருந்தாளுநரும் பணியாற்றுகின்றனர். சாதாரண பிணிகளை நீக்கும் மருந்துகளும் மற்றும் மாத்திரைகளும் போதிய அளவில் உள்ளன. சிறப்புத் தன்மை உடைய வைத்திய வசதிக்காக நோய்களுக்கேற்ப சென்னையில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளுக்கு பிணியாளர்கள் பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறார்கள். உடல் ஊனமுற்றவர்கள் காலமுறைப்படி தயாசதனுக்கு மாற்றம் செய்யப்படுகிறார்கள். மற்றும் தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், உளுந்தூர்பேட்டை தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர். சென்னை மனநல மருத்துவமனையிலிருந்து மனநல மருத்துவர் வாரத்திற்கு ஒரு முறை விடுதிக்கு வந்து மனநலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறார்.

இல்லவாசிகளுக்கான மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள்.

இவ்வில்லத்தில் உடல் வலிமையுள்ள பிச்சைக்காரர்கள் ஏதாவதொரு சிறு தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவ்வில்லவாசிகளுக்கு கைத்தறி, தச்சு, மண்பாண்டம் செய்தல், தையல் மேலும் புத்தகம் கட்டுதல், போன்ற சிறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபடும் இல்லவாசிகளுக்கு ஒரு ஆளுக்கு நாளொன்றுக்கு 10 காசு ஊக்கத்தொகையாக அளிக்கப்படுகிறது.

நெசவு :

கைத்தறிப் பிரிவில் 10 பெடல் தறிகளும் 9 மேசைத் தறிகளும் உள்ளன. சுமார் 15 இல்லவாசிகள் இதில் பயிற்சி பெறுகிறார்கள். இத்தறிகளில் தயாரிக்கப்படும் துணிகள் இவ்வில்லவாசிகளின் ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

தையற் பிரிவு :

தையல் இயந்திரங்கள் ஆறு இப்பிரிவில் உள்ளன. பெண் இல்லவாசிகள் இப்பிரிவில் பயிற்சி பெறுகிறார்கள்.

புத்தகக் கட்டுமானம்:

பல்வேறு அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் பத்திரிகைகள் அரசுப் பதிப்புகள், பதிவேடுகள் மற்ற பிற புத்தகங்கள் இங்கு கட்டுமானம் செய்யப்படுகிறது. எழுதுப்பலகைகள் மற்றும் கோப்பு அட்டைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. சுமார் பத்து இல்லவாசிகள் இப்பிரிவில் வேலை செய்கிறார்கள்.

மண்பாண்டப் பிரிவு :

பூ ஜாடிகள், தண்ணீர் ஜாடிகள் மற்றும் கூஜாக்கள் தயாரிக்கப்பட்டு பல்வேறு அரசுத் துறைகளுக்கு அளிக்கப்படுகின்றன. சுமார் பத்து இல்லவாசிகள் இப்பிரிவில் செயல்படுகின்றனர்.

தச்சு வேலை :

இப்பிரிவில் சுமார் பத்து இல்லவாசிகள் வேலை செய்கிறார்கள். அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் எல்லாவிதமான மரச்சாமான்களும் இங்கு பழுது பார்க்கப்பட்டு அத்துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. மேல்பாக்கம் அரசு காப்பு முகாமிலுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை வேலைக்கு அமர்த்தப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை, உற்பத்தித் திறன், உற்பத்திப் பொருட்களின் விற்பனை விவரம், அலுவலர்கள் பற்றிய விவரங்கள் மற்றும் காப்பு முகாமில் தயாராகும் பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/இழப்பு விவரங்கள் முறையே அட்டவணைகள் அ,இ,உ, எ, ஐ மற்றும் ஒ-வில் உள்ளன.



அட்டவணை—அ.

மேல்பாக்கம் அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதியில் அக்டோபர் 1988 முதல் செப்டம்பர் 1989 வரை 30-ம் தேதி நிலவரப்படி தங்கியுள்ள உள்ளுறுப்பினர்களின் விபரம்.

| பெரியோர். | | சிறியோர். | | சிறார். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 110 | 6 | .. | .. | .. | 116 |

அட்டவணை—இ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம் அக்டோபர் 1988 முதல் செப்டம்பர் 1989 ஆம் ஆண்டில் வேலையில் அமர்த்தப்பட்ட உள் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

| மாதமும் வருடமும். | தச்சுப் பிரிவு. | தையற் பிரிவு. | நெசவுப் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| அக்டோபர் 1988 .. .. .. | 4 | 2 | 7 | 13 |
| நவம்பர் 1988 .. .. .. | 4 | 2 | 7 | 13 |
| டிசம்பர் 1988 .. .. .. | 4 | 2 | 7 | 13 |
| ஜனவரி 1989 .. .. .. | 4 | 2 | 7 | 13 |
| பிப்ரவரி 1989 .. .. .. | 4 | 2 | 7 | 13 |
| மார்ச் 1989 .. .. .. | 4 | 2 | 7 | 13 |
| ஏப்ரல் 1989 .. .. .. | 4 | 2 | 7 | 13 |
| மே 1989 .. .. .. | 4 | 2 | 7 | 13 |
| ஜூன் 1989 .. .. .. | 4 | 2 | 7 | 13 |
| ஜூலை 1989 .. .. .. | 4 | 2 | 7 | 13 |
| ஆகஸ்ட் 1989 .. .. .. | 4 | 2 | 7 | 13 |
| செப்டம்பர் 1989 .. .. .. | 4 | 4 | 7 | 15 |
| மொத்தம் .. | 48 | 26 | 84 | 158 |



அட்டவணை—உ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கத்தில் உள்ள தொழில் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விபரம்.

(அக்டோபர் 1988 முதல் செப்டம்பர் 1989 வரை)

| தையற் பிரிவு. | பிரீச்சஸ் (எண்ணிக்கை). | கால் சட்டை (எண்ணிக்கை). | இரவிக்கைகள் (எண்ணிக்கை). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | 40 | 30 | 60 |

| | டவல்கள் (எண்ணிக்கை). | வெள்ளை காடா (மீட்டரில்). |
|---|---|---|
| நெசவுப் பிரிவு .. | 275 | 308 |

| | சாய்வு மேசை (எண்ணிக்கை). | மேசை (எண்ணிக்கை). | நாற்காலி (எண்ணிக்கை). | மொத்தம் (எண்ணிக்கை) |
|---|---|---|---|---|
| தச்சுப்பிரிவு .. .. | 4 | 2 | | 13 |

அட்டவணை—எ.

**அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம் விற்பனைப் பொருட்களின் விவரம்.**

**(அக்டோபர் 1988 முதல் செப்டம்பர் 1989 முடிய).**

| பொருட்களின் பெயர். (1) | மதிப்பு. (2) ரூ. |
|---|---|
| தச்சுப் பிரிவு உற்பத்தி .. .. .. | 2,783.00 |
| தையற் பிரிவு உற்பத்தி .. .. .. | 1,497.00 |
| நெசவுப் பிரிவு உற்பத்தி .. .. .. | 3,190.00 |
| மொத்தம் .. | 7,470.00 |



அட்டவணை—ஐ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம்—அலுவலர்கள் பற்றிய விவரப் பட்டியல்.

| வரிசை எண். (1) | பதவியின் பெயர். (2) | பதவியின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1 | திருவாகி — — — — — | 1 |
| 2 | துணை திருவாகி ... ... ... .. | 1 (இந்த பதவி நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.) |
| 3 | மருத்துவ அலுவலர் .. .. .. | 1 |
| 4 | அலுவலகக் கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 5 | உதவியாளர்கள் .. .. .. ... | 2 |
| 6 | இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 2 |
| 7 | தட்டச்சர் .. .. .. .. .. | 1 |
| 8 | சுருக்கெழுத்து தட்டச்சர் .. .. .. | 1 |
| 9 | சமூக நல ஊழியர் .. .. .. .. | 1 |
| 10 | போதகர்கள் .. .. .. .. .. | 5 |
| 11 | அலுவலக உதவியாளர்கள் .. .. .. | 2 |
| 12 | தலைமைக் காவலர் .. .. .. .. | 1 |

| (1) | (2) | | (3) |
|---|---|---|---|
| 13 | காவலர்கள் .. .. .. .. .. | 11 | (9 பதவிகள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.) |
| 14 | வாயிற் காவலர்கள் .. .. .. .. | 2 | |
| 15 | தலைமைப் காப்பாளர் .. .. .. | 1 | |
| 16 | காப்பாளர்கள் .. .. .. ... | 9 | (7 பதவிகள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.) |
| 17 | சமையற்காரர் .. .. .. .. | 3 | |
| 18 | துப்புரவுப் பணியாளர்கள் .. .. .. | 3 | |
| 19 | சலவையாளர்கள் .. .. .. .. | 3 | |
| 20 | சவரப் பணியாளர்கள் .. .. .. | 2 | |
| 21 | மருந்தாளுநர்கள் .. .. .. .. | 2 | |
| 22 | செவிலியர்கள் .. .. .. .. | 2 | (1 பதவி நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.) |
| 23 | பெண் செவிலி உதவியாளர்கள் .. .. | 2 | ,, |
| 24 | ஆண் செவிலி உதவியாளர்கள் ... .. | 2 | ,, |
| 25 | ஓட்டுநர் .. ... .. .. .. | 1 | |
| | மொத்தம் .. | 62 | |



அட்டவணை—ஒ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/இழப்பு விபரம்.

| விபரம். | 1984–85 | 1985–86 | 1986–87 | 1987–88 | 1988–89 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| மூலப் பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு .. ... | 0.27 | 0.12 | 0.16 | 0.17 | 0.12 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு .. .. ... | 0.32 | 0.24 | 0.20 | 0.20 | 0.15 |
| இலாப/நட்டம் ... | (+) 0.05 | (+) 0.12 | (+) 0.04 | (+) 0.03 | (+) 0.03 |

143803
D
V211,31'N9
N90.26.3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

★ ... 600 ...